# சமய மற்றும் கலாச்சார விழாக்களை ஒற்றுமையாகக் கொண்டாடுதல் தொடர்பான கைந்நூல்




ජාතික සමගිය සහ සංහිඳියා කාර්යාංශය
தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம்
OFFICE FOR NATIONAL UNITY AND RECONCILIATION

# சமய மற்றும் கலாச்சார விழாக்களை ஒற்றுமையாகக் கொண்டாடுதல் தொடர்பான கைந்நூல்

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்

| | |
|---|---|
| **முதற் பதிப்பு** | 2017 |
| **ISBN** | |
| **மேற்பார்வை** | எம். எஸ். ஜயசிங்க<br>பணிப்பாளர் நாயகம்<br>தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம் |
| **தொகுப்பு** | கலாநிதி மல்லிகா கருணாரத்ன<br>இளைப்பாறிய அமைச்சின் செயலாளர்<br><br>கலாநிதி கொட்வின் கொடிதுவக்கு<br>இளைப்பாறிய பணிப்பாளர், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தேசிய கல்வி நிறுவனம் |
| **கருத்திட்டம் வழிநடாத்தல்** | சட்டத்தரணி ஜீவனீ ஞாணகாந்தி காரியவசம்<br>பிரதிப் பணிப்பாளர்<br>தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம் |
| **கூட்டிணைப்பு உதவி** | எம்.பில் (சமாதானம் மற்றும் முரண்பாடுகளுக்கு தீர்வு காணல்)<br>ஓஸதீ விந்தியா ஹேரத்<br>உதவிப் பணிப்பாளர்<br>தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்<br><br>தேஜித்த சௌபாக்கியா எதிரிசிங்க<br>நிகழ்ச்சித்திட்ட அலுவலர் (கலாச்சாரம் மற்றும் கலை)<br>தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம் |
| **வளப்பகிர்வு** | சட்டத்தரணி இந்திக பெரேரா<br>கெலும் ஜயவீர<br>ஊடகப் பிரிவு, கல்வி அமைச்சு |
| **வெளியீடு** | தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம், இலக்கம் 21, 6 ஆவது மாடி, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01. |
| **நிதி அனுசரணை** | அமெரிக்கா உயர் ஸ்தானிகர் முகவர் அலுவலகம், இலங்கை |
| **அச்சீடு** | அரசாங்கத்தின் அச்சீட்டு திணைக்களம் |

CM25234 - 2000(2017/08)

## ශ්‍රී ලංකා ජාතික ගීය

ශ්‍රී ලංකා මාතා.....අප ශ්‍රී....ලංකා
නමෝ නමෝ නමෝ නමෝ මාතා...

සුන්දර සිරිබරිනී
සුරැඳි අති සෝබමාන ලංකා.......
ධාන්‍ය ධනය නෙක මල් පලතුරු පිරි
ජය භූමිය රම්‍යා
අපහට සැප සිරි සෙත සදනා.......
ජීවනයේ මාතා.......
පිළිගනු මැන අප භක්ති පූජා
නමෝ නමෝ මාතා........
අප ශ්‍රී....... ලංකා
නමෝ නමෝ නමෝ නමෝ මාතා......

ඔබවේ අප විද්‍යා ඔබ ම ය අප සත්‍යා
ඔබවේ අප ශක්ති අප හද තුළ භක්ති
ඔබ අප ආලෝකේ අපගේ අනුප්‍රාණේ
ඔබ අප ජීවනවේ අප මුක්තිය ඔබවේ
නව ජීවන දෙමිනේ
නිතින අප පුබුදු කරන් මාතා.......
ඥාන වීර්ය වඩවමින රැගෙන යනු
මැන ජය භූමි කරා.......
එක මවකගෙ දරු කැල බැවිනා....
යමු යමු වී නොපමා.......
ප්‍රේම වඩා සැම භේද දුරැර දා...
නමෝ නමෝ මාතා....
අප ශ්‍රී ලංකා.........
නමෝ නමෝ නමෝ නමෝ මාතා

## இலங்கை தேசிய கீதம்

ஸ்ரீ லங்கா தாயே - நம் ஸ்ரீ லங்கா...
நமோ நமோ நமோ நமோ தாயே....

நல்லெழில் பொழி சிரணி
நலங்கள் யாவும் நிறை வான் மணி லங்கா...
ஞாலம் புகழ வளவயல் நதி மலை மலர்
நறுஞ் சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதிஏல் தாயே.....
நமதலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய் - நவை தவிர்
உணர்வானாய் -நமதே வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை மீட்டே
நகுமடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.....

நமதார் ஒளிவளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாமும் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே....

අපි වෙමු එක මවකගෙ දරුවෝ
එක නිවසෙහි වෙසෙනා
එක පාටැති එක රුධිරය වේ
අප කය තුළ දුවනා

එබැවිනි අපි වෙමු සොයුරු සොයුරියෝ
එක ලෙස එහි වැඩෙනා
ජීවත් වන අප මෙම නිවසේ
සොඳින සිටිය යුතු වේ

සැමට ම මෙත් කරුණා ගුණෙනී
වෙළී සමගි දම්නී
රන් මිණි මුතු නො ව එය ම ය සැපතා
කිසි කල නොම දිරනා

- ஆனந்த சமரக்கோன்

## கைந்நூல் தயாரிப்பு மற்றும் தொடர்புடைய கல்வி அறிஞர்களின் குழு

- **வணக்கத்துக்குரிய கடவத்கம பியரத்ன தேரர்**
  சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை பிக்குப் பல்கலைக்கழகம்

- **வணக்கத்துக்குரிய கலாநிதி ஹோமாகம தம்மாநந்த தேரர்**
  சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை பிக்குப் பல்கலைக்கழகம்

- **சிவாஸ்ரீ கே.வி.கே.வைதீஸ்வர குருக்கள், தலைவர்,**
  **இலங்கை இந்து குருமார்களின் சங்கம்.**

- **கௌரவ வஜிர சில்வா பாதிரியார் (TOR)**
  ப்ரான்ஸிஸ்கான துறவிகளின் மூன்றாவது மதப் பிரிவு
  பயிற்றுவிப்பு பணிப்பாளர், தெற்காசியா மற்றும் தெற்காபிரிக்கா

- **அஷேக் மொகமட் முலாபர் மொகமட் முனீர்**
  மதகுரு, திஹாரி இப்ராகிம் பள்ளி
  வெளியக விரிவுரையாளர், முஸ்லிம் மகளிர் அராபி கல்லூரி, கல்எலிய

- **கலாநிதி மல்லிகா கருணாரத்ன**
  இளைப்பாறிய அமைச்சு செயலாளர்

- **கலாநிதி கொட்வின் கொடிதுவக்கு**
  இளைப்பாறிய - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
  தேசிய கல்வி நிறுவனம்

- **விஷாரத சுதத் சமரசிங்க**
  பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவனம்

- **கலாநிதி சரத் வித்தாரண**
  சிரேஷ்ட விரிவுரையாளர், சமூகவியல் கற்கைப் பிரிவு
  களனிப் பல்கலைக்கழகம்

- **குமுது சுமேதா**
  சிரேஷ்ட விரிவுரையாளர், சமூகவியல் கற்கைப் பிரிவு,
  களனிப் பல்கலைக்கழகம்

- **எஸ். ரமணராஜா**
  விரிவுரையாளர், இந்து நாகரீகம் தொடர்பான கற்கைப் பிரிவு,
  யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

- **மாணிக்கம் எலன்குமாரன்**
  பணிப்பாளர், WINYC நிறுவனம்

- **எம். எச். எம். நியாஸ்**
  அரசாங்கத்தின் சத்தியப் பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்

- **நுவன் பிரதீப் சுபசிங்க**
  வெளியக விரிவுரையாளர்,
  இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

- எம். ஏ. எம். பாசல்
  சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட அலுவலர்
  தொடர்பாடல் பயிற்சி நிறுவனம் (CCT)

- ரமனுசா போபாலரத்னம்
  நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்
  தொடர்பாடல் பயிற்சி நிறுவனம் (CCT)

- ஷிவந்த இரத்நாயக்கா
  நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்
  தொடர்பாடல் பயிற்சி நிறுவனம் (CCT)

- வணக்கத்துக்குரிய கடவத்கம பியரத்ன தேரர்
  சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை பிக்குப் பல்கலைக்கழகம்

## சமய மற்றும் கலாச்சார வைபவங்களை ஒற்றுமையாக கொண்டாடும் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டம்

மூன்று தசாப்தங்களுக்கு அண்மித்த காலம் வரை யுத்தம் இடம்பெற்றதன் காரணமாக எமது நாட்டில் நிலவிய இனப் பிரச்சினை 2009 ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் யுத்தத்தின் காரணமாக பேரிழப்புகளை எதிர்நோக்கிய பொது மக்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு தேவையான அடிப்படை வசதிகள் அதாவது, வீடமைப்புகள், பாடசாலைகள், மருத்துவமனைகள், நீர்ப்பாசனம் மற்றும் போக்குவரத்து சேவைகள் என்பவற்றினை அபிவிருத்திச் செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் ஆட்சி அமைத்த தற்போதைய அரசாங்கம், இனப் பிரச்சினைக்கு காரணமான விடயங்களின் மீது பாரிய கவனம் செலுத்தியதுடன், எதிர் காலத்தில் அவ்வாறான இன ஒற்றுமைக்கு பாதகமாக அமையும் விடயங்கள் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கு பொறுப்பு கூறுதல் அரசாங்கத்தின் கொள்கையாகவும் ஏற்றுக்கொண்டுள்ளது. அதனடிப்படையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மேலதிகமாக மக்களை திருப்திபடுத்தும் வகையிலான நீண்டகால நிலையான செயற்பாடுகளை முன்னெடுத்தல் அத்தியாவசியமாக மேற்கொள்ள வேண்டிய முதன்மையான பணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த நோக்கங்களை சாதிக்கும் பொருட்டு மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களால் இனங்களுக் கிடையில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை கட்டியெழுப்பும் கடமைப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு அதிகூடிய முன்னுரிமை வழங்குவதற்கும், அவரின் வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவத்தின்கீழ் குறித்த நோக்கங்களை சாதிக்கும் பொறுப்பு கௌரவ சந்திரிக்கா பண்டாரநாயக்கா அம்மையாரிடமும் பொறுப்பளிக்கப்பட்டது.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகமானது 2015 ஆம் ஆண்டு ஆரம்ப காலப்பகுதியில் தாபிக்கப்பட்து. இந்தப் பணியகம் கௌரவ சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க அம்மையார் அவர்களின் தலைமைத்துவத்துடன்கூடிய நிறைவேற்றுச் சபையால் வழிநடாத்தப்படுவதுடன், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான தேசிய கொள்கை பிரகடனப்படுத்தல் அதன் முதன்மையான பணியாக நடைமுறைப்படுத்தியது.

இந்த தேசிய கொள்கையின் ஒரு பிரதான குறிக்கோள் யாதெனில், பாடசாலை மாணவர் சமூகத்தினை அடிப்படையாகக்கொண்ட நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தலாகும். பாடசாலைகளை அடிப்படையாகக்கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக இலங்கை வாழ் மக்கள் சமூகத்தில் ஒவ்வொரு சமயங்கள் தொடர்பாகவும், கலாச்சாரங்களின் தனித்துவம் தொடர்பாகவும் அறிந்துகொள்வதற்கும் புரிந்துக்கொள்வதற்கும் இயன்றவாறான செயற்பாடுகளுக்கு அதிகூடிய முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டுமெனவும் அடையாளங் காணப்பட்டுள்ளது. அதன்படி சமூகத்தை அடிப்படையாகக்கொண்ட செயற்பாடுகளின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் முன்னோடி கருத்திட்டமொன்று தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்மூலம் பெற்றுக்கொண்ட சாதகமான அனுபவங்களை உபயோகப்படுத்தி திட்டமிடப்பட்டுள்ள சமய மற்றும் கலாச்சார வைபவங்களை ஒற்றுமையாக கொண்டாடும் நிகழ்ச்சித்திட்டத்தினை அனைத்து பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டுதலும், தேவையான நிதி ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்தலும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் வருடாந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முதன்மையான அம்சமாகும்.

சமய மற்றும் கலாச்சார வைபவங்களை ஒற்றுமையாக நடாத்தும் செயற்பாடுகள் தொடர்பாக பாடசாலை சமூகத்தை அறிவுறுத்துதல் முதன்மையான தேவையாக உள்ளதென அறிந்துகொள்ளப்பட்டுள்ளது. ஆகையால் அது தொடர்பாக பரிசீலனை செய்வதற்கான தகவல்கள் மற்றும் ஆலோசனைகள் என்பவற்றினை உள்ளடக்கி இந்தக் கைந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பாடசாலையை அடிப்படையாகக்கொண்ட சமய மற்றும் கலாச்சார செயற்பாடுகளை நடாத்துவதற்கான வழிகாட்டியாக அமையும்.

# தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் கௌரவ தலைவர் அவர்களின் செய்தி

பல்வேறு இனங்களையும் சமயங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கைவாழ் மக்கள், பல தசாப்தங்கள் முழுவதுமாக மிக உயர்ந்த தேசிய மற்றும் சமய நல்லிணக்கத்தை மேம்படுத்திக்கொண்டு தமது வாழ்வியல் நடைமுறையினை அமைத்துக் கொண்டுள்ளனர். ஆகையால் சமயத்தை அடிப்படையாகக்கொண்ட மோதல்களற்ற அரசாங்கத்தில், நிகரற்ற பல்வகை கலாச்சாரங்களை உருவாக்கி கொள்வதற்கு இலங்கைவாழ் மக்களுக்கு இயலுமானதாக உள்ளது. ஆயினும் அண்மைக்காலங்களில் அவ்வப்போது தோன்றுகின்ற இனப் பிரச்சினைகள்,சமயங்கள் தொடர்பான கருத்து வேறுபாடுகள் மற்றும் மோதல்கள் காரணமாக சகவாழ்வின் நிலைப்பாடு பின்னடைவுக்கு தள்ளப்பட்டுள்ளது.

பல்வகை கலாச்சாரங்களுடன்கூடிய சமூகத்தில் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் பேணிச் செல்வதற்காக சமயம், இனம் மற்றும் கலாச்சாரம் என்ற வகையில் நிலவுகின்ற பல்வகைத் தன்மையை ஏற்றுக்கொள்ளுதலும், அவை தொடர்பாக அனைத்து சமூகங்களும் புரிந்துக்கொள்ளுதலும் அத்தியாவசியமாகும்.

தேசிய மற்றும் சமய நல்லிணக்கத்தை மேம்படுத்திக்கொண்டு சமூகத்தில் சமாதானத்தை பேணிச் செல்வதற்கென்றால், பல்லின சமூகத்தில் வாழ்கின்றதும் பல்வேறு சமய குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதுமான அங்கத்தவர்கள் ஒற்றுமையாக செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஏற்றவாறான சூழலை உருவாக்கப்படுதல் அவசியமாம். அதன்மூலம் தமது சமயம் தொடர்பாக மட்டுமின்றி ஏனைய சமயங்கள் தொடர்பில் புரிந்துணர்வும்,அத்தகைய புரிந்துணர்வின்ஊடாக ஒவ்வொருவருக்கும் உரிய மதிப்பினை அளிக்க முடியுமாகின்றது. அது மட்டுமல்ல முன்வைக்கப்படும் ஏனைய கருத்துகள் பற்றி சகிப்புத்தன்மையை ஏற்படுத்திக்கொள்ள முடிகின்றது. அதனை வாழ்க்கையில் ஒரு வழக்கமாகவும் கொள்ளலாம். அவ்வாறான சாதகமான மாற்றங்களின் ஊடாக சமூகத்தில் ஏற்படும் சந்தேகம், நம்பிக்கையின்மை மற்றும் பயம்என்பவற்றை நிவர்த்தி செய்து கொள்வதற்கும், அதேபோன்று அத்தகைய பரஸ்பர புரிந்துக்கொள்ளுதலை மேம்படுத்தவதன் ஊடாக நிலைபேறுடனான சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்பன தாபிக்கப்படுவதற்கும் வாய்ப்பு அமைகின்றது.

இந்த பாரிய கடமைப்பொறுப்பினை புரிந்துக்கொண்ட தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்கு மான பணியகம், பாடசாலைகளை மையமாகக்கொண்டு சமயம் மற்றும் தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு சாதகமாகும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்து நடைமுறைப்படுத்துகின்றது. அதில் முக்கியமானதொரு நிகழ்ச்சித்திட்டம் யாதெனில், இந்த நாட்டில் தேசிய மற்றும் சமயம் சார்ந்து கொண்டாடப்படும் பிரதான பண்டிகைகளை அடிப்படையாகக்கொண்டு அவற்றை பாடசாலை மட்டத்தில் ஒற்றுமையாக கொண்டாடுதலாகும். இதன்போது சமயங்கள் தொடர்பாக அனைத்து மக்கள் தொகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்களிடத்தில் புரிந்துக்கொள்ளுதலை ஏற்படுத்திக்கொள்வதற்காக அந்தந்த சமய சற்குருமார்களின் போதனைகளில் உள்ள பொதுவாக காணப்படும் சாதகமான அம்சங்களை வெளிக்கொணர்ந்து கல்வி அறிஞர்கள் குழுவின் ஆலோசனைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்ட சமய மற்றும் கலாச்சார பண்டிகைகளை ஒற்றுமையாக கொண்டாடுதல் தொடர்பான இந்த கைந்நூல் ஆசிரியர்களினதும் மாணவ சமூகத்தினரதும் பரிசீலனையின் பொருட்டு ஒரு ஆதாரமாக அமையும்.

இந்த பாரிய கடமைப் பொறுப்பினை வெற்றிகரமாக்கி கொள்வதற்கு தேவையான ஆலோசனைகள், வழிகாட்டல்கள் மற்றும் தலைமைத்துவம் வழங்கிய மேன்மைதங்கிய சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த கைந்நூலை தயாரிக்கும் பொருட்டு பங்களிப்பு வழங்கிய கல்வி அறிஞர்களைக் கொண்டமைந்த குழுவின் அங்கத்தவர்களுக்கும், நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பு வழங்கிய கல்வி அமைச்சின் செயலாளருக்கும், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கும், வலய மற்றும் கோட்டைப் பணிப்பாளர்களுக்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட பணிற்றொகுதியினறுக்கும் எனது நன்றியறிதல் உரித்தாகும்.

**சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க**
முன்னாள் சனாதிபதி
தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் தலைவர்

# கல்வி அமைச்சின் செயலாளர் அவர்களின் செய்தி

நாட்டு மக்களின் அதிஉன்னதமான வளம் பிள்ளைகள் என்பது சந்தேகத்திற்கு இடமற்ற விடயமாகும். அவர்களுக்கு தேவையான அறிவை வழங்கி, ஆக்கப்படைப்புடன்கூடிய சிந்தனையை வெளிக்கொணர்ந்து, ஒழுக்கம், நன்னடத்தை மற்றும் புலமைமிக்க மாணவர் சமுதாயத்தை கட்டியெழுப்புதல் மூத்தோர்களாகிய எமது கடப்பாடாகும். குறித்த கடமைகளை நிறைவேற்றுவதற்காக சமயங்கள் மற்றும் கலாச்சாரப் பண்டிகைகளை ஒற்றுமையாக கொண்டாடுதல் தொடர்பான கைந்நூல் இன்றியமையாதது என்பதுடன், அதில் பல்வகைத் தன்மையினை மெச்சுகின்ற சமூகத்திற்கு, பிள்ளைகளுக்கு சரியான வழிகாட்டலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தினால் தயாரிக்கப்பட்ட இந்த கைந்நுல் பாடசாலை மாணவர்களை இலக்காகக்கொண்டு தயாரிக்கப்பட்டாலும், முழுமொத்த இலங்கைவாழ் மக்களினதும் எதிர்காலத்தை சுபீட்சமாக்குவதற்கு சாதகமாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும். அதாவது தற்காலத்தில் பல பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ள இனங்களுக்கிடையிலான பிரிவினைவாத பிரச்சினைகளை குறைத்துக்கொள்ளும் பணியானது மிகவும் சூட்சுமமான முறையில் மேற்கொள்ளல் வேண்டும். ஏனெனில் இவ்விடயமானது இந்த நாட்டில் வாழ்கின்ற பல்வேறுபட்ட இனங்கள் மற்றும் சமூகங்களின் உணர்வுகளுடன் தொடர்புபட்டுள்ளமையாகும். இந்த விடயத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கென்றால் சமயம் மற்றும் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தல் வேண்டும். அவ்வகையில் அது தொடர்பாக புரிந்துக்கொள்வதற்கான அறிவு இந்த கைந்நூலில் முறையாகவும் சரியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், பாடசாலைகளை அடிப்படையாகக்கொண்ட சமூகம் நன்கு புரிந்துக்கொள்கின்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, மாகாண கல்வி அலுவலர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலைகளைகளை அடிப்படையாகக்கொண்ட சமூகம் இந்த கைந்நூலை பரிசீலனை செய்வார்கள் என்பது எனது அபிலாஷையாகும். அதன் பிரகாரம், சமயங்கள் மற்றும் இனங்களுக்கிடையிலான பண்டிகைகளை பாடசாலையில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நாட்டின் எதிர்கால சந்ததியினரின் அறிவுப்புலத்தை மேம்படுத்தவதற்காக இந்த கைந்நூல் காலோசிதமான அணுகுமுறையாகும்.

**சுனில் ஹெட்டிஆரச்சி**
செயலாளர்
கல்வி அமைச்சு

## தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

ஒவ்வொரு பிரசையும் சந்தோஷத்துடனும் சமாதானத்துடனும் வாழ்வதற்கு ஏற்றவாறு பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார சூழ்நிலையை உருவாக்குதலானது, அரசாங்கத்தால் அமுல்படுத்தியுள்ள நிலைபேறுடனான அபிவிருத்தி அணுகுமுறையின் முதன்மையான நோக்கமாகும். குறித்த நோக்கங்களை எய்துக்கொள்ளும்போது இலங்கையில் வாழ்கின்ற அனைத்து இனங்களுக்கிடையிலும் சமயங்களுக்கிடையிலும் ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு என்பன எப்போதும் பேணிச் செல்வது இன்றியமையாத விடயமாகும்.

யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் அரசாங்கம் முன்னெடுத்துள்ள உபாய முறையிலான அணுகுமுறையில் ஒரு பிரதான அம்சம் யாதெனில், பாடசாலை மாணவர் சமூகங்களை அடிப்படையாகக்கொண்ட ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பணியகத்தால் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் சமயம் மற்றும் கலாச்சாரப் பண்டிகைகளை ஒற்றுமையாக கொண்டாடும் முன்னோடி கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தலாகும்.மேலும், இக் கருத்திட்டம் சார்ந்து பெற்றுக்கொண்டுள்ள சாதகமான அனுபவங்களை உபயோகப்படுத்தி, சமயம் மற்றும் கலாச்சாரப் பண்டிகைகளை ஒற்றுமையாக கொண்டாடும் தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வித் துறையில் உள்ள அலுவலர்களை முதன்மையாகக்கொண்டு பாடசாலை சமூகத்திற்கு வழிகாட்டும் பொருட்டு தேவையான தகவல்கள் மற்றும் ஆலோசனைகள் உள்ளடக்கிய இந்தக் கைந்நூல் எமது நாட்டின் இனங்களுக்கிடையிலும் சமயங்களுக்கிடையிலும் ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை ஏற்படுத்துவதற்கு பலமான அஸ்திவாரத்தை உருவாக்குவதற்கு மிகவும் ஒத்தாசையாக அமையும் என்பது எமது நம்பிக்கையாகும்.

இந்தக் கைந்நூல் தயாரிக்கும் பொருட்டு அளப்பரிய முயற்சியுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றி பங்களிப்பு வழங்கிய கல்வி அறிஞர்களின்குழுவிற்கும், நிதி அனுசரணை வழங்கிய இலங்கையின் அமெரிக்கா உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கும்,தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் பணிற்றொகுதியினறுக்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.

**எம். எஸ். ஜயசிங்க**
பணிப்பாளர் நாயகம்,
தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்

# அறிமுகம்

சிறந்த வாழ்வியல் முறையினை பேணுவதற்காக ஏதேனும் ஒரு சமூகத்தினைச் சேர்ந்த மனிதர்கள் சமய ஒழுக்கம் சார்ந்து பெற்றுக்கொள்ளும் அனுபவமானது, மிக சாதகமான பலன்களை ஏற்படுத்தும் என்ற காரணியானது ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு உண்மையாகும். மனிதனின் சமூக முன்னேற்றத்தில் நாகரிகமடைந்துள்ள நிலை தொடர்பாக அவதானித்து நோக்கினால் நாகரிகம் முழுவதும் மனிதர்கள் பல்வேறு நம்பிக்கைகளையும், பூஜைகளையும், வழிபாடுகளையும், சமய கருத்துகளையும் சார்ந்து வாழந்துக்கொண்டு கலாச்சார தனித்துவத்தை கட்டியெழுப்பியுள்ளார்கள் என்பதற்கு வரலாற்று பதிவேடுகள் சான்று பகிர்கின்றன.

உலகத்தில் பிரபல்யமாக உள்ள முதன்மையான சமயங்களின் செல்வாக்கு, இலங்கை என்ற சிறிய தீவில் கலாச்சார தனித்துவத்தை கட்டியெழுப்பும் பொருட்டு மிகவும் உபகாரமாக இருந்து வந்துள்ளது என்பது அறியவருகின்றது. அவ்வாறான சமய பின்னணி சார்ந்து வாழ்க்கை ஒழுங்குமுறையினை அமைத்துக்கொண்ட இலங்கை வாழ் மக்கள் மிக உயர்வான சமய ஒழுக்கத்தை மேம்படுத்திக்கொண்டு வாழ்ந்தார்கள் எனவும், அதனாலயே இலங்கை சமய அடிப்படையில் மோதல்களற்ற ஒரு நாடாக வரலாறு முழுவதும் குறிப்பிடப்பட்டுள்ளமை மிகவிசேடமான அம்சமாகும்.

இலங்கைவாழ் மக்கள் பௌத்தம், இந்து, இஸ்லாமியர் மற்றும் கத்தோலிக்கர் ஆகிய நான்கு சமயங்களையும் பிரதிநித்துவப்படுத்துவதுடன், இந்து மற்றும் பௌத்த சமயங்கள் சார்ந்தவர்களுக்கிடையில் பல்லாயிரம் ஆண்டுகள் நீண்டுச் செல்கின்ற சகவாழ்வுடன் கூடிய அமைதியான வாழ்க்கை முறையினை மக்கள் வாழ்ந்து வந்ததாக அறிய வருகின்றது. இந்த இரண்டு சமயங்களுக்கிடையில் உள்ள வழிபாடுகள், நம்பிக்கை மற்றும் பூஜை வழிபாடு முறைகள் என்பவற்றை அடிப்படையாகக்கொண்ட கலாச்சார மரபுரிமையானது, இனங்களுக்கிடையில் ஒற்றுமை, நல்லிணக்கம் என்பவற்றினை உறுதிப்படுத்துவதன்மீது சாதகமாக அமையும் இயக்கச் சக்தியாக நடைமுறைப்படுகின்றது என்பது மறுக்கத்தக்க விடயமல்ல.

அரேபிய மறுமலர்ச்சிக்கேற்ப நாடுகளுக்கிடையில் வியாபார நடவடிக்கைகள் விரிவாகியதன் பலனாக கி.வ 8 ஆவது நூற்றாண்டில், அராபு வியாபாரிகளின் வருகையுடன், இஸ்லாம் சமயத்தின் சம்பிரதாயம் இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் தொடங்கிய ஐரோப்பியர்களின் வருகையின் பின்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர்கள் அவ்வப்போது கிறிஸ்தவ சமயத்தை இந்த நாட்டில் அறிமுகப்படுத்தியதுடன், அதனைச் சார்ந்து கல்வி மற்றும் கலாச்சார துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டது. அவ்வாறான சமய மற்றும் கலாச்சார பல்வகைத் தன்மைக்கு அமைவாக அலங்காரமானதும், விசித்திரமான நம்பிக்கைகள், வழிபாடுகள்,பழக்கவழக்கங்கள் என்பவற்றை முதன்மையாகக்கொண்ட சமய பின்னணி நாட்டில் நிருமாணிக்கப்பட்டதுடன், அது சாதகமான முறையில் இலங்கை சமூகத்தில் மிகப் பலமாக வேரூன்றியுள்ளது. அதாவது சமயத்தை அடிப்படையாகக்கொண்ட யுத்த சூழ்நிலையானது எமது நாட்டில் வரலாற்றில் எப்போதும் ஏற்படவில்லையென்பதற்கு இதற்கு சான்று பகிர்கின்றது.

இலங்கை சமூகத்தில் இனங்கள் மற்றும் சமயங்கள் என்பவற்றுக்கிடையில் உதவிபுரிதல் என்ற நற்செய்கையை விருத்திசெய்தல் மற்றும் உறுதிப்படுத்துவதன்மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இனங்களுக்கிடையிலான மோதல்கள் தொடர்பான அவநம்பிக்கை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் தற்கால அரசாங்கத்தின் முதன்மையான கருமமாக அடையாளங் காணப்பட்டுள்ளது. அதனை சாத்தியமாக்கி கொள்வதற்கு பாடசாலை மாணவர் சமூகங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை நோக்கமாகக்கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முதன்மை வழங்குதலும், அதன்மூலம் சமய மற்றும் கலாச்சார சகவாழ்விற்கு வலுவானதொரு வழிமுறையினை ஏற்படுத்தலும் இன்றியமையாதது என்பது அரசாங்கத்தின் பாரிய நம்பிக்கையாகும்.

இலங்கை முழுவதுமுள்ள 10.000 இற்கும் அதிகமான ஆரம்ப மற்றும் இடைநிலை பாடசாலைகளின் ஊடாக சமய மற்றும் கலாச்சார செயற்பாடுகள் தொடர்பாக அறிவுறுத்தல், புரிந்துணர்வு மற்றும் அனுபவம் ஊடாக சிறுவர் உள்ளங்களில் சகவாழ்வை கட்டியெழுப்புவதற்காக உபகாரமாக அமையும் உளப்பாங்கு, ஆற்றல்கள் என்பன விருத்தி செய்வதற்கு அடிப்படை அடித்தளம் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றது. பாடசாலை முறைமையினுள் அந்த நிகழ்ச்சித்திட்டத்தை விரிவாக நடைமுறைப்படுத்துவதற்காக போதியளவு தகவல்கள் பாடவிதானத்தில் உள்ளடக்கப்படவில்லையென்பதுடன், அந்த குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக சமய மற்றும் கலாச்சார பண்டிகைகளை கொண்டாடுதல் தொடர்பான தகவல்கள் மற்றும் வழிகாட்டல்கள் உள்ளடக்கிய இந்த கைந்நூல், எல்லா பாடசாலைகளின் பயன்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டு விநியோகிக்கும் ஆரம்பகட்ட நடவடிக்கையாக அமுல்படுத்தப்படுகிறது.

அதன் மூலம் பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் போதியளவு வழிகாட்டல் கிடைக்கப்பெறும் என்றும், பாடசாலை சமூகத்தில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் என்பன உறுதிப்படுத்துவதற்கு நிலையான அடித்தளம் அமைப்பதற்கு உதவியாக அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# உள்ளடக்கம்


| | பக்க இலக்கம் |
|---|---|
| சமய மற்றும் கலாச்சார பண்டிகைகளை ஒற்றுமையாக கொண்டாடும் பாடசாலைகளை அடிப்படையாகக்கொண்ட நிகழ்ச்சித்திட்டம் | vii |
| செய்திகள் | viii - x |
| நல்லிணக்கத்திற்கும் சகவாழ்விற்குமான தேசிய கொள்கை | |
| அறிமுகம் | xi |
| பரீசீலனை செய்வதற்கான ஆலோசனைகள் | 1 - 3 |
| சமய மற்றும் கலாச்சார பண்டிகைகளை ஒற்றுமையாகக் கொண்டாடுவதற்கான செயலாற்றுகை இலக்குகள் | 3 |
| இந்து சமயத்தவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற விரதங்களும் பண்டிகைகளும் | 4 |
| தைப்பொங்கல் பண்டிகை | 5 - 9 |
| மகா சிவராத்திரி பண்டிகை | 10 - 12 |
| சிங்களத், தமிழ் புத்தாண்டு பண்டிகை | 13 - 27 |
| பாஸ்கா பண்டிகை | 28 - 31 |
| வெசாக் பண்டிகை | 32 - 42 |
| பொசொன் பண்டிகை | 43 - 51 |
| ராமஸான் பண்டிகை | 52 - 56 |
| ஹஜ் பண்டிகை | 57 - 60 |
| தீபாவளி பண்டிகை | 61 - 63 |
| நத்தார் பண்டிகை | 64 - 72 |
| இணைப்புகள் | |
| 01. கருத்திட்ட முகாமைத்துவ சரிபார்ப்புப் பட்டியல் | 73 - 74 |
| 02. தொடர்புகொள்ள வேண்டிய நிறுவனங்கள் | 75 |

# பரிசீலனைக்கு ஆலோசனைகள்

## பரிசீலனை செய்வதற்கான ஆலோசனைகள்

## நிகழ்ச்சித்திட்டம்/கருத்திட்டம்/செயற்பாடுகளைத் திட்டமிடல்

எமது நாட்டில் தேசிய மட்டத்தில் கொண்டாடப்படும் கலாச்சார அல்லது சமயப் பண்டிகைகள் சார்ந்த செயற்பாடுகளை பாடசாலைகளை அடிப்படையாகக்கொண்டு நடாத்துவதற்காக அவற்றை பாடசாலை வருடாந்த வேலை திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

புதிய ஆண்டொன்று ஆரம்பமாவதற்கு முன்னர் கல்வி அமைச்சினால் நாட்டின் ஒவ்வொரு பாடசாலையிலும் அத்தியாவசியமாக செயற்படுத்த வேண்டிய பொது செயற்பாடுகள் உள்ளடக்கிய வருடாந்த நாட் திட்டம் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படும். பாடசாலை தவணை குறிப்பு, தவணைப் பரீட்சைகள் நடாத்தப்பட வேண்டிய திகதிகள், தேசிய மற்றும் சமய பண்டிகைகள் என்பன உள்ளடக்கிய இணைப்பாடத்திட்டம், அதற்கும் மேலதிகமாக செயற்பாடுகளை நடாத்தப்பட வேண்டிய முறை மற்றும் ஏற்புடைய காலவெல்லைகள் அதில் காட்டப்பட்டுள்ளது. அந்த வருடாந்த நாட் திட்டத்திற்கு அமைவாக எதிர்வரும் ஆண்டில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உரிய பாடசாலைக்கு தனிப்பட்ட ரீதியில் ஒரு பாடசாலை வருடாந்த திட்டம் தயாரிக்கப்படும்.

ஒரு திட்டம் என்பது, ஏதேனுமொரு அமைப்பினால் அல்லது நிறுவனத்தினால் எதிர்காலத்தில் எதிர் நோக்கும் பல இலக்குகள், நோக்கங்கள் என்பவற்றை நிறைவேற்றிக்கொள்வதற்கு நிகழ்காலத்தில் அந்த நிறுவனம் அல்லது அமைப்பினால் முன்மொழியப்படும் பல செய்முறைகளின் கூட்டாகும். அதன்படி ஒவ்வொரு பாடசாலையும் எதிர்வரும் ஆண்டுக்கான கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டத்தை அந்த ஆண்டு தொடங்குவதற்கு முன்னராகவே தயாரித்தல் வேண்டும். வலயங்கள் மற்றும் கோட்டைக்கல்வி அலுவலகங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய கருத்திட்டங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றையும் வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

கருத்திட்டம் தயாரிக்கும்போது அதில் உள்ளடக்கப்படவேண்டிய அடிப்படை விடயங்கள் உள்ளடக்கிய உருவரை என்பன கீழே காட்டப்பட்டுள்ளது. அந்த உருவரை அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படும் கருத்திட்டம் பொருட்டு ஏனைய பாடசாலைகளையும் தொடர்புபடுத்திக் கொள்வதாயின் அந்த பாடசாலைகளில் பிரதானிகளுடன் அது தொடர்பாக கலந்துரையாடி கருத்திட்டத்திற்கான முன்மொழிவுகளை தயாரித்தல் ஏற்புடையதாகும்.

## கருத்திட்ட அறிக்கையின் திட்ட உருவரை :

1. கருத்திட்டத்தின் பெயர்
2. நோக்கங்கள்
3. முன்மொழியப்படும் செயற்பாடு/வேலைத்திட்டம்
4. இலக்கு குழு
5. எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் மற்றும் அதற்கு பாடசாலை மாணவர்கள் தொடர்புபடும் முறை
6. தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களின் இயல்பு
7. தேவையான நிதி வளங்கள் மற்றும் அவற்றை பெற்றுக்கொள்ளும் முறை
8. கால அட்டவணை
9. நிகழக்கூடிய எதிர்பாராத தடைகள் மற்றும் அவற்றை குறைத்துக்கொள்ளும் திட்டம்
10. கருத்திட்டத்திலிருந்து பெற்றுக்கொண்ட அனுபவம் மற்றும் கற்கை

## சமய மற்றும் கலாச்சார பண்டிகைகளை ஒற்றுமையாக கொண்டாடும்போது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள்

இந்த கைந்நூல் தயாரிக்கும் பணியில் இணைந்துகொண்ட கல்வி அறிஞர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட இணக்கப்பாடு, தேசிய மற்றும் சமய பண்டிகைகளை கொண்டாடும்போது கவனம் செலுத்தப்பட வேண்டிய பல துறைகளுக்கு ஏற்புடையதான தகவல்கள் என்பன இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்த

தகவல்களுக்கு புறம்பான அபிப்பிராயங்கள், கருத்து வேறுபாடுகள் அல்லது பிரேரணைகள் என்பவற்றை உங்களது பாடசாலை மற்றும் ஆசிரியர் - மாணவர் சமூகத்தால் முன்வைக்கப்பட்டால் அது தொடர்பாக மேலும் விளங்கிக்கொள்வதற்கு விடயத் தேர்ச்சியாளர் ஒருவரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளுதல் நன்றாகும். இந்தக் கைந்நூலை பரிசீலனை செய்கின்றபோது பிராந்திய மட்டத்தில் நிலவுகின்ற கலாச்சார பல்வகைத் தன்மைமீது கவனம் செலுத்தப்பட்டு அந்தந்த பண்டிகைகள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய வேறு மூல ஆதார ஏடுகளை பயன்படுத்தி கருத்திட்டங்கள், செயற்பாடுகள் அல்லது நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன தயாரித்தல் மிகவும் உசிதமாகும்.

**இந்த கைந்நூலில் பண்டிகைகளை, ஒரு ஆண்டின் சனவரி மாதத்தில் ஆரம்பிக்கும் பண்டிகைகளின் ஒழுங்குமுறைக்கு இணங்கும் வகையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.**

1. பாடசாலைகளை அடிப்படையாகக்கொண்ட கருத்திட்டங்களை செயற்படுத்தும்போது இனங்கள் மற்றும் சமய பல்வகைத்தன்மை என்பன எடுத்துரைக்கும் வகையில் கருத்திட்டங்களை திட்டமிடுவதற்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும். அதற்காக இங்கு பின்வரும் மாதிரி செயற்பாடுகளை பொருத்தமான மாற்றங்களுடன் நடைமுறைப்படுத்தலாம்.

2. கலாச்சார அல்லது சமய பண்டிகைகளுடன் தொடர்புபடும் பழக்கவழங்கங்கள், சடங்கு சம்பிரதாயங்கள், என்பன சம்பந்தப்பட்ட சமூகத்தின் விருப்பம், தனித்துவம் என்பவற்றுடன் நெருங்கிய பிணைப்புடன் உள்ள மிகவும் கூர் உணர்வுடனான விடயங்களாகும். ஆகையால் இந்த கைந்நூலில் காட்டப்பட்டுள்ள மாதிரி செயற்பாடுகள் அல்லது தங்களால் திட்டமிடப்படும் வேறு செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட பண்டிகையை நடாத்தும் அடிப்படை சாரத்திற்கு அல்லது அந்த சமூகத்தினரது விழுமியங்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்படுவதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

3. உத்தேச செயற்பாடுகள் தொடர்பாக ஆரம்ப கலந்துரையாடல்களில் அதிகார பூர்வமான நிபுணரின் உதவி அல்லது சம்பந்தப்பட்ட சமயம் அல்லது கலாச்சரம் என்பன பிரதிநித்துவப்படுத்தும் குழுவின் தேர்ச்சியாளர் ஒருவரின் உதவி பெற்றுக்கொள்ளுதல் பொருத்தமாகும். அவ்வாறு மேற்கொள்வதற்கு இயலாத சந்தர்ப்பத்தில் கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடிய வகையில் முன்மொழிவுகள் முன்வைப்பதனை தவிர்த்தல் வேண்டும்.

4. சமய மற்றும் கலாச்சார பண்டிகைகளை ஒற்றுமையாக கொண்டாடும்போது சமய மற்றும் கலாச்சாரங்களுக்கு இடையிலான அறிவு, புரிந்துணர்வு என்பன மேம்படுத்தும் நோக்கத்தை முதன்மைப்படுத்தல் வேண்டும். தொடர்பாடல் பணியின்போது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பண்டிகை தொடர்பான விபரங்களை பிரச்சாரம் செய்தல் வேண்டும்.

5. பிரதேசத்தின் பல்வகைத்தன்மை பிரதிநிதித்துவப்படுத்தும் செயற்பாடொன்றை தெரிவு செய்கின்றபோது, அதன்மூலம் மக்களுக்கிடையே ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் மீது ஏற்படக்கூடிய தடைகள் தொடர்பான முன்மதிப்பீடு பெற்றுக்கொள்ளுதலும், அவ்வாறான பிரச்சினை ஏற்படுவதற்கான போக்கு காணப்படின், முதலாவதாக அதனை தீர்த்துக்கொள்வதற்கு ஏற்ற சுழல் இருந்தால் மட்டுமே சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளுதலும் பொருத்தமாகும்.

6. செயற்பாடுகளை திட்டமிடும்போது, சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய சேதங்களை குறைத்துக்கொள்வதற்கும், மரஞ்செடிகொடிகள் மற்றும் விலங்குகளுக்கு சேதங்கள் ஏற்படும் செயற்பாடுகளை தவிர்த்துக்கொள்வதற்கும், தேசிய மற்றும் சமய சகவாழ்வு முதன்மைப்படுத்தும் வகையில் செயற்படுவதற்கும் கவனம் செலுத்தல் தேவையாகும்.

7. வளப்பகிர்வாளர்கள் மற்றும் நிபுணத்துவம் கொண்ட ஆளணியினரை பங்குபற்றச் செய்விக்கும்போது கருத்திட்டத்தின் நோக்கங்கள் தொடர்பாக விளக்கம் அளிப்பதன்ஊடாக அவர்களின் பங்களிப்பை பயனுள்ளதாக பெற்றுக்கொள்வதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும்.

8. கலாச்சார மற்றும் சமய நடவடிக்கைகள் தொடர்பாக பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படும் அரச நிறுவனங்களினதும் அலுவலர்களினதும் உதவியை பெற்றுக்கொள்ளுதலும், நெருங்கிய கூட்டிணைப்பை பேணுதலும் பயனுள்ளதாகும்.

9. தேசிய மட்டத்தில் கொண்டாடப்படும் கலாச்சார மற்றும் சமய பண்டிகைகளை முன்னிட்டு ஒழுங்கமைக்கப்படும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது, பொதுவான நோக்கங்கள் எவை என்பது தொடர்பான விடயங்களை சம்பந்தப்பட்ட பண்டிகையின்கீழ் காட்டப்பட்டுள்ளது. அந்த நோக்கங்களுக்கிடையில் ஒன்றோ அல்லது சிலவற்றையோ தங்களால் நடாத்தப்படும் கருத்திட்டத்தில் அல்லது செயற்பாட்டில் நோக்கங்களாக அடையாளங் காணப்படலாம்.

10. அடையாளம் காணப்பட்ட முதன்மையான நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு உதவியாக அமையும் கருத்திட்டங்களை திட்டமிடுவதற்கும், ஒழுங்கமைப்பதற்கும் முன்னுரிமை அளிக்கப்படல் முக்கியமாகும்.

## சமய மற்றும் கலாச்சார வைபவங்களை ஒற்றுமையாக கொண்டாடும்போது முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய இலக்குகள்

1. பல்வேறு சமய மற்றும் மக்கள் சமூகங்களில் நிலவுகின்ற மரபுகள் வழக்கங்கள் தொடர்பாக நன்கு புரிந்துக்கொள்ளக்கூடியதாக இருத்தல்.
2. பல்வகை சமய - சமூக - கலாச்சார சுற்றுச்சூழலில் வாழ்வதற்கான சகவாழ்வுத் திறனை பெற்றுக்கொள்ளுதல்.
3. தாம் வாழ்கின்ற மக்கற் சமூகத்தின் சமய மற்றும் கலாச்சார பின்னணியை அடையாளங் காணுதல்.
4. தாம் வழிபடும் சமயம் போன்றே ஏனைய சமயங்கள் தொடர்பாகவும் அறிந்துக்கொள்ளுதல் மற்றும் புரிந்துக்கொள்ளுதல்.
5. தாம் வழிபடும் சமயம் போன்றே ஏனைய சமயங்களுக்கும் உரிய கௌரவத்தை வழங்குதல்.
6. ஒரு குழுவாக ஒன்றாக இணைந்து பணியாற்றுவதற்கான அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.
7. குழுவாக அனுபவங்களை பரிமாற்றிக்கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுதல்.
8. மாணவர்களிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தல்.
9. சமய பண்டிகைகளின் சம்பிரதாயங்கள் மற்றும் பழக்க வழக்கங்கள் எதிர்கால சந்ததியினரிடம் ஒப்படைத்தல்.
10. சமய சகவாழ்வின் ஊடாக இனங்களுக்கிடையில் ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் ஐக்கியம் என்பவற்றை உறுதிபடுத்தல்.

# இந்து சமயத்தவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற விரதங்களும் பண்டிகைகளும்



## அறிமுகம்

சமயங்கள் மனித வாழ்வினை வளப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளன. மகிழ்ச்சியைப் பெறுவதுதான் வாழ்வின் உயரிய குறியிலக்காகும். "பக்குவப்படுத்துதல்" "ஒழுங்குப்படுத்துதல்" எனும் பொருளினை வெளிப்படுத்துவதாக சமயமெனும் சொல் உள்ளது. ஆக மனிதனை அகப்புற ரீதியில் பக்குவப்படுத்தி அல்லது ஒழுங்குப்படுத்தி முறையான வாழ்வியலுக்கு தயார்படுத்தி மகிழ்ச்சியான நிலைக்கு அழைத்துச் செல்வதென்பது சமயங்களின் செயல்நிலைப் போக்காகும். மனிதன் அடைய விரும்பும் யாவும் மகிழ்வைப் பெறுவதற்கான கருவிகளேயாகும். புலனுணர்வுகளால் உண்டாகின்ற உடலின்பத்தைப் புராதன ஞானிகள் "மகிழ்ச்சி" எனச் சுட்டவில்லை. பிற உயிர்களிலிருந்து மனிதனை வேறுபடுத்தி மேம்பட வைப்பது அவனிடமிருக்கும் சிறப்புச் சக்தியான சிந்தனையாற்றலேயாகும். இச்சிறப்பாற்றலின் வளர்ச்சியும் நிறைவுமே அவனுக்கு ஈடிணையற்ற இன்பத்தையளிக்கின்றது.

இந்து சமயம் இச்சிந்தனையாற்றல் விருத்தியில் ஆழ்ந்த புலமையைக் கொண்டுள்ளது. சமயப் புலத்தில் இழையோடியிருக்கின்ற விரதங்கள், பண்டிகைகள் போன்றன இதற்கான ஊற்றுப் புலங்களேயாகும். ஆன்மீக வளர்ச்சியின் பெருமை இவற்றால் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு பகுதிச் செயற்பாடுகளும் உடல் உள ஆன்மீக நலமேம்பாட்டுக்கு வித்திடுகின்றன. சமய நூல்களில் விரதங்கள், பண்டிகைகள் எனும் இரண்டையும் ஒன்றாக இணைத்துக் கூறப்பட்டுள்ளதாயினும் இரண்டிற்குமிடையே வேறுபாடுகளுள்ளன. விரதத்தைப் போன்று பண்டிகைகளுக்கும் சமய முக்கியத்துவம் இருப்பினும் அவையிரண்டிற்குமிடையே அடிப்படை வேறுபாடிருத்தலை உணரலாம். விரதங்கள் அனுஷ்டிப்பதற்குரியன. பண்டிகைகள் கொண்டாடுவதற்குரியன. இறைசிந்தனையோடிருந்து உணவினைச் சுருக்குதல், ஒழித்தல் என்பன விரதத்தின் அடிப்படையாகும். பண்டிகை காலங்களில் பலவகை உணவுகளைச் செய்து உறவினர், நண்பர், அயலவர், சிறியவர், பெரியவர் கூடியிருந்து உண்டு மகிழ்தல் முக்கிய நிகழ்வாக இடம்பெறும். ஆகவே பண்டிகை என்பது பெருநாள், விசேட நாள் எனும் பொருளைத் தருகின்றது. "தாம் சார்ந்துள்ள சமயத்தில் முக்கியமானதாகக் கருதப்பட்டு வருடத்தில் குறிப்பிட்ட நாளில் விருந்துடன் சிறப்பாகக் கொண்டாடப்படுவது" பண்டிகை என விளக்கமளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பண்டிகைகள், விரதங்கள் முதலானவற்றை கொண்டாடுகின்ற அனுஷ்டிக்கின்ற நாட்களில் கடைப்பிடிக்கத்தக்க ஒவ்வொரு செயற்பாடுகளும் இந்தப் பண்பாட்டிற்கு வளம்பெருக்குவதுடன் விஞ்ஞான பூர்வமானவையாகவும் உள்ளன. இந்து சமயப் புலத்தில் கொண்டாடுவதற்கு - அனுஷ்டிப்பதற்குரியவை பலவுள்ளன. இவற்றை விபரிப்பின் பரப்பெல்லை அகன்றுவிடும். விரிவஞ்சி சிவராத்திரி, நவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி, தைப்பொங்கல் ஆகியன பற்றி கீழ்வருமாறு நோக்கலாம். இவற்றில் முதலிரண்டும் அனுஷ்டிப்பதற்குரியன. ஏனையவை கொண்டாடுவதற்குரியன.

# தைப்பொங்கல்

## அறிமுகம்

தைத் திருநாள் தமிழர் வாழ்வியலுடன் இரண்டற கலந்துள்ள மங்கள திருநாள், உழவர் திருநாள், தைத்திருநாள், தமிழர் திருநாள், தைப் பொங்கல் திருநாள் என பலவாறு தைப்பொங்கல் தினம் அழைக்கப்படுகிறது. ''புதியன புகுதலும் பழையன கழிதலும்'' அடிக்கடி உச்சரிக்கப்படும் ஒரு வசன நடையாகும். அதேபோல் விசேடமாக இன்னொரு சொல்வழக்கும் சொல்லப்படுகிறது. ''தை பிறந்தால் வழிபிறக்கும்'' அத்தனை சிறப்பு பொருந்திய ஒரு திருநாள் தைப்பொங்கல் ஆகும். அன்று குறிப்பாக தமிழர் வாழ்வியலிலும் கலாசாரத்திலும் விவசாயம் முக்கிய இடம் பெறுகின்றது. குறிப்பாக தமிழ் மூதாட்டி ஔவையார் ''வரப்புயர'' என்று பாண்டிய மன்னனை வாழ்த்திய கதை நாம் அனைவரும் அறிந்ததே. ''வரப்புயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோன் உயரும்'' குறிப்பாக ஒரு நாட்டின் வளர்ச்சி குடிமக்களின் மகிழ்ச்சி, ஆட்சி கட்டிலில் இருப்பவரின் வெற்றி என்பன விவசாயத்திலேயே தங்கி உள்ளது என்பதை இப் பாடல் வரி அழகாக எடுத்தியம்புகிறது. தமிழ் மக்கள் வாழ்வில் மங்கலம் பொங்க வைக்கும் ஒரு திருநாள் என்றால் அது தைப்பொங்கல் திருநாளே ஆகும். மனிதன் உயிர் வாழ உணவு அவசியம், அவ் உணவை உற்பத்தி செய்பவர் விவசாயி, அவ் உணவு உற்பத்திக்கு சூரியனும், பூமியும் இயற்கையும் அவசியம். ஆக மொத்த மனித சமுதாயம் தனது பசிப் பிணியை போக்கும் விவசாயி, அவ்விவசாயிக்கு விவசாய நடைமுறைகளில் ஒத்துழைக்கும் மாடுகள், காளைகள், பசுக்கள், பூமி, இயற்கை, காலநிலைகள், அதன் அதிபதி சூரியன் ஆகியோருக்கு நன்றி செலுத்தும் உன்னத திருநாள் தைத்திருநாள் ஆகும். ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை - செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' என்பது வள்ளுவர் வாக்கு. தமது பசிப்பிணியை போக்க உதவி செய்யும் விவசாயி முதல் சூரியன் வரை உள்ள எல்லாவற்றிற்கும் நன்றி செலுத்தும் விதமாக நம் தமிழ் மூதாதையர் இவ் வழிபாட்டை உருவாக்கியுள்ளனர்.

உலகம் முழுதும் உள்ள மக்கள் யாவரும் தாம் வாழும் சூழல், மொழி, காலநிலை, நாடு இனம் மற்றும் கலாசார பின்னணி என்பவற்றுக்கு அமைய ஏதோ ஒரு குறிப்பிட்ட நாளில் சரியனுக்கும் விவசாயிக்கும், பசுக்களுக்கும் நன்றியை செலுத்துகின்றனர். அந்த வகையில் உலகில் தொல் குடிகளான தமிழர்கள் தைமாதம் முதல் நாளை தைத்திருநாள் பண்டிகையாக கொண்டாடுகின்றனர். இந்த நாளை மகர சங்கிராந்தி என சைவ சமய ஆகம நூல்கள் கூறுகின்றன. அதேபோல் சோதிட நூல்களும் சூரியன் தனது பயணப் பாதையில் வடதிசை நோக்கி தன் தேரைச்செலுத்தும் காலம் அல்லது சூரியனின் இரதம் வடதிசை நோக்கி பயணப்படும் நாள் எனவும் சிறப்பித்து கூறுகின்றது. ஒரு வருடத்தில் 6 மாதங்கள் சூரியன் வடதிசை நோக்கி பயணிப்பதை உத்தராயணம் என்றும், அடுத்த 6 மாதங்கள் தென் திசை நோக்கி பயணிப்பதை தட்சினாயணம் என்றும் சைவ சமய நூல்கள் குறிப்பிடுகின்றன. உத்தராயணம் ஒளியின் காலம் என்றும் தட்சினாயணம் இருள் காலம் என்றும் சொல்லப்படுகிறது. காரணம் உத்தராயணத்தில் பகல் பொழுது மிகுந்து காணப்படும். தட்சினாயணத்தில் இரவு மிகுந்து காணப்படும். உத்தராயணம் தை முதல் ஆனிவரை இடம் பெறும். ஒளியின் காலத்தில் பகல் அதிகமாய் இருப்பது போல் நமது உள்ளமும் அறிவு ஒளி பெற்று நாம் ஆரம்பிக்கின்ற அல்லது திட்டமிடுகின்ற செயல்கள் வெற்றி அளிக்கும் என்பது தமிழர் கண்ட உளவியல், இயற்கையியல், ஆன்மீகவியல் சார்ந்த உண்மை. அதேபோல் சூரியனின் இரதம் வடதிசை நோக்கி பயணிப்பது என்பது பூமியிலிருந்து பார்க்கும்போது சூரியனின் பயணப் பாதையில் அது வடதிசை நோக்கி நகருவது போன்ற காட்சி எம்கண்களுக்கு புலப்படும். இந்த வானியல் உண்மை தை பிறந்தால் வழிபிறக்கும் என எம்முன்னோர்கள் இலகு மொழி நடையில் மறை பொருள் அர்த்தம் போன்று சொல்லி வைத்தனர். பூமி சூரியனை சுற்றிவரும்போது பூமியிலிருந்து சூரியனை பார்க்கும் மனித கண்களுக்கு சூரியன் அசைவது போன்று தோன்றும்.

இதன்மூலம் தொல் தமிழ் குடியினர் இயற்கையின் ஒவ்வொரு அசைவினையும் அவதானித்து இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்தனர் என்பது புலனாகின்றது. தைத்திருநாளின் முக்கிய அம்சமாக சூரிய வழிபாடு அமைகின்றது. கண்கண்ட தெய்வமாக சூரியனை போற்றுகின்றோம். சூரியனே இவ் உலக இயக்கத்திற்கு அச்சாணி என்று கூட கூறலாம். சூரியனை மையப்படுத்தியே கோள்கள் இயங்குகின்றன. காலத்தையும் காலநிலைகளை தீர்மானிக்கும் சக்தியாகவும் சூரியன் அமைகின்றது. உலகம் முழுவதும் சூரிய வழிபாடு முக்கிய இடம் பெறுகின்றது. பல பண்டைய பழமையான கலாச்சாரங்களை கொண்ட மக்கள் வாழும் இடங்களில் சூரிய வழிபாடு முதன்மை பெற்றதை நாம் வரலாற்று தரவுகள்மூலம் அறிந்து கொள்வதற்கு முடிகின்றது. அதேபோல் தமிழ் மக்களும் சூரிய வழிபாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர்.

இருளை நீக்கி ஒளியைக் கொடுப்பவனாகவும் காலநிலையை தீர்மானிக்கும் ஆற்றலாகவும் உணவு உற்பத்திக்கு துணை செய்யும் சக்தியாகவும் சூரியன் போற்றப்படுகின்றான். வேதகாலம் முதற்கொண்டு சூரிய வழிபாடு மக்கள் மத்தியில் இடம் பெற்றுள்ளது என்பதற்கான சான்றுகளை நாம் காணக்கூடியதாக உள்ளது.

தைப்பொங்கல் திருநாள் பல விசேட அம்சங்களை கொண்டுள்ளது. முக்கியமாக போகிப் பொங்கல் என தைத்திருநாளிற்கு முன்னையநாள் கொண்டாடப்படுகிறது. இதன்போது வீடு வாசல்களை தூய்மை செய்து பழைய பொருட்களை நீக்கி புதிய பொருட்களை கொள்வனவு செய்வர். விசேடமாக முன்னைய காலங்களில் வீட்டிற்கு வெள்ளையடித்து வீட்டையும் வளவினையும் சுத்தம் செய்து வீட்டின் உற்பகுதியில் சாணமிட்டு மெழுகி, வளவினையும் சாணமிட்டு நீரினால் தெளித்து பழைய உபயோகமற்ற பொருட்களை அப்புறப்படுத்தி, புதிய பொருட்களை கொள்வனவுச் செய்துகொள்ளல் அல்லது புதிய பொருட்களை உபயோகப்படுத்தல் என்பன இடம்பெறும்.

இதன்போது தாம் உழவு தொழில் செய்த வயல்களும் சுத்தம் செய்யப்பட்டு எஞ்சிய பகுதிகள் வைக்கோல் என்பன தீயிட்டு பொசுக்கப்படும். இதன்மூலம் பெறப்படும் சாம்பல் வயலிற்கு சிறந்த கிருமி நாசினியாக மாற்றமடையும். இன்றைய தினம் தாம் விவசாயம் செய்த வயல் அதன் அருகில் உள்ள மரங்கள், மலைகள், குன்றுகள், ஆறுகள், குளம், நீரோடை கிணறு, குளம், நீரோடை என்பவற்றை மக்கள் வழிபாடு செய்வர். குறிப்பாக மழைக்கு அதிபதியான இந்திரனை வழிபடுவர்.

தைத்திருநாளில் ஆரம்பமாக விடியற்காலை எழுந்து, வீட்டையும் முற்றத்தையும் சுத்தம் செய்து கோலமிட்டு நீராடி இறை வழிபாடு செய்து, முற்றத்திலே அடுப்பு வைத்து புதிய பானையில் அதன் வாயில் மஞ்சள் கன்றை கட்டி பானையை மாவிலை, விபூதி, சந்தனம், குங்குமம் என்பவற்றால் அலங்கரித்து அடுப்பை ஏற்றி அதில் பானையை வைத்து பால் ஊற்றி அப்பாலை பொங்க வைப்பர். பால் பொங்கும்போது ‘‘பொங்கலோ பொங்கல்’’ ‘‘பொங்கலோ பொங்கல்’’ என சத்தமிட்டு பட்டாசுகள் வெடித்து மகிழ்ச்சி ஆராவாரங்களுடன் கொண்டாடுவர். பால் பொங்கும் திசைக்கேற்ப வீட்டு பெரியோர் பலன் கூறுவர். அதன்பின் அரிசி, பயறு என்பவற்றை பெரியவர் முதல் சிறியவர் வரை பொங்கல் பானையில் இட்டு பொங்கல் பொங்குவர். பண்டைய நடைமுறை வெண் பொங்கல் ஆயினும் தற்காலத்தில் சக்கரைப் பொங்கல் பொங்கப்படுகிறது. பொங்கல் தயாரானதும் சிறிது எடுத்து அக்கினிக்கு உணவாக வைக்கப்படும். முற்றத்தில் கோலமிட்டு கரும்பு, தோரணம், மாவிலை, குத்துவிளக்கு, நிறைகுடம் என்பவற்றினால் அலங்கரிக்கப்பட்ட இடத்தில் பசும் சாணத்தால் பிள்ளையார் பிடித்து வழிபாடு செய்து வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தேங்காய், காய்கறிகள் என்பவற்றை படைத்து விசேடமாக பொங்கிய பொங்கலை படைத்து சூரியனுக்கு சிவப்பு மலர்கள் தூவி கற்பூரம் காட்டி வழிபடுவர். இதன்போது ஆழக்கு அல்லது நிறைநாழி வைக்கப்படும். தாம் விவசாயம் செய்த பொருட்கள் சூரியன்முன் வைக்கப்பட்டு நன்றி செலுத்தப்படும். வீட்டு வாசலில் செல்வத்தின் அடையாளமாக ஒருபிடி நெற்கதிர் கட்டப்படும். அதன்பின் சிவாலய வழிபாடு செய்து வழிபடுவர். இதன்பின் உணவு வகைகளை நண்பர்கள், உறவினர்கள் மற்றும் அயலவர்களுக்கு பகிரப்படும். வீட்டு பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை ஒன்றாக அமர்ந்து உணவு உட்கொள்வார்கள். குடும்ப ஒற்றுமை, சமூக ஒற்றுமைக்கு அடையாளமாக இந்த நாள் கொண்டாடப்படும். சூரியப் பொங்கல் பொங்குதல் உதய காலத்தில் இடம்பெறும். காலைப் பொழுதில் சூரியப்படையல் இடப்படும்.

மதியத்திற்கு முன்னர் கோலாட்டம், கும்மியடித்தல், உறி அடித்தல் காளை அடக்குதல் பட்டம் விடுதல் என நிகழ்வுகள் களைகட்டும். குறிப்பாக சிறியோர் முதல் பெரியவர் வரை இதில் பங்குபற்றுவார்கள். பெண்கள் பங்குபற்றும் கோலாட்டம், கும்மி போன்ற கண்கவரும் கலை அம்சங்களும் உறி அடித்தல், காளை அடக்குதல் போன்ற ஆண்களின் வீரத்தின் வெளிப்பாடுகளை எடுத்தியம்பம் அம்சங்களும் காணக்கூடியதாக இருக்கும். பொங்களன்று பட்டம் விடுதல் மிக முக்கிய போட்டியாகும். படலம், வாலக்கொடி, கொக்கு, பருந்து வண்ணத்துப்பூச்சி போன்ற பட்டங்கள் பறக்கவிடப்படும். இரவில் இராக்கொடி என்ற பட்டம் பறக்க விடப்படும். குறிப்பாக காளை அடக்குதல் போட்டி மிகச் சிறப்பாக இடம் பெறும். இவ் வீர விளையாட்டினை சங்க கால நூல்கள் பலவற்றில் ‘‘ஏற்றமூவுதல்’’ என குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் வரலாற்று சான்றாக நோக்கலாம்.

மறுநாள் விசேடமாக உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக இருந்த பசுக்களை, காளைகளை நீராட்டி அலங்கரித்து அவற்றிற்கு வயிறாற உணவு இட்டு, பூத்தூவி கற்பூரம் காட்டி வழிபாடு செய்வர். இது மாட்டு பொங்கல் விழா என சிறப்பாக அழைக்கப்படும். பண்டைய காலங்களில் ஒருவரிடம் இருக்கும் பசுக்கள், காளைகளின் அடிப்படையிலேயே ஒருவரின் செல்வம் கணிக்கப்பட்டது. அத்துடன் பசுக்கள் செல்வத்தின்

அடையாளமாக விளங்குகின்றன. தொடர்ச்சியாக இளம் பெண்கள் பொங்கலிட்டு குல தெய்வம் , இராமதேவதை, காவல் தெய்வங்களை வழிபடுவர். இது கன்னிப் பொங்கல் அல்லது பூப்பொங்கல் என அழைக்கப்படும். நிறைவாக காணும் பொங்கல் இடம்பெறும். இதன்போது உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் வீட்டிற்கு சென்று அவர்களின் நலன்களை விசாரித்து உணவு தின்பண்டங்கள், பரிசுப் பொருட்களை வழங்கி மகிழ்வார்கள். குறிப்பாக பண்டைய காலங்களில் பரிசுப் பொருட்களாக தமது வயலில் விளைந்த உணவு பொருட்களையே வழங்கியுள்ளார் என்பது குறிப்பிட வேண்டிய விடயமாகும். இதன் அடிப்படை பண்டை மாற்றுமூலம் தேவைக்கு அதிகமான பொருட்களை இன்னொருவருக்கு வழங்கி அவர்களின் வாழ்வும் பொருளாதார ரீதியாக உயர்வு பெறும் நோக்குடன் எம் தமிழ் மூதாதையினர் செயற்பட்டனர். இதன்மூலம் ஏழை பணக்காரன் என்ற சமூக ஏற்றத்தாழ்வுகள் ஏற்படாத வண்ணம் சமூகத்தை போற்றி பேணி பாதுகாத்தனர்.

ஆக பொங்கல் பண்டிகை இறை வழிபாடு, இயற்கை வழிபாடு, நன்றி, குடும்ப ஒற்றுமை, சமூக ஒற்றுமை, பொருளாதார வளர்ச்சி, கலை கலாசார வளர்ச்சி போன்ற பல நல்அம்சங்களையும் உள்ளடக்கிய மாபெரும் திருநாளாகும். இது தமிழரின் தனித்துவமான அடையாளம் எனலாம்.

**மாதிரிச் செயற்பாடுகள்**

**(அ) பிரதேசத்தின் பொது இடத்திற்கு "பொங்கற் சோறு" எடுத்துச் செல்லுதல்**

தைப்பொங்கள் பண்டிகை நிமித்தம் பிரதேசத்தின் பொது இடத்திற்கு அதாவது வயோதிபர் இல்லம் அல்லது சிறுவர் இல்லம் என்பவற்றில் உள்ளவர்களுக்கு பொங்கற்சோறு மற்றும் வேறு அன்பளிப்புகள், பரிசுகள் வழங்குவதன்மூலம் தைப்பொங்கல் பண்டிகையை அடையாளப்படுத்துதல்.

**முறைமை :**

1. பண்டிகை தொடர்பான முன் ஆயத்தம். நேரங்காலத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி நாளொன்றை ஒதுக்கிக்கொள்ளுதல்.
2. சம்பந்தப்பட்ட நாளில் அந்த இடத்தில் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுதல்.
3. தைப்பொங்கல் பண்டிகை தொடர்பாக அறிவுறுத்துவதற்கு கலந்துரையாடல் அல்லது போதனை நடாத்தல்.

**(ஆ) பிரதேசத்தின் பாடசாலையொன்றுக்குச் செல்லுதல்**

இந்து சமயத்தை வழிபடும் மாணவர்கள் அதிகமாக உள்ள பாடசாலையொன்றில் மாணவர்களால் ஒழுங்கமைக்கமுடியுமான செயற்பாடாகும். இந்து அல்லாத மாணவர்கள் அதிகமாக உள்ள பாடசாலையொன்றில் மாணவர்களுக்கு பரிசு பொருட்களுடன் பொங்கற்சோறு மற்றும் தின்பண்டங்கள் எடுத்துச் செல்லலாம்.

**முறைமை :**

1. பாடசாலைகளை தெரிவு செய்து கொள்ளுதல் மற்றும் முன்னாய்வு
2. பாடசாலை மாணவர்களுக்கு பயன்படும் பரிசு பொருட்களை மட்டும் மாணவர்களின் ஒத்துழைப்புடன் பெற்றுக்கொள்ளுதல்.
3. தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தைப்பொங்கல் பண்டிகை தொடர்பாக அறிவுறுத்தல்.
4. தைப்பொங்கலை மையமாகக்கொண்ட கலாச்சார செயற்பாடுகளை நடாத்துதல்.
5. விருந்தினரை வரவேற்பதற்கும் செயற்பாடுகள்மூலம் தெரிவு செய்யப்பட்ட பாடசாலையை வைபவங்களில் பங்குபற்றச் செய்வித்தல்.

**(இ) பொங்கற் சோறு தயாரித்தல்**

இந்து சமயத்தை வழிபடும் மாணவர்கள் அதிகமாக உள்ள பாடசாலையில் மேற்கொள்வதற்கு முடியுமான செயற்பாடாகும்.

**முறைமை :**

1. பொங்கற்சோறு தயாரிக்கும் ஒழுங்குமுறை தொடர்பாக அறிவுறுத்தல். இதற்காக வயோதிபர்/ தேர்ச்சியாளர் ஒருவரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளுதல்.
2. பொங்கற் சோறு தயாரிப்பதற்கு பயன்படுத்த தேவையான பொருட்கள் தொடர்பாக அறிந்துக்கொள்ளுதல் மற்றும் அவற்றின் போஷாக்கு தொடர்பான தகவல்களை திரட்டுதல்.
3. மாணவர்களை குழுவாக்கும் போது சமய ரீதியாக ஒன்றிணைவதற்கு வாய்ப்பளித்தல் மற்றும் மாணவர்களுக்கிடையில் நெருங்கிய உறவுகளை கட்டியெழுப்பும் வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
4. இந்து பாடசாலையொன்றில் மாணவர்களால் பொங்கற் சோறு தயாரித்து இந்து அல்லாத மாணவர்கள் கற்கும் பாடசாலைகளுக்கு கொண்டுச் செல்லும் செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்தல்.

**(ஈ) தைப்பொங்கல் பண்டிகையை நாடகமாக நடித்து காட்டுதல்**

இந்து பாடசாலை மற்றும் இந்து அல்லாத பாடசாலைகளில் மாணவ மாணவிகளால் இந்த நாடகத்தை நடித்து காட்டுவதற்கு பயிற்றுவித்தல் பொருத்தமாகும். சம்பிரதாய பழக்க வழக்கங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தல் முக்கியமாகும்.

இதற்காக 06 ஆவது தரத்திற்கு மேற்பட்ட மாணவர் மாணவிகளை பங்குபற்றச் செய்வித்தல் பொருத்தமாகும்.

**முறைமை :**

1. தைப்பொங்கல் பண்டிகை தொடர்பான நாடகமொன்றை இயற்றுதல் மற்றும் அதற்கு தேர்ச்சிபெற்ற ஆசிரியர் ஒருவரின் தலைமைத்துவத்தை பெற்றுக்கொள்ளுதல்.
2. நாடகம் நடித்து காட்டும்போது சூரிய பகவானை வழிபடுதல், பால் பொங்குதல் போன்றன, சிங்கள - தமிழ் புத்தாண்டு கொண்டாடும்போது மேற்கொள்கின்ற வழக்கங்களுக்கிடையில் உள்ள ஒற்றுமைகளை எடுத்துரைத்தல்.
3. சம்பிரதாய மரபுகள், பழக்க வழக்கங்களை மேற்கொள்கின்றபோது எப்போதும் முட்டை அல்லது இறைச்சி வகைகளை பயன்படுத்தாத உணவு வகைகளை தயாரித்தல் வேண்டும்.
4. நாடகம் நடித்து காட்டுவதனை பார்வையிடுவதற்கு சுற்றுப்புறத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் பாடசாலை சமூகத்தினரை அழைத்தல்.
5. தைப்பொங்கல் பண்டிகை நிமித்தம் தயாரிக்கப்படும் சம்பிரதாய உணவு, பானவகைகளை பார்வையிடுபவர்களுக்கு வழங்குதல்.

**(உ) மாட்டு பொங்கல் பண்டிகையை கொண்டாடுதல்**

சமய அடிப்படையின்றி கால்நடைகளின் பொருட்டு உபசரணை செய்வதற்கு இந்த நாளைப் பயன்படுத்தலாம். பசுமாடொன்றுக்கு விசேட உபசரணை செய்து, நன்றி செலுத்தும் முறையானது விசேடமான ஒரு விடயமாகும்.

**முறைமை :**

1. மாட்டு பொங்கல் பண்டிகையின் வழக்கங்கள் தொடர்பாக மாணவர்களை அறிவுறுத்தல்.
2. பசுக்களிலிருந்து கிடைக்கப்பெறும் சேவைகள் தொடர்பாக மாணவர்களை அறிவுறுத்தல்.
3. மாட்டு பொங்கல் நிமித்தம் பசு மாடுகளுக்கு செய்கின்ற உபசரணை தொடர்பாக பாடசாலை மாணவர்களை அறிவுறுத்தல்.
4. சம்பந்தப்பட்ட பண்டிகைக்காக சமய அடிப்படையின்றி பாடசாலை மாணவர்களை பங்குபற்றச் செய்வித்தல்.

**(ஊ) வீட்டு பொங்கல் கலைவிழாவை நடாத்தல்**

மொழி மற்றும் சமயங்களுக்கிடையில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் வீட்டு பொங்கல் தொடர்பாக வழக்கங்கள் தொடர்பாக பாடசாலையில் கலைவிழாவை நடாத்தல்.

**முறைமை :**

1. தைப்பொங்கல் பண்டிகை தொடர்பாக கலந்துரையாடல், சம்பாஷனைகள் சார்ந்து பாடசாலை மாணவர் சமுதாயத்தை அறிவுறுத்தல்.
2. நாடகம், பாடல் என்பவற்றை உள்ளடக்கிய எல்லா கலாச்சார அம்சங்களைக் கொண்ட கலை நிகழ்ச்சியினை நடாத்தல்.
3. பாடசாலைகளுக்கிடையிலான பங்களிப்புடன் விழா நடாத்தல் மற்றும் அதனை பார்வையிடுவதற்காக ஏனைய சமயங்களை வழிபடும் மாணவர்கள் உள்ள பாடசாலைக்கு அழைப்புவிடுத்தல்.

**(எ) தமிழ் - இந்து குடும்பத்துடன் தைப்பொங்கல் நாளை கழித்தல்**

தைப்பொங்கல் பண்டிகை சமயத்தில் ஏனைய சமயங்கள் மற்றும் இனங்களைச் சார்ந்த மாணவர்கள் தமிழ், இந்து மாணவர்களின் வீடுகளில் தங்குவதன்மூலம் அனுபவங்களை பெற்றுக்கொள்ளுதல்.

**முறைமை :**

1. பாடசாலைக்கு அண்மித்து அமைந்துள்ள தமிழ்மொழி பாடசாலையுடன் இணைந்து கூட்டாக ஈடுபடும் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்.
2. மாணவர்கள் அனுபவம் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு வழங்க முடியுமானவீடுகள்∴ குடியிருப்பவர்களை தெரிவு செய்தல்.
3. சமூகத்தில் கூட்டாக வாழ்கின்றபோது கடைபிடிக்கப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக அறிந்திருத்தல்.
4. பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்களை சகோதர மாணவர்களுடன் பரிமாற்றிக்கொள்ளுதல் மற்றும் அது தொடர்பாக மெச்சுதல்.

**(ஏ) தைப்பொங்கல் பண்டிகையை பார்வையிடல் மற்றும் அதில் பங்குகொள்ளுதல்**

அனைத்து சமயங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர் குழுக்களை இதற்காக பங்குபற்றச் செய்வித்தல்.

சம்பிரதாய முறையிலான தைப்பொங்கல் பண்டிகை நடாத்தப்படும் பாடசாலை அல்லது வீடு அல்லது வேறு பொருத்தமான இடமொன்றை பார்வையிடுவதற்கு வசதியளித்தல்.

**முறைமை:**

1. பண்டிகை ஒழுங்கமைப்பாளர்களிடத்தில் முன் அனுமதி பெற்றுக்கொள்ளுதல்.
2. பங்குபற்றும் மாணவர்களை அறிவுறுத்தல்.
3. மாணவர்கள், மரபுகளை பழக்கவழக்கங்களை நிறைவேற்றுவதற்கு பங்குபற்றச் செய்வித்தல்.
4. சம்பிரதாயமான பழக்க வழக்கங்களுக்கு கௌரவமளித்தல் தொடர்பாக புரிந்துக்கொள்ளுதல் மற்றும் அதற்கு ஒழுங்கமைதல் தொடர்பாக கலந்துரையாடுதல்.

# சிவராத்திரி



## அறிமுகம்

சைவ சமயத்தவர்கள் அனுஷ்டிக்கும் விரதங்களுள் சிவராத்திரி விரதம் முதன்மையானதாகும். சிவபெருமானுக்குரிய விரதமாக இவ்விரதம் நோற்கப்படுகிறது. சிவராத்திரி (சிவ(ன்) + இராத்திரி) என்ற தொடர் சிவனுடைய ராத்திரி, சிவனை வணங்கும் ராத்திரி, சிவமான ராத்திரி எனப் பலவாறு பொருள் தரினும் சிவமான ராத்திரி எனப்பொருள் கொள்வதே மிகப் பொருத்தமாகும். நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாச சிவராத்திரி, யோக சிவராத்திரி, மகா சிவராத்திரி என ஐந்து சிவராத்திரி விரதங்கள் அனுஷ்டிக்கப்பட்டாலும் சிவராத்திரி என்றவுடன் அனைவரது நினைவிற்கும் வருவது “மகா சிவராத்திரியே” ஆகும். ஏனைய சிவராத்திரி விரதங்களை அனுஷ்டித்துப் பெறக்கூடிய எல்லாப்பேற்றையும் மகா சிவராத்திரி விரதத்தை நோற்பதனால் பெறமுடியும் என்பது நம்பிக்கை ஆகும்.

மாசி மாதம் கிருஷ்ண பட்சம் (தேய்பிறை) சதுர்த்தசிதிதியில் (அமாவாசைக்கு முதல் நாள்) மகாசிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. சிவபெருமானுக்குரிய திதி சதுர்த்தசி திதியாகும். எல்லா உயிர்களும் இறுதியில் சிவனது பாதங்களையே சேருகின்றன என்பதனால் இறுதித் திதியான சதுர்த்தசித் திதி சிவனுக்குரியதாயிற்று என்பர். அவற்றுள் மாசிமாத தேய்பிறையில் வரும் சதுர்த்தசி இரவே மகிமை மிக்க மகா சிவராத்திரியாயிற்று.

சிவராத்திரியின் தோற்றம் குறித்து பல புராணக் கதைகள் உள்ளன. எனினும் திருமாலும் பிரம்மாவும் அடிமுடி தேடிய கதையே பிரதானமான கதையாகக் கொள்ளப்படுகிறது. ஒரு முறை திருமாலும் பிரம்மாவிற்கும் தமக்குள் யார் பெரியவர் என்ற வாதம் எழுந்து சண்டையாயிற்று. தாமே பெரியவர், தம்மை விஞ்சிய யாரும் இல்லை என்ற ஆணவம் அவ்விருவரிடமும் தலைதூக்கி நின்றமையால் இம்மோதல் விளைந்தது. அவ்வேளை பரம் பொருளான சிவன் அவ்விருவர் முன்னிலையில் ஜோதிப் பிழம்பாகத் தோன்றி இதன் அடியையோ முடியையோ முதலிற் காண்பவரே பெரியவரென அசரீரியாக கூறினார். திருமால் வராக (பன்றி) வடிவெடுத்து பூமியைத் துழைத்து ஜோதிப் பிழம்பின் அடியினைத் தேடிச் சென்றார். பிரம்மாவோ அன்னப்பட்சி வடிவமெடுத்து ஜோதிப் பிழம்பின் முடியைத் தேடிச் சென்றார். இருவருமே அடியையோ முடியையோ காணும் வகையறியாது திகைத்து ஆணவம் அகன்று நின்றவேளையில் ஜோதிப் பிழம்பை ஒடுக்கிக் குளிர்ந்து இலிங்க வடிவமாக காட்சி கொடுத்தார் சிவபெருமான். அவ்வாறு காட்சிகொடுத்த நாளே சிவராத்திரி ஆகும். சிவராத்திரியன்று இரவு 11.30 மணி தொடக்கம் 1.00 மணி வரையிலான காலம் இலிங்கோற்பவ காலம் என சிறப்பாக அழைக்கப்படுகிறது. அடிமுடி தேடிய கதையின் அடிப்படையில் சிவராத்திரி உணர்த்தும் தத்துவம்

ஆழமானதும் உயர்வானதுமாகும். கல்வியாலோ செல்வத்தாலோ ஆணவம் மிகுந்திருக்கும் நிலையில் இறைவனைக் காண முடியாது. ஆணவ மலமகற்றி தூய அன்பால் வணங்கும் உள்ளமே இறைவனை உணரும். சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்பவர்கள் இந்த உண்மையை உணர்தல் அவசியம்.

சிவராத்திரி விரதத்தை உள்ளன்போடு உரியவாறு அனுஷ்டித்தால் நிறைந்த பயனைப் பெறலாம். சிவராத்திரியன்று அதிகாலையில் எழுந்து நீராடி உபவாசமிருந்து பகலிலும் இரவிலும் மறுநாள் பகலிலும் கண்விழித்து சிவசிந்தனையோடு இருத்தல் வேண்டும். தனித்திரு, விழித்திரு, பசித்திரு என்ற முறையில் இவ்விரதம் நோற்கப்பட வேண்டும். ஆசாபாசங்களில் மனதைச் செலுத்தாமல் அமைதியாக இறையுணர்வோடு இருத்தலே தனித்திருத்தல் ஆகும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய காரணங்களை கீழான உணர்வுடன் பாதிக்காது தடுக்கும் அவதானத்துடன் இருத்தலே விழித்திருத்தல் ஆகும். இறைவனை அடையும் அவாவுடன் அவனது அருட்கண் பார்வைக்கான ஏக்கத்துடன் இருத்தலே பசித்திருத்தல் ஆகும். சிவராத்திரி நாளில் கோயில்களில் நான்கு சாமவேளைகளிலும் நடைபெறும் அபிஷேக பூசை வழிபாடுகளிலும் கலந்துகொள்வது நிறைந்த பலனைத் தரும். முதல் சாமத்தில் பிரம்மாவும், இரண்டாம் சாமத்தில் விஷ்னுவும், மூன்றாம் சாமத்தில் அம்பாளும், நான்காம் சாமத்தில் தேவர்கள் முதலான அனைத்து ஜீவராசிகளும் சிவனைப் பூசிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. “சிவாயநம”என்ற “ஐந்தெழுத்து” மந்திரத்தை ஜெபித்தும் தேவாரம், சிவபுராணம் உள்ளிட்ட திருவாசகம் மற்றும் லிங்காஷ்டகம், நடராஜர்பத்து முதலியவற்றை ஓதியும் விரதமனுஷ்டித்தல் உத்தமமாகும்.

சிவராத்திரி விரதத்தை இறை சிந்தனையோடு அனுஷ்டிப்பதனால் நாம் அறிந்தோ அறியாமலோ செய்த பாவங்கள் நீங்கி நற்பயன் விழையும் என்பது ஐதீகமாகும். பிரளய காலத்தில் பார்வதி தேவியார் உயிர்களுக்காய் இரங்கி தவமிருந்து பூஜை செய்தார் என்றும் அவ்விரவு சிவராத்திரி ஆகுமென்றும் பின்னர் படைப்புத் தொடங்கிய காலத்தில் இந்நாளில் (சிவராத்திரியில்) இறைவனை வழிபடுபவர்களுக்கு எல்லா நன்மைகளையும் வழங்கவேண்டும் என்ற அம்மையின் வேண்டுகோளுக்கு இணங்கி இம்மையில் சகல சௌபாக்கியங்களையும் மறுமையில் வீடுபேற்றையும் சிவன் அருளுகின்றார் என்பர்.

முன்னொரு காலத்திலே வாரணாசியில் “சுஸ்வர” என்ற பெயருள்ள ஒரு ஏழை வேடன் இருந்தான். அவன் ஒருநாள் வேட்டைக்குச் சென்றபோது புலியொன்று அவனைத் துரத்த, அதனிடமிருந்து தப்பிப்பதற்காக ஓடிய அவன் மரமொன்றின் மேலேறி அமர்ந்து கொண்டான். புலி மரத்தின் கீழே அவனுக்காக காத்துக்கொண்டிருந்தது. பகற்காலம் கழிந்து இராக்காலம் வந்தபோதிலும் புலி கீழே காத்திருந்தது. எனவே வேடன் மரத்திலேயே காத்திருக்க வேண்டியதாயிற்று. பகல் முழுவதும் உணவு உண்ணாமையால் பசியோடிருந்த அவன் தூங்கிவிடாது இருக்க மரத்தின் இலைகளைப் பறித்து கீழே போட்டபடி இரவைக் கழித்தான். அம்மரம் வில்வமரம் என்பதனையோ தான் பறித்துப்போடும் வில்வம் இலைகள் மரத்தின் கீழிருந்த சிவலிங்கத்தின் மேல் விழுவதனையோ அவன் அறிந்திருக்கவில்லை. அன்றைய இரவு சிவராத்திரி என்பதும் அவனுக்குத் தெரியாது. இருப்பினும் சிவராத்திரி நாளில் லிங்கத்திற்கு வில்வத்தால் அர்ச்சனை செய்த பலன், அவ்வேடனுக்கு முத்தி கிடைத்தது என்று ஐதீகக் கதை ஒன்று கூறுகின்றது. அறியாது செய்த வழிபாட்டிற்காக அவ்வேடனுக்கு நற்கதி கிட்டியதாயின் முறைப்படி செய்யப்படும் வழிபாட்டிற்கு எத்தகைய பயன் கிடைக்கும் என்பது சொல்லித்தான் விளங்க வேண்டும் என்பதல்ல.

சிவராத்திரி நாளில் சிவாலயங்களில் சிறப்பான அபிஷேக பூசை வழிபாடுகள் நடைபெறுவது வழமையாகும். இலங்கையின் வடபால் மன்னாரின் மாதோட்டத்தில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நடைபெறும் சிவராத்திரி வழிபாடு சிறப்பானதாகும். பாலாவி தீர்த்தக் கரையில் புனித நீரைச் சுமந்து வந்து சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யும் வாய்ப்பு அடியார்களுக்கு திருக்கேதீஸ்வர ஆலயத்தில் கிடைப்பது அற்புதமானதாகும். மனிதராகப் பிறந்தவர்கள் சாதி, மதம், இனங் கடந்து ஆணவமற்று பிற உயிர்களை நேசித்து வாழ்ந்தாலே மனிதப் பிறவியின் பலனைப் பெற்று முத்தி அடையலாம். எனவே அனைத்து மக்களும் ஆணவ நீக்கத்தை உணர்ந்தும் சிவராத்திரியின் தத்துவத்தை உணர்ந்தும் அந்நாளை அனுஷ்டித்துப் பயன் பெறுவோமாக.

**மாதிரி செயற்பாடுகள்**

**(அ) மகா சிவராத்திரி பண்டிகையை பார்வையிடல்**

இந்து சமயத்தை வழிப்படுகின்ற மாணவர்கள் கற்கும் பாடசாலையில் மாணவர்களுடன், ஏனைய பாடசாலை மாணவர்களை பங்களிப்புச் செய்துக்கொண்டு மகா சிவராத்திரி பண்டிகை நாளில், கோவிலில் நடாத்தப்படும் சிவராத்திரி பண்டிகையை பார்வையிட செல்லுதல்.

**முறைமை :**

1. சம்பந்தப்பட்ட சமய வழிப்பாட்டிடத்திற்கு பொறுப்பான சமயத் தலைவர்களிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளுதல் மற்றும் முன்னாயத்தம் செய்தல்.
2. சிவராத்திரி பண்டிகை தொடர்பாக விளக்கமளிக்கும் அறிவுறுத்தல்களின் பொருட்டு அறிவுறுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்.
3. பங்குபற்றும் பிள்ளைகளின் பெற்றோர்களிடம் அனுமதியை பெற்றுக்கொள்ளுதல்.
4. வழிப்பாட்டிடத்தில் உள்ளவிடத்து அந்த சமய சம்பிரதாயங்களை கடைபிடிக்க வேண்டிய முறை தொடர்பாக வழிப்பாட்டிடங்களுக்கு பொறுப்பான தர்மகர்த்தாவிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அந்த ஆலோசனைகளை பின்பற்றுவதன்மூலம் மாணவர்களை வழிநடாத்தல்.

**(ஆ) சிவனுக்குப் பூசை மற்றும் கலாச்சார கலைவிழா ஒழுங்கமைத்தல்**

இந்து பாடசாலையில் மேற்கொள்ள முடியுமான செயற்பாடாகும்.

**முறைமை :**

1. சிவராத்திரி பூஜையில் பங்குகொள்வதற்கு, ஏனைய சமயங்களைச் சார்ந்த மாணவர்கள் கற்கும் பாடசாலைகளுக்கு அழைப்புவிடுத்தல்.
2. சிவராத்திரி தொடர்பாக அறிவுறுத்தும் கலந்துரையாடல் சபையை உருவாக்குதல்.
3. இந்து கலாச்சாரத்தின் படி சிவராத்திரி சார்ந்து கலைநிகழ்ச்சி நடாத்தல்.
4. சம்பந்தப்பட்ட நடைமுறையிலிருந்து பெற்றுக்கொண்ட அனுபவங்களின் ஊடாக ஆக்கங்களை தயாரித்தல் மற்றும் கலை நிகழ்ச்சிகளை நடாத்தல்.

**செயற்பாடுகள்**

1. சிவராத்திரி விரதம், அதனைக் கடைப்பிடிக்கும் முறை தொடர்பில் சைவ சமய மதகுரு ஒருவருடன் கலந்துரையாடல்.
2. சிவராத்திரியன்று சிவன்கோயில் ஒன்றிற்குச் சென்று அங்கு நடைபெறும் அபிஷேகம், பூசை மற்றும் ஏனைய நிகழ்வுகளை அவதானியுங்கள்.
3. சிவராத்திரி விரதத்தினை முறைப்படி நோற்கும் அடியார்களுடன் அவ்விரத முறைகளைக் கேட்டறியுங்கள்.
4. நீங்கள் அவதானித்த, கேட்டறிந்த விடயங்களைத் தொகுத்து அறிக்கைப்படுத்துங்கள்.
5. சிவராத்திரி வழிபாடுகளில் கலந்து கொண்டபோது உங்களுக்கு ஏற்பட்ட உணர்வுகள், அனுபவங்கள் என்பன பற்றி கட்டுரையொன்று எழுதுங்கள்.

# சித்திரை வருடப்பிறப்பு - சூரிய மங்கல்ய (சூரியவிழா)



## அறிமுகம்

மதம், மொழி அல்லது அவ்வாறான வேறேதும் சமூக பேதங்களைப் புறந்தள்ளி சிங்கள மற்றும் தமிழ் மக்களால் குதூகலமாய்க் கொண்டாடப்படும் சிங்கள தமிழ் புத்தாண்டானது சூரியனின் புலப்பெயர்வை(சங்கிராந்தியை) மையமாகக் கொண்ட சம்பிரதாய சடங்குகளினூடாக சமூகமயப்படுத்தப்பட்ட மிக முக்கியமானதொரு பண்டிகையாகும். இப் பூவுலகில் மனிதன் கால் பதித்த நாள் முதற் கொண்டு மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே நிலவும் பௌதீக ரீதியானதும் ஆன்மீக ரீதியானதுமான நெருக்கத்தின் விந்தையை எடுத்தியம்பும் சித்திரை புத்தாண்டானது வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் தமக்கு அளித்த இயற்கைக்கு மனிதனால் தெரிவிக்கப்படும் நன்றிக் கடனை நன்கு உணர்த்துகின்ற, காட்டுகின்ற ஒரு திருநாளாக கருதப்படுகிறது. விவசாய பண்பாட்டுக்குப் பழக்கப்பட்ட இலங்கைவாழ் மக்கள் எப்பொழுதும் இயற்கையுடன் நியாயமான கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டதுடன் அதற்குப் பிரதியுபகாரமாக அனுஷ்டிக்கப்படும் சடங்கு சம்பிரதாயங்கள் சூழல் நேயமானதும் மனித நேயமானதுமாக அமைகின்றன. ஏப்ரல் மாதம் அல்லது சித்திரை மாதத்தில் இது அனுஷ்டிக்கப்படுவதன் காரணமாக சித்திரை விழா எனவும் சூரியனின் புலப்பெயர்வை (சங்கிராந்தியை) மையமாகக் கொண்டு அனுஷ்டிக்கப்படுவதன் காரணமாக சூரிய மங்கள்ய (சூரியவிழா) எனவும் அழைக்கப்படும் சித்திரைப் புத்தாண்டு இலங்கையில் வாழும் அனைத்து இனங்களுக்கிடையிலும் சமாதானம், மகிழ்ச்சி மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றைக் கட்டியெழுப்புவதில் வலுவானதொரு அஸ்திவாரத்திற்கு வித்திடும் ஒரு விழாவாக உள்ளது.

## புத்தாண்டும் சூரிய நமஸ்காரமும்

பல்லாயிரம் ஆண்டு காலமாக உலகின் அனைத்து நாகரீகங்களிலும் சூரிய நமஸ்காரம் பல்வேறு வடிவங்களில் இடம்பெற்றதுடன் வரலாற்றுக்கு முற்பட்ட யுகங்களில் வாழ்ந்து வந்த மனிதன் சூரியனை மையமாகக் கொண்ட வணக்க வழிபாடுகள் மற்றும் தோத்திரங்கள் பாடி தமது வளமான எதிர்காலத்திற்காகவும் சௌபாக்கியம் மற்றும் மகிழ்ச்சியான வாழ்விற்காகவும் பிரார்த்தனை புரிந்தமைக்கான சான்றுகள் உள்ளன. அதற்கு இணங்க கிரேக்கர்களும் உரோமர்களும் அப்பலோ எனவும், இன்கா இனத்தவர்கள் க்வெட்சல்கொட்டேல் எனவும் இந்தியாவில் சூரிய பகவான் எனவும், உலகின் பல்வேறு நாடுகளில் சூரியனைக் கடவுளாகக் கொண்டாடும் பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. பிற்காலத்தில் உலகம் முழுவதும் வாழ்ந்து வந்த ஆரியர்களும் தொன்றுதொட்டு சூரிய வழிபாட்டில் ஈடுபட்டார்கள். அவ்வாறு ஆரியர்களால் சூரிய வழிபாட்டுக்காக நடாத்தப்பட்ட வசந்த உற்சவம் இந்த நாட்டிலும் வியாபித்ததாக நம்பப்படுகின்றது. புதுவருடக் கொண்டாட்டங்களின்போது சூரியனுக்கு விசேட முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

விவசாய வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்ட இந்நாட்டு மக்கள் மரம், செடிகொடிகள், விலங்கினங்கள் மற்றும் ஏனைய அனைத்து உயிரினங்களுக்கும் வாழ்வினையும் பலத்தினையும் அளித்து வாழ்வதற்கு காரணமாய் அமையும் சூரியனை மிகவும் பலம் பொருந்திய ஒரு கடவுளாகக் கருதுகின்றார்கள். கமத்தொழில் மூலம் சிறந்ததோர் அறுவடையினைப் பெற்றுக்கொண்டதன் பின்னரான ஓய்வுகாலமானது அனுட்டானங்களில் ஈடுபடுவதற்கும் கூட்டாக ஒன்றிணைந்து பண்டிகைகளை நடாத்துவதற்கும் ஒதுக்கப்பட்ட ஒரு காலகட்டம் ஆகும். எமது மூதாதையினர் அறுவடையினைப் பெற்றுக்கொள்வதற்கு உதவிய சூரியனை முதன்மையாகக் கொண்ட இயற்கைக்கு விழாக்கோலத்துடன் நன்றி தெரிவிப்பதற்கும் சூரியனின் ஆசீர்வாதத்துடன் கமத்தொழில் நடவடிக்கைகளை புதுப்பொலிவுடன் மீண்டும் ஆரம்பிப்பதற்கும், நோயற்ற தேக ஆரோக்கியத்தினையும் மன உறுதியையும் பெற்றுக்கொள்ள மறக்கவில்லை. சூரிய விழா என அழைக்கப்படும் பல்வேறு கலாசார அங்கங்களினூடாக வளர்த்தெடுக்கப்பட்டு வியாபித்துக் காணப்படும் சித்திரை புத்தாண்டு பண்டிகையானது சூரியனை மையமாகக் கொண்டு இந்நாட்டில் கொண்டாடப்படும் ஒரேயொரு விழாவாக உள்ளது. ஏனைய அனைத்து பண்டிகைகளும் சந்திரனை மையமாகக் கொண்ட சந்திர நாட்காட்டியின் அடிப்படையிலேயே அனுஷ்டிக்கப்படுகிறது.

ஏப்பிரல் எனப்படும் சித்திரை மாதமானது வருடத்தின் ஏனைய மாதங்களை விட கவர்ச்சிகரான ஒரு காலகட்டம் ஆகும். மரம் செடி கொடிகள் பூத்துக் குழுங்கும் அதிர்ஷ்டம் நிறைந்த ஒரு காலகட்டம் ஆகும். ஒவ்வொரு வருடமும் ஏப்பிரல் 12 ஆம், 13 ஆம் அல்லது 14ஆம் திகதி சூரிய ராசி இடப்பெயர்வானது இயற்கை மீது ஏற்படுத்தும் விந்தைமிகு செயன்முறையினையே எமக்கு உணர்த்துகிறது. மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே நிலவும் ஒன்றிணைந்த இந்த உறவுமுறையினை மையமாகக் கொண்டு உலகில் உள்ள சமூகக் குழுக்கள் பலவும் பல்வேறு வகையான பண்டிகைகளை நடாத்துவதனைத் தமது வழக்கமாகக் கொண்டுள்ளது.

### சித்திரை புத்தாண்டும் சோதிடமும்

சித்திரைப் புத்தாண்டு சூரியனின் புலம்பெயர்வினை (சங்கிராந்தியை) அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. சோதிடத்திற்கு அமைய சூரியன், பன்னிரெண்டு ராசிகளை உள்ளடக்கிய ராசி சக்கரத்தினூடாக பயணிக்கிறது. அந்த பன்னிரெண்டு ராசிகளுள் முதலாவது மேச ராசி என்பதுடன் பன்னிரெண்டாவது மீன ராசி ஆகும். சூரியன் மேச ராசியிலிருந்து மீன ராசிக்கு பயணிப்பதற்கு எடுத்துக்கொள்ளும் காலம் ஒரு வருடம் ஆகும். சூரியன் மீன ராசியை அடைந்ததும் வருடம் பூர்த்தியடைகிறது. இவ்வாறு சூரியன் மேச ராசியில் இருந்து மீன ராசியை அடையும் இறுதிநாள் பழைய பெருநாள் எனவும், சூரியன் மீண்டும் மேச ராசிக்கு புலம்பெயர்வதனை (சங்கிராந்தியை) அல்லது மாறுவதனை புத்தாண்டு எனவும் சோதிடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பண்டைய இலங்கையில் காணப்பட்ட சோதிட மற்றும் முகூர்த்த முறைகள் தொடர்பாக ஆராயும்போது சோதிட மற்றும் சுப நேரங்கள் தொடர்பான அறிவு விசேட நிகழ்வுகளுக்காக பயன்படுத்தப்பட்டதுடன் அதற்காக சோதிடத் துறையில் நிபுணத்துவம் பெற்ற சோதிடர்கள் அரச சேவைக்கு நியமிக்கப்பட்டார்கள் என்பது தெளிவாகிறது. மஹ நெகத்தினா, சங்வத்சரிக நாயக்க, கணன நாயக்க மற்றும் கணித்தயா ஆகியன அவ்வாறான சில பதவிகள் ஆகும். புத்தாண்டு போன்றே ஏனைய சுப நடவடிக்கைகளுக்காக முகூர்த்தம் பார்க்கும் சம்பிரதாயபூர்வமான பணிகள் குறித்த அந்த பதவிக்கு ஒப்படைக்கப்பட்டதுடன் அரசாட்சியுடன் தொடர்பான சுப நடவடிக்கைகளின் ஈடுபடல், மதரீதியான மற்றும் கலாச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்றன சுப நேரங்களில் இடம்பெற்றமை பற்றி வரலாற்று ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### புத்தாண்டின் வரலாறு

பண்டுகாபய அரசனின் ஆட்சிக் காலம் முதல் நிலவி வருவதாக நம்பப்படும் புதுவருடக் கொண்டாட்டமானது, முற்காலத்தில் ஒரு முகூர்த்தபண்டிகையாகவே கொண்டாடப்பட்டுள்ளது. பிற்காலத்தில் கண்டி இராச்சியத்தின் போது அரச மாளிகையின் அனுசரணையின் கீழ் மலைநாட்டில் நான்கு பிரதான விழாக்கள் கொண்டாடப்பட்டுள்ளதுடன் சித்திரை மாத புதுவருடக் பண்டிகை இதில் முக்கிய இடத்தை வகிக்கிறது. கண்டி யுகத்தின் போது அரச அனுசரணையின் கீழ் நடைபெற்ற புதுவருட முகூர்த்த உற்சவம் தொடர்பாக ரொபட் நொக்ஸ் மற்றும் ஜோன் டேவி ஆகிய இருவரும் குறிப்பிட்டுள்ளார்கள். சிங்கள மற்றும் தமிழ் புதுவருட தினம் 1886ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க விடுமுறைத் தினச் சட்டம் (Holiday Act 1886) சட்டமாக்கப்பட்டதைத் தொடர்ந்து அரச விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

ஐரோப்பியர்களின் வருகையுடன் இந்நாடடில் நிலவிய ஒருசில மதரீதியான மற்றும் கலாச்சார ரீதியான பண்டிகைகளை நடாத்துவது படிப்படியாக அற்றுப் போகும் அபாயம் எதிர் நோக்கப்பட்டது. அதற்குத் தீர்வாக 1931ஆம் ஆண்டு அப்போது இருந்த தேசிய இயக்கத்தின் தலைவர்களினால் பெரும் எண்ணிக்கையிலான மக்களின் பங்களிப்புடன் எல்லா வகையிலும் பூரணத்துவம் வாய்ந்த ஒரு புதுவருடக் கொண்டாட்டம் கொழும்பு விக்டோரியா (தற்போதைய விகாரமகாதேவி) பூங்காவில் நடாத்தப்பட்டது. அதன் பின்னர் புதுவருடக் கொண்டாட்டம் நடாத்துதல் படிப்படியாக நாடுபூராகப் பரவ ஆரம்பித்தது.

## புதுவருடப் பிறப்பினை கொண்டாடுதல்

புதுவருடப் பிறப்பினைக் கொண்டாடுதல் பௌத்த மற்றும் இந்து மத சம்பிரதாயங்களைத் தழுவிய செயற்பாடுகள் விருத்தியடைந்த விசேட அம்சங்கள் உள்ளடங்கிய ஒரு செயற்பாடாகக் கருத முடியும். புதுவருடப் பிறப்பு தொடர்பான சோதிடத்தின் அடிப்படையாக சூரியன் மீன ராசியில் இருந்து மேச ராசிக்கு புலம்பெயர்வதாக இருந்தபோதும் இது வானசாஸ்திரவியல் எனும் விடயத்தை விடவும் இலங்கை வாழ் மக்களின் அடையாளத்தை உலகரியச் செய்யும், குடும்பத்தை மையமாகக் கொண்ட சமூக உறவினை வலுவடையச் செய்யும் செயற்பாடுகளை உள்ளடக்கிய ஒரு பண்டிகையாக சமூகமயப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் மொழியில் புதுவருடமானது புத்தாண்டு என அழைக்கப்படுகிறது.

கிரெகரி நாட்காட்டியை உபயோகிக்கும் நாடுகளில் டிசெம்பர் மாதம் 31ஆந் திகதி நள்ளிரவு முடிவடைந்ததைத் தொடர்ந்து ஜனவரி மாதம் 01ஆந் திகதி பிறப்பதாகக் கருதப்பட்டு புதுவருடம் கொண்டாடப்படுகிறது. சிங்கள மற்றும் தமிழ் புதுவருடத்தின் பிரகாரம் பழைய வருடம் முடிவடைவதற்கும் புதுவருடம் பிறப்பதற்கும் இடைப்பட்ட காலம் முகூர்த்தங்கள் இல்லாத காலம் எனும் பொருள்கொண்ட “நொனகத்தய” என அழைக்கப்படுகிறது. “நொனகத்தய” காலப் பகுதிக்குள் உணவு பானங்கள் உட்கொள்வதைத் தவிர்த்து மத வழிபாடுகளில் ஈடுபட எதிர்பார்க்கப்படுகிறது. “நொனகத்தய” காலப் பகுதிக்குள் பௌத்தர்கள் விகாரைகளுக்குச் செல்வதும் இந்துக்கள் கோயில்களுக்குச் செல்வதும் எம்மால் பரவலாகக் காணக்கூடிய ஒரு நிகழ்வாக உள்ளது.

## புதுவருட சடங்கு சம்பிரதாயங்கள்

“நொனகத்தய” எனப்படும் சுப முகூர்த்த காலமல்லாத நேரத்தில் உடல் ரீதியானதும் உள ரீதியானதுமான மகிழ்ச்சி மற்றும் ஆறுதலைத் தரக்கூடிய சடங்கு சம்பிரதாயங்களுடன் இணைந்த மத ரீதியான வழிபாடுகள் மற்றும் அனுட்டானங்கள் முக்கிய இடம் வகிக்கின்றது. இந்து மற்றும் பௌத்த சம்பிரதாயங்கள் தொடர்பாக ஆராய்கின்ற போது இனங்களுக்கிடையிலான ஐக்கியம், ஒற்றுமை மற்றும் சகவாழ்வு ஆகியவற்றை உறுதிசெய்வதற்கு காரணமாக அமைகின்ற மதக் கிரியைகளுக்கு அதிகளவு வாய்ப்புக்கள் புதுவருட சடங்கு சம்பிரதாயங்களில் பொதிந்துள்ளமை தெளிவாகிறது. அதன் பிரகாரம் இந்துக்கள் மற்றும் பௌத்தர்களால் புதுவருட பிறப்பின் போது பின்பற்றப்படும் சம்பிரதாயங்கள், வழக்கங்கள் சில பின்வருமாறு.

1 .புதுவருடத்திற்கான முதல்பிறை பார்த்தல்
2. பழைய வருடத்தில் ஸ்நானம் செய்தல்
3. “நொனகத்தய” எனப்படும் புண்ணிய காலம்
4. அடுப்பில் தீ மூட்டுதல் மற்றும் உணவு சமைத்தல்
5. உணவு உட்கொள்ளுதல்
6. கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதல் மற்றும் வேலை துவங்குதல்
7. தலையில் எண்ணெய் தேய்த்தலும் ஸ்நானம் செய்தலும்
8. உறவினர்களைக் காண்பதற்காகச் செல்லுதல்

## புதுவருடத்திற்கான முதல்பிறை பார்த்தல்

பழைய சமூகத்தில் நிலவிய சந்திர வழிபாட்டினைப் பின்பற்றுவதை நினைவூட்டுவதாக புதுவருடத்தின் முதலாவது சம்பிரதாயமான புதுவருடத்திற்கான முதல் பிறை பார்த்தல் விளங்குகிறது. சந்திரன் பரிபூரணம் மற்றும் கண்கவர் தன்மையின் அடையாளமாக உள்ளது. முதல் பிறை பார்ப்பதன் காரணமாக

ஏற்படும் மனத் திருப்தியானது வருடம் பூராகவும் ஆரோக்கியமான மற்றும் நீண்ட ஆயுளுக்கு காரணமாக அமைவதாக நம்பப்படுகிறது. முதல் பிறை பார்ப்பதற்கான நோக்கங்கள் பல காணப்படுகின்றன. எதிர்வரும் வருடத்திற்கான புதியதோர் ஒளியினையும் எதிர்கால நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான இலட்சியத்தையும் ஏற்படுத்துதல் இவற்றுள் பிரதானமானது ஆகும். பௌத்த சம்பிரதாயத்தின் பிரகாரம் சந்திரன் பிரயாணம் செய்யும் முறைக்கு ஏற்பவே நாட்கள் அமைகின்றன. 28 நாட்களைக் கொண்டதொரு பிரயாணக் காலத்திற்குள் சந்திரன் பரிபூரணமடைகிறது. வேத நூலின் பிரகாரம் மகா பிரம்மனால் ஔடத செடிகள், விதைகள் மற்றும் முகூர்த்த நட்சத்திரங்களின் அதிபதியாக சந்திரனே என அறியப்பட்டுள்ளது. சாதாரண மக்களின் வாழ்க்கை மீது சூரியனைப் போலவே சந்திரனும் நெருக்கமாக நின்று ஆதிக்கம் செலுத்துவதாக பொதுமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### பழைய வருட தின ஸ்நானம்

புதுவருடத்திற்கு தயாராகின்றபோது தலையைக் கழுவி குளித்துச் சுத்தம் செய்த பின்னர் சுப வேலைகளில் ஈடுபடுதல் தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டு வரும் ஒரு சம்பிரதாயம் ஆகும். எதிர்வரும் வருடத்தில் ஆரோக்கியமானதொரு வாழ்வு வாழ்வதற்கான எதிர்பார்ப்புடன் மேற்கொள்ளப்படும் ஒரு சம்பிரதாயமாக சுப நேரத்தின் பிரகாரம் மருத்துவ நலன்களுடைய மூலிகைகளைக் கொண்டு தயார் செய்யப்பட்ட மருத்து நீரை தலையில் தேய்த்து தண்ணீரைக் கொண்டு ஸ்நானம் செய்யப்படும்.

### "நொனகத்தய" எனப்படும் புண்ணிய காலம்

"நொனகத்தய" என அழைக்கப்படுவது பழைய வருடம் நிறைவடைந்து புதுவருடப் பிறப்பு பூர்த்தியடைந்த பின்னர் உள்ள இடைப்பட்ட காலம் ஆகும். "நொ-நெகத்த" அதாவது சுப நேரம் அற்ற காலப்பகுதி என்ற பொருள் கொண்டதாக நொனகத்தய எனும் பதம் அமைந்துள்ளது. ஆகவே இந்தக் காலப் பகுதியில் புண்ணிய நடவடிக்கைகளில் ஈடுபடுதல் வேண்டும். ஆகவே நொனகத்தய என்பது புண்ணிய காலம் எனவும் அழைக்கப்படும்.

நொனகத்தய பிறப்பதற்கு முன்னர் உணவு உட்கொள்ளல் உள்ளிட்ட அனைத்து வேலைகளையும் நிறைவு செய்து மத வழிபாடுகளில் மாத்திரம் ஈடுபடுதல் சம்பிரதாயமாக உள்ளது. இந்த கால எல்லைக்குள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து விகாரைகளுக்குச் செல்வதனைப் பொதுவாகக் காணக் கூடியதாய் உள்ளது. விகாரைகளில் மத வழிபாடுகளில் ஈடுபடுவதற்குப் பொருத்தமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒரே நோக்கத்திற்காக பெரும்பாலானவர்கள் மதத்தலங்களுக்குச் செல்வதன் மூலம் சிறந்த பரஸ்பர மனித உறவு முறைகள் உறுதிசெய்யப்படுகிறது. புதுவருடம் பிறக்கின்ற வேளையில் மத அனுட்டானங்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவதன் மூலம் எதிர்கால நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது.

### அடுப்பில் தீ மூட்டுதல் மற்றும் உணவு சமைத்தல்

புதுவருடப் பிறப்பும் புதுவருடத்தின் முதலாவது சம்பிரதாயமான அடுப்பில் தீ மூட்டுதலும் ஒரே நேரத்தில் இடம்பெறும். சம்பிரதாயபூர்வமான சமூகத்தில் பெண்கள் ஒன்றிணைந்து "ரபான்" மத்தளம் கொட்டி புதுவருடம் பிறந்துள்ளதாக அறிவிப்புச் செய்வார்கள். இது பழைய சமூகங்களில் நிலவிய அக்கினிக் கடவுளை வழிபடும் சம்பிரதாயத்தை நினைவு கூருவதாக அமையும். அடுப்பில் தீ மூட்டும் செயற்பாடு இடம் பெறுவது முகூர்த்த நேரப்படி விதிக்கப்பட்ட சுப முகூர்த்தத்தில் ஆகும். அந்த சந்தர்ப்பத்தில் உரிய வர்ணத்தில் அமைந்த ஆடை அணிந்து உரிய திசையை நோக்கியவாறு அடுப்பில் தீ மூட்டுதல் இடம்பெறும். குடும்பத்தில் உள்ள தாயார் இதன்போது முக்கிய பங்கேற்று செயற்படுவார். அடுப்பில் தீ மூட்டப்பட்ட பின்னர் புதியதொரு பானையில் பாற்சோறு சமைக்கப்படும். பிரதேச ரீதியாக இந்த சம்பிரதாயத்தில் ஒருசில மாற்றங்களைக் காணக் கூடியதாக இருந்த போதும் பாற்சோறு, பலகாரம், பொரிவிளாங்காய், அல்வா போன்ற சம்பிரதாயபூர்வமான தின்பண்டங்கள் சமைத்தல் அனைத்து பிரதேசங்களிலும் பின்பற்றப்படும் ஒரு பொதுவான சம்பிரதாயமாக உள்ளது.

### உணவு உட்கொள்தல்

சுப வேளையில் அடுப்பில் தீ மூட்டப்பட்டு சமைத்த உணவை உட்கொள்ளல் சுப முகூர்த்தத்திற்கு அமையவே மேற்கொள்ளப்படுகிறது. குறித்துரைக்கப்பட்ட வர்ணங்களினாலான ஆடைகள் அணிந்து குறித்த திசையை நோக்கி உணவு உட்கொள்ளும் சம்பிரதாயம் நிறைவேற்றப்படுகிறது. இது குடும்பத்தின் ஒற்றுமையை எடுத்துக் காட்டும் ஒரு முக்கிய நிகழ்வாகும். உணவு உட்கொள்ளும் சம்பிரதாய நிகழ்வு குடும்பத்தில் உள்ள தகப்பனது தலைமையில் இடம்பெறும். தனது குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் செல்வச் செழிப்புக்கள் நிறைந்த நோயற்ற ஒரு புதுவருடத்திற்காகப் பிரார்த்தனையுடன், ஆரம்பமாக குடும்பத் தலைவனாலும் அதனைத் தொடர்ந்து மனைவி மற்றும் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களாலும் முதலாவது பாற்சோற்றுத் துண்டு உட்கொள்ளப்பட்டதன் பின்னர் அனைவரும் ஒன்றிணைந்து உணவு உட்கொள்வது சம்பிரதாயம் ஆகும். ஆகாரமானது உயிரினங்களின் மிகப் பிரதானமான தேவைப்பாடாகவும் உடற்பலத்தினை வழங்கும் முக்கிய காரணியாகவும் காணப்படுகிறது. ஆகவே புதுவருடத்தின் சம்பிரதாயங்களுள் உணவு உட்கொள்ளலானது சிறப்பு மிக்க ஒரு சம்பிரதாய விதிமுறையாக பேணப்பட்டு வருகிறது.

### வேலை துவங்குதல் மற்றும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதல்

தான் செய்யும் தொழிலுக்குரிய வேலையினைத் துவங்குதலானது சுப முகூர்த்தத்தில் மேற்கொள்ளப்படும் மிகவும் பெறுமதி வாய்ந்த ஒரு சம்பிரதயாமாகும். அடையாளமாக தான் விரும்பும் ஒரு செயற்பாட்டில் ஈடுபடுவதன் மூலம் புதுவருடத்தில் வேலை துவங்குதல் இடம்பெறும். கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதலும் இயற்கையுடனான உறவுமுறையினை நினைவுகூர்ந்து மேற்கொள்ளும் ஒரு செயற்பாடு ஆகும். அண்மைய வரலாற்றுக் காலம் வரை கிணற்றுடன் தொடர்புபட்டு கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதல் சம்பிரதாயமாக பேணிச் செல்லப்பட்ட ஒரு வழக்கமாக இருந்து வந்துள்ளது. தண்ணீருடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதன் மூலம் எதிர்வரும் வருடத்தில் குறையற்ற ஒரு வாழ்வினை அனுபவிப்பதற்கான பிரார்த்தனை நிறைவேறுமென நம்பப்படுகிறது. வெற்றிலையினால் சுற்றப்பட்ட ஒரு நாணயத்தை பரிமாற்றுவதன் ஊடாக கொடுக்கல் வாங்கல் நடைபெறுகிறது. தார்மீக ரீதியாக பணம் சம்பாதித்து வாழ்க்கையினை நடாத்தும் ஆரவாரமற்ற ஆசாபாசங்களைக் கொண்ட ஒரு நபருடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதனால் புதுவருடத்தில் தனது வாழ்வு வளம் பெறுவதாக இந்த சம்பிரதாயம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையான சடங்கு சம்பிரதாயங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் வருகின்ற ஓய்வு காலம் பூராக புதுவருட விளையாட்டுக்களில் ஈடுபடுவது வழக்கமாகும். சொக்கட்டான் விளையாட்டு, ஊஞ்சலாட்டம், பல்லாங்குழி விளையாட்டு, "ரபான்" மத்தளம் இசைத்தல் ஆகியன அவற்றுள் சிலவாகும். கிராமவாசிகள் திறந்த வெளியில் ஒன்றுகூடி புதுவருட விளையாட்டுக்களில் ஈடுபடுவதனைப் பரவலாகக் காண முடியும். இரு நபர்களுக்கிடையே நடாத்தப்படும் கைச்சண்டை, தலையணைச் சண்டை, வழுக்கும் மரம் ஏறுதல், கயிறு இழுத்தல், புதுவருட நங்கை தெரிவு செய்தல் ஆகியன பிரசித்தமான விளையாட்டுக்கள் ஆகும்.

### உறவினர்களைக் காண்பதற்காகச் செல்லுதல்

புதுவருடத்தில் உறவினர்களைப் பார்க்கச் செல்லுதல் சம்பிரதாயபூர்வமானதும் சமூக உறவுகளை உறுதிசெய்வதுமான மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சடங்கு ஆகும். பெற்றோர்களைச் சந்தித்தல் மற்றும் பரிசுப் பொருட்களை அன்பளிப்புச் செய்தல் ஆகியன புதுவருடத்தில் மேற்கொள்ளப்படும் மிக முக்கியமான சமூக சடங்கு ஆகும். இதன் காரணமாக உறவுமுறைகள் புதுப்பிக்கப்படல் மற்றும் உறுதியடைதல், பழைய கோபதாபங்கள் இல்லாதொழிதல் ஆகியனவும் இடம்பெறுகின்றன.

### தலையில் எண்ணெய் தேய்த்தலும் ஸ்நானம் செய்தலும்

தலையில் எண்ணெய் தடவும் சம்பிரதாயம் மூலம் எதிர்பார்க்கப்படுவது ஆரோக்கியம் ஆகும். தலையில் எண்ணெய் தடவுகின்ற போது மூலிகைச் செடிகளை ஒன்று சேர்த்து தயார் செய்யப்பட்ட மருத்து நீர் தடவப்பட்டு தலையைக் கழுவுதலும் எண்ணெய் தடவுதலும் மேற்கொள்ளப்படும். இச் செயற்பாடுகள் கிராமத்தின் விகாரை, தேவாலயம், கோயில் அல்லது பிரதேசத்தில் வசிக்கும் முக்கியஸ்தர் ஒருவரது தலைமையில் இடம்பெறும். சுப நேரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் இந்த வழக்கத்தின் போது அணிந்திருக்க வேண்டிய ஆடை அணிகலன்களின் வர்ணம் மற்றும் முன்னோக்கி இருக்க வேண்டிய திசை ஆகியன தீர்மானிக்கப்படும். புதுவருடத்தின் முதலாவது ஸ்நானம் இடம்பெறுவது தலையில் எண்ணெய் தேய்க்கப்பட்டதன் பின்னராகும்.

## தமிழ் புதுவருடக் கொண்டாட்டம்

சமாதானத்திற்கு உரித்துடைய இளவரசன் என இந்துமதம் கருதும் “இந்திரதேவன்” இப் பூவுலகிற்கு சமாதானத்தையும் சௌபாக்கியத்தையும் கொண்டு வந்தமையினை இந்து பக்தர்கள் புதுவருடம் எனக் கருதுகின்றார்கள். சம்பிரதாயபூர்வமான சூரிய நாட்காட்டியின் முதலாவது மாதம் ஏப்ரல் மாதம் ஆகும். அது சித்திரை மாதம் என அழைக்கப்படும். மகா பிரம்மன் படைக்கப்பட்ட “சத்தியயுகம்” எனப்படும் யுகம் ஆரம்பமாவதும் சித்திரை மாதத்தில் ஆகுமென இந்து மதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மாதமானது தமிழ் மொழியில் “புத்தாண்டு” மற்றும் “வருடப் பிறப்பு” அல்லது “சித்திரைத் திருநாள்” எனும் பெயர்களினால் அழைக்கப்படுகிறது.

“சித்திரை” மாதத்தை மையமாகக் கொண்ட புதுவருட பண்டிகையானது பிரம்மாவால் “சத்தியயுகம்” எனப்படும் புதிய யுகம் படைக்கப்பட்டதை அடிப்படையாகக் கொண்டே கொண்டாடப்படுகிறது. தென் இந்தியாவின் ஒருசில மாநிலங்களில் உதாகீ, யுகாதீ, சம்வத்சார ஆகிய பெயர்களினால் அழைக்கப்படும் இது பெரும்பாலும் சிங்கள புதுவருடம் போன்றது ஆகும். இது மார்ச் மாத இறுதியில் அல்லது ஏப்ரல் மாத ஆரம்பத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஏப்ரல் 14 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் புததாண்டு விழா தென் இந்தியாவின் ஒரு சில மாநிலங்களில் கொண்டாடப்படுகிறது. சூரியன் மீன ராசியிலிருந்து மேச ராசிக்கு வருகை தருவதனை மையமாகக் கொண்டு அறுவடை விழாவாக கொண்டாடப்படும் இவ்விழாவானது பிரதேச ரீதியான ஒரு புத்தாண்டாக இந்தியாவில் பிரசித்தி பெற்றுள்ளது. பரிசுத்த நீரினால் ஸ்நானம் செய்தலானது இந்த விழாவுடன் தொடர்புடைய ஒரு பிரதான அம்சமாகும்.

## தமிழ் புதுவருட சம்பிரதாயம்

புதுவருட தினத்தன்று அதிகாலை வேளை கண்விழித்தெழும் தாய், குடும்ப அங்கத்தவர்களின் இருவிழிகளையும் மூடி சுபமான காட்சி தரும் ஓர் இடம் எனக் கருதப்படக்கூடிய வீட்டில் உள்ள தெய்வ உருவச்சிலையினை அவர்களது கண்முன்னே கொண்டு வருவார். அவ்வாறே தங்க ஆபரணங்கள், பழவகைகள், போன்றனவும் காட்டப்படும். அதனைத் தொடர்ந்து கண்ணாடியில் முகத்தைக் காட்டுவார். இந்த செயற்பாடுகளில் ஈடுபடுவதன் காரணமாக சௌபாக்கியம் கிட்டுவதாக இந்துக்களின் நம்பிக்கையாகும்.

புதுவருட தினத்திற்கான ஆயத்தமென்பது விசேட சம்பிரதாய விதிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படுகின்ற ஒரு செயன்முறை ஆகும். தனது வீட்டின் நுழைவாயிலில் அமைந்துள்ள முற்றத்தில் கோலம் அல்லது “ரங்கோலி” என அழைக்கப்படும் வர்ண வடிவங்கள் கொண்டு அலங்கரிக்கப்படும். இந்த கோலத்தின் நடுவே குத்துவிளக்கு வைக்கப்படும். பின்னர் கன்னி என அழைக்கப்படும் சம்பிரதாயம் மேற்கொள்ளப்படும். நல்ல காட்சிகள் என்பதே கன்னி எனப்படும் சொல்லின் பொருள் ஆகும். அதற்காக தங்க ஆபரணங்கள், பழவகைகள், காய்கறிகள், மலர்கள் மற்றும் அரிசி ஆகியன சிறப்பு மிக்க நல்ல காட்சிகளாக பயன்படுத்தப்படுவதுடன் அவற்றைப் பார்ப்பதன் மூலம் சௌபாக்கியம் கிட்டுவதாக நம்பப்படுகிறது.

புதுவருட தினத்தில் மேற்கொள்ளப்படும் மிக முக்கியமான மரபாக விளங்குவது மூலிகைகள் கலக்கப்பட்ட மருத்து நீரால் தலையைக் கழுவி ஸ்நானம் செய்து சுத்தமாகி புதுவருடத்திற்காக நிச்சயிக்கப்பட்ட வர்ணங்களையுடைய ஆடைகளை அணிவது ஆகும்.

மாட்டுச் சாணத்தினால் மெழுகி சுத்தம் செய்யப்பட்ட வீட்டினுள் விநாயகரின் பாதுகாப்பை வேண்டி மலர் விளக்கேற்றி பூஜை செய்வதும் ஒரு மரபாக உள்ளது. வீட்டின் பிரதான நுழைவாயிலின் கதவு நிலச் சட்டத்தில் ஏழு மாவிலைகள் தொங்கவிடப்பட்டு பாதுகாப்பினை வேண்டுதலும், வெற்றிலை பாக்கு மற்றும் பழவகைகளினால் அலங்கரிப்பதும் நீர் நிறைக்கப்பட்ட ஒரு தண்ணீர் குடத்தினை வீட்டின் முற்றத்திற்கு கொண்டு வருவதும் பிரதான மரபுகளாக விளங்குகிறது. புதுவருடம் பிறப்பதற்கு முன்னர் இந்த சம்பிரதாயங்கள் மேற்கொள்ளப்படும். அதனைத் தொடர்ந்தே புதுவருடம் பிறக்கின்றது. சுப நேரத்தில் அடுப்பில் நெருப்பு மூட்டுதல் பிரதானமான மரபாக காணப்படுவதுடன் பாற்சோறு சமைத்து சுப நேரத்தில் உட்கொள்ளப்படும். இது குடும்பத் தலைவனின் தலைமையில் இடம்பெறுவதுடன் இந் நிகழ்வில் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்பார்கள்.

இதனைத் தொடர்ந்து வருவது கொடுக்கல் வாங்கல் இடம்பெறுவதற்கான முகூர்த்தம் ஆகும். இது “கை விசேடம்” என அழைக்கப்படும் சம்பிரதாயம் ஆகும். வீட்டுத் தலைவனின் தலைமையில் பரிசுப் பொருட்கள் கைமாற்றப்படல் இதன் போது இடம்பெறும். கொடுக்கல் வாங்கல் மற்றும் பரிசுப் பொருள் பரிமாற்றம் ஆகியன புதுவருடத்தில் இடம்பெறும் முக்கியமான ஒரு சம்பிரதாயம் ஆகும். இவை அனைத்தும் சுப முகூர்த்தத்தில் இடம்பெற்றதன் பின்னர் கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபட்டு புதுவருடத்திற்கு ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளல் இந்துக்களாலும் பின்பற்றப்படும் பிரதானமான ஒரு வழக்கமாகும். ஏழை எளியவர்கள் மற்றும் யாசகர்களுக்கு காணிக்கைகள் வழங்குதலும் இதன் போது இடம்பெறும்.

புதுவருடத்தில் கமத்தொழில் நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்கும் அடையாள நிகழ்வுக்கான சுப நேரத்திற்கு அமைய ஒரு துண்டு மண் வெட்டுதல் இடம்பெறும். “ஆர்பிடு” என அழைக்கப்படும் இந்த நிகழ்வு சிங்களப் புதுவருடத்தின்போது வேலை துவங்கும் நிகழ்வுக்குச் சமமானதாகும். சிங்கள மக்களைப் போன்றே இலங்கை வாழ் தமிழ் மக்களும் புண்ணிய காலத்தின்போது மத வழிபாடுகளில் ஈடுபடுவார்கள். தமிழ் மக்களும் மூலிகை கலந்த “மருத்து நீர்” என அழைக்கப்படும் ஸ்நானம் செய்வார்கள். வருடம் பூராகவும் தேகாரோக்கியத்தை எதிர்பார்க்கும் இது சிங்களப் புதுவருடத்தின்போது தலையில் எண்ணெய் தேய்க்கும் சம்பிரதாயத்தை ஒத்ததாக உள்ளது. சிங்கள புதுவருட சம்பிரதாயங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தினங்களில் மேற்கொள்ளப்படும் அதே நேரம் தமிழ் புதுவருட சம்பிரதாயங்கள் அனைத்தும் ஒரே தினத்தில் மேற்கொள்ளப்படுவதுமே சிங்கள மற்றும் தமிழ் புதுவருடம் ஆகியவற்றுக்கு இடையில் காணப்படும் வேறுபாடு ஆகும்.

இலங்கையில் வாழும் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒரே தினத்தில் புதுவருடத்தைக் கொண்டாடுகின்றார்கள். பெரும்பாலான சடங்கு சம்பிரதாயங்கள் மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றுக்கிடையே ஒற்றுமை நிலவுகிறது. உலகம் பூராகவும் பரந்துபட்டு வாழும் தமிழ் மக்களும் புதுவருடத்தைக் கொண்டாடுவதுடன் அவர்கள் பின்பற்றும் சடங்கு சம்பிரதாயங்களுக்கு இடையே சிறிதளவு வேறுபாடு நிலவுகிறது.

இலங்கையில் புதுவருட விழாக் கொண்டாட்டத்திற்கான திகதி மற்றும் முகூர்த்த நேரங்கள் என்பன, தேசிய சுபமுகூர்த்த குழுவினால் நிச்சயிக்கப்படும். இலங்கையில் வாழும் தமிழ் மக்களிடையே இந்தியாவின் தமிழ்நாட்டினால் வெளியிடப்படும் முகூர்த்த நேரங்களைப் பின்பற்றும் நபர்களைப் போன்றே இந்த நாட்டின் முகூர்த்தக் குழுவின் தீர்மானத்தினைப் பின்பற்றும் மக்களும் உள்ளார்கள்.

## புதுவருடத்தின் அடையாளங்கள்

### *கோகிலம்*

ஆசியாவின் கோகிலம் (குயில், கோகிலம்) சிங்கள மற்றும் தமிழ் புதுவருட காலத்தில் காணக் கிடைக்கும் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு பறவை இனம் ஆகும். புதுவருடத்திற்கும் கோகிலத்திற்கும் இடையே தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு தொடர்பு காணப்படுகிறது. குயிலின் “குக்குக்கூ” ஓசையானது புதுவருடம் நெருங்கியுள்ளது என்பதை முற்கூட்டியே அறிவிப்புச் செய்யும் ஒரு நிகழ்வு என நம்பப்படுகிறது.

### *பவள மலர்*

மார்ச், ஏப்ரல் மாதமளவில் வசந்தகாலம் பிறக்கின்றது. இந்நாட்களில் அனைத்து மரம் செடிகொடிகளும் பூத்துக் குலுங்கும். சிங்கள புதுவருட காலத்தில் பூக்கும் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு மலர் இனமாக பவள மலர் காணப்படுகிறது. புதுவருடம் பிறப்பதற்கு அடையாளமாக பவள மரங்கள் சிவப்பு நிறப் பூக்களினால் நிரம்பி வழியும்.

## புதுவருட கிராமிய விளையாட்டுக்கள்

சிங்கள மற்றும் தமிழ் புதுவருட காலத்தில் இடம்பெறும் சம்பிரதாயபூர்வமான கிராமிய விளையாட்டுக்களுக்கு ஒரு நீண்ட வரலாறு உள்ளது. கிராமவாசிகளின் ஒத்துழைப்புடனும் பங்கேற்புடனும் மேற்கொள்ளப்படும் இந்த விளையாட்டுக்கள் இனக் குழுக்கள் மத்தியில் ஒத்துழைப்பு, நெருக்கம் மற்றும் நட்புறவு ஆகியன வளர்வதற்கும் சந்தேகங்கள் களைவதற்கும் பெரிதும் உதவுகின்றன. அன்று விளையாட்டின் மூலம் ஒற்றுமை, நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு போன்ற விலைமதிக்க முடியாத சன்மானங்கள் கிடைக்கப்பெற்றது எனக்

கருதப்படுகிறது. ஆசியாவின் கிராமிய விளையாட்டுக்கள் தொடர்பாக ஆராய்ச்சியில் ஈடுபட்ட பேராசிரியர் "லுடோவைக்" அவர்களின் கருத்துத் தெரிவிக்கையில், எமது நாட்டின் கிராமிய விளையாட்டுக்கள் ஆசியாவின் ஏனைய நாடுகளை விட தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு பின்புலத்தில் வளர்ச்சியடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். பாடல்களை மையமாகக் கொண்ட கிராமிய விளையாட்டுக்கள் இலங்கைக்கே உரித்தானவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து இனங்களுடனும் இனக் குழுக்களுடனும் ஒற்றுமையுடனும் ஒத்துழைப்புடனும் வாழ்வதற்கான மனப்பக்குவம் கிராமிய விளையாட்டுக்கள் மூலம் வலுவடைகிறது.

கிராமிய விளையாட்டுக்களின் துவக்கம் பத்தினித் தெய்வத்தை வழிபடும் கொள்கையுடனான ஓர் உறவுமுறையினை வெளிக்காட்டுவதுடன் "பக்மஹ" புதுவருட விளையாட்டுக்களின் துவக்கத்தின் போது பத்தினித் தெய்வத்தை நினைவுகூருதல் மற்றும் வெற்றி தோல்வியை சமநிலையில் பகிர்ந்து கொள்வதற்கான உறுதிமொழி அளிக்கப்படுகிறது. அவ்வாறே விளையாட்டில் ஈடுபடும்போது நீதியாக நடந்துகொள்வதாக தனக்குத் தானே உறுதிமொழி வழங்கப்படுகிறது.

புதுவருடத்துடன் தொடர்பான கிராமிய விளையாட்டுக்கள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

### *சொக்கட்டான் விளையாட்டு*

இந்த விளையாட்டு இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. புராணக் கதைகளுக்கு அமைய சோழ நாட்டுக்கு கடத்திச் செல்லப்பட்ட சிங்களப் படைக்குப் பதிலாக கஜபா அரசனால் சோழ நாட்டிலிருந்து பன்னிரெண்டாயிரம் பேர் எமது நாட்டுக்கு கொண்டுவரப்பட்டார்கள். அதனுடன் பத்தினி தெய்வத்தின் சிலம்பு மற்றும் சொக்கட்டான் போன்ற விளையாட்டுக்களும் இந்த நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. சொக்கட்டான் விளையாட்டுடன் தொடர்புபடுவதன் மூலம் பத்தினி தெய்வத்தின் ஆசீர்வாதம் தமக்கு கிடைப்பதாக நம்பப்படுகிறது.

சொக்கட்டான் விளையாட்டினை இரண்டு நபர்களாக அல்லது இரு குழுக்களாகப் பிரிந்து விளையாட முடியும். விளையாட்டு வீரர்களின் தொகை இரட்டை எண்ணிக்கையில் அமைதல் வேண்டும். ஒற்றை எண்ணிக்கை காணப்படும் போது சுண்டி ஒன்று நியமிக்கப்படும். இரண்டு குழுக்கள் விளையாடும்போது இரு குழுக்களுக்கும் ஒவ்வொரு தலைவர் நியமிக்கப்படுவார். விளையாட்டில் ஈடுபடுவதற்காக "பஞ்ச" எனப்படும் "ஒண்டுவ" கிடைக்கப்பெறல் வேண்டும். "ஒண்டுவ" எனப்படுவது சோழி ஒன்று மாத்திரம் மேல்நோக்கி இருப்பதாகும். அனைத்தையும் மேல்நோக்கிப் புறட்டுதல் "சிரிமல" என அழைக்கப்படுவதுடன் அதன்போது எதுவித வரவுத் தொகையும் கிடைக்கப்பெறாது. "பஞ்ச" புத்தகத்தின் இறுதி சதுரம் நீர் என அழைக்கப்படும். நீரிலிருந்து காய்கள் கரைசேர்வதற்கு "ஒண்டு" கிடைக்கப்பெறல் வேண்டும். முதன்முதலாக காய்களை அக்கரையில் சேர்க்கும் குழு வெற்றிபெறும்.

### *பல்லாங்குழி விளையாட்டு*

கணிதமுறைக்கு அமைய இடம்பெறும் இந்த விளையாட்டில் பெண்கள் இருவர் பங்கேற்பதுடன் விளையாட்டின் ஆரம்பம் முதல் இறுதிவரை கைகோர்த்தல் பாடல் இடம்பெறும். பல்லாங்குழி விளையாட்டின் தோற்றம் முதல் பல்லாங்குழி விளையாட்டில் வெற்றி பெறுவதற்குத் தேவையான உபாய வழிமுறைகள் பாடல் மூலமாக கூறப்படும்.

பல்லாங்குழி பலகை சுமார் 10 முதல் 14 அங்குலம் நீளமும் 6 முதல் 8 அங்குலம் அகலமும் கொண்டதாகும். ஒருபக்கத்திற்கு 7 குளிகள் வீதம் இரண்டு பக்கமும் குளிகள் கொண்ட இரண்டு வரிசைகள் காணப்படும். வரிகளுக்கு இடையில் பலகையின் இரண்டு ஓரங்களிலும் இரண்டு குளிகள் காணப்படும். பல்லாங்குழி பலகை முத்துப் பலகை, பல்லாங்குழி கொழம்பு ஆகிய பெயர்களால் அழைக்கப்படும். பல்லாங்குழிவிளையாட்டு வங்காளதேசத்தில் ஆரம்பம்பிக்கப்பட்டதாக இந்த விளையாட்டுடன் தொடர்பான பாடல்கள் மூலம் தெளிவாகிறது.

பல்லாங்குழி பலகையில் 14 குளிகளில் ஒரு குளிக்கு 4 வீதம் 56 சோழிகள் அல்லது புளியங்காய் விதைகள் காணப்படும். இது சோழி அல்லது புளியங்காய் விதைகள் விதைத்தல் என அழைக்கப்படும். பின்னர் வீராங்கனைகளில் ஒருவர் தனக்குரிய வரியின் முதலாவது குளியில் உள்ள சோழிகளை கையில் எடுப்பார். இது "முறைத்துப் பார்த்தல்" என அழைக்கப்படும். இவ்வாறு முறைத்துப் பார்த்த சோழிகளை குளிக்கு ஒன்று என்ற வீதம் அண்மையில் உள்ள குளிகளில் முறைப்படி தூவப்படும். அதற்கு அடுத்த குளியில் உள்ள அனைத்து சோழிகளை ஏற்கனவே செய்தவாறு குளிகளில் இடப்படும்.

இவ்வாறு சோழிகள் தூவப்படும் வேளை இடைநடுவில் கையில் உள்ள சோழிகள் முடிவடைந்ததும் வெற்றுக் குளி அகப்படுமாயின் அதற்கடுத்த பக்கத்தில் உள்ள சோழிகள் அனைத்தும் சோழிகள் தூவும் வீராங்கனைக்குச் சொந்தம் ஆகும். இதனை பல்லாங்குழி விளையாட்டில் “சாப்பிடுதல்” என அழைக்கப்படும். முறையே வெற்றுக் குளிகள் இரண்டு சந்திக்குமிடத்து மூன்றாவது குளியில் உள்ள சோழிகளை சாப்பிடுவதற்கு வீராங்கனைக்கு அனுமதி இல்லை. அவ்வாறான சந்தர்ப்பம் பூஞ்சனம் என அழைக்கப்படும். அதன் போது மற்றைய வீராங்கனைக்கு விளையாட வாய்ப்புக் கிடைக்கும். பலகையின் ஒருபக்கத்தில் உள்ள சோழிகள் அனைத்தும் முடிவடையுமாயின் “ரஹா புஹுல வெட்டுதல்” என அழைக்கப்படும். இதில் வெற்றி பெறுவது அதிகளவு சோழிகளைப் பெற்றுக்கொள்ளும் நபர் ஆவார். வெற்றுக் குளிகள் இரண்டுக்கும் நடுவில் உள்ள ஒரு குளியில் ஒற்றையான ஒரு விதை காணப்படுமாயின் அது “புதா” என அழைக்கப்படும்.

### *கசு (கஜு) விளையாட்டு*

சிறு பிள்ளைகள் மத்தியில் பிரசித்தி பெற்ற இந்த விளையாட்டின் போது ஆறு கசுக் கொட்டைகள் விளையாடுவதற்குப் போதுமானதாகும். அனைத்து கசுக் கொட்டைகளும் இரண்டு கைகளினாலும் மேலே வீசப்படுவதுடன் கீழே விழுந்த கசுக் கொட்டைகளுக்கு இடையே விரல்களினால் ஒரு கோடு வரையப்படும். இரண்டு கசுக் கொட்டைகளிலும் படாதவாறு விரலைச் செலுத்தியதன் பின்னர் அந்த கசுக் கொட்டைகள் விளையாடியவருக்கு உரித்தாவதுடன் ஆகக் கூடுதலான கசுக் கொட்டைகளைப் பெற்றுக்கொண்டவர் போட்டியில் வெற்றி பெறுவார்.

### *கபடி விளையாட்டு*

அருவடை செய்யப்பட்ட ஒரு வயல்வெளி அல்லது ஓர் ஏரிப்படுக்கை போன்ற வெற்றுப் பூமிப் பிரதேசத்தில் கபடி விளையாட்டு இடம்பெறும். விளையாட்டுத் திடலில் இரண்டு எல்லைகள் அடையாளப்படுத்தப்படும். இந்த விளையாட்டுத் திடல் சரிசமமான இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு தலைவர்கள் இருவர் தெரிவுசெய்யப்படுவார்கள். ஒரு நாணயம் மேலே சுண்டப்பட்டு முதலாவதாக விளையாடும் குழு இனங்காணப்படும். ஒரு குழுவின் வீரர்கள் “கபடி கபடி” என்று கூறியவாறு மற்றைய குழுவின் எல்லைக்குச் சென்று வீரர்களுக்கு அடித்து விட்டு தனது எல்லைக்கு ஓட்டம் பிடிப்பார்கள். அடி வாங்கிய வீரர் போன்றே அடித்துவிட்டு கபடி கபடி எனக் கூறுவதை நிறுத்திய வீரரும் தோல்வியடைந்தவர்களாக கருதப்படுவார்கள். கபடி எனக் கூறுபவர் “குட்டா” என அழைக்கப்படுவார். கபடி விளையாட்டின் போது “குட்டா” கதைக்க மாட்டார் என்பதுடன் அவ்வாறு கதைப்பாராயின் அந்த வீரர் தோல்வி அடைவார்.

### *கதிகால் வேலி புரட்டுதல்*

கதிகால் வேலி புறட்டுதல் சிறுவர்கள் மற்றும் பெண்கள் மத்தியில் பிரசித்தி பெற்ற ஒரு விளையாட்டு ஆகும். பலம் மிக்கதாக அமைக்கப்பட்ட ஒரு வேலியினை உடைத்துக்கொண்டு வருவதற்கு முயற்சிக்கும் மாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு ஒரு சாரார் நடவடிக்கை எடுப்பார்கள். இது ஓர் உரையாடல் வடிவில் இடம்பெறும்.

### *கிட்டி அடித்தல்*

இந்த விளையாட்டு “ரே குடு” பாய்தல் மற்றும் “ரே கல்லி” விளையாட்டு ஆகிய பெயர்களினால் அழைக்கப்படும். இரண்டு தொடக்கம் பன்னிரண்டு வரையான வீரர்கள் இதில் கலந்துகொள்ள முடியும். “குடு” குளி ஒன்றின் அகலம் ஓர் அங்குலமும் நீளம் மூன்று அங்குலமும் கொண்டதாகும். “கல்லி” தடியின் நீளம் மூன்று அடிகள் ஆகும். சிறிய தடி சுமார் ஆறு அங்குலம் ஆவதுடன் அது “குட்டா” என அழைக்கப்படும்.

சிறியதொரு குழி தோண்டப்பட்டு அதன் மேல் தடி குறுக்கே வைக்கப்பட்டு நீண்ட தடியினால் இந்த சிறிய தடி தொலைவில் வீசி எறியப்படும். இரண்டு குழுக்களாக பிரிந்து விளையாடப்படும் இந்த விளையாட்டின் போது காக்கும் குழுவினால் தடி பிடிக்கப்படுமாயின் அந்த குழுவிற்கு “வாரம” ஒன்று கிடைக்கப்பெறும். பிடிப்பதற்கு இயலாது போகுமிடத்து அது விழுந்த இடத்திலிருந்து “குட்டா” காக்கும் குழுவிலிருந்து ஒருவரினால் குளியின் அருகில் அந்த சிறிய தடி எறியப்படல் வேண்டும். அது குளியில் விழுமாயின் அந்த தடியை வீசிய வீரர் விலக நேரிடும். குளிக்குத் தொலைவில் விழுமாயின் அந்த தூரம் “கல்லி”யால் அளக்கப்படும். பத்து “கல்லி”“வாரம்” எனப்படும் ஒரு“குட்டா” ஆகும்.

### *கொப்பர கொப்பர பிபிஞ்ஞா*

கிராமத்தில் வசிக்கும் சிறுவர்கள் மத்தியில் இடம்பெறும் இந்த விளையாட்டில் பெரும்பாலானோர் கலந்துகொள்ள முடியும். முதலாவதாக சிறுவர்கள் வட்டமாக எழுந்து நிற்பார்கள். சிறுவர்களில் ஒருவர்

ஒரு சிறிய மரக் கொத்தை கையில் எடுத்து வட்டத்தைச் சுற்றி வலம் வருவதுடன் குறித்த அந்த சிறு பிள்ளைக்கும் வட்டமாக நிற்பவர்களுக்கும் இடையே ஓர் உரையாடல் உருவாகும்.
“கொப்பர கொப்பர பிபிஞ்ஞா பஸ்ஸ பெலுவொத் தெசஞ்ஞா”

வட்டமாக இருப்பவர்கள் “கோ நேனோ பனாவ” எனக் கூறும் போது சுற்றி வருபவர் “யட்ட லீயே பனாவ” என பதிலளிப்பார். இவ்வாறு பல தடவைகள் கூறப்படும். வட்டமாக இருப்பவர்கள் “கல கெடி கல கெடி” எனக் கூறும் போது வட்டத்தை வலம் வருபவர் “போதல போதல” எனக் கூறிக் கொண்டு ஓட்டம் பிடிப்பார். இவ்வாறு ஓட்டம் பிடித்தவாறு கொத்தினை வட்டமாக நிற்கும் ஒருவரின் பின்னால் வைப்பார். வட்டத்தைச் சுற்றி குறித்த இடத்தினை அடைய முன்னர் கொத்திற்கு அருகில் உள்ளவர் வலம் வருபவரைப் பின் தொடர்வார். இன்றேல் கொத்தினை எடுத்து வலம் வருபவர் கொத்தினால் அவருக்கு அடிப்பார். வலம் வரும் போது கூட எவரேனும் ஒருவர் பின்பக்கமாகப் பார்ப்பாராயின் அடி விழும். ஒருவர் மாறி ஒருவர் தொடர்ச்சியாக இவ்வாறு விளையாடுவார்கள்.

### *“புஹு” விளையாட்டு*

“ஜல்லி” அடித்தல், “மட்ட” அடித்தல் ஆகிய பெயர்களால் அழைக்கப்படும் இது பிரதேச ரீதியான மாற்றங்களை வெளிக்காட்டும் ஒரு விளையாட்டு ஆகும். பெரிய தோடைக் காய் அல்லது கிச்சிலிக் காயினை சூடான சாம்பல் மீது புகுத்தி அவித்து பதமாக்கப்படும். சம தரையான ஒரு பூமியில் மேல் அணி கீழ் அணி என இரண்டு குழுக்களாக பிரிக்கப்படும். மேல் அணியினரால் கீழ் அணியினரை நோக்கி எறியப்படும் பந்து கீழே விழுவதற்கு முன்னர் பிடிக்கப்படுமாயின் பந்துடன் மேல் அணியிலிருந்து பந்து எறியப்பட்ட இடத்திற்கு ஓடுவார்கள். பந்தை எறிந்தவர்கள் பின்னோக்கி ஓடி வந்து அணியின் கம்பத்தைப் பாதுகாப்பார்கள்.

அணியின் கம்பத்தைப் பாதுகாப்பதுடன் எறியப்படும் பந்து ஆகாயத்தில் இருக்கின்ற போது பிடிப்பதற்கே அவர்கள் முயற்சி செய்வார்கள். அவ்வாறு பிடிக்க முடியாது விடின் முன்னோக்கிச் செல்ல முடியாது. கீழே விழுந்த இடத்திலிருந்தே பந்து எறியப்படல் வேண்டும். பந்து அணியின் கம்பத்தைத் தாண்டி கீழே விழுவதற்கு முன்னர் பிடிக்க முடியாது போனால் பந்தை எறிந்த குழுவிற்கு வெற்றி கிடைக்கும்.

### *“மேவர” விளையாட்டு*

மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு விளையாட்டாகக் கருதப்படும் “மேவர” விளையாட்டு பெண்களின் பங்கேற்பில் நடைபெறுகிறது. இந்த விளையாட்டு தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் நிலவுகிறது. “மேவர” என்பது மோதிரம் ஆகும் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. ஒரு பெண் தனக்குச் சொந்தமான மோதிரத்தைத் தேடுதல் இங்கு ஒரு கதையாக சித்தரிக்கப்படுகிறது. தனது மோதிரத்தைப் பார்த்தீர்களா என அவர் தனது தோழிகளிடம் வினவுகிறார். தாம் அதைக் காணவில்லை என அவர்கள் சத்தியம் செய்து கூறுவார்கள். ஆயினும் அந்த மோதிரத்தை அவரது தோழிகள் தான் மறைத்து வைத்துள்ளார்கள்.

மற்றுமொரு கருத்தின் படி “மேவர” என்பது காதுகளில் அணியும் ஓர் ஆபரணம் ஆகும். மேற் கூறியவாறே அவர் தனது ஆபரணத்தைப் பார்த்தீர்களா எனத் தனது தோழிகளிடம் வினவுகிறார். தாம் அதைக் காணவில்லை என அவர்கள் சத்தியம் செய்து கூறுவார்கள். ஆயினும் அந்த மோதிரத்தை அவரது தோழிகள் தான் மறைத்து வைத்துள்ளார்கள்.

மற்றுமொரு கருத்தின் படி “மேவர” என்பது ஒரு வேலைக்காரன் ஆகும். தனது வேலைக்கரனைக் கண்டுபிடித்து தருமாறு அவர் தனது தோழிகளிடம் வேண்டிக் கொள்வதாக “வல கியதோ மகே மேவரயா” என்ற அர்த்தம் உள்ளதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது. இந்த விளையாட்டின்போது முன்வைக்கப்படும் குழுப்பாடல் ஓர் உரையாடல் வடிவத்தைக் கொண்டதாகும். பாடலைப் பாடி முடிகின்ற போது பாட்டுப் பாடியவாறு வட்டமாக வலம் வந்த பெண் “ஒட்டுய்” எனக் கூறி மறைத்து வைக்கப்பட்ட மோதிரத்தை எடுப்பதற்கு குனிந்திருப்பார். உடனே அதுவரை மோதிரத்தை தனது காலால் மிதித்துக்கொண்டிருந்த நபர்களும் மோதிரத்தை எடுப்பதற்காக குனிவார்கள். இவர்களுக்கிடையிலான சண்டையில் மோதிரத்தைக் கண்டெடுத்த நபர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.

## ஆடு புலி ஆட்டம்

ஒரு குழுவினரின் பங்கேற்பில் இடம்பெறும் இந்த விளையாட்டு ஆடல் பாடல்கள் அடங்கிய ஒரு நிகழ்வாகும். ஓர் ஆட்டிற்கும் புலிக்கும் இடையே இடம்பெறும் ஒரு சம்பாஷனை வடிவில் இது அமைந்திருக்கும். போட்டியின் தன்மைக்கு ஏற்ப சொற்பிரயோகங்கள் உரத்ததாகவும் தாழ்ந்ததாகவும் அமையும்.

### *சீப்பு ஒளித்து வைத்தல்*

பிரதேச வழக்கில் கைக்குட்டை ஒளித்தல் மற்றும் பொய்முடி ஒளித்தல் ஆகிய பெயர்களிலும் இந்த விளையாட்டு அழைக்கப்படும். ஏதேனும் ஒரு பொருளை ஒளித்து அதனைத் தேடுவதற்குப் பாடுபடுவதுடன் அதற்கான பாடலை இசைத்தல் இங்கு இடம்பெறும்.

### *போர்த் தேங்காய் விளையாட்டு*

பத்தினி தெய்வம் மற்றும் பாலங்க குமரன் ஆகியோரை மையமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ள இந்த விளையாட்டின் போது மழையும் செழிப்புத்தன்மையும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த போர்த் தேங்காய் விளையாட்டின் மூலமாகவே காய்ச்சல், மாட்டு மற்றும் கோழிக் கொள்ளை நோய், வறட்சி போன்ற நிலைமைகளிலிருந்து நிவாரணம் எதிர்பார்க்கப்பட்டது. முற்காலத்தில் மரத்திலிருந்து தானாகவே காய்ந்து கீழே விழும் இளநீர் (தெம்பிலி) போர்த் தேங்காயப் போட்டிக்குப் பயன்படுத்தப்பட்டது. அவ்வாறே போர்த் தேங்காய் விளையாட்டுக்குப் பயன்படுத்தப்படும் பூமியில், தெய்வம் ஆட்சிகொள்வதாக நம்பப்படுவதால் அரச மரம், ஆலமரம் அல்லது நாகமரத்துடன் கூடிய சமதரை கொண்ட பூமி தெரிவுசெய்யப்பட்டது. விளையாட்டிற்காக இரண்டு வகையான தேங்காய்கள் பயன்படுத்தப்பட்டது. அதாவது அனுப்புவதற்குரிய தேங்காய் மற்றும் அடிப்பதற்குரிய தேங்காய் ஆகியவாறு ஆகும். அனுப்பும் தேங்காய்களில் சில தேங்காய்கள் உடைப்பதற்கு மிகவும் கடினமான வெற்று விதையுடைய தேங்காய் என அழைக்கப்பட்டது. அடிப்பதற்குப் பயன்படுத்தப்படுவது கைத் தேங்காய் என அழைக்கப்பட்டது. “நிபொல்” எனப்படும் சாதாரண தேங்காய் இந்த விளையாட்டுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. ஒரு சமதரைப் பூமியில் எல்லைகள் அடையாளமிடப்பட்டு தென்னங் கதிர்களால் ஒன்றுடனொன்று முகத்திற்கு முகம்பார்த்துள்ள விளக்கு கன்றுகள் இரண்டு நடப்படுவதுடன் “அனுமெத்திரால” வினால் அந்த இடத்தில் தெய்வத்திற்காக வழிபாடு மேற்கொள்ளப்படும். மேல் அணியினைச் சேர்ந்த வீரர்கள் கீழ் அணியின் வீரர்களால் வீசப்படும் தேங்காயை உடைப்பதன் ஊடாக வெற்றி பெறுவார்கள். கீழ் அணியின் வீரர்கள் மேல் அணி வீரர்களால் அனுப்பப்படும் தேங்காயை உடைப்பதன் மூலம் வெற்றி பெறுவார்கள். மேல் அணியில் தேங்காய்கள் எஞ்சி இருப்பின் மேல் அணியினருக்கும் கீழ் அணியில் தேங்காய் எஞ்சி இருப்பின் கீழ் அணியினருக்கும் சாதகமாக அமையும். இந்த விளையாட்டில் அனுப்பப்படும் தேங்காய் போன்றே கையில் எஞ்சி உள்ள தேங்காய் ஆகிய இரண்டையும் உடைக்க முடியும்.

போர்த் தேங்காய் விளையாட்டு புதன் அல்லது சனிக்கிழமை நாள் ஆரம்பிக்கப்பட்டு ஏழு நாட்கள் நடைபெறுவதுடன் உடைபடாமல் தேங்காய்கள் மிகுதியாகும் அணியினர் வெற்றிபெறுவார்கள். இறுதி நாளன்று போர்த் தேங்காய்த் திடலில் “கம்மடு” விழா நடாத்தப்பட்டு தானம் வழங்கும் வழிபாட்டுடன் இது முடிவுக்கு வரும். இந்த தான நிகழ்வில் கலந்துகொள்வதற்கு பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

### ***ஊஞ்சல் ஆடுதல்***

தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டு வரும் ஊஞ்சலாட்டத்துடன் தொடர்புபட்ட மரபுவழிக் கதைகள் சில காணப்படுகின்றன. அவற்றுல் மிகவும் பழைமை வாய்ந்த கதைக்கு ஏற்ப “அசுர” எனப்படுபவர் ஈஷ்வரனுக்கு சாட்டாங்கம் செய்வதனூடாக மகிழ்ச்சியடைந்தார். சில காலம் சென்றதன் பின்னர் ஈஷ்வரனின் தெய்வீக சக்தியின் பயனால் ஏதேனும் ஒரு வரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என எண்ணிய அசுர அதற்குப் பொருத்தமான நேரம் வந்ததும் தனது எண்ணத்தை வெளியிட்டார். அசுராவின் மீது வைத்திருந்த நம்பிக்கையின் காரணமாக ஈஷ்வரன் அசுராவிற்கு வரம் கொடுப்பதற்கு சம்மதம் தெரிவித்ததுடன் தான் எவரேனும் ஒருவரது தலையில் கையை வைத்தவுடன் அந்த நபர் சாம்பலாகிச் செல்வதற்கான வரத்தினையே அசுரா வேண்டி நின்றார். ஈஷ்வரனால் குறிப்பிடப்பட்ட அந்த வரம் வழங்கப்பட்டவுடன் அதனைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அசுரவின் மனதில் உதித்தது. அதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக ஈஷ்வர தெய்வத்தின் தலையில் கையை வைப்பதற்கு அசுரன் எத்தணித்த மாத்திரத்தில் அசுரனிடம் தப்புவதற்காக ஈஷ்வரன் அங்கிருந்து தப்பி ஓடினார். இதனைப் பார்த்த விஷ்னுவிற்கு ஈஷ்வரனின் மீது கருணை ஏற்பட்டது. அசுரன் ஈஷ்வரனைப் பின்தொடர்ந்து செல்லும் பாதையில் விஷ்னு ஊஞ்சல் கட்டி பெண் வேடம் தரித்து ஊஞ்சல் ஆடி விளையாடினார். இதனைப் பார்த்த அசுரன், ஐயோ இந்தப் பெண் ஏன் இப்படி இருக்கிறாள் என எண்ணி தனது நெற்றியில் கையை வைத்தவுடன் அந்த அசுரன் சாம்பலாகிப் போய்விட்டார்.

பத்தினி தெய்வத்திற்காக நேர்ந்துக்கொண்டு ஊஞ்சல் அமைக்கப்படுவதாக கூறப்படுவதுடன் கூடு ஊஞ்சல், பம்பர ஊஞ்சல், இரண்டு பட்டு ஊஞ்சல், கொடி ஊஞ்சல், சுழல் ஊஞ்சல் மற்றும் மலர் ஊஞ்சல் என

பல்வேறு வகையான ஊஞ்சல்கள் உள்ளன. சிங்களப் புதுவருட காலங்களில் ஆடப்படுவது கயிறு ஊஞ்சல் ஆகும். இதில் இரண்டு பேர் அமர முடியும் என்பதுடன் இரண்டு பக்கத்திலும் இரண்டு நபர்கள் இருந்தவாறு ஊஞ்சல் ஆடப்படும். புதுவருட காலங்களில் அரங்கேறும் ஊஞ்சல் ஆடி விளையாடும் நிகழ்வின் போது இசைக்கப்படும் கவிதைகள் ஊஞ்சல் "வாரம்" என அழைக்கப்படும். இது பெண்களுக்கே உரிய ஒரு செயற்பாடு ஆகும்.

### *கொம்பைக் கொழுவி இழுக்கும் விளையாட்டு*

பத்தினி தெய்வத்தை மையமாகக் கொண்ட பன்னிரெண்டு வகையான விளையாட்டுக்கள் உள்ளதுடன் அவற்றுள் கொம்பைக் கொழுவி இழுக்கும் விளையாட்டே முதன்மையானதாகும். கொம்பைக் கொழுவி இழுக்கும் விளையாட்டு உருவானமைக்குரிய மரபுவழிக் கதைக்கு அமைய சொலீ வம்சத்தின் மாயா அரசனிடம் இருந்த பலங்க எனப்படும் இளவரசன் பத்தினி தெய்வத்தை திருமணம் முடித்தான். ஒருநாள் இவ் இருவரும் தனது படைபட்டாளங்களுடன் நந்தவனத்திற்குச் சென்ற போது சண்பகப் பூவின் வாசனை உணரப்பட்டது. பருவந்தவறிய காலத்தில் வீசும் சண்பகப் பூவின் வாசனை வீசும் திசையில் சென்ற அவர்களால் பூ பூத்திருந்த திசை கண்டறியப்பட்டது. பூமியில் இருந்தவாறு பூ பறிப்பதற்கு இயலாதவாறு உயரத்தில் இருந்த பூக்களைப் பறிப்பதற்காக இரண்டு கொக்கைத் தடிகள் வெட்டப்பட்டதுடன் அதில் ஒரு கொக்கைத் தடி பத்தினி தெய்வத்துடன் இருந்த குழுவினரின் கைகளுக்கும் மற்றைய கொக்கைத் தடி இளவரனுடன் இருந்த குழுவினரின் கைகளுக்கும் கிடைக்கப் பெற்றது. இரு தரப்பினரும் பூ பரிப்பதற்கு முயற்சித்த போது கொக்கைகள் இரண்டும் கொழுவிக் கொண்டமையால் இறுதியாக ஆண்கள் வசமிருந்த கொக்கை உடைந்து போனதாக கூறப்படுகிறது. இந்த சம்பவத்தினை நினைவு கூருவதற்காக கொம்பைக் கொழுவி இழுக்கும் விளையாட்டு உருவாகியதாக மரபுவழிக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது ஆண்களுக்கே உரிய ஒரு விளையாட்டு ஆகும். மேல் அணி மற்றும் கீழ் அணி என இரண்டு அணிகள் உள்ளன. கொம்பினை இழுப்பதற்காக இரு சாராரும் மிக ஆரவாரத்துடன் ஊர்வலமாக மைதானத்திற்கு வருகை தருவார்கள். விளையாட்டு வீரர்கள் மாமிசம் உண்பதை விட்டும் தவிர்ந்திருப்பதுடன் விளையாட்டு ஆரம்பமாவதற்கு முன்னர் கொடியேற்றல் முகூர்த்தத்திற்கு அமைய இது மேற்கொள்ளப்படும். கொம்பு ஆபரணமாகக் கருதப்படும் "கொம்பு" தேவாலயத்திலிருந்து கொண்டுவரப்படும். நீள் சதுரமாக அமையப் பெற்ற ஒரு தடி கொம்பாக தெரிவு செய்யப்படும். கொம்பு, தடி கொம்பு மற்றும் கொக்கைக் கொம்பு ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. "அந்தர", சித்திர வேம்பு, "எட்டேரியா", கரந்தை மற்றும் கருங்காலி போன்ற மரங்களின் கிளைகள் இதற்காகப் பயன்படுத்தப்படும்.

மேல் அணியினர் மற்றும் கீழ் அணியினர் ஆகியோருக்கிடையிலான இந்தப் போட்டியில் கொம்பு உடைந்து கழறாதவாறு பாதுகாக்கப்படல் வேண்டும். கொம்புகளை கொழுவச் செய்து விளையாடப்படும் இந்த விளையாட்டில் கொம்பு உடையாது பாதுகாக்கப்பட்ட குழுவினர் தமது கொம்பினை அவிழ்த்து மங்கள மேளங்கள் இசைத்தவாறு ஊரைச் சுற்றி வலம் வருவார்கள். இறுதியாக மேற்கொள்ளப்படும் தெய்வ பூஜையுடன் விளையாட்டு நிறைவு பெறும்.

### *கயிறு இழுத்தல்*

கயிறு இழுத்தலானது புதுவருட காலத்தில் காணக் கிடைக்கும் கிராமிய விளையாட்டுக்களில் முக்கியமான ஒரு விளையாட்டு ஆகும். இந்த விளையாட்டு மாலுமிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்க கூடும் எனக் கருதப்படுகிறது. பல மாதங்களாக கடற் பிரயாணத்தில் ஈடுபட்ட மாலுமிகள் அவர்களது பொழுதுபோக்கிற்காகவும் உடற்பயிற்சிக்காகவும் கயிறு இழுத்தலை மேற்கொண்டதாக நம்பப்படுகிறது.

### *மத்தளம் "ரபான்" கொட்டுதல்*

உத்சவ நிகழ்வுகளுடன் தொடர்புபட்ட மத்தளம் "ரபான்" கொட்டுதலானது பெண்களுக்கே உரித்தான ஒரு கிராமிய விளையாட்டு ஆகும். ரபானுடன் தொடர்புபட்ட மக்களது நம்பிக்கைகள் பல காணப்படுகின்றன. ஈஷ்வரன் கண்ட கனவிற்கு அமைய ரபான் வடிவமைக்கப்பட்டதாகவும் நறுமனத்துடன் கூடிய சந்தனக் கட்டை கொண்டு அது வடிவமைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்ற ஒரு மரபுவழிக் கதை உள்ளது.

முதலாவதாக இலகுவான ரபான் மெட்டுடன் ஆரம்பிக்கப்பட்டு அதன் பின்னர் படிப்படியாக இனங்காண்பதற்கு கடினமான ரபான் ராகங்களை நோக்கி மாறுதல் இந்த விளையாட்டின் பண்பாக காணப்படுகிறது. ரபானைச் சுற்றி நடனமாடியவாறு இரண்டு கைகளாலும் சிலபோது முழங்கைகளாலும் ரபான் இசைப்பதன் மூலம் மிகத் திறமையான முறையில் ரபான் இசைக்கின்றவர்களும் உள்ளார்கள். ரபான் "சுரல்" இசைத்தல், கைமாற்றுதல் மற்றும் தாளம் ஆகியன இறப்பருடன் தொடர்புடைய ஏனைய விளையாட்டுக்கள் ஆகும்.

### குளியில் கசுக்கொட்டை விளையாடுதல்

பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபட்ட முறையில் அமையப் பெற்றுள்ள இந்த கிராமிய விளையாட்டானது இளவயது ஆண் பிள்ளைகள் மத்தியில் பிரசித்தி பெற்ற ஒரு விளையாட்டு ஆகும். புதுவருட காலத்தில் பரந்துபட்டதாகக் காணப்படுகின்ற கசுக்கொட்டைகள் இதற்காகப் பயன்படுத்தப்படும். விளையாடுவதற்காகத் தெரிவுசெய்யப்படுகின்ற அனைத்து கசுக்கொட்டைகளும் அடையாளமிடப்பட்ட ஒரு எல்லைக்கு அப்பால் வீசப்படல் வேண்டும். போட்டியாளர் அவ்வாறு வீசப்பட்ட கசுக்கொட்டைகளில் ஒரு கசுக்கொட்டைக்கு ஒரு முறை என்ற வகையில் ஏனைய கசுக்கொட்டைகளில் படாதவாறு மட்டையால் அடித்தல் வேண்டும். இலக்கு சரிவருமாயின் அந்த அனைத்து கசுக்கொட்டைகளும் அவருக்கு உரித்தாகும்.

### தாயக்கட்டை அடித்தல்

ஆண்களுக்கே உரிய ஒரு கிராமிய விளையாட்டு ஆகும். ஒரு வீட்டின் முற்றத்தில் அல்லது அதற்காகவே ஒதுக்கப்பட்ட தாயக்கட்டைத்தலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற இந்த விளையாட்டுக்காக ஆறு பக்கங்களைக் கொண்ட ஒரு தாயக்கட்டை பயன்படுத்தப்படும். தாயக்கட்டை நிற்கும் போது இருக்கக் கூடிய பக்கத்தை முற்கூட்டியே கூறியதன் பின்னர் சுவரில் அல்லது ஏதேனும் ஒன்றில் சார்த்தப்பட்ட பலகைக்கு தொலைவில் நின்றவாறு வீசுவதன் மூலம் இந்த விளையாட்டு இடம்பெறும்.

### தலையணை மோதல்

தலையணை மோதலுக்காக நிலத்திலிருந்து சுமார் ஆறு அடி உயரத்தில் குறுக்கே தடி ஒன்றைக் கட்டி "தண்டியம" தயார் செய்யப்படும். இதற்காக பலமான ஒரு பாக்கு மரம் பயன்படுத்தப்படும். போட்டியாளர்கள் இருவரும் முகத்திற்கு முகம் பார்த்தவாறு கைகளை நீட்டித் தாக்குதலை மேற்கொள்ள முடியுமான அளவு தொலைவில் "தண்டம" மேல் கால்களை கீழே தொங்கவிட்டு அமர்ந்து கொள்வார்கள். பஞ்சுகள் நிறைக்கப்பட்ட ஒரு தலையணையினால் தாக்குதல் மேற்கொள்ளப்படும். அதற்காகப் போட்டியாளர்கள் தமக்குப் பழக்கப்பட்ட கையினைப் பயன்படுத்த முடியும் என்பதுடன் மற்றைய கையை பின்புறமாக வைத்துக் கட்டுதல் வேண்டும் என்பதுடன் அந்தக் கையினால் பிடிப்பதற்குத் தடை விதிக்கப்படும். எதிராளியின் முகத்திற்கு மாத்திரம் அடித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு முகத்திற்கு அடிக்கும் போது உடலையும் உள்ளத்தையும் சமநிலையில் வைத்திருக்கு முடியுமாயின் "தண்டியம" வின் மேல் கீழே விழாதவாறு இருக்க முடியும். கைச்சண்டை போட்டியின் மூலம் உருவாகிய மரபுவழி வந்த ஒரு கிராமிய விளையாட்டாக இது கருதப்படுகிறது.

### குருடன் பிடித்தல்

ஆண் பெண் இருபாலாரும் கலந்துகொள்ளும் இந்த விளையாட்டு, வீட்டு முற்றத்தில் அல்லது தடைகள் அற்ற இடவசதி கொண்ட ஒரு பூமியில் இடம்பெறும். தெரிவுசெய்யப்பட்ட இடத்தில் ஆரம்பமாக ஒரு வட்டம் வரையப்படும். போட்டியாளர் எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லை என்பதுடன் போட்டியாளர் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க கூடுதலான வினோதம் பெறலாம். முதலாவதாக ஒருவர் குருடனாகத் தெரிவு செய்யப்படுவார். இதற்காக அவரது கண்கள் அவரால் பார்க்க முடியாதவாறு துணியினால் கட்டப்படும். குறித்த அந்த நபர் குருடனாகக் கருதப்படுவதுடன் குருடன் வட்டத்தின் மத்தியில் நிறுத்தப்படுவார். குருடன் வட்டத்திற்குள் வலம் வந்தவாறு அங்கு உள்ளவர்களைப் பிடிப்பார். குருடன் வட்டத்திலிருந்து வெளியே செல்லும் பட்சத்தில் போட்டியாளர்கள் அவரை மீண்டும் உள்ளே அழைத்து வருவார்கள். குருடன் பிடித்தால் அல்லது வட்டத்திலிருந்து போட்டியாளர்கள் வெளியே சென்றால் அவர் ஆட்டமிழப்பார். இறுதியில் ஆட்டமிழக்காது எஞ்சியருப்பவர் வெற்றிபெறுவார்.

### மரம் விட்டு மரம் தாவுதல்

மரங்கள் உள்ள ஒரு திறந்தவெளி இதற்காகத் தெரிவுசெய்யப்படும். சுமார் ஐந்து போட்டியாளர்கள் விளையாட்டில் ஈடுபடுவார்கள் என்பதால் ஆகக் குறைந்தது ஒன்றுக்கொன்று அண்மையில் அமையப்பெற்ற நான்கு மரங்கள் அல்லது நான்கு கம்பங்கள் தெரிவுசெய்யப்படும். இங்கு நான்கு மரங்களுக்கும் நான்கு பேர்களும் மத்தியில் நின்றவாறு மரம் காப்பாளராக ஒருவரும் என்றவாறு ஐந்து போட்டியாளர்கள் ஒரே தடவையில் விளையாட முடியும். நான்கு மரங்களுக்கும் உரித்தான போட்டியாளர்கள் தாம் விரும்பியவாறு ஒரு மரத்திலிருந்து மற்றுமொரு மரத்திற்கு மாற வேண்டும். அவர்கள் அவ்வாறு மரம்விட்டு மரம் தாவும் போது கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மரம் காப்பாளர் உடனே ஓடிச்சென்று ஒரு மரத்தைப் பிடித்துக் கொள்வார். அதன் போது தன் வசம் இருந்த மரத்தை இழந்த போட்டியாளர் மரம் காப்பாளராக மத்தியில் நின்றவாறு மீண்டும் விளையாட்டை ஆரம்பித்தல் வேண்டும். மரம் விட்டு மரம் தாவும் போது ஒரே மரத்தில் அளவுக்கதிகமான நேரம் தங்கியிருத்தல் தடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தங்கினால் குறித்த போட்டியாளருக்கு அந்த மரத்தை இழக்க வேண்டி ஏற்படுவதுடன் அந்த போட்டியாளர் மரம் காப்பாளராக போட்டியில் ஈடுபட வேண்டும்.

**மாதிரி செயற்பாடுகள்**

சில பழைய கிராமிய விளையாட்டுகள் புத்தாக்கத்துடன் புத்தாண்டு பண்டிகை காலங்களில் நடைபெறுவதுடன், சில கிராமிய விளையாட்டுகள் வழக்கொழிந்து செல்கின்றது. பாடசாலை மட்டத்தில் புத்தாண்டு பண்டிகைக்கான கிராமிய விளையாட்டுகளை திட்டமிடல் வேண்டும். அத்தோடு எல்லா மக்கள் குழுக்களையும் பங்குபற்றச் செய்வித்தல் வேண்டும். அதன்மூலம் இனங்களுக்கிடையில் நெருங்கிய தொடர்பு மற்றும் நற்புறவுடன் கூடிய சூழ்நிலை ஏற்படுவதால் தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் வழிவகுப்பதனை பலப்படுத்தலாம்.

**(அ) பாடசாலைகளுக்கு பண்டிகைப் பொருட்களை எடுத்துச் செல்லுதல்**

சமய வேறுபாடின்றி சிங்களம், தமிழ் பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் ஒழுங்கமைக்க முடியுமான செயற்பாடாகும். தெரிவு செய்யப்பட்ட வேறு சமயமொன்றை வழிப்படும் பாடசாலையொன்றுக்கு புத்தாண்டை முன்னிட்டு பரிசு பொருட்களை எடுத்துச் செல்லுதலும் தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்தும் புத்தாண்டு செயற்பாடும் ஆகும்.

**முறைமை :**

1. பயணம் செல்வதற்காக பாடசாலையொன்றை தெரிவு செய்தல் மற்றும் அதற்காக பெற்றோர்களின் அனுமதி பெற்றுக்கொள்ளுதல்
2. அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட பல வகையிலான பரிசுப் பொருட்களை கொண்டுவரும் படி பொறுப்பளித்தல்
3. புத்தாண்டு பண்டிகை மற்றும் அதனுடன் தொடர்புடைய சடங்கு சம்பிரதாயங்களையும் மரபுகளையும் தொடர்பாக அறிவுறுத்தல்
4. புத்தாண்டு சடங்கு சம்பிரதாயங்களின் படி கலாச்சார நிகழ்ச்சியினை நடாத்தல்

**மேலதிக விடயங்கள்**

பிரதேசத்தில் கஷ்டமான நிலையிலுள்ள பாடசாலையொன்றை தெரிவு செய்து அதற்கான செயற்பாடுகளை நடாத்தல் பொருத்தமாகும்.

**(ஆ) சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டை நாடக வடிவில் நடித்துக்காட்டுதல்**

சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலங்களில் கல்வி கற்கின்ற பாடசாலையொன்றில் மாணவர்களுடன் இணைந்து இந்த நிகழ்ச்சியினை நடாத்தலாம்.

**முறைமை :**

1. புத்தாண்டு சடங்கு சம்பிரதாயங்கள் தொடர்பாக, சிங்களம் மற்றும் தமிழ் சம்பிரதாயங்கள் தொடர்பாக அறிந்துக்கொள்ளுதலும் புரிந்துக்கொள்ளுதலும்
2. சடங்கு சம்பிரதாயங்களை நாடகங்கள் சார்ந்து நடித்துக்காட்டுவதற்கு பயிற்சிபெறுதல்
3. நாடகங்களை நடித்துக் காட்டுகையில் சிங்களம் மற்றும் தமிழ் புத்தாண்டு சடங்கு சம்பிரதாயங்கள் நடைபெறும் இடங்களில் உள்ள வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக
4. நாடகம் நடித்துக்காட்டுவதை பார்வையிடுவதற்கு சுற்றுப்புறங்களில் உள்ள பாடசாலை சமூகத்தினரை அழைத்தல்

**(இ) புத்தாண்டு பண்டிகையை பார்வையிடுவதற்கு செல்லுதலும் அதில் பங்குகொள்ளுதலும்**

எல்லா சமயங்களையும் வழிபடும் மாணவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில்,தெரிவு செய்யப்பட்ட மாணவர் குழுக்களை இதில் பங்குபற்றச் செய்விக்கலாம். சம்பிரதாய புத்தாண்டு பண்டிகை இடம்பெறுகின்ற பாடசாலை அல்லது வீடொன்றை இதற்காக தெரிவு செய்து அதனை பார்வையிடலாம்.

**முறைமை :**

1. சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் அனுமதி பெற்றுக்கொள்ளுதல்
2. புத்தாண்டு பண்டிகை தொடர்பாக சம்பந்தப்படுகின்ற மாணவர்களை அறிவுறுத்தல்

3. பார்வையிடுபவர்கள் சடங்கு சம்பிரதாயங்களை நிறைவேற்றும் வகையில் வாய்ப்பு அளித்தல்
4. சடங்கு சம்பிரதாயங்களுக்கு தடை ஏற்படாதவாறும் அகௌரவம் ஏற்படாதவாறும் நடந்துகொள்ளுதல்

**(ஈ) சிங்களம், தமிழ் புத்தாண்டு விளையாட்டுகள்**

சிங்கள பௌத்த பாடசாலையொன்றின் மாணவர்களும் தமிழ் இந்து பாடசாலையொன்றின் மாணவர்களும் ஒன்றாக இணைந்து விளையாட்டு விழாவொன்றை நடாத்தல். இதற்காக எல்லா சமயங்களையும் வழிப்படும் மாணவர்கள் கற்கின்ற பாடசாலையின் மாணவர்களையும் தொடர்புபடுத்திக் கொள்ளலாம்.

**முறைமை :**

1. சிங்களம், தமிழ் விளையாட்டுகள் தொடர்பாக புரிந்துக்கொள்ளுதல்
2. விளையாட்டுகளில் பங்குகொள்ளுதல்
3. பங்குகொள்ளும் அனைவருக்கும் சம்பிரதாய வகையிலான சிங்கள/தமிழ் தின்பண்டங்களில் உபசரணை செய்தல்
4. சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் தொடர்பாடல்களை மேற்கொள்ளுதல்

**(உ) வதிவிட அனுபவங்களை பரிமாற்றிக்கொள்ளுதல்**

புத்தாண்டு பண்டிகை காலத்தில் சிங்கள மாணவர்கள் தமிழ் வீடுகளிலும், தமிழ் மாணவர்கள் சிங்கள வீடுகளிலும் புத்தாண்டு நாட்களை கழித்தல்.

**முறைமை :**

1. பாடசாலைக்கு அண்மித்து உள்ள சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகளுடன் இணைந்து இந்த நிகழ்ச்சியினை ஒழுங்கமைத்தல்
2. மேல் வகுப்புகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை பங்குபற்றச் செய்விப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
3. தமிழ் மாணவர்களுக்கு சிங்கள சடங்கு சம்பிரதாயங்களையும், சிங்கள மாணவர்களுக்கு தமிழ் சடங்கு சம்பிரதாயங்களையும் புரிந்துகொள்வதற்கு ஏற்றதொரு சூழலை ஏற்படுத்தல்
4. குடியிருப்பவர்களுக்கு தடைகள் ஏற்படாதவாறு நடந்து கொள்வதற்காக மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்
5. பெற்றுக்கொண்ட அனுபவங்களை சகோதர மாணவர்களுடன் பரிமாற்றிக்கொள்வதற்கு வாய்ப்பு வழங்குதல்

**மேலதிக விடயங்கள்**

சிங்களம் அல்லது தமிழ் வீடொன்றில், சிங்களம் மற்றும் தமிழ் புத்தாண்டு கொண்டாடப்படாத முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சமயத்தை வழிபடும் மாணவர்களுக்கு புத்தாண்டு சமயத்தில் தங்குவதற்கு வாய்ப்பளிக்கும் நிகழ்ச்சியினை ஒழங்கமைத்தல்.

**(ஊ) சம்பிரதாய தின்பண்டங்களை தயாரித்தல்**

புத்தாண்டு காலத்திற்கு தேவையான உணவு பான வகைகள் தொடர்பாக அறிவுறுத்தப்படுதல்“ சிங்களம் மற்றும் தமிழ் பாடசாலைகளில் வீட்டு மனையியல் பாடத்தை கற்கும் மாணவர்களின் தலைமைத்துவத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடாகும்.

**முறைமை :**

1. சிங்களம்/தமிழ் சம்பிரதாய உணவு தொடர்பாக வயோதிபர்களிடம் கேட்டு அறிந்துக்கொள்ளதல்
2. தேர்ச்சி பெற்ற அல்லது மனையியல் ஆசிரியர்களின் அடிப்படையில் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
3. உணவு தயாரித்தல் மற்றும் அவற்றின் போஷாக்கு குணம் தொடர்பாக அறிவுறுத்தல்
4. உணவு வகைகள் உள்ளடக்கிய பட்டியலொன்றை தயாரித்தல்

# பாஸ்கு பெருவிழா



## அறிமுகம்

முழு மனித குலத்தையும் மீட்பின் பாதையில் இட்டுச் செல்வதற்காக தனது உயிரைத் தியாகம் செய்த கிறிஸ்து, உலகில் தோன்றிய உன்னத தீர்க்கதரிசியாவார். தமது சகோதரர்களுக்காக உயிரைக் கொடுக்குமளவிற்கு தன்னை அர்ப்பணித்த கிறிஸ்து, மக்களது மீட்பிற்காக அர்ப்பணிக்கப்படுகின்ற வாழ்வை மரணத்தினால் கூட வெல்ல முடியாதென்பதை மனுக்குலத்திற்கு எடுத்துக் காட்டினார். மனிதனை பாவத்திலிருந்து மீட்பதற்காக கிறிஸ்து தனது விலைமதிப்பற்ற உயிரைத் தியாகம் செய்தமை பாஸ்கா மறைபொருளில் எப்போதும் உயிர்பெற்று விளங்குகின்றது. கிறிஸ்துவை சிலுவையில் அறைந்து கொன்றதை நினைவுபடுத்தும் பெரிய வெள்ளிக்கிழமைக்குப் பின்னர் வருகின்ற பாஸ்கா பெருவிழாவை உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்கள், பிரார்த்தனைகள், உபவாசம், தவமுயற்சிகள் என்பவற்றில் ஈடுபட்டு மிகுந்த பக்தியுடன் நினைவுகூர்கின்றனர்.

உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்கள் பாஸ்காப் பெருவிழாவை விசேட திருவிழாவாகக் கொண்டாடுவதுடன் கிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததைக் கொண்டாடும் பாஸ்காப் பெருவிழா கிறிஸ்தவர்களின் மிகப் புனிதமான ஒரு திருவிழாவாகும். பாஸ்காப் பெருவிழாவானது நத்தார் தினத்தைப் போல் குறித்த திகதியில் கொண்டாடப்படும் ஒரு திருவிழா அல்ல. மாறாக அது ஒவ்வொரு வருடத்திலும் இலைதுளிர்ப்பருவத்து சம இராக்காலம் (Vernal equinox) எனக் கருதப்படும் மார்ச் 21 ஆந் திகதிக்குப் பின்னர் வருகின்ற பௌர்ணமி தினத்தின் பின்னரான வாரத்தில் வருகின்ற ஞாயிறு தினமே பாஸ்கா ஞாயிறாகக் கருதப்படுகின்றது. அதன்படி மார்ச் 22 தொடக்கம் ஏப்பிரல் 25 க்கு இடையிலான எந்தவொரு ஞாயிறன்றும் இது வரலாம்.

## பாஸ்கா என்ற சொல்

பாஸ்கா என்ற சொல் ஆங்கிலத்தில் ஈஸ்டர் (easter) என அழைக்கப்படுகின்றது. ஈஸ்டர் என்பதன் மூலம், எதிலிருந்து தோன்றியது என குறிப்பிட்டுக் கூறமுடியாவிட்டாலும் அது தொடர்பாக ஒரு கருத்து காணப்படுகின்றது. முற்காலத்தில் இக்காலப்பகுதியில் ஞானஸ்நானம் அளிக்கப்பட்டவர்கள், வெள்ளை உடையணிந்து இருப்பதால் இலத்தீன் மொழியில் வெள்ளை வாரத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்திய hebdomada alba என்பது மொழிபெயர்ப்பின் போது பிழையாக esostarum என ஜேர்மன் மொழியில் இணைந்ததுடன் அது ஈஸ்டர் என பரிணாமமடைந்ததாகக் கூறப்படுகின்றது. வசந்த காலத்திற்கும், செழிப்புக்கும் அதிபதியான ஜேர்மனிய தேவதையான Ēostre க்கு கௌரவமளித்து Eostur-monath, அதாவது ஏப்பிரல் மாதத்தில் நடாத்தப்பட்ட திருவிழாவுக்குப் பதிலாக, கிறிஸ்தவத்தில் பாஸ்கா கொண்டாடப்பட்டதாகவும், அதனடிப்படையில் ஈஸ்டர் என்பது Ēostre என்ற ஜேர்மனிய தேவதையின் பெயரிலிருந்து மருவி தோன்றியதொன்றாகவும் கருதப்படுகின்றது.

விவிலியத்தின் பழைய ஆகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று யூதர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையைத் தேடி வெளியேறுதல் அல்லது கடத்தலை (Passover) கொண்டாடுவதற்கு நிகழ்த்தப்பட்ட விழா 'ஹீப்ரு' மொழியில் 'பேசக்' (Pesach) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சொல்லானது போர்த்துக்கேய மொழியில் பாஸ்கொஆ (Páscoa) எனப் பயன்படுத்தப்படுவதுடன் போர்த்துக்கேயர்கள் பயன்படுத்திய பாஸ்கொஆ என்பது பாஸ்காவாக தமிழில் மருவியுள்ளது.

### தவக்காலம்

கிறிஸ்தவர்கள் பாஸ்கா பெருவிழாவை கொண்டாடுவதற்கு, தவக்காலம் எனப் பெயரிடப்பட்டுள்ள நாற்பது நாட்கள் முழுமையும் அதற்கெனத் தயாராவார்கள். இந்நாற்பது நாட்களும் விபூதிப் புதன்கிழமையிலிருந்து தொடங்குகிறது. விபூதிப் புதனன்று நடத்தப்படும் திருப்பலியில் மனிதன் மண்ணாக இருக்கின்றான். அதனால் மண்ணுக்கே திரும்புவான் என்பதை குறிக்கும் முகமாக அருட்தந்தையர்களால் பக்தர்களின் நெற்றியில் சிறிது சாம்பல் பூசப்படுகின்றது. விவிலியத்தில் குறிப்பிடப்படுவது போல உலகின் முதல் மனிதர்களான ஆதாமும் ஏவாளும் மண்ணால் உருவாக்கப்பட்டனர் என்றும், இறைவன் அவர்களுக்கு உயிர்மூச்சை ஊதி உயிர் கொடுத்ததாகவும் கூறப்படுகின்றது. இதன்இறையியல் செய்தி யாதெனில் இறைவனால் மனிதனுக்கு உயிர் கிடைக்கப்பெற்றதால் அவ்வுயிரின் பெறுமதி இறைவனிலேயே தங்கியுள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது. அதனடிப்படையில் விபூதிப் புதனன்று நாம் இறைவனுடன் தொடர்பு கொள்வதன் மூலம் எமது வாழ்வின் பெறுமதி தங்கியுள்ளது என்பதை நாம் நினைவுபடுத்துகின்றோம். இந்த நாற்பது நாட்களும் கிறிஸ்தவர்கள், தானம் வழங்கி, ஒருசந்தி இருந்து, சிலுவைப் பாதை, வழிபாடுகளை நடாத்தி, ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபடுவதற்குக் காரணம் கிறிஸ்துவின் பாடுகளை நினைவுபடுத்துவதற்காகும். அத்தோடு இறைவார்த்தைக்கு செவிமடுத்து ஆன்மீக வாழ்வில் பலம் பெறுவதற்கும் முயற்சிக்கின்றார்கள்.

### புனித வாரம்

தவக்காலத்தின் இறுதி வாரம் புனித வாரமாகக் கருதப்படுகின்றது. இந்த புனித வாரம் குருத்தோலை ஞாயிறன்று ஆரம்பமாகின்றது. கிறிஸ்து தமது மீட்புப் பணியின் நோக்கத்தினை பூரணப்படுத்துவதற்கான இறுதிக்கட்டம் இந்த நாளிலேயே ஆரம்பிக்கின்றது. புனித வாரத்தில் சில முக்கிய தினங்கள் காணப்படுகின்றன. அதாவது பெரிய வியாழன், பெரிய வெள்ளி, அல்லேலூயா சனிக்கிழமை மற்றும் பாஸ்கா ஞாயிறு. இங்கு பெரிய வியாழன் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. அன்றைய தினம் கிறிஸ்து தமது சீடர்களுடன் இறுதி இராப்போசனத்தை உண்டார். இவ்விரவில் குருத்துவத்தினையும் தேவநற்கருணையையும் ஏற்படுத்தினார். அவ்வாறே கிறிஸ்து தமது சீடர்கள் பன்னிருவரின் கால்களைக் கழுவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வும் இன்றைய தினமே இடம்பெற்றது. தேவாலயங்களில் அருட்தந்தையர்களின் தலைமையில் நடைபெறும் திருப்பலியில் இந்நிகழ்வானது இப்போதும் இடம்பெறுகின்றது.

பெரிய வெள்ளியன்று இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு மரித்தமை நினைவுகூரப்படுவதுடன், இறைமகன் இயேசு கிறிஸ்து மனுக்குலத்தை மீட்க சிலுவையில் தனது உயிரை ஈந்த கல்வாரிப் பலியை, அதாவது பாடுகளின் நிகழ்வை உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்கள் நினைவுகூர்கின்றார்கள். அல்லேலூயா சனிக்கிழமையன்று மனிதனுக்கு இறைவன் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்ட விதத்தை நினைவுபடுத்தி கிறிஸ்துவின் உயிர்ப்பின் பெருவிழா கொண்டாடப்படுகின்றது. அல்லேலூயா சனிக் கிழமையின் வழிபாட்டு முயற்சிகளின் இறுதியில் பாஸ்கா ஞாயிறு வருகின்றது. அன்றைய தினம் இயேசு கிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததை கிறிஸ்தவர்கள் விசுவசிக்கின்றார்கள். கிறிஸ்துவின் உயிர்ப்பு இடம்பெற்ற ஞாயிற்றுக் கிழமையே தற்காலத்தில் கிறிஸ்தவர்களின் வழிபாட்டு தினமாக மாறியுள்ளது. கிறிஸ்துவின் உயிர்ப்பின் மீதே கிறிஸ்தவ விசுவாசம் நிலைபெற்றுள்ளது. கிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்திருக்காவிட்டால் எமது விசுவாசம் பொய்யானது எனது புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் குறிப்பிட்டுள்ளார். உயிர்த்தெழுதல் என்பது இறந்த உடலுக்கு உயிர் கொடுப்பது அல்ல. மாறாக இவ்வுலகின் சட்டதிட்டங்களுக்கும் புறம்பாக, முடிவில்லா வாழ்விற்கு செல்வதும், அங்கிருந்து கொண்டு இப்பூவுலகிலுள்ள மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தக் கூடிய ஒரு வாழ்வாகும். உயிர்த்த இயேசு மீண்டும் மரணிக்காது முடிவில்லா வாழ்விற்குச் செல்கின்றார். விவிலியத்தில் குறிப்பிட்டுள்ள விதத்தில் உயிர்த்த இயேசு கதவுகள் மூடப்பட்டிருந்த நிலையில் அப்போஸ்தலர்களுக்குக் காட்சி கொடுத்துள்ளார். அவர்களிடையே தோன்றிய இயேசு தமது சீடர்களுடன் அப்பத்தை பிட்டு உண்டதாக கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றார்கள்.

புனித வாரத்திலும் அதற்கு முன்னரான காலப்பகுதியிலும் பாஸ்கா நிகழ்வுகள் நாடகங்களாகக் காட்சிப்படுத்தப்படுகின்றன. இதன் போது கிறிஸ்துவின் பாடுகள் மரணம், உயிர்ப்பு என்பன நடித்துக் காட்டப்படும். இதன் மூலம் இயேசு அன்று பட்ட பாடுகள் அதே விதத்தில் நினைவுகூரப்படும். மனிதனை பாவத்திலிருந்து விடுவித்து மீட்பைப் பெற்றுத் தருவதற்கே இயேசு பாடுகள் பல பட்டு மரித்து உயிர்த்தெழுந்தார். அவ்வாறே இந்த பாஸ்கா நாடகங்கள் வழியாக இறை விசுவாசிகளை பாவத்திலிருந்து விடுவிப்பதற்கு மிகுந்த பிரயத்தனம் மேற்கொள்ளப்படுகின்றது.

### பாஸ்கா காட்சிகளும் ஜாகோமே கொன்சால்வேஸ் அடிகளாரும்

இலங்கையின் பாரம்பரிய கலாச்சாரத்திற்கமைவாக ஜாகோமே கொன்சால்வேஸ் அடிகளாரால் உருவாக்கப்பட்ட கிறிஸ்துவின் பாடுகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட பசான் என்னும் பாடல் தொகுப்பு இயேசுவின் பாடுகளை நினைவுபடுத்துவதற்காக பாடப்படுகின்றது. கிறிஸ்து சிலுவையைத் தூக்கிக் கொண்டு கல்வாரிக்கு சென்ற பயணத்தை நினைவுகூரும் பொருட்டும், அப்பாடுகளில் பங்குகொள்ளும் பொருட்டும், கிறிஸ்தவர்கள் சிலுவைப் பாத யாத்திரைகளை மேற்கொள்கின்றனர். அந்த பாதயாத்திரைகளின் போது, இத்தகைய பாஸ்காப் பாடல்கள் பாடப்படுகின்றன.

நீண்ட காலமாக இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் இந்த பாஸ்கா காட்சிகள் நடாத்தப்படுகின்றன. ஜாகோமே கொன்சால்வேஸ் அடிகளாரின் படைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட படைப்புக்கள் இதற்கெனப் பயன்படுத்தப்படுகின்றன. காலத்தின் ஓட்டத்தில் பல்வேறு பிரதேசங்களில் காணப்படுகின்ற கலாச்சாரங்களுடன் தொடர்புபட்டு இந்த பாஸ்கா காட்சிகள் மாறுபட்டு வருவதுடன் இந்த பாஸ்கா காட்சிகளைப் பார்ப்பதனூடாக கிறிஸ்தவர்கள், இயேசுவின் பாடுகளை ஞாபகப்படுத்துவதுடன் அதன் பங்குதாரர்களாகவும் மாறுகின்றார்கள்.

#### மாதிரிச் செயற்பாடுகள்

கிறிஸ்தவ சமயத்தைக் கற்கும் மாணவர்கள் பயிலும் பாடசாலைகளில் இதனைச் செயற்படுத்தலாம்.

**(அ) பாஸ்கா நாடகம்**

1. பாடசாலை மாணவர்களது பங்கேற்புடன் பாஸ்கா நாடகத்தைத் தயாரித்து அதனை சுற்றியுள்ள பாடசாலைகளில் நடித்துக் காட்டலாம்
2. நாடகம் இடம்பெறுவதற்கு முன்னர் பாஸ்கா தொடர்பாக சிறிய உரையொன்றை ஆற்றலாம்

**(ஆ) பாஸ்கா பாடல்களைப் பாடலாம்**

கிறிஸ்தவ அல்லது வேறு சமயத்தைச் சார்ந்த மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளிலும் இதனை நடாத்தலாம். பாஸ்காவை அடிப்படையாகக் கொண்ட பாடல்கள்/நாடகம் என்பனவற்றை எழுதுதல், பாடுதல், பாடல்களை அமைத்தல் என்பனவற்றை உள்ளடக்கிய திறன் விருத்திக்கான நிகழ்வாக இதனை நடாத்தலாம்.

**முறைமை :**

1. பாஸ்கா தினத்தையொட்டி பாடல்களை இயற்றுதல், இசையமைத்தல், குறுநாடகங்களை அமைத்தலில் ஆர்வம் காட்டும் சிறுவர்களை அதில் பங்குபற்றச் செய்தல்
2. பாஸ்கா திருவிழா தொடர்பாக அடிப்படை விளக்கத்தினை பெற்றுக் கொடுத்தல், உரிய படைப்புக்களை கற்பதற்கு சந்தர்ப்பங்களை வழங்குதல்
3. பாடல் இயற்றுதலை அடிப்படையாகக் கொண்டு இசையமைத்தல், பாடுதல், குறு நாடகங்களைப் பழகுதல்
4. நாடகம் மற்றும் பாடல் நிகழ்ச்சிகளை நடாத்துதல் மற்றும் அவர்களது திறமைகளை மதிப்பீடு செய்தல். இந்நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதற்காக சுற்றியுள்ள பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தல்.
5. பல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களைக் கொண்டு இந்நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டிருப்பின் உரிய அனைத்துப் பாடசாலைகளிலும் இந்நிகழ்ச்சிகளைக் காட்டுதல்.
6. நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதற்கு அருகிலுள்ள வேறு சமயத் தலைவர்களுக்கும், மக்களுக்கும் அழைப்பு விடுத்தல்

**(இ) ஜாகோமே கொன்சால்வேஸ் அடிகளாரின் ஞாபகார்த்த படைப்புகள் உள்ளடங்கிய கண்காட்சிகள் மற்றும் பாடல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்**

கிறிஸ்தவ மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் அல்லது அவ்வாறு இல்லாத பாடசாலைகளிலும் ஒருங்கிணைந்து நடாத்தப்படக்கூடிய நிகழ்ச்சியாகும்.

**முறைமை :**

1. ஜாகோமே கொன்சால்வேஸ் அடிகளாரின் ஞாபகார்த்தமாக நிகழ்ச்சியொன்றை நடாத்தப்போவதாக முன்னறிவித்து அதற்காகத் தயாராகுதல்.
2. ஜாகோமே கொன்சால்வேஸ் அடிகளார் தொடர்பான தகவல்களைக் கற்பதற்கு வசதிகளை அளித்தல்.
3. நிகழ்ச்சிகளை மேடையேற்றும்போது மாணவர்களது சிறந்த படைப்புக்களை மேடையேற்றுதல்.
4. கண்காட்சியையும் நிகழ்ச்சியையும் ஒழுங்கு செய்தல்.
5. நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதற்கு அருகிலுள்ள வேறு சமயத் தலைவர்களுக்கும், மக்களுக்கும் அழைப்பு விடுத்தல்.
6. சுற்றியுள்ள பாடசாலைகளிலும் இக்கண்காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் நடாத்துதல்.

**(ஈ) ஒருங்கிணைந்த பாஸ்கா சித்திரப் போட்டி**

கிறிஸ்தவ சமய அல்லது வேறு சமயத்தைச் சார்ந்த மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளிலும் மாணவர்களின் பங்கேற்றலுடன் இதனை நடாத்தலாம்.

**முறைமை:**

1. போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களை ஒரு குறிப்பிட்ட பாடசாலைக்கு அழைத்தல். (ஏறத்தாழ 200 மாணவர்கள் மட்டில்)
2. சித்திரப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களுக்கு பாஸ்கா தொடர்பாக விளக்கமளித்தல்.
3. அனைத்து குழுக்களுக்கும் 'பாஸ்கா மற்றும் சமாதானம்' என்ற தலைப்பின் கீழ் சித்திரம் வரைவதற்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்.
4. சித்திரம் வரைவதற்காக 6 அடி நீளமும் அதற்குப் பொருத்தமான அகலத்தைக் கொண்ட பிரேம் இடப்பட்ட கன்வஸ் துணி மற்றும் அதற்குப் பொருத்தமான சாயங்களைப் பயன்படுத்துதல்.
5. சித்திரக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக அச்செயற்பாட்டுடன் தொடர்புபட்ட பாடசாலை மாணவர்களை அழைத்தல்.
6. சித்திரங்களை மதிப்பீடு செய்யும் போது ஒற்றுமை, ஒருமைப்பாடு, சகவாழ்வு போன்ற அளவீடுகளைப் பயன்படுத்துதல்.
7. சித்திரங்களை மதிப்பீடு செய்வதற்காக சமயத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தல்.

**மேலதிக விளக்கங்கள்**

சித்திரப் போட்டியில் பங்குபற்றிய பாடசாலைகளிலும் இச்சித்திரக் கண்காட்சியை நடாத்துதல் பொருத்தமானதாகும்.

# வெசாக் பண்டிகை



## அறிமுகம்

புத்தர் பெருமானின் மூன்று மங்கள நிகழ்வுகள் (புத்த பெருமானின் பிறப்பு, ஞானோதயம், இறப்பு) என்பவற்றினை நினைவு கூறும் வெசாக் முழுநோன்மதி தினம் உலகவாழ் பௌத்த மக்களுக்கு மிக உயர்ந்த நாளாகும். புத்தர் பெருமான் அவர்களின் போதனைகளின்படி சென்று சகல உயிரினங்களிடத்திலும் அன்பும் பரிவும் காட்டுதல், துணையற்றவர்களுக்கு உதவி உபகாரம் செய்தல், நன்றியுடையவர்களாக இருத்தல், தனதும் ஏனையோர்களதும் நன்மைக்கருதி செயலாற்றுதல், தவறான எண்ணங்கள் மற்றும் செயற்பாடுகளை தவிர்த்தல் போன்ற உயரிய மானிட குணாம்சங்கள் பலவற்றை கொண்டமைந்த பௌத்த போதனைகள், நடைமுறை வாழ்க்கையில் தியானத்திற்கான பயிற்சி மற்றும் அர்ப்பணிப்பு என்பன வெசாக் போயா தினம் கொண்டாடுவதன் முதன்மையான நோக்கமாகும். மனிதன் நடைமுறை வாழ்க்கையில் புத்த தர்மத்தின் போதனைகள் மற்றும் விழுமியங்களை கடைபிடித்து அதன் ஆன்மீக மற்றும் தத்துவ ரீதியான தோற்றங்களை விளங்கிக்கொண்டு பொருள் மற்றும் கொள்கை முறையிலான பூஜைகளில் ஈடுபடுதல் வெசாக் பண்டிகையுடன் தொடர்புபட்ட மிக விசேடமான சம்பிரதாயமாகும். கி.வ. 5 ஆவது நூற்றாண்டில் இலங்கை நாட்டுக்கு வருகை தந்த சீன நாட்டு பாஹியன் தேரர் அவர்களின் பயன அறிக்கையில் அறிகின்ற வகையில், இலங்கை வாழ் மக்களால் வெசாக் பண்டிகை நடாத்துதலானது,பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகின்ற விசித்திரமான ஊர்வலத்துடன் கூடிய கலாச்சார மற்றும் சமய பண்டிகையாகும். புத்தர் பெருமானின் மூன்று மங்கள நிகழ்வுகள் (புத்த பெருமானின் பிறப்பு, ஞானோதயம், இறப்பு) என்பவற்றினை நினைவு கூறும் வெசாக் முழுநோன்மதி தினம் உலகம் முழுவதும் வாழ்கின்ற பல்வேறு சம்பிரதாயங்களை கொண்டுள்ள பௌத்த மக்களால் பக்தி பூர்வமாகவும் ஒப்பற்ற வகையிலும் இற்றைவரை கொண்டாடப்படுகிறது.

## புத்த பெருமானின் சுயசரிதை

வெசாக் போயா தினம் பௌத்த மக்களுக்கு மிக முக்கியமாவதற்கு காரணம் யாதெனில், புத்தர் பெருமான் அவர்களின் மூன்று மங்கள நிகழ்வுகள் (புத்த பெருமானின் பிறப்பு, ஞானோதயம், இறப்பு) இடம்பெற்றமையாகும். கி.மு. 623 வெசாக் போயா அன்று தற்போது நேபாளத்தின் தெற்கு எல்லைக்கு அண்மித்து அமைந்துள்ள கபிலவஸ்து என்னும் நாட்டை ஆட்சி செய்த சுத்தோதன மாமன்னருக்கும் மகாமாயா மகாராணிக்கும் புதல்வனாக சித்தார்த்த இளவரசர் அவதரித்தார். இளவரசரின் பிறப்பு தொடர்பாக தீர்க்கதரிசிகளினால் இரண்டு விதமான கருத்துகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அதாவது அரச குமாரனை

இல்லற வாழ்க்கை நிலையில் இருந்தால் அரசாட்சி வகிப்பவரால் வகிக்க கூடியதான மிக உயர்ந்த சக்கரவர்த்தி ஆவாரெனவும், கிருகஸ்தர் வாழ்க்கை நிலையை துறந்து துறவி வாழ்க்கையை தெரிவு செய்தால் புத்தராவார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தன. உலக வாழ்க்கையை விரும்பிய பெற்றோரின் விருப்பமானது, இளவரசர் உலகத்தில் பலமிக்க சக்கரவர்த்தியாக திகழ வேண்டும் என்பதாகும். ஆகையால் அதற்கான சூழலை அமைத்துக்கொடுப்பதில் பெற்றோர்கள் பொறுப்புடன் செயற்பட்டார்கள். அதன்படி இளவரசர் சுகபோகமாக வாழ்வதற்கு ஏற்ற வகையில் மூன்று பருவங்களுக்கும் ரம்ய, சுரம்ய, மற்றும் சுப என்ற வகையில் அரண்மனைகளை அமைத்தலும், இல்லற வாழ்க்கையில் பற்று ஏற்படும் வகையில் சகல சுகபோகங்களையும் அனுபவிக்க வழி சமைத்தனர்.

நான்கு சகுனமென அழைக்கப்படும் இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் மீள முடியாத மூப்பு, பிணி, மரணம் ஆகிய துக்ககரமான சந்தர்ப்பங்களையும், இல்லற வாழ்க்கையிலிருந்து விடுபட்டு துறவரத்திற்கு செல்வதன் நன்மையை நன்கு புரிந்துக்கொண்ட சித்தார்த்த இளவரசர் இல்லற வாழ்க்கையை துறக்க தீர்மானித்தார். தமது விருப்பத்தை சாதிப்பதற்காக இல்லற வாழக்கையில் சுகபோகங்கள் அனைத்தையும் கைவிட்ட சித்தார்த்தர், கி.மு. 594 எசள போயா அன்று தமது மனைவியான யசோதராதேவி, மகன் ராகுல ஆகியோரை விட்டுப் பிரிந்து துறவறம் பூண்டார்.

வாழ்க்கையில் யதார்த்தம் அல்லது உண்மை நிலை மற்றும் அதன்மூலம் துன்பங்களிலிருந்து நிவாரணம் காணும் மார்க்கத்தினை கண்டறிவதற்கு அக்காலத்தில் உயர் ஞான ஆய்வுகளில் ஈடுபட்டிருந்த ஆசான்களின் வழிகாட்டலில் தவ வாழ்க்கையில் ஈடுபட்டார். குறுகிய காலத்தில் அவர்களின் தர்ம மார்க்கங்களை புரிந்துக்கொண்டபோதிலும், அதன்மூலம் வாழ்க்கையின் உண்மை நிலை தொடர்பாக அறிந்துக்கொள்ள முடியவில்லையென உணர்ந்துக் கொண்டார். உடலை வருத்தி செயற்படுவதால் அதாவது அத்தகிலமதானுயோகி மார்க்கத்தினாலோ சுகபோகங்களுடன் கூடிய காமசுகல்லிகானுயோகி மார்க்கத்தினாலோ வாழ்க்கை தொடர்பான உண்மை நிலையினை புரிந்துக்கொள்ள இயலாதென உணர்ந்துக்கொண்ட சித்தார்த்தர் நடுநிலைக் கொள்கையினை பின்பற்றுவதன் மூலம் தமது இலட்சியத்தை சாத்தியப்படுத்திக்கொள்வதற்கு முடியுமென உனர்ந்தார். தீவிர தியானமும் பயிற்சியும் மூலம் சித்தார்த்தர் கி.மு. 588 வெசாக் மாதம் போயா நாளான்று உருவெல் என்ற குடியேற்றத்தில் உள்ள கயா என்ற இடத்தில் ஞானோதயம் பெற்றார்.

கௌத்தம புத்தர் அவர்களால் அடைந்துக்கொண்ட ஞானோதயத்தின் இயல்பினை விளக்கும் கூற்றும் அதன் பொருளும் பின்வருமாறாகும். அதாவது “வாழ்க்கை சக்கரத்தில் மீண்டும் மீண்டும் பிறப்பது துன்பமாகும். பிறத்தல் எனும் வீட்டை கட்டும், ஆசை என்ற தச்சனை என்னால் கண்டுக்கொள்ளப்பட்டது. தச்சனே மீண்டும் வீட்டை கட்டுவதற்கு இடமளிக்க மாட்டேன். **ஆசை என்ற கூரையை உடைத்தெறிந்தேன்.** மடமை எனும் முகடை கழற்றி எறிந்தேன். மனம் இலகுவாக உள்ளது.. ஆசை முடிவுற்றது. மீண்டும் பிறப்பில்லை” என்பதாகும்.

இந்தக் கூற்றில் வாழ்க்கை தொடர்பான மெய் நிலையை புரிந்துக்கொள்வதற்கான மார்க்கம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆயினும் ஆசை, பகைமை மற்றும் மடைமை ஆகிய எண்ணங்களைக் கொண்டுள்ள லௌகீக மனிதனுக்கு இந்த ஆழமான தர்மத்தை புரிந்துக்கொள்ளும் இயலாமை தொடர்பாக உணர்ந்து கொண்ட கௌத்தம புத்தர் உலகவாழ் மக்களுக்கு தருமத்தை போதிக்க முயன்றுள்ளார்.

அதன் பின்னர் துறவி வாழ்க்கையை வாழ்கின்றபோது தமக்கு வழிகாட்டிய ஆசிரியர்களுக்கு தருமத்தை போதிக்க முற்பட்ட போதிலும், அப்போது அவர்கள் மரணமடைந்து பரலோகம் அடைந்திருந்தபடியால் புத்தர் நீண்டகாலமாக அறிந்திருந்த சகபாடிகளை முதலாவது ஐந்து சீடர்களாக ஏற்றுக்கொண்டதுடன், அவர்களுக்குதர்ம போதனையை நடாத்தினார். படிப்படியாக தர்ம விடயங்களை புரிந்துக்கொண்ட ஐந்து சீடர்களும் புத்த பெருமானை பின்பற்றும் முதலாவது துறவிகளானார்கள்.

நாற்பத்தைந்து ஆண்டுகள் வட இந்தியாவில் வடகிழக்கு பிரசேதத்தை மையமாகக்கொண்டு தர்ம பயணத்தை மேற்கொண்ட கௌத்த புத்தர் அவர்கள் மல்ல என்ற குடியேற்றத்தில் குசிநாரா நுவர உபவத்தன என்ற நாகலிங்க பூங்காவில் பரிநிர்வாணம் அடைந்தார். வரலாற்று ரீதியாக இந்த நிகழ்வு கி.மு.543 ஆவது வெசாக் பூரணையன்று நிகழ்ந்துள்ளதாக பதிவாகியுள்ளது.

### கௌதம புத்தர் அவர்களின் போதனை

கௌத்தம புத்தர் அவர்களின் போதனை சூத்திரங்கள், ஒழுக்கநெறி மற்றும் அபிதர்மம் ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டமைந்த திரிபீடகம் என்று அழைக்கப்படும் நூல் உள்ளது. திரிபீடகம் முதலாவதாக ஹெலபசவில் எழுதப்பட்டிருந்ததுடன், இது இலங்கையில் மாத்தளை பிரதேசத்தில் அளுலென என்ற விகாரையில் மேற்கொள்ளப்பட்டதாக வரலாற்று ஆதாரங்கள் பதிவு செய்கின்றன. அதன் பின்னர் 05 ஆவது நூற்றாண்டில் பாலி மொழிக்கு எழுதப்பட்ட திரிபீடகம் இன்று உலகத்தில் பல்வேறு மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பௌத்த போதனையின் கற்கைகள் லௌகீக மற்றும் ஆன்மீக வாழ்க்கையை சிறப்பாக்கி கொள்வதற்கு ஒரே வகையில் பயன்படுத்தலாம். அதில் மிக முக்கியமான கற்கை யாதெனில், சிந்தித்து வினவி செயலாற்றுவதற்கு மனித இனத்திற்கு உள்ள ஆற்றலை ஏற்றுக்கொள்ளுதலும் அதனை பயன்படுத்துவதற்காக உள்ள சுதந்திரமுமாகும். புத்த பெருமானின் அச்சமற்ற ஒரு கூற்று யாதெனில் “தம்மை காண்பதற்கும் வழிபடுவதற்கும் விருப்பமுள்ள எவரொருவரும் இருப்பின், அவர் தர்மத்தின் மார்க்கத்தை பின்பற்ற வேண்டும் அல்லது தர்மத்தின் மார்க்கத்தில் நடத்தல் வேண்டும்” என்பதாகும்.

### பௌத்த தத்துவம்

பௌத்த போதனைகளுக்கேற்ப உலகத்தில் நடைமுறை யதார்த்தம் யாதெனில், பிறப்பு மற்றும் தோன்றும் அனைத்தும் தாம் விரும்பும் வகையில் இருக்காது என்பதாகும். அதாவது, அவை மாற்றங்களுக்கு உட்படும் என்பதாகும். மாற்றங்கள் துன்பத்திற்கு காரணமாகும். துன்பத்தை இல்லாது செய்வதற்கு முழுநிறைவடைவதன்மூலம் வாழ்க்கையின் மெய் நிலையை புரிந்துக்கொள்ள முடியும். அது முக்தி நிலையை அடையும் மார்க்கமாகும்.

யாரொருவர் தமது குருவால் போதித்த தர்மத்தின் பிரகாரம் வாழ்வாராயின், அவர் புத்த பிரானின் அனுஷ்டானத்தினைக் கடைபிடிக்கின்றார் எனவும், புத்த பிரானுக்கு செய்யக்கூடிய மிக உயர்ந்த வழிப்பாடு எனவும் புத்த தருமத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆளரொருவர் தமது முக்தி நிலையை தனது சுயமுயற்சியினாலயே பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். கடவுளுக்கோ, பிரம்மாவுக்கோ அல்லது வெளியாருக்கோ அதனை மேற்கொள்ள இயலாது. தமது நலன், ஈடேற்றம், முக்திநிலை தம்மாலயே ஏற்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறான தனி நபர் சுதந்திரம் தொடர்பாக துணிச்சலான கூற்றினை கூறிய புத்தபிரான் தம்மைச் சுற்றியுள்ள பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடுதலும், வாழ்க்கையில் வெற்றி பெறுதலும் மனிதனால் மேற்கொள்ளப்பட வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளார்.

கௌத்தம புத்தர் அவர்களின் முதலாவது தர்ம போதனையில் தாம் புரிந்துக்கொண்ட ஞானம் தொடர்பாக தத்துவ ரீதியான பகுத்தாய்வினை முன்வைத்ததுடன், அதன் சாரத்தை நான்கு உயர் உண்மைகளாகவும் எண்வகை வழிகள் அல்லது அட்ட சீலமாகவும் விளக்கமளித்துள்ளார். சீலம், சமாதி, ஞானம் ஆகிய படிநிலைகளின் **ஊடாக அருகத நிலை(சோவான்), சகுர்தகாமி, அனாகாமி, அர்ஹத்(நிர்வாண நிலை)** ஆகிய உயர் நிலைகளை அடைவதற்கு முடியுமென முதலாவது போதனையான தமசக் பெவதும் சூத்திரத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்.

### மனித வர்க்கம் சமமானது என்பது

புத்தபிரானின் போதனைகளின்படி மனிதன் தமது எண்ணங்களை முன்னேற்றுவதன் வாயிலாக சிரேஷ்ட ஆளொருவர் என்ற நிலையை அடையலாம். மனதால் வினவி செயல்களில் ஈடுபடும் ஆற்றல் மனித மனதில் உள்ளது. அந்த ஆற்றலை மேம்படுத்துவதால் தமக்கும் சமூகத்திற்கும் பயனின்றி இருப்பதையும் பார்க்க, புத்திசாலித்தனமாக செயற்படுவதற்கு உபகாரமாகும் ஞானத்தையும் ஆற்றலையும் இயற்றிக் கொள்ளுதல் வேண்டும். ஒரு மனிதன் உன்னதமான நிலையை அடைவது அதன் மூலமாகும். பிறப்பால் ஒரு மனிதன் உயர்ந்த நிலை அல்லது தாழ்வு நிலை அடைவதில்லை. ஒரு மனிதனின் நடத்தையினால் அவன் உயர்ந்தவனாகவோ தாழ்ந்தவனாகவோ ஆக முடியுமென்பதை தம்ம பதத்தில் காட்டப்பட்டுள்ளது. “ந சச்ஜா வசலோ ஹோத்தி ன ஹோத்தி பிரமனோ ஆகையால், நிறம், இனம், சமயம்,குலம், கோத்திரம் போன்ற காரணங்களினால் மனித சமூகத்தை பிரித்து காட்டுவது காரணமற்றது என கௌத்தம புத்தர் அவர்களின் போதனையாகும்.

மனித சமுதாயத்தில் நிலவும் வேறுபாடு ஆண், பெண் என்பதாகும். எனினும் இந்த பூலோகத்தின் மீது காணக்கூடியதாகவுள்ள தாவர மற்றும் விலங்கினங்களைக் பார்க்கும்போது அவற்றில் பல்வகைத் தன்மை காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக தாவர இனங்கள் ஒவ்வொன்றுக்கும் வேறுப்பட்டதனித்துவமான அம்சங்களை காணலாம். அவை பாசி, புல் இனங்கள், உயர்ந்த மரங்கள், கட்டையான மரங்கள்,

பற்றைகள் என்ற வகையில் உள்ளன. வெளிப்புறத் தோற்றத்தில் அவை ஒவ்வொன்றுக்கும் சமமல்ல. விலங்கினங்களிலும் அது அவ்வாறே ஆகும். உதாரணமாக நிலத்தை அண்டி வாழும் விலங்கினங்களுக்கிடையே கால் இல்லாத, இரண்டு கால்களுடைய, நான்கு கால்களுடைய அல்லது நூறு கால்களுடைய விலங்குகள் நாம் காணலாம். விலங்கினத்தின் பல்வகைத் தன்மை அவ்வாறாகும். மனித சமூகத்தில் அவ்வாறான வேறுபாட்டை காணமுடியாது. மனித உடலில் உள்ள கைகள், கண்கள், மூக்கு, கால்கள் போன்ற ஒவ்வொரு அங்கங்களும் சமமாக உள்ளன. உயிரியல் ரீதியாகவும் மனித உடலில் மாற்றங்கள் இல்லை. புவியியல் அமைப்பின்படி மனிதன் நிறத்தினால் வெள்ளை, கருப்பு, மற்றும் கபிலம் என்று அடையாளப்படுத்த முடியும். மனிதன் ஒருவன் இன்னொருவரிடமிருந்து வேறுபடுவது, அவனது எண்ணங்களிலிருந்தும் செயற்பாடுகளிலிருந்தும் என்பது புத்த பெருமானின் போதனையாகும். சகல மணிதர்களும் உயர்நிலை அடைவதற்கு முடியுமென்பது புத்த தருமத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. புத்தர் காலத்து சமூகத்தில் மிகவும் கீழ்நிலையில் உள்ளவர்கள் என்று கருதப்பட்ட சுத்திர குலத்தைச் சார்ந்த சுனீத, சோப்பாக்க போன்ற இளைஞர்களுக்கு புத்தசாசனத்தில் துறவரம் பூணுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. அவர்களின் விசேட ஆற்றல்களை மெச்சிய புத்த பெருமான் மானசீக சக்தியை மேம்படுத்துவதாலும், நல்லொழுக்கத்தைக் கடைபிடிப்பதாலும் எந்தவொரு ஆளும் உன்னத நிலையை அடையும் ஆற்றல் கொண்டுள்ளார் என் சுட்டிக்காட்டினார்.

### மனதை வினவி சிந்தித்து செயற்படல்

புத்த பெருமானின் போதனைகளில் விசேட அம்சம் யாதெனில், சிந்தித்து வினவி தீர்மானமெடுப்பதற்கு மனிதனுக்கு உள்ள ஆற்றலை குறிப்பிடப்பட்டிருத்தலாகும். "எஹி பஸ்ஸிக" என்ற பாலி கூற்றில் பொருள்படுவது "வருகவினவிப் பார்க்கவும்" என்பதாகும். புத்தர் காலத்தில் சமூகத்தில் வாழ்ந்த அரசர்கள், அமைச்சர்கள், அந்தணர்கள், வீட்டுத் தலைவர்கள் மற்றும் ஆசிரியர் மாணவர்கள் தலைமையாகக் கொண்ட குழுக்கள் புத்த பிரானிடம் அணுகி பல்வேறு தலைப்புகளைக் கொண்டு கலந்துரையாடல்கள், கருத்துப் பரிமாற்றம், விவாதம் ஆகியவற்றை நடாத்தி புத்த தர்மத்தினை ஆராய்ந்து பார்த்த முறை திரிபீட சூத்திரங்களில் இருந்து அறியலாம். காலாம சூத்திரம் அவ்வாறான வரலாற்று போதனைகளுக்கு உதாரணமாகும் பல்வேறு சமயத் தலைவர்கள் காலாம நகரவாசிகளிடத்தில் வந்து, அவர்களின் போதனைகள் மட்டும் சரியானவை எனக்கூறி, அவற்றை கடைபிடிக்குமாறு வேண்டி நின்றதால் அவர்கள் ஆச்சிரியமடைந்தனர். காலாம நகரத்தில் புத்த பிரானிடம் வந்து அவர்கள் தமது வினாவினைத் தொடுத்து பதிலை எதிர்பார்த்தனர்" அக்காலத்தில் ஏற்றுக்கொண்டதற்கிணங்க தவிர்க்கப்பட வேண்டிய 10 விடயங்களை புத்த பெருமான் எடுத்துக் கூறினார். அதாவது பழைய சம்பிரதாயங்கள் நிலைப்பதாலும், பரம்பரை பரம்பரையாக நிலவியதாலும், இவ்வாறு ஏற்பட்டுள்ளது என்று கூறியதாலும், புனித நூலில் குறிப்பிடப்பட்டிருப்பதாலும், விவாதத்திற்கு ஏற்புடைய நியாயத்திற்கு உட்பட்டதாலும், இது நல்லது என்று தாம் உணர்ந்ததாலும், தமது கருத்துக்கு உடன்படுவதாலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட நபரினால் கூறப்படுவதாலும், குருவுக்கான தனியான கௌரவம் என்ற வகைகளினாலாகும். அந்த பத்து விடயங்களையும் ஏற்றுக்கொள்ளாது "சில செயற்பாடுகள் தமக்கும், சமூகத்திற்கும், தீங்கு, வஞ்சனை, அனர்த்தம் ஏற்படுத்தாதிருப்பின் அதனை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய தர்மமாகும். சில செயற்பாடுகளினால் தமக்கும், சமூகத்திற்கும், தீங்கு, வஞ்சனை ஏற்படுமாயின் அவைகள் கடைபிடிக்கக் கூடாதவையாகும். சமூகத்திற்கு நன்மையான தர்மங்கள், அறிவாளிகளினால் பாராட்டப்படுவதனால் அவ்வாறாக உபதேசங்கள் உள்ளடக்கிய தர்மங்களை அனுஷ்டித்தல் பொருத்தமானது என்பது காலாம சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதனையாகும்.

நாளாந்த வாழ்க்கையினை திறம்பட அமைத்துக்கொள்வதற்கு பஞ்சசீலம் (ஐந்து வழிகளை அனுஷ்டித்தல்) இல்லற வாழ்க்கையை கடைபிடிக்கும் ஆளொருவர் தனது நாளாந்த நடவடிக்கைகளில் ஈடுபடும்போது உடலையும் சொற்களையும் கட்டுப்படுத்த வேண்டுமென்பது பௌத்த தர்மத்தின் அடிப்படை போதனையாகும். அதாவது ஒழுக்கம் அல்லது அவயவங்களை கட்டுப்படுத்தல் என அறியப்படும். இல்லரத்தான் நாளாந்த வாழ்க்கையில் பஞ்சசீலம் அனுஷ்டானத்தில் ஈடுபட்டு செயற்பட வேண்டும். பஞ்சசீலம் சுய அனுஷ்டானமாகும். அதன் குறிக்கோளாவது, தனதும் சமூகத்தினதும் நன்மை கருதி செயற்பாடுகளில் ஈடுபட வேண்டுமென சுய உறுதிசெய்துகொள்ளுதலாகும். இல்லையென்றால் பிறருக்கு தொந்தரவு செய்யாமல் வாழ்வதாகும். பஞ்சசீலத்தில் முதலாவது உறுதிமொழியாவது சகல உயிருள்ள பிராணிகளுக்கும் தொந்தரவு செய்யாமல் இருத்தல், கொலை செய்யாதிருத்தல் மற்றும் அவைகளிடத்தில் அனுதாபத்துடன் செயற்படல் என்பதாகும். இது அகிம்சைக் கோட்பாடு என அறியப்படும். இரண்டாவது உறுதிமொழியாவது களவுகொள்ள மாட்டேன் என உறுதி செய்தலாகும். தமக்குரிமையில்லாத பொருட்களை அனுமதியின்றி பயன்படுத்தல், களவாடிச் செல்லல், அதற்கு உதவியாக இருத்தல் ஆகியன செய்யக்கூடாதவை. அத்தகைய செயல்கள் சமூகத்தில் சந்தேகம், பயம், நம்பிக்கையின்மை அநியாயச்

செயல்கள் அதிகரிப்பதற்கு ஏதுவாக அமைகின்றது. மூன்றாவது உறுதிமொழியாவது கண், காது, மூக்கு, நாக்கு மற்றும் உடல் ஆகிய ஐம்புலன்களில் இன்பம் காணும்போது தமக்கும் சமூகத்திற்கும் பங்கம் ஏற்படாத வண்ணம் செயற்படும் உறுதி மொழியாகும். அவ்வாறு சுய உறுதி கொள்வதனூடாக மானிடத்தில் இம்சையுடன் தொடர்புடைய சகல சமூக குற்றங்களையும் தவிர்ப்பதற்கான சந்தர்ப்பம் சுயமாகவே ஏற்படுகின்றது. நான்காவது உறுதிமொழியாவது பொய், புரளி, மனம் நோகத்தக்க வார்த்தைகள்,ஆதாரமற்ற பேச்சுகள், விவாதங்கள் என்பவற்றிலிருந்து தவிர்த்திருத்தலாகும். அவைகள் சமூகத்தில் வாழும் பல்வேறு சமூகத்தினரிடையே ஒற்றுமை,நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு என்பன உறுதிபடுத்துவதற்கு சாதகமாக அமையும். அதேபோன்று நிறுவனமென்றால் அதன் நற்பெயருக்கும் உற்பத்தி திறனின் மேம்பாட்டுக்கும் ஊக்கமளிப்பதாக அமையும். ஐந்தாவது உறுதிமொழியாவது மனதைக் குழப்பும் மதுபானம், போதைப் பொருள் ஆகிய ஊறுவிளைவிக்கும் பொருட்களை உபயோகப்படுத்துவதிலிருந்து விலகியிருப்பதற்கு உறுதி கொள்ளுதலாகும். நிகழ்கால சமூகத்தில் பல்வேறு உபாயங்கள்மூலம் இளந் தலைமுறையையும், பாடசாலைப் பிள்ளைகளையும், புகைப்பிடித்தல் மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையாக்கும் சக்திகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவ்வாறான விடயங்களில் அடிமைக்கொள்வதால் அந்த ஆளின் மனம்குழப்பமடைதல் மட்டுமல்லாது தமது குடும்ப உறுப்பினர்கள் உட்பட முழு சமூகத்திற்கும் அழிவுப் பாதையை தோற்றுவிக்கும். ஆகையால் பஞ்சசீலத்தின் மூலம் சமூகத்தின் முன்னேற்றம் மற்றும் தனிநபர்களின் நலனையிட்டு அதிக பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளும் இயலுமை ஏற்படுகின்றது.

### பெரும் ஆசை அல்லது உலோபத்தினை அடக்கியாளுதல்

நாளாந்த வாழ்க்கையில் கருமங்களை மேற்கொள்கின்றபோது ஏனையோருடன் ஒற்றுமையாகச் செயற்படுவதற்கு மேம்படுத்திக்கொள்ளப்பட வேண்டிய மகத்தான சேவையானது தானம் அல்லது அன்பளிப்பு செய்வதாகும். அன்பளிப்பு சகலவரினாலும் பழகிப் பயில வேண்டிய நற்குணமென போதிக்கப்பட்டுள்ளது. ஏனையோரின் நலனையும் முன்னேற்றத்தினையும் வேண்டி மேற்கொள்ளப்படும் உன்னத நன்கொடையாகும்.தன்னிடத்திலுள்ள பௌதீக பொருட்களை அதாவது புத்தகங்கள்,காசுப்பணம் ஆடை அணிகள், உபகரணங்கள் என்பன தேவைப்படுபவர்களுக்கு அன்பளிப்புச் செய்யத்தக்கவையாகும். உணவு பானம், மருந்து ஆகியனவும் பௌதீக அன்பளிப்பு வகைக்குள் அடங்கும். இரத்ததானம், உடல் அவயவயங்களின் தானம் உயர்ந்த அன்பளிப்பாகும்.நற்பண்புகளைப் போதித்தல் மற்றும் அறிவினைப் பரப்புதலும் உயர்ந்த தானமாகும். எல்லாவற்றையும்விட மிக உயர்வானது அறவழி தொடர்பான அறிவை வழங்குதலும் அறவழியில் ஈடுபடுத்தலும் ஆகும்.எல்லா தானங்களிலும் பார்க்க தர்மம் தொடர்பான தானம் மிகவும் உயர்வானதாகும். (சப்பதானங் தம்மதானங் ஜினாத்தி) அன்பளிப்புச் செய்ய விளைபவர் ஆசை,அதிக கஞ்சத்தனம், உலோபித்தனம், பொறாமை விட்டுக்கொடுக்காமை ஆகிய தகாத செயல்களைத் தவிர்த்து செயற்படும்போது நற்குணங்களுடன் கூடிய சமூகத்துக்கு நன்மை செய்யும் உதாரணப் புருஷராக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

### உபசார பழக்க வழக்கங்கள்

நபர்களிடையே நட்பினைக் கட்டியெழுப்புதல் பௌத்த பழக்கவழக்கங்களால் எதிர் பார்க்கப்படும் மிகச் சிறப்பான சமூக நேயத்துடன்கூடிய நடத்தை முறையாகும்.அவை நான்கு முறைகளில் காட்டப்படுகின்றது. அதாவது தானம், அன்பான வார்த்தை, நற்செயல் மற்றும் சமத்துவம் என்பதாகும். குடும்பம், பாடசாலை, விகாரை ஆகிய எந்த இடத்திலும் வசிப்பவர்களிடையே மேற்குறிப்பிட்ட குணாதிசயங்களை விருத்தி செய்தல் மற்றும் அவற்றை பின்பற்றுவதன் ஊடாக பிரச்சினைகளைத் தவிர்த்து சமாதான சூழ்நிலை ஏற்படுத்திக் கொள்ள முடிகின்றது.

நம்பிக்கை மற்றும் ஒற்றுமை என்பன சொல், செயல் மற்றும் சிந்தனை ஆகிய மூன்று அம்சங்களினூ டாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறான நட்பு மிகுந்த சூழலினை "உற்ற நண்பர் சமூகம்" (கல்யாண மித்திர சமாஜய) என அறியப்படுகிறது. புத்தர்காலத்தில் சமூகத்தில் புத்தபெருமானின் சீடர்களிடையே அவ்வாறான நட்புகொண்ட வாழ்க்கைச் சூழல் இருந்ததென்பதை சூத்திர போதனைகளால் அறியலாம். சுலகோசிங்க சூத்திரத்தில் பிக்குமார் மூவரிடையே நிலவிவந்த நட்புநிலை சம்பந்தமாக விவரிக்கப்படுகிறது. அவ்வாறான நட்புடனான பிணைப்பு "பாலையும் நீரையும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்க முடியாதென" உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவ்வாறே அவர்களிடையே நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது எனவும் அந்தச் சூத்திரத்தின் வாயிலாக தெளிவாகின்றது.

### தியானம் அல்லது மெய் நிலையை விருத்தி செய்தல்

பௌத்த உறுதிமொழிகளில் மிகவும் உயரிய இடம், மனித மனம் மற்றும் அதன் செயற்பாடுகளை புரிந்துக்கொள்வதன் ஊடாக சிந்தனைகளைக் கட்டுப்படுத்திக்கொள்வதற்கும் நற்சிந்தனைகளை மேம்படுத்திக்கொள்வதற்கும் உரித்தாகின்றது. மனிதனின் சகல செயல்களுக்கும் மூலாதாரமாவது மனதும் சிந்தனையுமாகும். நற்சிந்தனைக்கேற்ப நற்செயல்களும்,தீய சிந்தனைக்கேற்ப தீய செயல்களும் இடம்பெறுவதாக புத்தமதத்தில் சுட்டிக்காட்டப்படும் அடிப்படைப் போதனையாகும். (மனோ புப்பங்கமா தம்மா)

மனதில் உருவாகும் சிந்தனைகளின் சுபாவத்தினை ஒருமுகப்படுத்தல் பௌத்த தியானத்தின் ஆரம்பப் படிமுறையாகும். அதற்காக மனநிலைப் பயிற்சி செய்ய வேண்டும். மனதினை ஒருமுகப்படுத்த முடிவது, உடல் இயக்கம் இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னர் அல்லது நல்லொழுக்கம் ஏற்பட்டதன் பின்னராகும். இதற்காக சிறப்புப் பயிற்சிகள் அவசியமாகின்றது. தனது உட்சுவாசம், வெளிச் சுவாசத்தினை ஒருமுகப்படுத்துவதற்கு பழகிக் கொண்டதன் பின்னர் மனதினையும் அதில் வரும் எண்ணங்களையும் அடையாளம் காண முடிகின்றது. இவ்வாறு தியானம் அல்லது மெய்நிலையை பழக்கப்படுத்திக்கொண்ட ஒருவருக்கு ஞாபகசக்தி அதிகரித்தல், நினைவு அல்லது பழைய ஞாபகத்தினை ஏற்படுத்திக்கொள்ள உடனடியாக இயலுமை ஆகிய விசேட பயன்களை பெற்றுக்கொள்ள முடியும். பாடசாலை பிள்ளைகளின் ஞாபகம் மற்றும் அந்தச் சக்தியினை விருத்தி செய்துகொள்வதற்கு சுவாசப் பயிற்சியினை நோக்கமாகக் கொண்டு தியானத்தைப் பயிற்றுவிக்க முடியும்.அவ்வாறே பஞ்சசீல அனுஷ்டானத்திற்கேற்ப பாவத்தினைத் தவிர்த்து நற்செயல்களில் ஈடுபடுவதற்காக தியானப் பயிற்சி அளிக்க முடியும். புத்தர் ஞானோதயம் பெறுவதற்கு மிக நீண்ட காலம் மனதின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தி பயிற்சி செய்ய வேண்டி ஏற்பட்டது. அக் காலப் பகுதியில் மனதின் பல்வேறு சுபாவங்களை ஒருமுகப்படுத்தியதுடன், மறுபிறவி எடுக்காமைக்காக மனதில் எல்லா பிணைப்புகளையும் பறித்தெடுத்துவிடுவதில் வெற்றிபெற்றார் என்று புத்தரின் வரலாறு மூலமாகத் தெளிவாகின்றது.

### சர்வதேச வெசாக் தினக் கொண்டாட்டம்

உலகம் முழுவதும் வாழ்கின்ற பௌத்தர்கள் “வெசாக் பௌர்ணமியை” பல்வேறு முறையில் கொண்டாடுகின்றார்கள். “வைசாக்க” என்ற பாலிச் செல்லின் சிங்கள வடிவமாக “வெசாக்” (Vesak) என்னும் பதம் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்தந்த நாடுகளின் மொழி பயன்பாட்டுக்கு ஏற்ப வெசாக் என்னும் பெயர் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது. இந்தியா, வங்காள தேசம் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் விசாக்க பூஜா என்றும், புத்த பூர்ணிமா அல்லது புத்த ஜயந்தி என்றும் தாய்லாந்தில் விசாக்க பூச்சா என்றும், வியட்நாமில் பட் டான் (Phat Fan) என்றும் இந்தோனிஷியாவில் வைசாக் என்றும், மலேசியாவில் வெசக் என்றும் பயன்படுத்தப்படுகிறது. சீன மொழியில் போடான் (Fodan) என்றும், திபெத்து மொழியில் சகா டாவா என்றும், அழைக்கப்படுகின்றது. லாகோசில் விக்ஷாகா புக்ஷா (Vixakhabouxa) என்றும், மியன்மாரில் க- சொனே -லா - ப்யாஏ (Ka- sone - la -pyae) என்றும் பெயரிடப்படுகிறது.

இலங்கை, மலேசியா, மியன்மார், தாய்லாந்து, சிங்கப்பூர், வியட்நாம், இந்தோனிஷியா, ஹொங்கொங், தாய்வான் ஆகிய ஆசிய நாடுகளில் வெசாக் தினம் பொது விடுமுறை நாளாகும். 2001 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் அமைப்பினால் வெசாக் தினம் சர்வதேச தினமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த முன்மொழிவை அப்போது இந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சராக பணியாற்றிய அமரர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களே ஐக்கிய நாடுகளின் மாநாட்டுக்கு முன்வைத்தவராவார். 2002 ஆம் ஆண்டு தொடக்கம் ஐக்கிய நாடுகளின் சபையின் அனுசரணையுடன் வெசாக் தினம் உற்சவமாகக் கொண்டாடுவதற்கும், புத்த சமயம் தொடர்பாக கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் நேர்காணல் என்பவற்றின் மூலம் பௌத்த நாடுகளிடையே ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்கும் கவனம் ஈர்க்கப்பட்டது.

### தற்கால இலங்கையில் வெசாக் பண்டிகையை கொண்டாடுதல்

வெசாக் தின கொண்டாட்டம் இரண்டு விதமாக இடம்பெறுகின்றது. அதாவது பொருட் பூசை மற்றும் கொள்கை பூசையாக அறியலாம். பொருட் பூசையாக கருதப்படுவது “கௌத்தம புத்த பெருமான் வாழ்ந்துகொண்டு உள்ளார்” எனக் கருதி செய்யப்படுகின்ற பூஜைகளுடன் தொடர்புடைய செயற்பாடுகளாகும். ஒளி பூசை, சாம்பிராணிப் பூசை, மேள ஒலிப் பூசை, பெரஹர நடாத்தல் ஆகிய புத்த பெருமானின் பெருமைகளை நோக்கமாகக் கொண்டு நடாத்தப்படும் பூசைகளாகும். வெசாக் பக்தி கீத நிகழ்ச்சிகள் புத்த பெருமானின் வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்வுகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட பந்தல்கள் மற்றும் பல்வேறு விதமான சோடனைகள் ஆகயின பொருட் பூசை வகையில் அடங்கும்.

புத்த பெருமானின் போதனைகளின்படி தமது வாழ்க்கையினை அமைத்துக்கொள்ளும் பொருட்டு உடல், உள்ளம், வார்த்தை ஆகிய முவ்வழிகளைக் கட்டுப்படுத்தல், முவ்வழிகளால் மேற்கொள்கின்ற தீய செயல்களை கட்டுப்படுத்துவதற்கு பயிற்சி பெறுதல் மற்றும் அதனூடாக நல்லொழுக்கமுடைய வாழ்க்கையினை அமைத்துக்கொள்ள உறுதிபூனல் கொள்கை பூசை எனப்படுகிறது. அதன்படி பக்தியுள்ள பௌத்தர்கள் வெசாக் தினத்தினை ஆன்மீக ஈடெற்றம் நோக்கி ஈடுபடுவர். சிறுவயதினர், இளம் வயதினர், முதியோர் என வயது வேறுபாடின்றி ஆண், பெண் எல்லோரும் வெசாக் தினம்வேண்டி பொருட் பூசை மற்றும் கொள்கைப் பூசை ஆகிய இரண்டு அம்சங்களிலும் மிகவும் அக்கறையுடன் ஈடபடுதல் வழக்கமாக உள்ளது.

அத் தினத்தில் விகாரைகளுக்கு வரும் பக்தர்கள் பத்துசீலம், எட்டுசீலம் ஆகிய உயர் வழிகாட்டலில் ஈடபட்டு உள்ளம் உடல் வார்த்தை ஆகிய முவ்வழிகளைச் சீர்படுத்தும் பயிற்சியினைப் பெறுவார்கள். அதே போன்று கருணை, பெருமகிழ்ச்சி, அன்பு நேர்மை, எளிமை போன்ற உயர் குணாம்சங்களை விருத்தி செய்தும், மாமிசம் தவிர்த்து தாவர உணவுகளை உட்கொண்டும் உயர் ஆன்மீக ஈடேற்றத்தினைப் பெறுவதற்கு உறுதி பூண்டிருப்பார்கள். பிக்குமார்களினால் விகாரைகளை சார்ந்து நடாத்தப்படும் தர்ம போதனைகளை செவிமடுத்தல்,வானொலி ரூபவாகினி போன்ற இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாகச் சொல்லப்படும் தர்ம போதனைகளைச் செவிமடுத்தல், தர்ம கலந்துரையாடல்களை நடாத்துதல், ஆகியவற்றினூடாக தர்மம் தொடர்பான விளக்கங்களை விருத்தி செய்துகொள்வதற்கு ஈடுபட்டிருப்பர். இலங்கை அரசினால் ஆன்மீக போதனைகளுக்கு துணை புரியும் வகையில் வெசாக் பௌர்ணமி தினத்தில் மதுபானங்கள் விற்பனை, இறைச்சிக்காக மிருகங்களைக் கொள்ளுதல் மற்றும் மாமிச விற்பனைகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. வெசாக் கொண்டாட்டங்களுக்காக புத்த பெருமானின் கடந்தகால பிறப்புப் பற்றிய கதைகள் (ஜாதக்க கதா) சார்ந்து மதியுரைகளுடன்கூடிய தகவல்கள் அடங்கிய பந்தல்களை நிருமாணித்தல் மிகவிசேடமான கலாச்சார அம்சமாகும். நகரம் சார்ந்து அமைக்கப்படும் இந்த பந்தல்களை பார்வையிடுவதற்கு மக்கள் நகரத்தினை நோக்கி ஈர்க்கப்படுவர். வீடுகளில் வசிப்போர் தங்கள் வீடுகளிலும் வெசாக் அலங்காரங்களுக்கு ஒளியூட்டல் செய்வர். சிறுவயதினர், இளம் வயதினர், முதியோர் ஆகிய சகலரும் ஒன்று சேர்ந்து செயற்படுதல் வெசாக் பண்டிகையின் போது, வெசாக் காலத்தின்போது நகரத்துக்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கு இன மத வேறுபாடின்றி உணவு குளிர் பானங்கள் வழங்கி உபசரிக்கும் வழக்கம், எமது நாட்டில் நிலவும் இன ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தினை முன்னிறுத்தும் பிரபலமான செயற்பாடாக அமைகின்றது.

**சமூக உபசரணை**

வெசாக் பண்டிகை காலம் பெருமளவு சமூக உபசரணைகள் இடம்பெறும் காலமாகும். விகாரைகள் உள்ளடங்கலாக புனித தலங்களுக்கு, நன்கொடைகள் வழங்கல், பெருமளவில் நடைபெறும் செயற்பாடாகும். இரத்த தானம், மருத்துவ முகாம்கள் நடாத்தல், முதியோர்களுக்கு உதவுதல், நோயாளர்களைப் பராமரித்தல் ஆகிய சமூக சேவைகளில் ஈடுபடுவதற்கு பெருமளவில் ஆர்வம் காட்டுவர். வெசாக் பந்தல்கள், அலங்காரங்கள், வெளிச்சக்கூடுகள் என்பன அமைப்பதன் மூலம் பெரும்பாலான நகரங்களில் வீதி அலங்காரம் செய்யப்படும். அவற்றைப் பார்வையிடும் பக்தர்களிடையே சாந்தத்தில் தோன்றும் அமைதி காரணமாக உற்சாக உணர்வு பெறுக்கெடுத்து நற்சிந்தனைகள் விருத்தியடைவதன் ஊடாக சகவாழ்வும் நல்லிணக்கமும் சமூகத்தினரிடையே உறுதி செய்யப்படுவதற்கு உதவியாக அமைகின்றது. புத்த பெருமானின் பணிகளைப் பின்பற்றி பெரும்பாலான மக்களின் மகிழ்வுக்காக சமூகத்திற்கான உதவிச் செயற்பாடுகளில் ஈடுபாட்டை மேம்படுத்தல் வெசாக் காலத்தில் இடம்பெறுவதைக் காண முடிகின்றது.

## இலங்கையும் வெசாக் பண்டிகையும்

புத்த பெருமானின் மூன்று மங்கள நிகழ்வுகளை நினைவுகூறுவதற்கு மேலதிகமாக இலங்கை வாழ் மக்களுக்கு வெசாக் போயா தினம் முக்கியமாவதற்கான பல காரணங்கள் மகாவங்சயில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் இரண்டு விடயங்கள் அடங்கும். புத்த பெருமானின் மூன்றாவது இலங்கை விஜயம் இடம் பெறல் மற்றும் அவ்விஜயத்தின்போது சுலோதர மற்றும் மகோதர என்ற நாகவம்ச பழங்குடி அரசர்களிடையே நிலவிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக களனிக்கு எழுந்தருளுதல் மற்றும் சிவனொளிப்பாத மலை உச்சியில் புண்ணிய பாத அடிகளை பதித்தல் ஆகிய மிக முக்கியமான நிகழ்வாகும். இரண்டாவது சம்பவம் விஜய குமாரனின் இலங்கை விஜயம் மற்றும் புத்த பெருமானின் இறப்பு ஆகிய நிகழ்வாகும். இவை வெசாக் பூரண தினத்தில் நிகழ்ந்திருத்தல் மிக முக்கிய அம்சமாகும். இலங்கை வரலாற்றில் குறிப்பிடத்தக்க வேறு விடயங்களுக்கிடையில் தேவானம்பியதிஸ்ஸ அரசனின்

இரண்டாவது முடிசூட்டு விழா இடம்பெறுதல் மற்றும் துட்டுகெமுணு அரசன் அநுராதபுரத்தில் ருவன்வெலிசாயா தூபி நிருமாணித்தலை ஆரம்பித்தல் வெசாக் பூரண பௌர்ணமி திகதியில் இடம்பெற்ற மிக முக்கியமான விடயங்களாகும்.

ஆதி காலம் தொடக்கம் இலங்கையில் வெசாக் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகின்றதென்பது வரலாற்று ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவுக்குப் பின் ஐந்தாவது நூற்றாண்டில் இந்த நாட்டுக்கு வருகை தந்த சீன இனத்தவரான பாஹியின் பிக்கு அவர்களின் பயன அறிக்கையில் அநுராதபுர நகரத்தில் நடாத்தப்பட்ட வெசாக் பண்டிகை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாவம்சத்தின் பதிவுகளின்படி துட்டுகெமுணு அரசன் காலத்தில் (கி.மு. 101 - 77) இல் இருபத்து நான்கு வெசாக் பண்டிகைகள் இடம்பெற்றுள்ளன. பாத்திய அரசர் காலத்தில் (கி.பி.38-67) இருபத்தெட்டு வெசாக் பண்டிகைகள் இடம் பெற்றுள்ளதுடன் புத்தர் உருவத்துடன் கூடிய ஊர்வலங்கள் (பெரஹரா) வீதி வழியாக சென்றுள்ளதாகவும், ஏழை எளியவர்களுக்கு உணவு பானங்கள் வழங்கியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. வசப அரசர் (கி.வ 127-171) இருபத்து நான்கு வெசாக் பண்டிகைகள் நடாத்தியுள்ளதுடன், வோஹாரிக்கதிஸ்ஸ அரசர் (கி.வ 269 -291) வெசாக் பண்டிகைகள் நடாத்தி இலங்கையின் அனைத்து பிக்குமார்களுக்கும் மூன்று வகை காவியுடை வழங்கியதாகவும் குறிப்பிடப்படுகிறது. அதே போன்று கோட்டாபய அரசர் (கி.வ.323-333) ஜெட்டதிஸ்ஸ) அரசர் (கி.வ 611-617) தல்ல மொக்கல்லான அரசர் (க்.வ.851-885) 2 ஆலத சேன அரசர் வெசாக் பண்டிகையை நடாத்தியதாக குறிப்பிடப்படுகிறது. தம்பதெனி காலத்தில் இரண்டாவது பண்டித்த பராக்கிரமபாகு அரசர் (கி.வ.1250 - 1285) பிக்குமார்களுக்கு துறவி ஆடைகளின் பூஜை நடாத்தி வெசாக் பண்டிகை நடாத்தியதாக குறிப்பிடப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் விமர்சையாக நடாத்தப்பட்ட வெசாக் பண்டிகை பற்றிய பதிவு பூஜாவளிய என்ற நூலில் அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருகாலத்தில் மேக கூட்டங்கள் யானைகளின் உருவம்போல் புத்தர் அவர்களின் இந்த மங்கள விழாவிற்கு பூமி மீது இறங்கி நடைபவணி செய்ததாக விளக்கம் தரப்பட்டுள்ளது. அந்தந்த திசைகளில் இருந்து வந்திருந்த யானை கூட்டங்கள் நடந்து செல்கின்ற காட்சியானது பெருங்கடலில் அலைகள் போன்று காணக்கூடியதாக இருந்தது. அதே போன்று புத்தரின் இந்த மங்கள விழாவில் ஒன்று கூடிய இலட்சக் கணக்கான மகா தேரர்கள் அஸ்வ கூட்டங்கள் போல் காட்சியளித்தனர். நாட்டின் அனைத்து மக்களும் நிரம்பி நின்றனர்.

கண்டி இராசதானி காலத்தில் நடைபெற்ற நான்கு பண்டிகைகள் தொடர்பாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அதில் வெசாக் பண்டிகை நடாத்தப்பட வேண்டிய முறை விளக்கப்பட்டுள்ளதோடு விடுமுறைகள் அங்கீகரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

16 ஆவது நூற்றாண்டு தொடக்கம் இந்த நாட்டில் இடம்பெற்ற ஐரோப்பிய ஆக்கிரமிப்பு காரணமாக பின்னடைவுக்குள்ளான பௌத்த தர்மத்தினை கட்டியெழுப்புவதற்கு வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரர் நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பலனாக 19 ஆவது நூற்றாண்டின் முற்பகுதிகளில் பௌத்த புத்தெழுச்சி இந்த நாட்டில் ஏற்பட்டது. 1885 வெசாக் பூரண தினத்தினை விடுமுறையாக பிரகடனப்படுத்துமாறு ஸ்ரீமத் ஹென்றி ஒல்கட் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளார். ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கல தேரரினால் அக்காலத்தில் உள்நாட்டு பொதுமக்களின் பிரதிநிதியாளராக அரச சபையில் அங்கம் வகித்த பொன்னம்பலம் இராமநாதன் அவருக்கு எழுதிய கடிதம் படி வெசாக் போயா தினத்தினை விடுமுறையாகப் பிரகடனப்படுத்துமாறு அரசவையில் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. அதற்கிணங்க வெசாக் தினம் அரச விடுமுறை தினமாகப் பெயரிடப்பட்டுள்ளது.

மாதிரிச் செயற்பாடுகள்

**(அ) சமய சகவாழ்வு என்ற தொனிப்பொருள் சார்ந்து வெசாக் நல்வாழ்த்து அட்டைகளை தயாரித்தல்**

**(ஆ) பௌத்த மற்றும் ஏனைய சமயங்களை வழிபடும் மாணவர்கள் கற்கின்ற பாடசாலைகளில் ஒற்றுமையாக மேற்கொள்ள முடியுமான செயற்பாடாகும்.**

முறைமை :

1. மனித சமூகங்களுக்கிடையில் உள்ள சமத்துவம் தொடர்பாக கற்பிக்கின்ற எண்ணக்கருக்கள் தொடர்பாக விடயங்களை ஆராய்தல்
2. சகவாழ்விற்காக தெரிவு செய்யப்படுகின்ற கூற்றுகள் மற்றும் எண்ணக்கருக்கள் தொடர்பாக கிரகித்துக்கொள்ளுதல்
3. நல்வாழ்த்து அட்டை உருவாக்குதல் தொடர்பான செயலமர்வு நடாத்தல்
4. வடிவமைக்கப்பட்ட வெசாக் நல்வாழ்த்து அட்டைகளை காட்சியிலிடல் மற்றும் மதிப்பிடல்

**(இ) வெசாக் நல்வாழ்த்து அட்டைகளின் பொருட்டு ஆசீர்வாத சொற்றொடர்கள்,செய்யுள்கள் என்பவற்றை ஆக்கம் செய்தல்.**

இதற்காக (அ) இன் கீழ் முறைமையொன்றினை பயன்படுத்தலாம்.

**(ஈ) வெசாக் வெளிச்சக்கூடுகளை உருவாக்குதல் மற்றும் காட்சியிலிடல்**

பௌத்த மற்றும் பௌத்தமல்லாத சமயங்களை வழிபடும் மாணவர்கள் கல்வி கற்கின்ற பாடசாலைகளில் மேற்கொள்ள முடியுமான செயற்பாடாகும்.

முறைமை :

1. தீபக்கூடுகளை உருவாக்குவதில் சமயப் பின்னணி தொடர்பாக அறிவுறுத்தல்
2. ஆக்கப்படைப்புடன் படிவங்களையும் வடிவமைப்புகளையும் தயாரிப்பதற்கு வழிகாட்டுதலும் அங்கீகரிக்கப்பட்ட வர்ணங்களின் பயன்பாடும்
3. சுற்றாடல் நேயமிக்க பொருட்களை மட்டும் பயன்படுத்துவதற்கு பொறுப்பாக இருத்தல்
4. வெசாக் தீபக்கூடுகளை பார்வையிடுவதற்கு பெற்றோர்கள் உள்ளிட்ட பிரப்புக்களை அழைத்தல்

**மேலதிக விடயங்கள்**

1. பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்படும் செயற்பாடாக ஒழுங்கமைத்தல்
2. பௌத்த மற்றும் பௌத்தமல்லாத மாணவர்கள் கற்கின்ற தெரிவு செய்த பாடசாலையொன்றில் தீபக்கூடுகள் தயாரித்தலை மேற்கொள்ளலாம்.
3. பௌத்தமல்லாத பாடசாலைகளில் மாணவர்களுக்கு தீபக்கூடுகளை தயாரித்து காட்சியிலிட முடியுமென்பதுடன், அதனை பார்வையிடுவதற்கு பௌத்த பாடசாலைகளில் மாணவர்களை அழைத்தல்.

**(உ) வெசாக் பக்தி கீதங்களின் இசை நிகழ்ச்சியினை நடாத்தல்**

இந்தச் செயற்பாடுகளின் பொருட்டு பௌத்த மற்றும் பௌத்தமல்லாத சமயங்களை வழிபடும் மாணவர்கள் கல்வி கற்கின்ற பாடசாலைகளை தொடர்புபடுத்திக்கொண்டு ஒழுங்கமைக்கலாம்.

முறைமை :

1. பக்தி கீதங்களை இயற்றும் ஆற்றலுடன்கூடிய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வாய்ப்பு வழங்குதல்
2. கீதங்களை உருவாக்குவதற்காக சொற்களை இயற்றல், சமாதானம், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு ஆகிய தொனிப்பொருள்களை சார்ந்து மேற்கொள்ளுதல் மற்றும் அதற்காக திரிபீடகத்தின் கற்கைகளை பயன்படுத்தல்

3. கீதங்களை பாடுதல் மற்றும் இசைத்தல் என்பவற்றை முன்னிலைப்படுத்தும் ஆற்றல்களுடன்கூடிய ஆசிரியர்களையும் மாணவர்களையும் அழைத்தல்
4. இசை நிகழ்ச்சியை பார்வையிடுவதற்கு ஏனைய சமயங்களை வழிபடுகின்ற மாணவர்களுக்கு அழைப்புவிடுத்தல்

**மேலதிக விடயங்கள்**

1. தமிழ், சிங்கள ஆகிய இரண்டு மொழிகளிலும் இயற்றியகீதங்களுக்கு முன்னுரிமை வழங்குதல்
2. கல்வி வலயங்கள் அல்லது பிரிவுகள் மட்டத்தில் ஒழுங்கமைக்கும் ஆற்றல்.

**(ஊ) இணைந்து வெசாக் சித்திரங்களை ஆக்கம் செய்தல்**

பௌத்த மற்றும் பௌத்தமல்லாத சமயங்களை வழிப்படும் மாணவர்கள் கற்கின்ற பாடசாலை மாணவர்களின் பங்களிப்புடன் நடாத்தலாம்.

**முறைமை :**

1. சித்திரம் வரைவதற்கு பங்குபற்றும் மாணவர்கள் அடிப்படை பௌத்த கற்கைகள் மற்றும் எண்ணக்கருக்கள் தொடர்பாக அறிந்துக்கொள்ளுதல்
2. சமய சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் என்ற தொனிப்பொருளுக்கு ஏற்புடையதான வரைப்படங்களை ஆக்குதல்
3. சித்திரங்களை படைப்பதற்கு 06 அடி நீளமான மற்றும் அதற்கு ஏற்புடையதான அகலத்தைக் கொண்ட சட்டகமாக்கப்பட்டகென்வஸ் துணிகள் மற்றும் அதற்கு பொருத்தமான வர்ணங்களை பயன்படுத்தல்
4. ஆக்கங்களை மதிப்பிடுவதற்காக ஒற்றுமை மற்றும் சகவாழ்வு ஆகிய அளவுகோள்களை பயன்படுத்தல்

**மேலதிக விடயங்கள்**

தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை சுற்றுப்புற சூழலில் உள்ள பாடசாலைகளுக்கு கொண்டுச் செல்லுதல்.

**(எ) பௌத்த வழிப்பாட்டுத்தலமொன்றை பார்வையிடச் செல்லுதல்**

பௌத்தமல்லாத சமயங்களை வழிபடும் மாணவர்களுடன் அவதானிப்பு சுற்றுலாவிற்கு பங்குபற்றுதல். பௌத்த பாடசாலையொன்றுக்கு இவ்வாறான அவதானிப்பு சுற்றுலாக்களை மேற்கொள்ளலாம்.

**முறைமை :**

1. அவதானிப்புகளுக்காக சுற்றுலாவில் ஈடபடுவதற்கு எதிர்பார்க்கும் வழிப்பாட்டுத்தலங்களில் அனுமதி பெற்றுக்கொள்ளுதல்
2. பன்சலையில் சடங்கு கிரிகைகளை மேற்கொள்ளும்முறை தொடர்பாக அவதானித்தல், வழிப்பாட்டுத் தலங்களுக்கு பொறுப்பான தேரர்களின் ஆசீர்வாதம் மற்றும் வழிகாட்டல்களுக்கு ஒழுங்கமைதல்

**மேலதிக விடயங்கள்**

வழிப்பாட்டுத்தலங்களில் சமய பண்பாடுகளுக்கேற்ப ஒழுங்கமைதல் மற்றும் பின்பற்றுவதற்கு சமய தலைவர்களின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுதல்.
உயர் வகுப்புகளுக்கு பாடசாலை மாணவர்களை பங்குபற்றச் செய்வித்தல்.

**(ஏ) உபவாசமிருந்த பக்தர்களுக்கு தானம் வழங்கி உபசரணை செய்தல்**

பௌத்தம் மற்றும் பௌத்தமல்லாத ஏனைய சமயங்களை வழிபடும் மாணவர் மாணவிகளின் பங்களிப்புடன் வெசாக் போயா அன்று சுற்றுப்பறத்தில் உள்ள பன்சலையில் உபவாசமிருக்கும் பக்தர்களுக்கு தானம் வழங்குதல்.

**முறைமை :**

1. சம்பந்தப்பட்ட பன்சலையில் நாயக்கதேரர் அவர்களின் அனுமதி பெற்றுக்கொள்ளுதல்
2. தானத்தில் உள்ளடக்கப்பட வேண்டியவைகள் தொடர்பாக அறிந்துக்கொள்ளுதல்
3. தானம் தயாரித்தல் மற்றும் படைத்தல் சார்ந்த வழிப்பாட்டு முறைகள் தொடர்பாக அறிந்துக்கொள்ளுதல்
4. தானம் மற்றும் அன்பளிப்பு தொடர்பாக கலந்துரையாடல் சபையினை ஒழுங்கமைத்தல்

**மேலதிக விபரங்கள்**

சுய ஒழுக்கம் தொடர்பாக கவனம் செலுத்தல் மற்றும் ஒழுங்கு சடங்கு சம்பிரதாயங்களுக்கு மதிப்பளித்தல்.

**(ஐ) சிரமதான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்**

வெசாக் பண்டிகையை முதன்மையாகக்கொண்டு போயா அல்லாத நாளொன்றில் தெரிவு செய்யப்பட்ட இடத்தில் பௌத்தம் மற்றும் பௌத்தமல்லாத சமயத்தை பின்பற்றும் மாணவர்களின் பங்களிப்புடன் சிரமதானம் மேற்கொள்ளுதல்.

பொதுச் சேவை இடமொன்றை தெரிவு செய்தல் மற்றும் அதனை பாடசாலையின் தலைமைத்துவத்தில் பேணுதல். இதற்காக தெருக்கள், விளையாட்டு மைதானங்கள், வழிஇருமருங்கும் உள்ள பாதுகாப்பு பிரதேசங்கள், பூங்கா ஆகியன ஏற்ற இடங்களாகும்.

**முறைமை :**

1. சிரமதானத்தின் நோக்கங்களை விளக்கமளித்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பணிகள்/இடங்கள்/சேவைகள் தொடர்பாக முன்னரான திட்டமிடல் பணிகளை மேற்கொள்ளுதல்.
2. ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினரின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுதல்
3. தூய்மை, ஒழங்குமுறை, எளிமை போன்ற எண்ணக்கருக்கள் தொடர்பாக பௌத்த தேரர்களை அழைப்பித்து சுருக்கமாக போதனை நடாத்தல்
4. பெற்றோர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளுதல்

# பொசொன் பண்டிகை



## அறிமுகம்

பொசன் பண்டிகையானது, இலங்கை நாட்டுக்கு சமய மற்றும் தேசிய ரீதியாக முக்கியமான தினமாகும். பௌத்த தருமம் இலங்கை நாட்டுக்கு முதல் முறையாக போதித்த தினம் மட்டுமல்லாது இந்த நாட்டின் தனித்துவத்தை குறித்து நிட்கும் தேசிய கலாச்சாரத்தின் ஆரம்பம் தொடங்கிய திகதியும் பொசொன் பௌர்ணமி தினமாகும். கி.மு.236 ஆம் ஆண்டில் மிஹிந்து மகாதேரர் உள்ளிட்ட குழுவினர் பௌத்த தருமத்தை இலங்கையில் கொண்டு வரப்படுவது பொசன் தினத்திலாகும். ஆகையால் இலங்கை பௌத்தர்கள் மிகிந்து தேரர் அவர்களை கௌத்தம புத்தர் அவர்களுக்கு மட்டுமே இரண்டவது இடத்தில் வைக்கப்பட்டு "புத்த பிரானின்உயர் சீடர்" என்ற கௌரவம் பெயரில் அழைக்கப்படுவதாக அறியலாம். மகிந்த தேரர் அவர்கள் இலங்கை நாட்டுக்கு அறிமுகப்படுத்திய பௌத்த தருமமானது, சமய தத்துவம் மட்டுமல்லாது மக்கள் நேயத்துடன்கூடியதும், விலங்குகள் மற்றும் மரஞ் செடி கொடிகள் உள்ளிட்ட சுற்றாடல் நேயத்துடன்கூடியதுமான சகவாழ்வு அணுகுமுறைக்கான வழி வகுக்கப்பட்டதுடன், பொருளாதாரம், சமயம் மற்றும் சமூக மறுமலர்ச்சிக்கு அத்திவாரம் அமைத்த ஆய்வுகளுடன் கூடிய நடைமுறை அணுகுமுறையாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

மிகிந்து தேரர் அவர்களை இலங்கைக்கு எழுந்தருளச் செய்ததன் மூலம் இந்த நாட்டில் புதிய சமூக மறுமலர்ச்சியின் பொருட்டு தேவையான வலுவான அடித்தளம் அமைக்கப்பட்டது. மொழி, சாகித்தியம், கவின்கலை,மரபுகள்,சடங்குகள் சம்பிரதாயங்கள் ஆகிய பொது மக்களின் வாழ்க்கையுடன் ஒன்றிணைந்திருந்த ஒவ்வொரு துறையும் செழிப்படைந்ததன் ஊடாக இந்த நாட்டின் சமூக, பொருளாதார, சமய, கலாச்சார மற்றும் அரசியல் துறைகளில் புரட்சிகரமான முன்னேற்றத்திற்கு வழிகோலியது. பொருளாதார ரீதியாக தன்னிறைவடைந்த சுற்றாடல் நேயத்துடன்கூடிய விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையோடு இலங்கை வாழ் மக்கள் ஒழுங்கமைந்தனர். பௌத்த தத்துவம்மூலம் அறிமுகப்படுத்திய ஒழுக்கம் மற்றும் ஆன்மீக முன்னேற்றத்தின் ஊடாக ஏற்பட்ட அபிவிருத்தியுடன் கூடிய புத்தெழுச்சி இலங்கை நாட்டுக்கு மிக முக்கியமானதும், தனித்துவமானதும் கலாச்சாரத்தை உருவாக்குவதற்கு காரணமாக அமைந்தது என்பதை உறுதிப்படுத்தும் அதிகளவிலான சான்றுகள், இன்று வரை எமது சமூகத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பது அறிய வருகின்றது. பொசொன் பண்டிகையானது,பொசொன் மாதம் பூரண பௌர்ணமி போயா தினத்தில் ஆரம்பமாகி ஒரு வாரக் காலம் வரை அநுராதபுரம் மற்றும் மிகிந்தலை ஆகிய நகரங்களை முதன்மையாகக்கொண்டு இலங்கை முழுவதும் மிக விமர்சையாக கொண்டாடப்படுகிறது.

## மகிந்த தேரர் அவர்களின் இலங்கை பயணத்தின வரலாற்று பின்னணி

மௌர்ய வம்சத்தைச் சேர்ந்த அரசனாகிய அசோகா சக்கரவர்த்தி கி.மு.3 ஆவது நூற்றாண்டில் இந்தியாவில் மிகப் பெரிய பிரதேசத்தில் தமது சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்பினான். போர் வீரரான அசோக மன்னன் எவ்வளவு தூரத்திற்கு போர் புரிந்தார் என்றால் ஒடுக்கப்பட்ட மக்கள் சமுதாயம் அவரை கொடுங்கோல் அசோகர் என்ற பட்டப் பெயரில் அழைத்தனர். கலிங்க தேசத்தை தம்வசமாக்கி கொண்டதன் பின்னர் போர் களத்திற்குச் சென்று போரினால் ஏற்பட்ட உயிர் சேதங்களை கண்டு அவஸ்தைக்கு உட்பட்டார். அவ்வாறு வேதனையால் மூழ்கியிருந்து வேளையில் அசோக சக்கரவர்த்தி நீக்ரோத என்ற சிறிய பிக்கு மீது நம்பிக்கை ஏற்பட்டு பௌத்த மதத்தை தழுவி அதன் பின்னர் தர்மாசோக என்ற பெயரில் புகழ்பெற்றார்.

தர்மாசோக சக்கரவர்த்தி அப்போது விழ்சியடைந்திருந்த பௌத்த மதத்தை மீண்டும் உறுதிப்படுத்துவதற்காக அதிக முயற்சியை மேற்கொண்டார். மொக்கலிபுத்ததிஸ்ஸ என்ற மகாதேரர் அவர்களின் தலைமைத்துவத்தில் பௌத்த சமய கோட்பாடுகளைத் தாபிப்பதற்கு அனுமதியளித்த அரசர் இந்தியாவில் பஞ்சசீல கொள்கையை முதன்மையாகக்கொண்ட வாழ்க்கை தத்துவத்தை தாபிப்பதற்கு பணியாற்றினார். அகிம்சையை அடிப்படையாகக்கொண்ட பஞ்சசீலக் கொள்கை அவரின் தீர்க்க தரிசனமான அரசாட்சியின் முக்கியமான திருப்புமுனையாக வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது. அதன்படி அசோக அரசர் அமுல்படுத்திய தர்மபோதனை சேவையில் பலனாக அவரின் புதல்வரான மிகிந்து மகா தேரர் அவர்களின் தலைமைத்துவத்தில் இட்டிய, உத்திய, சம்பல மற்றும் பத்தசால ஆகிய ஐந்து தேரர்களும் அபிஞாலாபி சுமன பிக்கு அவர்களும் பண்டுக பக்தரும் அடங்கலாக ஏழு பேர்கொண்ட குழு கி.மு 247 அதாவது புத்த வருடம் 236 இல் பௌத்த தருமத்தை இலங்கையில் பரப்பினர். அந்த திகதி பௌத்த வரலாற்றின் ஆரம்ப திகதியாக இலங்கையின் வரலாற்று பிரபந்தமான மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மிகிந்து தேரர் அவர்களும் தேவானம் பியதிஸ்ஸ அவர்களும் சந்தித்தல்

அக் காலத்தில் இலங்கையின் அரியானையிலிருந்து மன்னன் தேவானம்பியதிஸ்ஸ அல்லது தெவனபெஹதிஸ் அரசர் மிஸ்ஸக என்ற பர்வதத்தில் மான் வேட்டையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் மிகிந்து தேரர் சந்தித்துள்ளார். அதன் போது அரசரை “திஸ்ஸ, திஸ்ஸ” என்று அழைக்கப்படும் சத்தம் கேட்டுள்ளது. அவ்வாறு தன்னை அழைப்பது யாரென மன்னன் விசாரித்த போது, “மாமன்னர் அவர்களே நாம் உண்மைத் தத்துவத்தை உலகத்திற்கு உபதேசித்த ஒரு பெரியாரின் சீடர்கள் ஆவோம். தங்களது அனுதாபம் கருதி ஜம்புத்துவீபத்திலிருந்து இங்கு வந்துள்ளோம்” என்று மிகிந்து தேரர் பதில் அளித்தள்ளார்.

## இலங்கைத் தீவில் முதலாவதாக நடந்த விவேகப் பரீட்சை

கௌத்தம புத்தர் அவர்களால் உபதேசிக்கப்பட்ட ஆழமான தர்மத்தை புரிந்துகொள்வதற்கு முடியுமான புத்தி சாதுரியம் மன்னருக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் உள்ளதா என்பதை பரீட்சிப்பதற்கு மிகிந்து தேரர் அவர்கள், அரசரிடம் இரண்டு வினாக்களை எழுப்பினார். அவை மரங்கள் மற்றும் உறவினர்கள் தொடர்பானது என்று வரலாற்றுக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மரங்கள் தொடர்பான வினா அல்லது மாமரம் தொடர்பான வினா

மிகிந்து தேரர் ஒரு மரத்தை காட்டி
“மாமன்னரே இந்த மரத்தின் பெயர் என்ன?” (அருகிலிருந்த மாமரமொன்றை காட்டி அரசரிடம் விசாரித்தல்)

அரசர் - “தேரர் அவர்களே இது ஒரு மாமரம்.”

மிகிந்து தேரர் - “மாமன்னரே இது தவிர்ந்த மேலும் மாமரங்கள் உள்ளனவா? ”

அரசர் - “ஆம் தேரர் அவர்களே, அதிகளவிலான மாமாரங்கள் உள்ளன.”

மிகிந்து தேரர் - “அரசர் அவர்களே, இந்த மாமரமும், அந்த மாமரங்களும் தவிர்ந்த வேறு மரங்கள் உள்ளனவா? ”

அரசர் - “ஆம் தேரர் அவர்களே, அதிகளவிலான மரங்கள் உள்ளன. ஆனாலும் அவை மாமரங்கள் அல்ல.”

| | | |
|---|---|---|
| மிகிந்து தேரர் | - | “மாமன்னரே அந்த மாமரங்களும், மாமரங்கள் அல்லாத மரங்களும் தவிர்ந்த வேறு மரங்கள் உள்ளனவா? ” |
| அரசர் | - | “ஆம் தேரர் அவர்களே, அது இந்த மாமரமாகும்.” |
| மிகிந்து தேரர் | - | “மாமன்னரே நீங்கள் புத்தி சாதுரியமுடையவர்.” |

**உறவினர் பற்றிய வினா**

| | | |
|---|---|---|
| மிகிந்து தேரர் | - | “மாமன்னரே உங்களுக்கு உறவினர்கள் உள்ளார்களா? ” |
| அரசர் | - | “தேரர் அவர்களே, ஆம் பெரும்பாலான உறவினர்கள் உள்ளார்கள்.” |
| மிகிந்து தேரர் | - | “மாமன்னரே உங்களுக்கு உறவினர் அல்லாதவர்களும் உள்ளார்களா? ” |
| அரசர் | - | “ஆம் தேரர் அவர்களே!உறவினகள் அல்லாத பெரும்பாலானோர்களும் உள்னர்.” |
| மிகிந்து தேரர் | - | “அரசர் அவர்களே,அந்த உறவினர்களும், உறவினர் அல்லாதவர்களும் தவிர்ந்த வேறு ஆட்களும் உள்ளார்களா? ” |
| அரசர் | - | “ஆம் தேரர் அவர்களே,அது நானாவேன்.” |
| மிகிந்து தேரர் | - | “மாமன்னரே நீங்கள் புத்தி சாதூரியமுடையவர்.” |

இந்த அறிவுப் பரீட்சையில் அரசர் அவர்கள் முதன்மையாகக்கொண்ட இந் நாட்டு மக்களுக்கு பௌத்த தருமத்தை கிரகித்துக்கொள்ளும் ஞான சக்தி உள்ளதாக புரிந்துக்கொண்ட மிஹிந்து தேரர் அவர்கள் பின்னர் அரசர் உள்ளிட்ட குழுவினருக்கு புத்தம், சங்கம், தருமம் ஆகிய முச்சாரணங்களுடன் கூடிய புத்தசாசனம் தொடர்பாகவும், ஒரு பிக்குவின் எளிமையான வாழ்க்கை நடைமுறை தொடர்பாகவும், பண்புடன்கூடிய வாழ்க்கையில் உன்னத தன்மை தொடர்பாகவும் விளக்கமளித்து, தருமத்துடனான விடயங்களை புரிய வைத்தார். அதன் பின்னர் சிந்தனை செய்யும் மற்றும் அறியும் ஆற்றலைக்கொண்டு யதார்த்தை அறிந்து கொள்ளும் முறையை விளக்கமளிக்கும் பொருட்டு சுல்ல ஹத்திபதோபம சூத்திரத்தை போதித்தார். அதாவது ஒரு யானை அடிமேல் அடிவைத்து நடக்கும் முறையினை அவதானித்துதாம் தேடும் ஆஜானுபாகுவான யானையை கண்டு கொள்ளும் முறை உள்ளடக்கிய தருமத்தை போதனை செய்தார். குறித்த போதனையை செவிமடுத்த தேவானம்பியதிஸ்ஸ அரசர் உள்ளிட்ட குழுவினர் முற்சரணங்களை ஏற்றுக்கொண்டு பௌத்தர்களானார்கள்.

### சுல்ல ஹத்திபதோபம சூத்திரத்திரம்

புத்தர் அவர்களால் போதனை செய்யப்பட்ட சுல்ல ஹத்திபதோபம சூத்திரத்திரம் திரிபீடக்த்தில் மஜ்ஜம நிகாயாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சூத்திர போதனையாகும். அந்த சூத்திரத்தை முதலாவது தரும போதனையாக தெரிவு செய்யப்பட்டதிலிருந்து, இந்த நாட்டு மக்கள் கேள்விகேற்கும் ஞானத்துடன் உள்ளவர்கள் என்பதை மிஹிந்து தேரர் அவர்கள் புரிந்துக்கொண்டுள்ளதாக அறியலாம். ஒரு யானை அடி மேல் அடி வைத்து நடக்கும் முறையை உவமையாக கலந்துரையாடும் இப் போதனையில் உள்ளடக்கம் யாதெனில், அவதானிப்புகள், பரீட்சித்தல், முடிவுகள் என்பவற்றுக்கு அறிவியல் பூர்வமான முறை கடைபிடிக்கப்பட வேண்டுமென்பதாகும். ஏதேனுமொன்றைபற்றி பொதுவாக அறிந்து அல்லது அனுமானித்து அறிந்து எந்தவொரு முடிவுக்கும் வரலாகாது என்பதாகும். முடிவெடுப்பதற்காக பரிசோதனை, தீட்சணமாக அவதானித்தல் மற்றும் பகுத்தாய்தல் சார்ந்து ஏதேனுமொன்றில் உண்மையான இயல்பு தொடர்பாக அறிந்துகொள்ளுதல் தேவையென்பதை இந்த சூத்திரத்தில்வலியுறுத்தப்படும் கற்கையாகும். யானையின் பாதச் சுவடுகளை உவமையாக்குவதன்மூலம் தெளிவுபடுத்துவது யாதெனில், மிகப் பெரிய யானையின் பாதை சுவடுகளை கண்ட மாத்திரத்தில் அது தான் காட்டில் வாழ்கின்ற மிகப் பெரிய யானையின் பாதச் சுவடுகள் என்று முடிவு செய்தலாகாது. ஏனெனில், அவ்வாறான மிகப் பெரிய பாதை சுவடுகளுடன்கூடிய சிறிய யானைகளும் காட்டில் இருக்கலாம் என்பதாகும். அந்த பெரிய பாதை சுவடுகள் ஊடாக முன்னோக்கிச் சென்று அவதானித்தல் வேண்டும். அவ்வாறு அவதானிக்கும்போது யானைகளின் நடத்தையினை எடுத்துக்காட்டும் ஏனைய அடையாளங்களையும் பரிசோதனைக்கு உட்படுத்தல் வேண்டும். அவ்வாறு மேற்கொண்டு இறுதியில் மிகப் பெரிய யானையை கண்டுகொண்டதன் பின்னர் மட்டும், அது தாம் தேடும் மிகப் பெரிய யானை என்ற முடிவுக்கு வருதல் வேண்டும்.

ஏதேனும் ஒன்று தொடர்பாக அனுமானித்து அறிந்துகொள்வதற்கு அல்லது ஒரு பகுதி அல்லது பல பகுதிகளை அறிந்துகொள்ளுதல் மட்டும் உரியவாறு புரிந்துகொள்வதற்கு ஆதாரமாக அமையாது. ஏதேனும் ஒன்று தொடர்பாக உறுதியான முடிவுக்கு வருவதற்கென்றால் அது தொடர்பாக தெளிவான அறிவை பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்று யானைகளின் சுவடுகளை அடிப்படையாகக்கொண்ட உவமை சூத்திரத்திலிருந்து போதிக்கப்பட்டுள்ளது.

### இலங்கையில் பௌத்த தருமத்தை பரப்பும் பணி

மிகிந்து தேரர் அவர்களை முதன்மையாகக்கொண்ட குழுவினரின் தரும போதகளை செவிமடுத்த பின்னர் இந்த நாட்டு மக்கள் படிப்படியாக பௌத்த தருமத்தை தழுவினார்கள். மனம் தெளிவடையும் புண்ணிய கருமங்களில்ஈடுபடுவதால் நல்வினைப் பயனாக சகல ஐஸ்வரியங்களும் கிடைக்கப்பெறும் என்று விமானவத்து சூத்திரத்தின் போதனையும், பாவம் செய்வதின் தீவினைப் பயனாக நரகத்தில் பிறப்போம் என்ற பிரேதவத்து போதனை போன்ற சூத்திரங்களின் போதனைகளால் மக்களின் மனம் கவரப்பட்டு தரும விடயங்களால் இவ்வுலகம் மற்றும் பரலோகத்தின் நன்மை கருதி தர்ம வழியின் பெறுமதியை அவர்கள் புரிந்துக்கொண்டனர். ஆகையால் அந்த சூத்திரப் போதனைகளின் கற்கைகள் இலங்கை வாழ் மக்களின் வாழ்க்கை முறையினை ஒழுங்கமைத்துக்கொள்வதற்கு பாரிய உபகாரமாக அமைந்தது. நாட்டில் பிரபுக்கள் துறவறம் பூண்டு புத்த சாசனத்தில் இணைதல் மற்றும் அதற்காக அரசாங்கத்தின் பூரண அனுசரணை கிடைக்கப்பெறுதல் காரணமாக பௌத்த தருமம் மிக குறுகிய காலப்பகுதிக்குள் நாடு பூராகவும் பரவியது. பௌத்தர்களின் வழிபாடுகள் சார்ந்த மரபுகள், வழக்கங்கள் என்பவற்றின் பரிணாமம், சங்காமித்தா பிக்குனியின் வருகையுடன் இந் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட ஜய ஸ்ரீ மாபோதி  என்ற வெள்ளரசு மரக்கிளை நடுதல் தொடர்பான வரலாற்று கதைகள் சார்ந்துள்ள தகவல்களைக் கொண்டு அறியலாம்.

### பிக்குனி சாசனத்தை தாபித்தல்

தேவானம்பியதிஸ்ஸ அரசர் உள்ளிட்ட அரசர்களும் பிரபுக்களும் பௌத்த தருமத்தை ஏற்றுக்கொண்டதன் பின்னர் அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் உள்ளிட்ட ஏனைய குழுவினரும், மகளிர் தரப்பும் பௌத்த மதத்தை ஏற்றுக்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்தனர். பெண்கள் தரப்புகளின் மீது மிக கருணையுடன்  செயற்பட்ட மிஹிந்து தேரர் அவர்கள் அது தொடர்பாக தர்மாசோக அரசரிடம் அறிவித்த பின்னர் அரசரின் மகளான சங்கமித்தா பிக்குனியுடன் ஒரு குழுவினர் இலங்கை நாட்டுக்கு வருகை தந்ததுடன், அந்த குழுவில் உத்தரா, ஹேமா, மசாரகல்லா, அக்கிமித்தா, தாசிகா, ஹேக்கு, பப்பதா, மக்கா, மல்லா, தம்மதாசி ஆகிய  இளம் வயதினரான பிக்குனிகள் இருந்ததாக குறிப்பிடப்படுகின்றது. அநுலாதேவியை முதன்மையாகக்கொண்ட பெண்கள் சங்கமித்தா பிக்குனியுடன் துறவரம் பூண்டதுடன், பிற்காலத்தில் ஆயிரம் கணக்கிலான பெண்கள் துறவர வாழ்க்கையில் இணைந்தனர்.

சங்கமித்தா பிக்குனி அவர்கள் இலங்கையில் புத்த சாசனத்தை ஆரம்பித்த பின்னர் பிக்குனி சாசனம் பாரிய அளவில் நாடுபூராகவும் விரிவடைந்தது. புத்த சாசனத்தின் முன்னேற்றத்திற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றிய திரிபீடங்களைச் சார்ந்த பிக்குனிகள் சீனா,மியன்மார் போன்ற வெளிநாடுகளில் தர்மத்தை பரப்பும் பணிகளில் ஈடுபட்டதாக வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு அறியலாம்.இந்த நாட்டில் பிரபுக்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் கட்சியினர் புலனடக்கம் மற்றும் ஆன்மீகபண்புகளுடன் பரிபூரணமடைந்த குழுவாக உருவாகியிருந்ததுடன், ஏனைய பெண்கள் அதனை முன்மாதிரியாக கொண்டு சமாதானத்துடனும் சகவாழ்வுடனும் கூடிய வாழ்க்கை முறைக்கு ஒழுங்கமைந்ததாக சான்றுகள் உள்ளன. 17 ஆவது நூற்றாண்டின் நடுப் பகுதியில் மலைநாட்டில் சிறைக் கைதியாக 19 ஆண்டுகள், இலங்கையில் வாழ்ந்த பிரித்தானிய நாட்டு ரொபட் நொக்ஸால் எழுதப்பட்ட “எதா ஹெலதிவ” என்ற நூலில் இது தொடர்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இலங்கையில் நிகழ்ந்த கலாச்சார புத்தெழுச்சி

மிஹிந்து தேரர் அவர்களால் தேவானம்பியதிஸ்ஸ அரசர் அவர்களுக்கு தருமம் போதிப்பதற்கு முன்னர் அரசரின் விவேகத்தை அளவிடும் நோக்கத்துடன், மேற்கொண்ட உரையாடலில் இருந்து பகுத்தறிவுடன்கூடிய மக்கள் சமூகம் வாழ்ந்தாக அறியலாம். மிகிந்து தேரர் அவர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்றபோது நீண்டகாலத்திற்கு முன்னர் இலங்கை நாட்டை தாயகமாகக் கொண்ட பல்வேறு முதற்குடிகளைச் சார்ந்த சமூகங்கள் வாழ்ந்திருந்ததுடன், குறித்த மக்கள் தொகுதிகளுக்கிடையில் மரங்களை வணங்குதல், தேவ வழிபாடு சார்ந்த வழிப்பாடுகள் நம்பிக்கைகள் இருந்துள்ளன. மிகிந்து

தேரர் அவர்கள், குறித்த உள்நாட்டு நம்பிக்கைகள், வழிபாடுகள், அருச்சனை முறைகள் என்பவற்றை தவிர்த்தலுக்குப் பதிலாக அவற்றுக்கு ஒழுங்கமைந்துக்கொண்டு பௌத்த தருமத்தை மக்களிடத்தில் கொண்டுச் சென்றுள்ளார். உதாரணமாக அக்காலத்திலிருந்து மரங்களை வணங்குவதற்குப் பதிலாக கௌத்தம புத்தர் அவர்கள் ஞானம் பெறுகின்றபோது நிழல் தந்த "போதி மரத்து மாதவன்" அல்லது "வெள்ளரசு மரக்கிளை" "போதின் வாஹன்சே" என்று வணக்கம் செலுத்துவதற்கும், அதன்மூலம் போதி மரத்தினை வணங்கி வழிபாடுகளை நடாத்துவதற்கும் அதன்மூலம் போதி மரத்தினை வணங்குதல் "புத்தவந்தனாவ" என்றும் பௌத்தர்களிடத்தில் உறுதிப்படுத்தியதாக அறிய வருகின்றது.

ஸ்ரீ மகாபோதியை கொண்டுவரப்பட்டமை சார்ந்த தகவல்களிலிருந்து அறியவருவது யாதெனில், அதன்மூலம் இலங்கையில் கலை, கலாச்சாரம் முதன்மையாகக்கொண்ட கலாச்சார மேம்பாடு கருதி மிகவும் சாதகமான விளைவினை ஏற்படுத்தியுள்ளமையாகும். ஸ்ரீ மகா போதியை கொண்டு வரும்போது அதனுடன் இலங்கைக்கு வருகை தந்த பல்வேறு தொழில்களில் நிபுணத்துவம் பெற்ற 18 கலைகளை பிரதிநிதித்துவப்படுத்திய குழுவினர் தொடர்பான தகவல்கள் மகாவங்சையில் குறிப்பிடப்படுகின்றது. இதில் பலனாக மிக முன்னேற்றமடைந்த விவசாய பொருளாதார முறை, எளிமையானதும், உதவிபுரியும் பண்புகளுடன்கூடியதுமான வாழ்க்கை முறைக்கு இலங்கை வாழ் மக்கள் ஒழுங்கமைந்தனர். இந்த நாட்டில் இருந்த நீர்ப்பாசன துறை சாந்த முன்னேற்றம் இலங்கை வாழ் மக்களின் கடந்தகால செய்திறன் ஆற்றல் மற்றும் சௌபாக்கியம் என்பவற்றை நன்கு பறைசாற்றப்படும் பிரதிபிம்பம் என்று கடந்தகால ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளில் பதிவாகின்றது.

பௌத்தர்களின் கௌரவத்திற்கும் வணக்கம் செலுத்துவதற்கும் வழிப்பாடுகளுக்கும் பாத்திரமான தாது கோபுரம், போதி மற்றும் புத்தர் அவர்களின் சிலை என்பவற்றை அடிப்படையாகக்கொண்ட கட்டிடக் கலை,சிற்பக்கலை,வெதுக்குற் சிற்பக்கலை, சித்திரக் கலை என்பன முன்னேற்றம் கண்டது. அதே போல் சந்திரக் வட்டக் கல்,காவற்றூண்கள்,படிக்கட்டுகளின் தொகுதி, கைபிடிச்சுவர்கள், புகுவழி,பூஜா மற்றும் மண்டபங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் போன்ற படைப்புகளின் பரிணாமம் மிகிந்து அவர்களின் இலங்கை விஜயத்தின் பயனாக பெற்றவைகளாகும்.கௌத்தம புத்தர் அவர்களின் சிலைகளை சார்ந்து உருவாகிய சிற்பக்கலையானது, அநுராதபுரத்தில் உருவாகிய சமாதி நிலை, அவுகன ஹிட்டி நிலையிலான சிலை மற்றும் பொலன்னறுவையில் தியான முத்திரையைக் காட்டும் சிலை போன்றன மிகச் சிறப்பான பாறைக் கல்லால் நிருமாணிக்கப்பட்ட ஆக்கங்கள் ஆகும். பௌத்த தத்துவத்தால் ஒழுங்கமைந்த கலைஞர்களின் இயலுணர்வினால் ஒப்பற்ற கலை படைப்புகளை தேசத்திற்கு கொடையாக வழங்கப்பட்டது. அதேபோன்று சிகிரியாவின் கிறுக்கல் பா (சிகிரியாவில் உள்ள அடி மதிலில் கிறுக்கி எழுதப் பெற்ற பாக்கல்) பொது மக்களின் விவேகத்தை எடுத்துரைக்கும் பெறுமதி மிக்க பிரதிபிம்பமாகும். அநுராதபுரம் இராஜதானியில் இருந்து கோட்டே யுகம் வரை 1800 இற்கும் அதிகமான காலம் முழுவதும் கலை, சாகித்தியம், மொழி உள்ளிட்ட கலை அம்சங்களின் செழிப்பின் பொருட்டு மிகிந்து தேரர் அவர்களின் விஜயமானது, காரணமாக அமைந்ததென எடுத்துரைக்கும் சாட்சிகள் இலங்கை வரலாற்று முழுவதும் வியாபித்திருந்தது.

## சந்திரவட்டக்கல்

பழைய அநுராதபுர நகரத்தில் அபயகிரி விகாராராமைக்குரிய பஞ்சாவாஸ விகாரைக்கு முன்பாக உள்ள "சந்திரவட்டக்கல்" பாறைகளிலான கலைப்டைப்புகளுக்கிடையில் சிறப்பினை வகிக்கின்றது. மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள சகவாழ்வினை அடையாளம் காட்டும் யானை, குதிரை, மாடு, அன்னம் போன்ற உருவப்படங்களாலும், தாமரை மலர்களாலும் சிறந்த வாழக்கையின் மகத்துவம் பற்றி அடையாளம் காட்டப்படுகின்றது. சாமர்த்தியமான மிகச் சிறந்த வாழ்க்கையினை கழிப்பதற்கு மனித உள்ளத்திலுள்ள உள்ளார்ந்த ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு பின்பற்றப்பட வேண்டிய வழியினை அதில் எடுத்துக் காட்டப்படுகின்றது. ஆயினும், இறுதியில் அன்னமொன்றின் வாழ்க்கைப்போன்று எளிதாகவும், வெள்ளை இதழ் போன்ற தூய்மையையும் ஏற்படுத்திக்கொள்வதற்கு மனிதனுக்குள்ள ஆற்றல் அன்னங்கள் மற்றும் தாமரை மலர்களை குறித்துக் காட்டுகின்றது. பௌத்த மதத்தை கற்பதன் வழிமுறையாக பயன்படுத்த முடியுமான நிர்மலமான வாழ்க்கை வாழ்வதனை அவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது. ஆன்மீக பண்புகளுடன் மிக எளிமையான வாழ்க்கை முறைக்கு இலங்கை மக்களை ஈடுபடுத்தல் இவ்வாறான கலைகளினூடாக நிறைவேற்றப்படுகின்றது.இந்த அமைதியான சேவையினை நாம் மெச்சுதல் வேண்டும்

பௌத்த மதம் ஏதேனும் தேசத்திற்கு அல்லது மக்கள் தொகுதிக்கு வரையறுகக்ப்பட்ட சமயமல்ல. பௌத்த தருமத்தை அடிப்படையாகக்கொண்ட சமூக மற்றும் கலாச்சார முன்னேற்றம் இலங்கை நாட்டுக்கு மட்டும் தனித்துவமான அம்சமாக பல வருடங்கலாக வியாபித்து முன்னேற்றம் அடைந்துள்ளது. மிகிந்து தேரர் அவர்கள் அறிமுகப்படுத்திய பௌத்த கற்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தத்துவம் மற்றும் ஒழுக்க

நெறிகள் இலங்கையில் பலமான பௌத்த கலாச்சாரத்திற்கான அடித்தளமொன்றை உருவாக்குவதற்கும் 2300 ஆண்டுகளுக்கு அதிகமான காலப்பகுதி அது உயிரோட்டத்துடன் இருப்பதற்கும் காரணமாகியது. பல்வேறு காலகட்டங்களில் இலங்கை எதிர்நோக்கிய வெளிநாட்டு தாக்கங்கள் காரணமாக சாதகமான அம்சங்கள் போன்று பாதகமான அம்சங்களும் சேர்க்கப்பட்டு இலங்கையின் கலாச்சாரம் வியாபித்து வருகின்றது.

## மொழி

ஹெலபச அல்லது சிங்களம் இலங்கையில் ஆரம்ப மொழியாகும். பூராணத்தில் இலங்கை "சிஹளதீப" என்ற பெயரில் அழைக்கப்பட்டதாக சீனாவிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட மிக பழைமையான ஆதரங்களிலிருந்து அறியலாம். கி.வ. 5 ஆவது நூற்றாண்டு வரை இலங்கையில் பயன்படுத்திய மொழியாக "ஹெலபச" அழைக்கப்படுவதுடன், அந்த மொழியில் சமய நூல்கள் (திரிபீடகம் உள்ளிட்ட) எழுதப்பட்டதாகவும், முன்னேற்றமடைந்த அட்டுவா சாகித்தியங்கள் இருந்ததாகவும் உள்நாட்டு ஆதாரங்களிலிருந்து அறியலாம்.. கி.வ 05 ஆவது நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த புத்தகோச தேரர், அதாவது பௌத்த குரு ஹெலபசவில் இருந்த நூல்களை, பாளி மொழிக்கு மொழி பெயர்த்தார். அதன் பின்னர் இலங்கையில் சமய கல்வியின் பொருட்டு பாளி மொழி பயன்படுத்தப்பட்டது. அதன் பலனாக, சிங்கள மொழி பாளி மொழியிலிருந்து பிரிக்கப்பட்டு வந்த எழுத்துக்களையும் உச்சரிப்புகளையும் கொண்டு செழிப்படைந்துள்ளது. பாளி மொழி மற்றும் சிங்கள மொழி நடைமுறையில் உள்ள ஒரே நாடு இலங்கையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

சிங்கள மற்றும் பாளி ஆகிய இரண்டு மொழிகளுக்கும் தனித்துவமான சாகித்தியம் உருவாக்கப்பட்டுள்ளது. இன்று காணக்கூடியதாக உள்ள பொது மக்களின் ஆக்கங்களாக கருதப்படும் சிகிரியா கிருக்கல் பாக்கள், ஹெலபசவின் அம்சங்களை குறித்து நிற்கின்றது. தம்பதெனிய யுகத்தில் எழுதப்பட்ட பண்சிய பனஸ் ஜாதக்கய இலங்கை வாழ் மக்களின் ஒழுக்கநெறிகள் செழிப்பிற்கும் நல்லொழுக்கமுடைய வாழ்க்கை நிலைப்பாட்டுக்கும் வழிகாட்டியதுடன், ஆலோசனை நூலாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதன் பகுதிகள் உலகத்தில் பல்வேறு மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பொது மக்களின் உள்ளங்களில் பிரகாசமான எண்ணங்களின் எழுச்சிக்கு இலக்கிய இரசனையுடன் கூடிய பல நூல்கள் சிங்கள மொழியில் இயற்றப்பட்டுள்ளன. கோட்டே யுகத்தில் தமிழ் மொழியில் இயற்றப்பட்ட திருக்குறள், நாலடியார், நன்நெறி, புறநானூறு, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், போன்ற ஆலோசனை வடிவிலான உரைநடை மற்றும் செய்யுள் வடிவிலான நூல்கள் சமயம், மொழி போன்ற பாகுபாடின்றி பொதுமக்களிடத்தில் நல்லொழுக்கமுடைய நடத்தைகளை மேம்படுத்தவதற்கு சாதகமான செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது.

## பொசன் பண்டிகையை கொண்டாடுதல்

வெசாக் போயா போன்று பொசன் போயாவும் இந் நாட்டு பௌத்த பக்தர்களின் பொருள் மற்றும் கொள்கை முறையிலான பூசைகளில் ஈடுபடுகின்றனர். பௌத்த மதத்தை இந் நாட்டுக்கு அறிமுகப்படுத்திய "மிகிந்தலாவ" அல்லது "மிஸ்ஸக பர்வதய" சார்ந்து வழிப்பாடுகளை நடாத்தல் பொசன் போயா அன்று மேற்கொள்கின்ற மிக விசேடமான சமய நிகழ்வாகும். அநுராதபுரம் மற்றும் மிகிந்தலை நகரங்களை மையமாகக்கொண்டு பொசன் கொண்டாடுவதற்காக பல்வேறு தானம், சீலம் மற்றும் தியானத்துடனான கொள்கை முறையிலான பூசைகள் நடாத்தப்படுகின்றன. யாத்திரிகையில் ஈடுபடுகின்ற பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு தானம் வழங்கி உபசரணை செய்வதனை நோக்கமாகக்கொண்டு தானசாலை நடாத்தல் இலங்கை வாழ் மக்களால் பொசன் சமயத்தில் மேற்கொள்ளப்படும் மிக விசேடமான புண்ணிய செயற்பாடாகும். உணவுபான வகைகள் என்பவற்றுக்கு மேலதிகமாக நோய்வாய்ப்பட்டவர்களை பராமரித்தல், விகாரைகளை மேம்படுத்தலுக்கு பங்களிப்பு வழங்குதல், பொது இடங்கள் சார்ந்து சுற்றாடலை பேணுதல் ஆகிய பணிகள் சிறுவர் மற்றும் இளம் பிள்ளைகளை சார்ந்து மேற்கொள்ளப்படும் புண்ணிய செயற்பாடாகும்.

மிகிந்தலைக்கு மிகிந்து தேரர்கள் விஜயம் செய்ததனை குறிக்கும் முகமாக பெரஹர நடாத்தல் பொசன் பண்டிகையை குறித்து நிற்கும் பொசன் பண்டிகையை கொண்டாடும் அலங்காரமானதும், மனம்கவருவதுமான கலாச்சார அம்சமாகும். சங்கமித்தா தேரர் அவர்களின் இலங்கை பயனத்தை குறித்து நிற்கும் பெரஹர பௌத்த மகளிர்களின் தலைமைத்துவத்தில் ஒழுங்கமைக்கப்படும் மிக விசேடமான கலாச்சார அம்சமாகும். மிஹிந்து தேரர் அவர்களின் இலங்கை விஜயம், சங்கமித்தா பிக்குனி அவர்கள் ஸ்ரீ மகாபோதி கிளையை கொண்டுவருதல் போன்ற பௌத்த முக்கியத்துவம்

வாய்ந்த பொசன் தோரணங்களை நிருமாணித்தல், பொசன் வைபவத்தின் முக்கியமான அம்சங்களாகும். தேவநம்பியதிஸ்ஸ அரசர், மிகிந்து தேரர் அவர்களை சந்தித்தல் தொடர்பான கதையை எடுத்துரைக்கும் ஆக்கங்களை காட்சியிடல், புத்திசாதூரியத்தை பரீட்சிப்பதற்காக பயன்படுத்திய மாமரம் தொடர்பான வினா, உறவினர் வினா தொடர்பான சம்பாஷனைகள் மிகிந்து தேரர் அவர்கள் நடாத்திய சூத்திர போதனைகள் சார்ந்த தரும போதனைகள், புத்ததருமம் தொடர்பான கலந்துரையாடல்கள் ஆகியவற்றை மேற்கொள்ளுதல் பொசன் வைபவம் சாந்து மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்கின்ற சமய மற்றும் கலாச்சார அம்சங்களுக்கிடையில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இலங்கை வாழ் மக்கள் அனைவரும் சமய மற்றும் மொழி வேறுபாடின்றி பொசன் பண்டிகையை கொண்டாடுவதற்காக தேசிய ரீதியாக தனித்துவமான கலாச்சார அம்சங்கள் பலவற்றை உருவாக்கும் நிலையான அடிப்படை பொசன் போயா தினத்தில் மிகிந்து தேரர் அவர்களின் இலங்கை விஜயத்தைக் கொண்டு அமைந்துள்ளது.

**மாதிரிச் செயற்பாடுகள்**

**(அ) பொசன் பண்டிகையை எடுத்துரைக்கும் படைப்புகள்**

திறந்த அடிப்படையிலான செயற்பாடாக பௌத்தம் அல்லாத ஏனைய சமயங்களை வழிபடும் பாடசாலை மாணவர்களை பங்குபற்றச் செய்வித்து நடைமுறைப்படுத்த முடியுமான செயற்பாடாகும்.

**முறைமை :**

(1) பொசன் பண்டிகையின் சமய மற்றும் கலாச்சார நோக்கங்கள் தொடர்பாக ஆசிரியர் மற்றும் மாணவர் சமுதாயத்தை அறிவுறுத்தல்
(2) பாடசாலைகளில் சமமான தரங்களில் மாணவர்கள் இணைகின்றவாறு குழுக்களை அமைத்தல்.
(3) குழுக்களாக படைப்புகளை தெரிவு செய்தல் மற்றும் தயாரித்தல்
(4) படைப்புகளை காட்சிப்படுத்தல், மதிப்பிடல் மற்றும் அளவுகோல்களை அடையாளம் காணல்
(5) படைப்புகளை பார்வையிடுவதற்கு பிரதேசத்தின் சமய தலைவர்கள் உள்ளிட்ட பிரப்புக்களுக்கு அழைப்புவிடுத்தல்

**மேலதிக விடயங்கள்**

பல்வேறு சமயங்களை வழிப்படுகின்ற மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் ஒன்றிணைந்து தெரிவுசெய்யப்பட்ட பாடசாலையொன்றில் ஆக்கங்களை தயாரிக்கலாம். பௌத்தமல்லாத சமயத்தை வழிப்படும் மாணவர்களுக்கு பொசன் தினத்தில் இவ்வாறான ஆக்கங்களை தயாரித்து காட்சிப்படுத்த முடியுமாவதுடன், அதனை பார்வையிடுவதற்கு பௌத்த பாடசாலைகளில் உள்ள மாணவர்களை அழைப்பு விடுத்தல் பொருத்தமாகும்.

**(ஆ) பொசன் பக்தி கீதங்கள்**

இச் செயற்பாடுகளின் பொருட்டு பௌத்த மற்றும் பௌத்தம் அல்லாத மாணவர்கள் உள்ள பாடசாலைகளின் மாணவர்கள் ஒன்றிணைந்து ஒழுங்கமைத்தல் பொருத்தமாகும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் கீதங்கள் இயற்றுவதற்கு ஊக்கமளித்தல்.

**முறைமை :**

(1) சமாதானம், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை மையமாகக்கொண்ட கீதங்களை இயற்றுவதற்கு ஆசிரியர்,மாணவர்கள் மற்றும் அது தொடர்பாக தேர்ச்சி பெற்றவர்களை அழைத்தல், அறிவுறுத்தல்
(2) ஆக்கங்களை தெரிவு செய்தல் மற்றும் பயிற்சி பெறுதல்
(3) பக்தி கீதங்களின் இசை நிகழ்ச்சியை ஒழுங்கமைத்தல்
(4) பங்குபற்றியவர்களை மெச்சுதல்

**மேலதிக விடயங்கள்**

பௌத்த மாணவர்கள் மட்டும் பங்குகொள்கின்ற இசை நிகழ்ச்சியாயின் இசை நிகழ்ச்சியை பார்வையிடுவதற்கு ஏனைய சமயங்களை வழிப்படும் மாணவர்களை அழைத்தல், பௌத்தமல்லாத மாணவர்கள் அதிகமாக உள்ள பாடசாலைகளில் பக்தி கீதங்களின் இசை நிகழ்ச்சி நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், ஏனைய சமயங்களில் மாணவர்களை பங்குபற்றச் செய்விக்கும் போது பெற்றோர்களின் ஆலோசனை பெற்றுக்கொள்ளுதல்.

**(இ) ஒன்றிணைந்து பொசொன் சித்திரங்களை படைத்தல்**

பௌத்தம் மற்றும் பௌத்தம் அல்லாத மாணவர்களின் பங்களிப்புடன் பாடசாலைகளில் நடாத்தலாம்“

**முறைமை :**

(1) பங்குபற்றும் மாணவர்களை பொசன் பண்டிகை தொடர்பாக அறிவுறுத்தல் மற்றும் சகவாழ்வு என்ற தொனிப்பொருளில் சித்திரங்களை ஆக்குவதற்கு வழிகாட்டல்.
(2) 06 அடி நீளமான மற்றும் அதற்கு ஏற்புடைய அகளத்தைக்கொண்ட சட்டகமாக்கப்பட்ட கென்வஸ் துணி வகை மற்றும் வர்ணங்களை பயன்படுத்தல்
(3) முடிவுறுத்தப்பட்ட சித்திரக் காட்சியினை காட்சியிலிடல் மற்றும் அவற்றை பார்வையிடுவதற்கு பாடசாலை மாணவர்களுக்கு அழைப்புவிடுத்தல்
(4) படைப்புகளை மெச்சுவதற்காக அளவுகோள்களை தெரிவு செய்கின்றபோது ஏற்புடையதாகுதல் தொடர்பாக கவனம் செலுத்தல்
(5) படைப்புகளை மெச்சுதல் மற்றும் சர்வ மத தலைவர்களை அழைத்தல்

**மேலதிக விடயங்கள்**

தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை உபயோகப்படுத்தி சமாதானம், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு என்பன கட்டியெழுப்ப முடியுமானவாறு செயற்பாடுகளை திட்டமிடுதலும் பயன்பாட்டில் ஈடுபடுத்தலும்.

**(ஈ) பொசன் பண்டிகை தொடர்பான போதனைகள், உரையாடல்கள் மற்றும் பேச்சுப்போட்டிகள்**

பௌத்த சமயத்தை வழிப்படும் மாணவர்கள் கற்கின்ற பாடசாலையொன்றில் ஏனைய சமயங்களை வழிப்படும் மாணவர்களின் பங்களிப்புடன் நடாத்தலாம்.

**முறைமை :**

(1) பொசன் திகதியின் தேசிய முக்கியத்துவம் தொடர்பான விடயங்களை திரட்டுதல்.
(2) ஆதாரங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஆய்வு
(3) இலங்கை வாழ் மக்களுக்கு பொசன் தினம் சார்ந்து கிடைக்கப்பெற்ற நன்மை தீமைகள் தொடர்பான கலந்துரையாடலுக்கு இடமளித்தல்
(4) விடயம் தொடர்பான தேர்ச்சியாளர்களிடமிருந்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுதல்

**(உ) கூட்டாக மிகிந்தலையை பார்வையிடும் கற்கை சுற்றுலா**

எல்லா சமயங்களிலும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பங்களிப்புடன் மிகிந்தலையை பார்வையிடல்.

**முறைமை :**

(1) பாடசாலையால் ஒழுங்கமைக்கப்படும் கற்கை சுற்றுலாவொன்றை ஒழுங்கமைக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய விடயங்களை பின்பற்றுதல்
(2) அந்த சுற்றுலாவின்போது மிகிந்து தேரர்களின் வருகை தொடர்பான நிகழ்வுகள் பற்றி தெளிவுபடுத்தல்

**(ஊ) சில் அனுஷ்டிப்பவர்களுக்கு தானம் வழங்குதல்**

எல்லா சமயங்களில் உள்ள மாணவர்களின் பங்களிப்புடன், அயலில் உள்ள பன்சலையொன்றில் அனுஷ்டித்த பக்தர்களுக்கு தானம் வழங்குதல்.

**முறைமை :**

(1) சம்பந்தப்பட்ட பன்சலையில் நாயக்க தேரா் அவர்களின் அனுமதி பெற்றுக்கொள்ளுதல்
(2) தானம் தயாரித்தல் மற்றும் ஏற்றுக்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனைகளை பின்பற்றுதல்
(3) மாமிசமல்லாத உணவு பான வகைகளை வழங்கும் கொள்கைக்கு ஒழுங்கமைத்தலும் அது தொடர்பாக அறிந்திருத்தலும்.

**(எ) சிரமதான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்**

பொசன் பண்டிகையை முன்னிட்டு போயா அல்லாத நாளொன்றில் சிரமதான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தல். இதற்காக மருத்துவமனைகள்,பெருந்தெருக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பல்வேறு பொது மக்கள் பயன்பாட்டு இடங்கள் மற்றும் சமய வழிப்பாட்டிடங்கள் சுற்றுச் சூழ்ந்துள்ள சூழலை சுத்தம் செய்வதற்கு முன்னுரிமை வழங்குதல், பல பாடசாலைகளை பங்குபற்றச் செய்விப்பதன் மூலம் அதிகளவிலான இடப் பிரதேசத்தில் சிரமதானமொன்றை செயற்படுத்தும் ஆற்றலை அவதானத்திற்கு உட்படுத்தல் வேண்டும்.

**முறைமை :**

(1) சிரமதானம் நடாத்தப்படும் இடங்களை தெரிவு செய்து அதற்கான அனுமதி பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பெற்றோர்களை அறிவுறுத்தல்
(2) பௌத்த தேரா்களை அழைப்பித்து பொசன் பண்டிகை மற்றும் சமூக சேவையின் முக்கியத்துவம் தொடா்பாக அறிவுறுத்தல்
(3) பிரதேசத்தின் முன்னேற்றம் மற்றும் சகவாழ்வின் பொருட்டு கூட்டாக செயற்படுவதில் முக்கியத்துவம் தொடா்பாக புரிந்துக்கொள்ளுதல்

**(ஏ) பொசன் பெரஹர நடாத்தல்**

பௌத்த மாணவர்கள் கல்வி கற்கின்ற பாடசாலையொன்றில் ஒழுங்கமைக்க முடியுமான செயற்பாடாகும்.

**முறைமை :**

(1) பொசன் தினத்தை முன்னிட்டு பெரஹர ஒழுங்கமைத்தல்
(2) ஏனைய சமயங்களை வழிப்படும் பாடசாலைக்குச் செல்லுதல்
(3) பாடசாலையில் விளையாட்டு மைதானத்தை பயன்படுத்தி பெரஹர ஒழங்கமைத்தல்
(4) பெரஹர மூலம் புரிந்துக்கொள்ள முடியுமான சகவாழ்வு பழக்கங்கள் தொடா்பாக மாணவர்களின் கருத்துகளை ஆக்கபூர்வமாக சமா்ப்பித்தல்

# நோன்புப் (ஈதுல் பித்ர்) பெருநாள்



## அறிமுகம்

நோன்புப் பெருநாள் என்பது உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதம் இன்றி முஸ்லிம் சமூகத்தை ஒன்றாய் இணைக்கும் ஒரு மார்க்கக் கடமை ஆகும். அல்லாஹ்வின் கருணையினால், தான் பெற்ற செல்வத்தை ஏனையவர்களுடன் சகோதரத்துவ வாஞ்சையோடு பகிர்ந்து மகிழ்ச்சியாய் அனுபவிப்பதும் அனைவருடனும் நியாயமாக நடந்து கொள்வதும் மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதும் நோன்புப் பெருநாளுடன் பின்னிப் பிணைந்து காணப்படுகிறது. சகோதரத்துவம், சமத்துவம், மிதவாதத்தன்மை மற்றும் கூட்டிணைவு ஆகியவற்றை முதன்மைப்படுத்துவதற்கு பேருதவியாக அமையும் ரமழான் நோன்பின் மூலம் கட்டியெழுப்பப்படும் மனோரீதியான மற்றும் ஆன்மீகரீதியான விருத்தி வாழ்க்கை முழுவதும் பிரயோகிக்கப்படல் வேண்டுமென இஸ்லாம் இயம்புகிறது. அனைத்து முஸ்லிம்களும் தம் மீது விதிக்கப்பட்ட ஒரு கட்டாயக் கடமையான ரமழான் நோன்பினை நோற்று உடல் உள ரீதியாக தமக்குள்ளேயும் இறைவன் மீதும் ஏற்படுத்திக்கொள்ளப்படும் பலத்தினைத் தனது எதிர்கால வாழ்விலும் தொடர்ந்து பேணிச் செல்வதனைத் இலட்சியமாகக் கொண்டுள்ளனர். அவ்வாறே இந்த ரமழான் மாதத்தில் தமக்குள் கட்டியெழுப்பப்படும் தன்னடக்கம் மற்றும் பொறுமை ஆகியவற்றின் மூலமாக தாமாகவே நேர்மையைக் கடைப்பிடித்து ஒழுகுவதன் மூலமாக மற்றவரை ஏமாற்றாதிருத்தல் எனும் பண்பின் ஊடாக முஸ்லிம் சமூகம் மிகவும் பலம் பொருந்திய சமூக, கலாசாரப் பிணைப்பு மற்றும் சிறந்ததொரு சமூகத்தை உருவாக்குவதற்கான அடிப்படையைக் கொண்டுள்ளது.

சந்திரனை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமிய நாட்காட்டிக்கு அமைய ஒன்பதாவது மாதம் ரமழான் மாதம் என அழைக்கப்படுகிறது. இஸ்லாம் மதத்தின் பிரகாரம் நபி (ஸல்) அவர்களுக்கு அல்குர்ஆன் இறக்கி வைக்கப்பட்டதும் இந்த ரமழான் மாதத்தில் ஆகும் என்பதனால் ரமழான் மாதம் ஒரு புனிதமான மாதம் எனக் கருதப்படுகிறது. அல்குர்ஆனின் முதல் வாக்கியம் ரழமான் மாதத்தின் இறுதிப் பகுதியில் ஒரு நாள் இரவு அருளப்பட்டதாகக் கூறப்படுவதுடன் அந்த இரவு “புனித லைலதுல் கத்ர்” அதாவது மிகவும் பலம் பொருந்திய ஓர் இரவாக கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் நோன்புப் பெருநாள் கொண்டாடப்படும் நாள் மாற்றமடையும். நோன்பு ஆரம்பிக்கப்படும் தினமும் முடிவடையும் தினமும் சந்திர வருடத்தினையும் தலைப்பிறை தென்படுவதையும் அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது.

ரமழான் நோன்பு காலம் அரபு மொழியில் "ஸவ்மி" அதாவது "ஷியாம்" என அழைக்கப்படுகிறது. தவிர்ந்திருத்தல் அல்லது கைவிடுதல் என்பதே அதன் பொருள் ஆகும். அல்லாஹ் மீதான நம்பிக்கையுடனும் பயபக்தியுடனும் தனது மனோ இச்சையை அல்லாஹ்விற்காக அர்ப்பணித்து புனித அல்குர்ஆனின் போதனைகளுக்கு அமைய முஸ்லிம்கள் அனைத்து இச்சைகளையும் தவிர்த்து இஸ்லாம் மார்க்கத்தின் பிரகாரம் தனது வாழ்வின் யதார்த்தத்தை தேடிச் செல்லல் இந்த நோன்பு காலத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். உடல் ரீதியாக மாத்திரமின்றி ஆன்மீக அடிப்படையிலும் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டுள்ள போதும் மனிதன் உலக ஆசாபாசங்கள் மீது எல்லையற்ற விருப்புக் கொண்டு தனது உடல் உள திருப்தியின் மீது வரையறையற்றவனாக வாழ்ந்து வருகின்றான். ஆகவே அவ்வாறான மனிதர்களிடத்தில் மனிதப் பண்புகள் அற்றுப் போய் மனிதனில் உள்ள யதார்த்தம் மறைந்து அகன்று செல்கிறது. உண்மையைப் புரிந்துகொள்வதற்கான அறிவு காணப்பட்ட போதும் அறிவினை வழிநடாத்தி உண்மையை உணர்வதற்கு அவனால் இயலாது போவதன் காரணமாக அவனிடம் உள்ள ஆன்மீக பலம் தூர விலகிச் செல்கிறது. இந்த நிலைமையிலிருந்து மனிதனை மீட்டெடுத்து ஆன்மீக பலத்தை மனிதனிடத்தில் கொண்டு சேர்ப்பதற்கு புனிதம் மிகு மாதமான ரமழான் சந்தர்ப்பத்தினை வழங்குகிறது.

ரமழான் நோன்பு பல்வேறு வழிமுறைகளின் ஒரு கலப்பு ஆகும். ரமழான் நோன்பு காலத்தில் பகற் காலங்களில் நோன்பு நோற்று ரமழான் மாதத்திலும் ரமழான் அல்லாத காலங்களிலும் மேற்கொள்ளப்படும் இரவுத் தொழுகையான "கியாமுல்லைல்" தொழுகையை நிறைவேற்றுதல், தான தர்மம் செய்தல், மஸ்ஜிதில் தங்கி இ.ஃ.திகாப் இருத்தல், அல்குர்ஆன் ஓதுதலில் (திலாவத்) ஈடுபடல் மற்றும் ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த மேன்மைகளைக் கொண்ட லைலதுல் கத்ர் இரவில் துஆ பிரார்த்தனைகளில் ஈடுபடல் போன்ற பல்வேறு மார்க்க அனுஷ்டானங்களில் ஈடுபடல் வேண்டும். நோன்பு மாதம் பகற் காலங்களில் உண்ணுதல் மற்றும் பருகுதல் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்திருத்தல் மாத்திரமின்றி தொழுகைகளில் (வணங்குதல்) ஈடுபடல், ஸகாத் (ஏழை வரி), இச்சைகளைக் கட்டுப்படுத்தி அனைத்து விதமான பாவச் செயல்களை விட்டும் தவிர்ந்திருந்து தனது அன்றாட அலுவல்கள் மற்றும் பொறுப்புக்கள் கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும். அவ்வாறே தான் எதற்காக நோன்பு வைக்கிறேன் என்பது பற்றி தெளிவு பெறுதல் வேண்டும்.

ஒரு மாதகாலம் பூராக அனுஷ்டிக்கப்படும் ரமழான் நோன்புக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த, மத ரீதியான, விஞ்ஞான ரீதியான, தத்துவ ரீதியான மற்றும் பிரயோக ரீதியான பெறுமதி உள்ளது. அஸ்ஸவ்ம் எனப்படும் ரமழான் நோன்பு இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் நான்காவது கடமை ஆகும். "The Five Pillars of the Faith" உலகின் ஒரே இறைவன் அல்லாஹ் என ஏற்றுக்கொள்ளல், நாளாந்தம் அல்லாஹ்வை நினைவு கூர்ந்து ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றுதல், ஏழை வரி எனப்படும் ஸக்காத் கடமையை நிறைவேற்றுதல், நோன்பு வைத்தல் மற்றும் ஹஜ் கடமையை நிறைவேற்றுதல் ஆகியவையே அந்த ஐம்பெருங் கடமைகள் ஆகும். இந்த நோன்புக் கடமையானது ஏக வல்லமை பொருந்திய அல்லாஹ்வினால் ஜிப்ரீல் (அலை) எனும் இறைத்தூதுவர் மூலம் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டது. சிறு பிள்ளைகள், நோயாளிகள் மற்றும் தனது வயோதிபப் பருவத்தில் உடற் பலவீனமடைந்தவர்கள், தாய்ப்பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் தொலைதூரப் பிரயாணத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தவிர்ந்த தேகாரோக்கியமுடைய சகல ஆண்களும் பெண்களும் நோன்பு வைக்கின்றனர். கிழக்கு வெளுத்தது முதல் சூரியன் மறையும் வரையிலான காலப்பகுதியில் நோன்பு வைத்திருத்தல் கடமையாக்கப்பட்டுள்ளது. இந்த கால எல்லை சுமார் 13-14 மணித்தியாலங்கள் கொண்டதாகும். நோன்பு காலங்களில் லௌகீக வாழ்க்கையிலிருந்து விடுபட்டு ஆன்மீக வாழ்வினுள் நுழைந்து தூய்மையான சிந்தனைகளின் அடிப்படையில் நற்செயல்களில் ஈடுபடும் இஸ்லாமியர்கள் பகற் காலங்களில் பசி தாகத்தை தியாகம் செய்து உண்மையிலேயே நிர்க்கதிக்கு ஆளாகி உள்ள மனிதர்களின் வயிற்றுப் பசியினை உணர்வதற்கு நோன்பு வாய்ப்பினை வழங்குகிறது. ஏழை மக்கள் அனுபவிக்கும் வேதனைகளைப் புரிந்துகொள்வதற்கும் அவர்களை கூருணர்வுடன் நோக்கி அவர்களுடன் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்வதற்கும் இச்சைகளைக் கட்டுப்படுத்தக் கூடிய ஆற்றலை விருத்தி செய்வதற்கும் இந்த ரமழான் நோன்பு காலம் ஓர் அரிய சந்தர்ப்பத்தை வழங்குகிறது. அந்த ஆரோக்கிய வாழ்வியல் பண்புகளை நோன்பு காலத்திற்கு மாத்திரம் வரையறுக்காது அதற்குப் பின்னரும் தனது அன்றாட வாழ்வில் கடைப்பிடிப்பதற்கான இலட்சியம் கட்டியெழுப்பப்படுகிறது.

## நோன்பு வைக்கப்படும் முறை

(1) பஜ்ர் (அதிகாலை) ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் உணவு (சஹர்) உட்கொள்ளலும் சூரியன் மறைந்தவுடன் நோன்பு துறத்தலும்.
(2) பேரீத்தம் பழத்தினை சாப்பிட்டு அல்லது தண்ணீர் அருந்தி நோன்பு துறத்தல்.
(3) நோன்பு துறப்பதற்காக மேலே குறிப்பிடப்பட்ட எந்த ஒரு பொருளும் இல்லாத போது நோன்பு துறப்பதற்குரிய நேரம் வந்ததும் நோன்பு துறப்பதாக மனதில் எண்ணிக்கொள்ளல்.
(4) நோன்பு வைப்பதற்காக அதிகாலையில் தூக்கத்திலிருந்து விழித்தெழுவதற்கு தாமதித்து உரிய நேரத்தை அடைந்திருப்பதாக அறிந்து கொண்டதன் பின்னர் உணவு, பானம் உட்கொள்ளலிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும். பஜ்ர் நேரத்தை அடைந்த பின்னர் எந்த ஒன்றையும் உண்ணவோ பருகவோ கூடாது என்பதுடன் (அதிகாலையில்) கட்டாயம் நோன்பு வைத்தல் வேண்டும்.
(5) நோன்பு வைப்பவர் தன்னால் இயலுமான வரை வணக்க வழிபாடுகளில் ஈடுபடல் வேண்டும் என்பதுடன் அல்லாஹ்வினால் விலக்கப்பட்டவைகளிலிருந்து அதாவது பொய் பேசுதல், புறம் பேசுதல், ஏமாற்றுதல், ஹராமான வழிகளில் பொருளீட்டுதல் போன்றவற்றிலிருந்து முற்று முழுதாக தவிர்ந்திருத்தல் வேண்டும்.
(6) ரமழான் மாதம் பூராக இரவு வணக்கங்களில் ஈடுபட வேண்டியதுடன் ரமழான் மாதத்தின் பிந்திய பத்து நாட்களின் ஒற்றை இரவுகளில் அதிகமான வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதன் மூலம் ஆயிரம் இரவுகளை விட மேலான லைலதுல் கத்ர் (பலம் பொருந்திய இரவு) இரவின் பாக்கியத்தை அடைந்துகொள்ள முடியும்.
(7) ஈதுல் பித்ர் பெருநாள் தொழுகைக்கு முன்னதாக ஸதகதுல் பித்ர் எனப்படும் பெருநாள் தின தானம் வழங்குதல் உரியமுறையில் நிறைவேற்றப்படல் வேண்டும்.

நோன்பு எனப்படுவது பௌதீக விடயங்களிலிருந்து தூர விலகி பொறுமை மற்றும் தியாகம் என்பவற்றுக்கான பயிற்சியினைப் பெற்றுக்கொள்ளல் ஆகும். இச்சைகளை விட்டும் தூரமாகி காரியங்களில் ஈடுபடுவதற்குப் பழக்கப்படுத்தல் ஆகும். அவ்வாறே ஸகாத் (ஏழை வரி) கொள்கைக்கு ஏற்ப ஆதரவற்ற ஏழைகள் மற்றும் நோய்வாய்ப்பட்ட மக்களுக்குத் தேவையாக ஆகாரத்தை வழங்குதல் அல்லது அவற்றைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதி வசதிகளை அவர்களுக்கு வழங்குதல் வேண்டும் என்பதாக இந்த நோன்பு காலங்களில் செய்யப்படும் நினைவூட்டல்கள் மிகவும் முக்கியமான ஒரு அம்சம் ஆகும். நோன்பு சர்வ வல்லமை பொருந்திய அல்லாஹ்வினால் நம் மீது கடமையாக்கப்பட்டுள்ள ஒரு மார்க்கக் கிரியையாக உள்ளமையினால் அதில் மேன்மை மிகு சமயப் பெறுமதி பொதிந்துள்ளது. மனதைக் கட்டுப்படுத்தல் மற்றும் தியாக மனப்பாங்கை வளர்ப்பதற்கு நோன்பு வழிவகுக்கின்றது. ஒரு மாத காலம் நோன்பு வைக்கும் இஸ்லாமியர்கள் சந்திர நாட்காட்டிக்கு அமைவாக அடுத்த மாதத்திற்கான தலைப்பிறை தென்பட்டதைத் தொடர்ந்து ரமழான் நோன்பு மாதத்தைப் பூர்த்தி செய்து மறுநாள் காலை ஈதுல் பித்ர் எனப்படும் நோன்புப் பெருநாள் முஸ்லிம்களால் கொண்டாடப்படுகிறது.. நோன்புப் பெருநாள் தினத்தன்று முஸ்லிம் ஆண்கள் பெண்கள் இருபாலாரும் மஸ்ஜித்களுக்கு அல்லது திடல்களுக்குச் சென்று கூட்டாக நின்று ஈதுல் பித்ர் தொழுகை எனப்படும் நோன்புப் பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவார்கள். பின்னர் தத்தமது வீடுகளுக்குச் சென்று உற்றார் உறவினர்களுக்கு விசேடமாக தன்னை விட வசதி குறைந்த சகோதரர்களுக்கு உணவு, உடை, பானங்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் பணம் போன்ற பல்வேறு பரிசுப் பொருட்களை தானம் செய்வார்கள்.

## லைலதுல் கத்ர் (பலம் பொருந்திய) இரவு

அல்குர்ஆனில் ஓர் அத்தியாயம் பூராக இந்த இரவின் மகத்துவம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய இரவுகளை விட ஆயிரம் மடங்கு இந்த இரவு மேன்மையானதாகும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இரவு ரஹ்மத்துக்கள் (ஆசிர்வதிக்கப்பட்ட) நிறைந்த இரவாகக் கருதப்படுவதால் இந்த இரவில் மேற்கொள்ளப்படும் நற்கருமங்களுக்கான கூலி ஆயிரம் மடங்காக பெருப்பிக்கப்பட்டு வழங்கப்படுவதாக முஸ்லிம்கள் நம்புகிறார்கள். அவ்வாறே இந்த இரவில் மேற்கொள்ளப்படும் நற்கருமங்கள் காரணமாக பாவங்களுக்கு மன்னிப்பு கிடைக்கப்பெறுவதாகவும் சுவர்க்கத்தில் நுழைவதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதாகவும் முஸ்லிம்கள் நம்புகிறார்கள்.

**மாதிரி செயற்பாடுகள்**

**(அ) முதியோர் இல்லம் அல்லது சிறுவர் இல்லம் ஒன்றுக்கு உதவி செய்தல்**

எந்தவொரு பாடசாலைக்கும் தனித் தனியாக அல்லது ஏனைய சமயங்களைப் பின்பற்றும் மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளுடன் ஒன்றிணைந்து நோன்புப் பெருநாளை மையமாகக் கொண்டு உதவிகளைச் சேகரித்து முதியோர் இல்லம் அல்லது சிறுவர் இல்லம் ஒன்றுக்குச் சென்று உதவிகளை வழங்க முடியும்.

**முறைமை :**

(1) முதியோர்/சிறுவர் இல்லத்தில் உரிய திகதியை ஒதுக்குதல்.
(2) குறித்த தினம் முழுவதும் அங்கு தங்கி இருந்து முதியோர்/ சிறுவர்களுடன் செயற்பாடுகளில் ஈடுபடல்.
(3) ரமழான் பண்டிகை பற்றிய ஒரு சொற்பொழிவினை மதத் தலைவர் ஒருவரைக் கொண்டு நடாத்துதல்.

**(ஆ) நோன்பு துறக்கும் வேளை (இப்தார்) ஏற்பாடு**

ஒரு பாடசாலையில் ரமழான் நோன்பு துறக்கும் மாணவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் பானம் என்பவைகளை வழங்கும் ஒரு நிகழ்வினை குறிப்பிட்ட அப் பாடசாலையில் கல்வி கற்கும் முஸ்லிம் அல்லாத மாணவர்களுக்கு ஏற்பாடு செய்ய முடியும்.

**முறைமை :**

(1) பாடசாலை மாணவர்கள் மத்தியில் முஸ்லிம்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ள ரமழான் நோன்பு பற்றியும் நோன்புப் பெருநாள் பற்றியும் விளக்கமளிக்கும் ஒரு சொற்பொழிவினை அல்லது ஒரு சிறிய நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தல்.
(2) இஸ்லாம் மதத் தலைவர்களிடம் அனுமதி பெற்றுக்கொள்ளல்.
(3) இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய பொருட்களை உள்ளடக்கி உணவு மற்றும் பானங்களைத் தயார் செய்தல்.
(4) தேவையான பொருட்களை மாணவர்களின் அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளல்.
(5) முஸ்லிம் மாணவர்கள் தமது மத அனுஷ்டானங்களை நிறைவேற்றுவதற்கான வதிகளை ஏற்பாடு செய்தல்.
(6) இஸ்லாம் மதத் தலைவர் ஒருவரது உதவியையும் வழிகாட்டலையும் நாடுதல்.

**(இ) நோன்புப் பெருநாள் தினத்தை முன்னிட்டு அன்பளிப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்**

இஸ்லாம் மதத்தைப் பின்பற்றும் மாணவர்களால் நிறைவேற்ற முடியுமான ஒரு செயற்பாடு ஆகும். தெரிவு செய்யப்பட்ட பௌத்த/ஹிந்து/கிறிஸ்தவ மாணவர்களின் அல்லது குறித்த அதே பாடசாலையில் நிலவும் ஒரு குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான அன்பளிப்புக்களை வழங்குதல் (நீர்த்தாங்கி, ஏதேனும் திருத்தங்களை மேற்கொள்ளல், ஏதேனும் ஓர் உபகரணத்தை வழங்குதல் அல்லது ஏதேனும் ஒரு வசதியை செய்து கொடுத்தல்)

**முறைமை :**

(1 ) நோன்பு காரணமாக மீதப்படுத்தப்படும் பணத்தைப் பயன்படுத்தி இவ்வாறான ஒரு காரியத்தைச் செய்வதாக அறிவித்து குறிப்பிடப்பட்ட உதவியை வழங்குதல்.
(2) அன்பளிப்பு வழங்குவதற்கான ஒரு வைபவத்தை நடாத்தி அதன் போது இஸ்லாம் மதம் தொடர்பாகவும் நோன்பு தொடர்பாகவும் விளக்கமளித்தல்.
(3) அனைத்து மதத் தலைவர்களையும் வரவழைத்தல் மற்றும் பாடசாலைச் சமூகத்திற்கு அழைப்பு விடுத்தல்.

**(ஈ) நோன்புப் பெருநாள் வாழ்த்துமடல்களை தயாரித்து வழங்குதல்**

இஸ்லாம் மதம் அல்லாத மதங்களைப் பின்பற்றும் மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் உள்ள மாணவர்களால் நிறைவேற்றப்பட முடியுமான ஒரு செயற்பாடு ஆகும். நோன்புப் பெருநாள் தினத்தை முன்னிட்டு இஸ்லாம் மதத்தைப் பின்பற்றும் பாடசாலை மாணவர்களுக்காக தயாரிக்கப்பட்ட வாழ்த்து மடல்களைப் பகிர்தல்.

இந்த செயற்பாட்டை மாணவர்களுக்கான திறந்த நட்புறவுத் திறனாக நடாத்த முடியும்.

**முறைமை :**

(1) நோன்புப் பெருநாளை முன்னிட்டு முஸ்லிம் பாடசாலை மாணவர்களுக்கான வாழ்த்து மடல்களை வடிவமைக்க விரும்பும் மாணவர்கள் அதில் ஈடுபடும் பொருட்டு திறந்த அழைப்பினை (அறிவித்தல்/சுவரொட்டி/கடிதம்) மூலம் விடுத்தல்.

(2) இதற்காக முன்வரும் மாணவர்களுக்கு நினைவு மடல்களை வடிவமைத்தல் தொடர்பான ஒரு செயலமர்வினை ஏற்பாடு செய்தல். அந்த செயலமர்வின் போது இஸ்லாம் மார்க்கம் பற்றியும் நோன்புப் பெருநாள் பற்றியும் ஓர் அடிப்படை விளக்கத்தினை வழங்குதல், வாழ்த்து மடல்களை வடிவமைக்கும் விதம் தொடர்பாக விளக்கமளித்தல், தெரிவுசெய்யப்பட்ட மாதிரி வாழ்த்து மடல்கள் பற்றி அறிந்து கொள்வதற்கு வாய்ப்பளித்தல் மற்றும் நினைவு மடல் வடிவமைப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவற்றை மேற்கொள்ள முடியும்.

(3) வடிவமைக்கப்பட்ட வாழ்த்து மடல்களை பாடசாலையில் காட்சிப்படுத்தல்.

(4) முஸ்லிம் அல்லாத மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளினால் இவ்வாறு வடிவமைக்கப்பட்ட வாழ்த்து மடல்களை முஸ்லிம் மாணவர்களுக்கு அனுப்பி வைத்தல்.

**மேலதிக கருத்துக்கள்**

இஸ்லாம் மதத்தைப் பின்பற்றும் மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையின் அனைத்து மாணவர்களுக்கும் அவர்களது பெயர்களில் வாழ்த்து தெரிவிக்கக் கூடிய வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்ய முடியும்.

முஸ்லிம் அல்லாத மாணவர்கள் கல்வி கற்கும் ஏனைய அனைத்து பாடசாலைகளும் ஒன்றிணைந்து இவ்வாறான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய முடியும்.

# ஹஜ்ஜுப் (ஈதுல் அல்ஹா) பெருநாள்



## அறிமுகம்

ஹஜ் என்ற அரபுப் பதத்தின் பொருள் "தேடிச் செல்லல்" மற்றும் "முன்னோக்கிப் பயணித்தல்" என்பது ஆகும். ஒவ்வொரு முஸ்லிமும் கட்டாயம் கொண்டாட வேண்டிய தினங்களாக ஈதுல் பித்ர் மற்றும் ஈதுல் அல்ஹா ஆகிய இரு பெருநாட்களும் காணப்படுகின்றன. ஈதுல் அல்ஹா என்பதன் பொருள் தியாகத் திருநாள் festival of sacrifice என்பது ஆகும். முஸ்லிம்களின் ஐம்பெரும் கடமைகளுள் (கலிமா, தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ்) ஐந்தாவது கடமையான ஹஜ் யாத்திரை ஈதுல் அல்ஹா தினத்தில் மேற்கொள்ளப்படுகிறது. இதன் பொருட்டு உலகம் பூராக வாழும் வசதி படைத்த முஸ்லிம்கள் பரிசுத்த பூமியான மக்காவில் அமைந்துள்ள கஃபாவை நோக்கி யாத்திரை மேற்கொள்வார்கள்.

## இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள்

இஸ்லாம் என்பது கட்டுப்படுதல்,பணிவு, கீழ்ப்படிதல் மற்றும் சாந்தி எனப் பல்வேறு அர்த்தம் தரும் ஓர் அரபுப் பதம் ஆகும். இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள் சில காணப்படுகின்றன. அதில் முதலாவது தௌஹீத் எனும் கொள்கை ஆகும். அதாவது அல்லாஹ்வைத் தவிர வேறு ஓர் இறைவன் இல்லை என ஏற்றுக் கொள்ளும் ஏகதெய்வக் கொள்கை ஆகும். அதன் பிரகாரம் மனிதனதும் இப் பூவுலகினதும் உயிர் நாடி அல்லாஹ் ஒருவன் என நம்புவது ஆகும்.

இரண்டாவது அல்லாஹ்வினால் மனிதனை நல்வழிப்படுத்துவதற்காக அனுப்பப்பட்ட முஹம்மது நபி (ஸல்) அவர்களை நம்புவது ஆகும். அல்லாஹ்த் தஆலா தீர்க்கதரிசிகளினூடாகவே மனிதர்களை நல்வழிப்படுத்துகிறான் என்பதுடன் அவர்கள் அனைவரும் மனிதர்கள் ஆவார்கள். அவர்கள் மீது நம்பிக்கை கொள்வது அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வது போல் ஆகும். அவ்வாறு அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட இறுதி நபி (தீர்க்கதரிசி) முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

மூன்றாவது கொள்கை அல்லாஹ்வினால் முழு மனித சமுதாயத்திற்கும் அருளப்பட்டுள்ள அனைத்து வேத வாக்கியங்களும் உள்ளடங்கிய "அல்குர்ஆன்" மீது நம்பிக்கை கொள்வது ஆகும்.
நான்காவது கொள்கை அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட அனைத்து நபிமார்களுக்கும் பாகுபாடின்றி மதிப்பளித்தல் வேண்டும் என்பது ஆகும். மறுமை வாழ்வு என்ற ஒன்று உண்டு என்பதனை நம்பிக்கை கொள்ள வேண்டுமென்பதே ஐந்தாவது கொள்கை என்பதுடன் எந்தவொரு செயற்பாட்டிற்கும் பிரதிபலன் உண்டு என்பதனை நினைவில் நிறுத்த வேண்டுமென அல்குர்ஆன் கூறுகிறது.

ஆறாவது கொள்கை அல்லாஹ்வின் சர்வலோக நியதி ஆகும். அது தக்தீர் (கழா கத்ர்) என அழைக்கப்படும். அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப்படியும் நியதிக்கு ஏற்பவும் நடைபெறும் என்பதும் அல்லாஹ்வின் கட்டளைக்கு அமையவே ஏதேனும் ஒன்று நடைபெறும் என்பதுமே இதன் கருத்து ஆகும்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பிறந்த பூமி மக்கமா நகரமாக இருப்பதுடன் பொருளாதார பலம் மற்றும் உடற்பலம் உள்ள அனைவரும் மக்காவில் அமைந்துள்ள க.்.பாவிற்குச் சென்று ஹஜ் கிரியையை நிறைவேற்ற வேண்டுமென அல்குர்ஆன் கூறுகிறது. அவ்வாறே ஆற்றல் இருந்தும் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்கா நோக்கிச் செல்லவில்லையாயின் அல்லாஹ் எதுவிதத் தேவையுமற்றவன் என்ற காரணத்தால் அவ்வாறு மக்கா செல்லாதிருப்பதனால் அவனுக்கு எதுவும் குறையப் போவதும் இல்லை என அல்குர்ஆன் கூறுகிறது.

நபி இப்றாஹீம் (அலை) அவர்களும் அவரது மகன் நபி இஸ்மாயீல் (அலை) அவர்களும் இஸ்லாத்தின் மீது கொண்ட பயபக்தி காரணமாகவும் அல்லாஹ்வின் மீது கொண்ட மதிப்பும் மரியாதையும் காரணமாகவும் மேற்கொண்ட தியாகம் மற்றும் அர்ப்பணம் ஆகியவற்றை நினைவு கூருவதற்காக அனுஷ்டிக்கப்படும் ஒரு தியாகத் திருநாளாக ஈதுல் அல்ஹா எனப்படும் ஹஜ்ஜுப் பெருநாள் காணப்படுகிறது. ஹஜ் யாத்திரைக்கு தமது பிள்ளை குட்டிகள், செல்வம், உற்றார் உறவினர்கள், தான் பிறந்த மண்ணையும் துறந்து முஸ்லிம்கள் சவுதி அரேபியாவின் மக்கா நகரில் அமைந்துள்ள புனிதத் தலமான க.்.பாவிற்குச் சென்று மார்க்க கடமைகளில் ஈடுபடுதலானது முஸ்லிம்களிடம் காணப்படும் தியாக மனப்பான்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்ற ஒரு சந்தர்ப்பமாகக் கருதப்படுவதுடன் ஹஜ் யாத்திரிகர்கள் அனைவரும் தாம் அதுவரை அணிந்திருந்த உடைகளைக் களைந்து இஹ்றாம் எனப்படும் வெள்ளை நிறத் துணிகள் இரண்டைத் தமது ஆடைகளாகக் கொண்டு தலைமுடியைக் களைந்தவர்களாக இந்த ஹஜ் கடமையை நிறைவேற்றுவார்கள்.

ஹஜ் யாத்திரையை நிறைவேற்றும் ஒருவர் நிபந்தனைகள் சிலவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டுமென அல்குர்ஆன் கூறுகிறது.

- ★ முஸ்லிமாக இருத்தல்
- ★ பருவ வயதை அடைந்திருத்தல்
- ★ சித்தசுவாதீனமுடைவராக இருத்தல்
- ★ சுதந்திரமானவராக இருத்தல்
- ★ தனக்குக் கீழ் தங்கி வாழ்பவர்களைப் பாதுகாப்பாக வைத்து விட்டுச் செல்வதற்கும் தனது பிரயாணத்திற்குத் தேவையான செலவுகளை சுயமாக பெற்றுக்கொள்ளக் கூடிய பொருளாதார பலத்தினையும் கொண்டிருத்தல்
- ★ பிரயாணம் செய்வதற்குத் தேவையான உடற் பலம் காணப்படல் மற்றும் இடைநடுவில் பாதுகாப்பற்ற நிலைமைக்கு ஆளாகாத ஒரு பின்னணி காணப்படல்
- ★ மக்கா சென்றடைவதற்குப் போதிய அளவு கால அவகாசம் காணப்படல்

இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து மக்கா நகரில் அமைந்துள்ள க.்.பாவை நோக்கி உலகின் அனைத்து திசைகளிலுமிருந்து பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற பல மில்லியன் கணக்கான ஹஜ் யாத்திரிகள் ஒரே தினத்தில் ஒரே நேரத்தில் வெள்ளை ஆடை அணிந்து ஒரே திசையை முன்னோக்கியவர்களாக சாதி, குலம், நிறம், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதங்களை மறந்து அல்லாஹ்வுக்காக ஒவ்வொரு வருடமும் ஒன்றுதிரண்டு ஹஜ் கடமையினை நிறைவேற்றுகின்றனர்.

ஹஜ் கடமையானது முஸ்லிம் மக்களின் சகோதரத்துவத்தைக் கட்டியெழுப்புகின்ற ஒரு உன்னத சந்தர்ப்பம் ஆகும். தனது உயிரைக் கூட துச்சமென மதித்த இப்றாஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்வுக்காக தனது அருமை மைந்தன் இஸ்மாயீல் (அலை) அவர்கள் தொடர்பாக செய்த தியாக சம்பவம் அல்குர்ஆனில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

1. நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் தற்போதைய ஈராக் நாட்டுக்குச் சொந்தமான ஒரு பிரதேசத்தில் பிறந்தார். அப்போது நம்றூத் எனும் கொடிய அரசன் ஒருவன் அந்த நாட்டை ஆண்டு வந்ததுடன் தன்னை ஓர் இறைவன் எனக் கூறிக்கொண்டு வணங்கும் படி மக்களுக்கு கட்டளையிட்டான். அவனது இந்த கட்டளைக்கு எதிராக செயற்பட்ட இப்றாஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ் அன்றி வேறு எந்த ஒரு வஸ்துவிற்கும் சிரம் தாழ்த்த வேண்டாம் எனப் பிரச்சாரம் செய்து வந்தார்.

இதனால் கோபம் கொண்ட அரசன் இப்றாஹீம் (அலை) அவர்களைத் தீயிட்டுக் கொழுத்துமாறு கட்டளையிட்டான். அரசனின் கட்டளைக்கு ஏற்ப இப்றாஹீம் (அலை) அவர்களை தீக்கிடங்கில் தூக்கி எறிவதற்கு ஆயத்தப்படுத்தப்பட்ட வேளையில் இறைத் தூதுவரான வானவர் ஜிப்ரீல் (அலை) உதவிக்கு வந்த போதும் கூட அல்லாஹ்வின் பால் அவர்கள் கொண்ட அசையாத நம்பிக்கை காரணமாக "அல்லாஹ் என்னுடன் உள்ளான்" என்று வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு பதிலளித்தார்கள். அரசனின் கட்டளையின் பிரகாரம் இப்றாஹீம் (அலை) அவர்கள் நெருப்பில் தூக்கி எறியப்பட்ட போதும் அது அவருக்கு இதமான காற்று வீசும் ஒரு பூஞ்சோலையாக மாறியதாக அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அல்குர்ஆன் 21.69)

2. இப்றாஹீம் (அலை) அவர்கள் தனது 87 ஆவது வயதில் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு உரியவாறு அவனைப் பின்பற்றுகின்ற நற்குணமுள்ள ஒரு குழந்தையைப் பெற்றுத் தருமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தார்கள். அவரது அந்தப் பிரார்த்தனையை ஏற்றுக்கொண்ட அல்லாஹ், இப்றாஹீம் (அலை) அவர்களின் மனைவியான ஹாஜரா (அலை) அவர்கள் மூலமாக இஸ்மாயீல் என்ற பெயரில் ஓர் அழகான ஆண் குழந்தையைக் கொடுத்தான். இதனிடையே ஒருநாள் தனது மனைவியையும் சிறு குழந்தையையும் பாலைவனத்தின் ஓரிடத்தில் தன்னந்தனியாக விட்டு வருமாறு நபி இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் கட்டளையிட்டான். ஆகவே அல்லாஹ்வின் அந்த கட்டளையை ஏற்றுக்கொண்ட இப்றாஹீம் (அலை) அவர்கள் கொதிக்கும் பாலைவனத்தில் தனது பிஞ்சுக் குழந்தை இஸ்மாயீலையும் மனைவி ஹாஜராவையும் தனியே விட்டுச் சென்றார்கள். உண்ண உணவோ குடிப்பதற்குத் தண்ணீரோ இன்றி தாயும் குழந்தையும் கொதிக்கும் பாலைவனத்தில் தனிமைப்படுத்தப்பட்டார்கள்.

   அந்த பாலைவனத்தில் அமையப் பெற்ற இரண்டு மலைத்தொடர்களுக்கிடையே அன்னை ஹாஜரா அவர்கள் தண்ணீர் தேடி ஓடிய வேளையில் பசியின் கொடுமை தாங்காது அழுதுகொண்டிருந்த அந்த பச்சிளம் பாலகர் இஸ்மாயீலின் பிஞ்சுப் பாதங்கள் நிலத்தைத் தொட்டதும் குழந்தையின் காலடியில் நீர் பெருக்கெடுத்து ஆறாக ஓடத் துவங்கியது. அந்த நீரைக்கொண்டு குழந்தையும் தாயும் தாகம் தீர்த்துக்கொண்ட பின்னர் கட்டுக்கடங்காது ஓடிய அந்த நீர் ஊற்றை நோக்கி ஹாஜரா அம்மையார் ஸம் ஸம் (நில் நில்) என்று கூறியதும் பீரிட்டுப் பாய்ந்து ஓடிய அந்த நீரின் வேகம் குறைந்தது. மாபெரும் பாலைவனத்தில் பெருக்கெடுத்து ஓடிய இந்த நீர் ஊற்றை மையமாகக்கொண்டு அந்த பிரதேசத்தில் பிற்காலத்தில் குடியிருப்புக்கள் தோன்றவாரம்பித்ததாக வரலாறுகள் கூறுகின்றன. ஸம் ஸம் கிணற்றுக்கு அருகே அமைந்துள்ள க.்.பாவானது அல்லாஹ்வை நினைவு கூருவதற்காக உலகில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது பள்ளிவாயில் ஆகும். இப்றாஹீம் (அலை) அவர்களும் அவரது புத்திரரான இஸ்மாயீல் (அலை) அவர்களும் ஒன்றிணைந்து க.்.பாவை நிர்மாணித்தார்கள். கால ஓட்டத்தில் சனநெருக்கமுடைய மக்கா நகரமாக மாற்றம் பெற்றதுடன் யாத்திரிகர்கள் மதக் கிரியைகளை நிறைவேற்றுகின்ற கேந்திர நிலையமாகவும் சமாதானம் மற்றும் பாதுகாப்பினை வழங்கும் ஓர் இடமாகவும் அது கருதப்படுகிறது. இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஊற்றெடுக்க ஆரம்பித்த இந்த நீர் ஊற்றினைத் தற்போதும் காணக் கூடியதாயுள்ளதுடன் மக்காவில் வசிக்கும் இலட்சக்கணக்கான மக்களாலும் வெளிநாடுகளிலிருந்து க.்.பாவைத் தரிசிக்க வருகை தரும் இலட்சக்கணக்கான மக்களாலும் இந்த ஸம்ஸம் நீர் பயன்படுத்தப்படுவது இப்றாஹீம் (அலை) அவர்கள் செய்த உன்னத தியாகத்தின் பயனால் ஆகும்.

மக்கா நகருக்கு வருகை தரும் அனைவரும் அல்லாஹ்வின் எல்லையற்ற கருணைக்கு ஆளாவதுடன் உலகின் பல்வேறு திசைகளில் இருந்து ஹஜ் கடமைக்காக வருகை தரும் முஸ்லிம்களின் ஒரே எதிர்பார்ப்பு அல்லாஹ்வின் மீதுள்ள அவர்களின் பயபக்தியை மக்காவில் வெளிக்காட்டுவதாகும்.

ஈதுல் அல்ஹா தியாகத் திருநாள் அனைத்து முஸ்லிம்களாலும் கொண்டாடப்படும் ஒரு முக்கியமான பண்டிகை ஆகும். அன்றைய தினம் புத்தாடை அணிந்து காலைப் பொழுதில் பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவதற்காக மஸ்ஜித்களுக்கும் விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட திடல்களுக்கும் செல்வது வழக்கம். முதலாவதாக அல்லாஹ்வைத் தொழுத பின்னர் அனைவரும் ஒருவருக்கொருவர் ஆரத்தழுவி அரவணைத்து சுபசோபனம் தெரிவித்துக் கொள்வார்கள். அன்றைய தினம் தமது உற்றார் உறவினர் மற்றும் நண்பர்களைச் சந்தித்து அவர்களுக்கு சாந்தி சமாதானம் (சலாம்) உண்டாவதற்காகப் பிரர்த்திப்பது ஒரு மரபாக உள்ளது.

தனது அந்தஸ்து என்னவாக இருந்தாலும் அனைத்து மனிதர்களும் சமமானவர்கள் என்பதைப் புரிந்துகொள்வதற்கு ஹஜ்ஜுப் பெருநாள் காரணமாக அமைகிறது. ஏனெனில் அரச தலைவர், செல்வந்தர், ஏழை எவராக இருந்தாலும் க.்.பாவின் சன்னிதானத்தில் யாவரும் சமமானவர்களே. ஹஜ் என்பதன் மூலம் கருதப்படுவது அல்லாஹ்வின் மீதுள்ள பயபக்தி மாத்திரமே. உலகம் பூராகவுமுள்ள ஒட்டுமொத்த முஸ்லிம்களாலும் ஓரே நேரத்தில் அனுஷ்டிக்கப்படும் ஹஜ்ஜுப் பெருநாள் மூலம் சமத்துவம் சகவாழ்வு மற்றும் தியாகம் ஆகிய உன்னதமான தூது முழு மனித சமுதாயத்தின் மத்தியிலும் கொண்டுசெல்லப்படுகிறது.

**மாதிரிச் செயற்பாடுகள்**

**(அ) முதியோர் இல்லம் அல்லது சிறுவர் இல்லத்திற்கு உதவுதல்**

எந்தவொரு மதத்தையும் பின்பற்றுகின்ற மாணவர்கள் கல்வி கற்கும் ஒரு பாடசாலைக்கு தனியாகவோ வேறு பாடசாலைகளுடன் இணைந்தோ ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு உதவிகள் சேகரிக்கப்பட்டு முதியோர் இல்லத்திற்கு அல்லது சிறுவர் இல்லத்திற்கு உதவிகளை வழங்க முடியும்.

**முறைமை :**

(1) முதியோர்/ சிறுவர் இல்லத்தில் உரிய திகதியை ஒதுக்குதல்.
(2) குறித்த தினம் முழுவதும் அங்கு தங்கி இருந்து முதியோர்/ சிறுவர்களுடன் செயற்பாடுகளில் ஈடுபடல்.
(3) ஹஜ்ஜுப் பெருநாள் பற்றிய ஒரு சொற்பொழிவினை மதத் தலைவர் ஒருவரைக் கொண்டு நடாத்துதல்.

**(ஆ) ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தை முன்னிட்டு அன்பளிப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்**

தெரிவு செய்யப்பட்ட பௌத்த / ஹிந்து / கிறிஸ்தவ பாடசாலை ஒன்றில் நிலவும் ஒரு குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான அன்பளிப்புக்களை வழங்குதல் (நீர்த்தாங்கி, ஏதேனும் திருத்தங்களை மேற்கொள்ளல், ஏதேனும் ஓர் உபகரணத்தை வழங்குதல் அல்லது ஏதேனும் ஒரு வசதியை செய்து கொடுத்தல்)

**முறைமை :**

(1) குறித்த செயற்பாடு தொடர்பான முன் ஆயத்தமும் அது தொடர்பாக அறிவித்தலும்
(2 ) அன்பளிப்பு வழங்குவதற்கான ஒரு வைபவத்தை நடாத்தி அதன் போது இஸ்லாம் மதம் தொடர்பாகவும் நோன்பு தொடர்பாகவும் விளக்கமளித்தல்.
(3) மதத் தலைவர்கள், பாடசாலைச் சமூகம் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்கு அழைப்பு விடுத்தல்.

# தீபாவளி பண்டிகை



## அறிமுகம்

இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளுள் தீபாவளிப் பண்டிகையும் பிரதானமானதொன்றாகும். இந்துக்கள் மட்டுமின்றி ஜைனர்களும் பௌத்தர்களும் கூட இந்தியாவில் இப் பண்டிகையைக் கொண்டாடியதாகக் கூறப்படுகிறது. மகாராஷ்ரா, உத்தரப் பிரதேசம், வங்காளம், தில்லி, ராஜஸ்தான், தமிழ்நாடு என இந்தியாவின் பலபகுதிகளில் மட்டுமின்றி ஆசியாவிலே மிக அதிகமான மக்கள் கொண்டாடும் ஒரே பண்டிகையாக தீபாவளி விளங்குகிறது என்பர். இன்று பிரித்தானியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் (Festival of lights) தீபாவளி முக்கியத்துவத்தோடு கொண்டாடப்படுகிறது. இலங்கையில் இந்துக்கள் வாழும் பிரதேசமெங்கும் தீபாவளி கொண்டாடப்பட்டாலும் மலையகப் பிரதேசங்களில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுவதனைக் காணலாம்.

தீபாவளி (தீபம் + ஆவளி) என்பது தீபங்களின் வரிசை எனப் பொருள்படும். ஆவளி என்றால் வரிசை ஆகும். தீபங்கள் புற இருளை அகற்றி எல்லா இடங்களையும் ஒளிரவைக்கவல்லன. ஒளி மகிழ்ச்சியையும் நன்மைகளையும் கொண்டு வருமல்லவா? உண்மையில் தீபாவளி ஓர் ஒளித்திருவிழாவே ஆகும். தீபங்கள் புற இருளை அகற்றிப்புறத்தை ஒளிரவைப்பதைப்போல அகத்தை ஆக்கிரமித்திருக்கும் இருட் கசடுகளை அகற்றி அகவொளியை ஏற்படுத்தும் பண்டிகையாக தீபாவளி விளங்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும். அந்த எதிர்பார்ப்புடனேயே ஆண்டுதோறும் ஐப்பசி மாதத்து கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசிதிதியில் தீபாவளி கொண்டாடப்படுகின்றது.

தீபாவளித் திருநாளை வெற்றிப்பெருநாளாக கருதுதலும் உண்டு. முற்காலத்தில் நரகாசுரன் எனும் அரக்கன் தேவர்கள், முனிவர்கள் மனிதர்களையெல்லாம் வருத்திப் பெரும் கொடுமைகளைப் புரிந்து வந்தான். துயர் தாங்காத தேவர்கள் கிருஷ்ண பரமாத்மாவிடம் அடைக்கலமாயினர். தேவர் முதலியோரின் துயர்களை தீர்ப்பதற்கு கிருஷ்ண பரமாத்மா நரகாசுரனை அழித்தார். “இறக்கும் வேளையில் தான் இறந்த இத் தினத்தை மக்கள் குதூகலமாக கொண்டாட வேண்டும்” என நரகாசுரன் வேண்டிக்கொண்டான். அதற்கமையவே தீபாவளி வெற்றித் திருநாளாக, மகிழ்ச்சிப்பெருநாளாக கொண்டாடப்படுகின்றது. தீமை அழிந்து நன்மை பிறந்த நாளே தீபாவளி ஆகும்.

நரகாசுர வதத்தின்போது, கூட இருந்த பூமாதேவியின் அவதாரமான சத்தியபாமா (கிருஷ்ணரின் மனைவி) நரகாசுரன் இறந்த நாளை தீபமேற்றிக்கொண்டாட வேண்டும் என்றும் இன்றைய தினத்தில் செய்யப்படும் எண்ணெய்க் குளியலின் எண்ணெய்யில் மகாலெட்சுமி வாசம் செய்ய வேண்டும் என்றும், ஒவ்வோர் வீட்டுத் தண்ணீரிலும் கங்காதேவி எழுந்தருள வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டதற்கிணங்க கிருஷ்ண

பரமாத்மா அவ்வாறே நடக்கட்டும் என வரமருளினார். எனவே தீபாவளித் தினத்தில் செய்யப்படும் எண்ணெய்க்குளியல் "கங்காஸ்நானம்" என அழைக்கப்படுவதோடு அது அதிக நன்மைகளையும் தரும் எனவும் நம்பப்படுகின்றது.

தீபாவளித் தினத்தன்று அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து நீராடி புத்தாடை அணிந்து இறைவழிபாடுகளில் ஈடுபடுவர். ஆலயங்களுக்குச் செல்வர். பெரியோரைப் பணிந்து ஆசி பெறுவர். நண்பர்களோடும் உறவினர்களோடும் இனிய உணவுகளையும் பட்சணங்களையும் பகிர்ந்து உண்டு மகிழ்வர். தீபங்களை வரிசையாக ஏற்றி ஒளிப்பிரவாகத்தில் மகிழ்ச்சிக்கொண்டு திளைப்பர். சாதி, மத, இன வேறுபாடுகளின்றி வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக உறவாடி மகிழும் திருநாளாக தீபாவளி விளங்குகின்றது.

சனாதன முனிவரிடம் தீர்க்கதமஸ் என்ற முனிவர் ஒரு சந்தேகத்தைக்கேட்டார். "மனிதன் துன்பமாகிய இருளில் இருந்து விடுபட விரதங்களை அனுஷ்டித்து உடலை வருத்தி மேலும் துன்பத்திற்கு உள்ளாகின்றான். எனவே இதனைத் தவிர்ந்து மகிழ்ச்சியான வாழ்விற்கும் இறையருளுக்கும் வேறு வழியேதும் இல்லையா?" என்பதே அந்த சந்தேகமாகும். அதற்கு சனாதன முனிவர் தீவிரமான விரதங்களால் தான் ஒளிமயமான பரம்பொருளைக் காண முடியும் என்றில்லை. தீர்த்தமாடி, புத்தாடை உடுத்தி, இனிப்புப் பண்டங்களைச்சாப்பிட்டு ஏழை எளியோர்க்குக் கொடுத்து தீபங்கள் ஏற்றி மனம் மகிழ்ந்து கொண்டாடுவதாலும் துன்பமாகிய இருளிலிருந்து விடுபடலாம் என்றார். அத்தகைய கொண்டாட்டத்திற்காக அவர் பரிந்துரைத்த தினம் தீபாவளி ஆகும். எனவே இத்தினத்தை பிற உயிர்களை வருத்தும் காரியங்களில் ஈடுபடாமல் மது மாமிசங்களைத் தவிர்த்து ஏழை எளியாரையும் அரவணைத்து அவர்களையும் மகிழ்வித்து கொண்டாடி மகிழ்வோம்.

**மாதிரி செயற்பாடுகள்**

**(அ) தீபாவளி பண்டிகை முன்னிட்டு விளக்குகளை ஏற்றுதல்**

இந்து சமயத்தை வழிப்படுகின்ற மாணவர்கள் கற்கின்ற பாடசாலையொன்றுக்கு ஏனைய சமயங்களை வழிப்படும் பாடசாலை மாணவர்களின் பங்களிப்புடன் ஒழுங்கமைக்க முடியுமான செயற்பாடாகும். அதே போன்று இந்து அல்லாத ஏனைய சமயங்களை வழிப்படும் பாடசாலை மாணவர்களை பங்குபற்றச் செய்வித்து நடாத்துவதற்கு முடியுமான செயற்பாடாகும்.

**முறைமை :**

(1) செயற்பாடுகளை நடாத்துவதற்கு முன்னரான திகதியொன்றில் அதற்காக பங்களிப்புச் செய்கின்ற மாணவர்களுக்கு தீபாவளி மற்றும் விளக்கேற்றும் வழக்கத்தையும் அதன் நோக்கத்தையும் விளக்கப்படுத்தல்

(2) எல்லா பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்கின்றவாறு குழுப்படுத்தல் மற்றும் ஒவ்வொரு குழுவிடமும் விளக்கெற்றுவதனை ஒழுங்குபடுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்

(3) இந்து சமயத்தின் குரு ஒருவரை வரவழைத்து விளக்குகளை ஏற்றுவதற்கு முன்னர் ஆசீர்வாத பூஜைகளை நடாத்தல்.

(4) தீயினால் விபத்துகள் ஏற்பட முடியுமாவதால் முன்னாயத்தம்( பாடசாலை அல்லது பொது விளையாட்டு மைதானத்தில் இச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்)

(5) விளக்கு ஏற்றுவதனை பார்வையிடுவதற்கு சுற்றுபுறங்களில் உள்ள சமய தலைவர்களை, பிரபுக்களை அழைத்தல்.

**(ஆ) வயோதிபர் மற்றும் சிறுவர் இல்லமொன்றில் தீபாவளி பண்டிகை நடாத்துதல்.**

இந்து சமய பாடசாலையொன்றால் அல்லது ஏனைய சமயங்களில் பாடசாலை மாணவர்களை பங்குபற்றச் செய்வித்து சிறுவர் இல்லம் அல்லது வயோதிபர் இல்லத்தில் தீபாவளி பண்டிகையை நடாத்தலாம்.

**முறைமை :**

(1) உரிய திகதி முழுவதும் அந்த இடத்தில் தங்கியிருந்து வயோதிபர்கள் மற்றும் பிள்ளைகளுடன் தீபாவளி பண்டிகையின் மரபுகள் வழக்கங்கள் மற்றும் செயற்பாடுகளில் ஈடுபடல்

**(இ) தீபாவளி பண்டிகையை நடாத்தல்**

அனைத்து சமயங்களையும் வழிபடுகின்ற மாணவர்கள் கற்கும் பாடசாலைகளில் மாணவர்கள் ஒன்றிணைந்து தீபாவளி பண்டிகை கொண்டாடுதல்

**முறைமை :**

(1) தீபாவளி மரபுகள், பழக்க வழக்கங்கள் தொடர்பாக அடிப்படை புரிந்துக்கொள்ளுதலை வழங்குவதற்கு கலந்துரையாடல்களை நடாத்தல்
(2) பங்குபற்றும் அனைவருக்கும் சம்பிரதாய உணவு பானங்களில் உபசரணை செய்தல்

**(ஈ) தீபாவளி பண்டிகையின் பொருட்டு கலைவிழா நடாத்தல்**

இந்து சமயத்தை கற்கின்ற மாணவர்கள் உள்ள பாடசாலையொன்றில் இவ்வாறான பண்டிகை ஒழுங்கமைக்கலாம்.

**முறைமை :**

(1) நடனம், பாடல், பற்றி திறனுள்ள மாணவர்களைக் கொண்டு ஆக்கங்களை படைத்தல்
(2) தீபாவளி பண்டிகை மற்றும் அதனுடன் தொடர்புடைய வரலாற்று கதைகள் சார்ந்து படைப்புகளை உருவாக்குதல்.
(3) பண்டிகையை பார்வையிடுவதற்கு இந்து அல்லாத மாணவர்கள் கற்கும் பாடசாலைகளுக்கு அழைப்புவிடுதல்.
(4) சம்பிரதாய உணவு பான வகைகளை உபசரணை செய்தல்

**மேலதிக கருத்துகள்**

எல்லா சமயங்களிலும் கலாச்சார அம்சங்களை இந்த கலைவிழாவில் முன்னிலைப்படுத்தி கூட்டாக கலாச்சார வைபவமொன்றாக ஒழுங்கமைக்கலாம்.

இந்து அல்லாத மாணவர்கள் கற்கின்ற பாடசாலைகளிலும் இதனை காட்சிப்படுத்தலாம். அதன்போது தீபாவளி பற்றி போதனையொன்றை அது தொடர்பான தேர்ச்சியாளரால் மேற்கொள்ளுதல் பொருத்தமாகும்.

**(உ) வாழ்த்து அட்டைகளை தயாரித்தல்**

இந்து சமயத்தை வழிப்படாத மாணவர்கள் கற்கின்ற பாடசாலைகளில் மாணவர்கள் நடைமுறைப்படுத்த முடியுமான செயற்பாடாகும். தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இந்து பாடசாலை மாணவர்களுக்கு வாழ்த்து அட்டைகளை தயாரித்து அனுப்பி வைத்தல்.

**முறைமை :**

(1) தீபாவளி பண்டிகை முன்னிட்டு வாழ்த்து அட்டைகளை உருவாக்குவதற்கு விருப்பமுள்ள மாணவர்களை அதற்காக முன்வருமாறு திறந்த அழைப்பு விடுதல்.
(2) முன்வந்த மாணவர்களுக்கு நினைவு அட்டைகளை உருவாக்குதல் தொடர்பான செயலமர்வை ஒழுங்கமைத்தல்.
(3) உருவாக்கப்பட்ட நல்வாழ்த்து அட்டைகளை பாடசாலையில் காட்சிப்படுத்தல்
(4) இந்துவல்லாத சமயங்களை வழிபடும் பாடசாலை மாணவர்களால் உருவாக்கப்பட்ட நல்வாழ்த்து அட்டைகளை இந்து சமயத்தை வழிபடும் மாணவர்கள் கற்கின்ற பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்தல்

**மேலதிக கருத்துகள்**

இந்து சமயத்தை கற்கின்ற மாணவர்களின் பெயருக்கு நல்வாழ்த்து அட்டைகளை அனுப்பி வைக்கலாம் என்பதுடன், இந்துவல்லாத சமயத்தை வழிப்படுகின்ற மாணவர்கள் அனைவரும் இணைந்து இச் செயற்பாட்டினை ஒழுங்கமைக்கலாம்.

# நத்தார் திருவிழா



## அறிமுகம்

கிறிஸ்தவர்களுக்கு, சமூக கலாச்சார ரீதியாக கொண்டாடப்படும் நத்தார் திருவிழாவைப் போன்றதொரு திருவிழா பிறிதொன்றுமில்லை. சுதந்திரமும் சமாதானமும் அனைத்து மக்களினதும் விருப்பம் என்பதால் நத்தார் என்பது சமாதானத்திற்கு அழைப்பு விடுக்கும் ஒரு திருவிழாவாகும். மாட்டுத் தொழுவத்தில் பிறந்து மனுக்குலத்தை, அன்பு செய்து, இரக்கம் காட்டுவதை நோக்கமாகக் கொண்ட இயேசு கிறிஸ்து, உலகிற்கு அளித்த முன்மாதிரிகள் அளப்பரியன. நத்தாரின் மூலம் கிறிஸ்தவ விழுமியங்களான சகோதரத்துவம், இரக்கம் மற்றும் அன்பின் செய்தியை உலகிற்குக் கொணர்ந்த இயேசுவின் பிறப்பின் மகிழ்ச்சியை ஒருங்கே கொண்டாடுவதற்கு, குடும்பங்களையும், அனைத்து மக்களினங்களையும் இந்த நத்தார் ஒன்று திரட்டுகின்றது.

## கிறிஸ்துவின் பிறப்பு

புனித லூக்கா மற்றும் புனித மத்தேயு நற்செய்திக்கமைய கிறிஸ்து பிறப்பு தொடர்பான மகிழ்ச்சிகரமான கதை கூறப்பட்டுள்ளது. "மெசியா" அல்லது தேர்ந்து கொள்ளப்பட்டவர் என்ற பெயரில் அழைக்கப்படுகின்ற இயேசு கிறிஸ்து கன்னித் தாயான மரியாளிடமிருந்து பிறந்தவர் என்பது கிறிஸ்தவர்களின் விசுவாசமாகும். இயேசு கிறிஸ்து பெத்லகேம் நகரில் மரியாளுக்கும் தமது வளர்ப்புத் தந்தையான யோசேப்புக்கும் மகனாகப் பிறந்தார் என இந்நற்செய்திகள் குறிப்பிடுகின்றன. பேரரசன் அகுஸ்து சீசரினால் மக்கள் கணக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு நாட்டிலுள்ள அனைத்து மக்களையும் நகரத்திற்கு அழைத்ததன் காரணமாக நகரில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. நிறைமாதக் கர்ப்பிணியான மரியாளுக்கும் யேசேப்புக்கும் இரவில் தங்குவதற்கு இடமின்றி, இறுதியில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் தங்கியிருக்க வேண்டியேற்பட்டது. கர்ப்பிணித் தாயான மரியாள் அன்று இரவு மாட்டுத் தொழுவத்தில் (Stable) குழந்தை யேசுவைப் பெற்றெடுத்தாள். பாரம்பரியக் கதைகளில் இப்பிறப்பானது மாட்டுத் தொழுவத்தில் இடம்பெற்றதாகக் கூறப்பட்டாலும், நற்செய்திகளுக்கமைய அப்பிறப்பானது தீவனத் தொட்டியில் (Manger) இடம்பெற்றுள்ளது. (அது இன்றும் பெத்லகேம் நகரில் தேவாலயத்திற்குக் கீழ் அமைந்துள்ளது.)

இம்மாட்டுத் தொழுவத்திற்கருகில் சாமக்காவல் காத்துக் கொண்டிருந்த இடையர்களுக்கு வானதூததர்களால் இயேசுவின் பிறப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி நீண்ட காலத்திற்கு முன்னர் உரைக்கப்பட்ட இறைவாக்கு உண்மையானதை கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர்.

### நத்தார் கொண்டாட்டம்

முற்காலத்தில் நத்தார் ஒரு விழாவாகக் கொண்டாடப்படவில்லை. கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பவற்றை நினைவுபடுத்துகின்ற பாஸ்கா திருவிழாவே கிறிஸ்தவர்களிடையே முக்கியமாகக் கருதப்பட்டது. அவ்வாறே உரோமையில் பல்சமய நம்பிக்கைகள் காணப்பட்டதன் காரணமாக கிறிஸ்தவ சமயத்திற்கு உரோமைய ஆட்சியாளர்கள் இடமளிக்காததே இதற்குக் காரணமாகும். அவ்வாறே கி.பி.313இல் கொன்ஸ்டன்டைன் பேரரசனால் மிலான் கட்டளை வெளியிடப்பட்டதன் பின்னர், கிறிஸ்தவ பக்தி வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு கிறிஸ்தவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

### நத்தார் தினம் பெயரிடப்படுதல்

இயேசுவின் பிறப்பு டிசம்பர் 25ஆந் திகதி ஏன் கொண்டாடப்படுகின்றது என்பது இன்னமும் அறியப்பட முடியாத ஒரு விடயமாக இருக்கின்றது. விவிலியத்தின் புதிய ஏற்பாட்டிலும் இது தொடர்பாக சரியான திகதி குறிப்பிடப்படவில்லை. திருச்சபையினால் கி.பி.4ஆம் நூற்றாண்டு தொடக்கம் நத்தார் கொண்டாடப்படும் தினமாக டிசம்பர் 25ஆந் திகதி காணப்படுகின்றது. அத்தினத்தில் நத்தார் கொண்டாடப்படுவது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. உரோமையின் கடவுள்கள் இத்தினத்திலேயே வணங்கப்பட்டுள்ளதாக ஒரு கருத்து காணப்படுகின்றது. மேலும் உரோமையின் செழிப்புக்கு அதிபதியான “சடர்ன” கடவுளை வழிபடுவதற்கு டிசம்பர் 17 தொடக்கம் 24 வரையான காலப்பகுதியில் கொண்டாட்டங்கள் இடம்பெற்றதால், டிசம்பர் 25ஆந் திகதியில் நத்தார் கொண்டாடப்பட்டதாக இன்னுமொரு கருத்து காணப்படுகின்றது. அவ்வாறே சிரிய பாரம்பரியத்தின் “எமேசா” சூரியக்கடவுளின் திருவிழா டிசம்பர் 25ஆந் திகதி கொண்டாடப்படுவதுடன், கிறிஸ்து முடிவில்லா ஒளியைக் கொண்டு வருவதால் இத்தினத்தில் நத்தார் கொண்டாடப்படுவதாக பிறிதொரு கருத்தும் காணப்படுகின்றது. அவ்வாறே யூதேய எண்சோதிடத்திற்கமைய அவர்களது “ஹனுக்கா” என்ற ஒளியின் திருவிழா இடம்பெறுகின்ற “கிஸ்லெவ”என்ற தினமும் டிசம்பர் 25ஆம் திகதியில் அமைந்ததாலும் கிறிஸ்தவ மதத்திற்கு யூதப் பின்னணியும் காணப்பட்டதாலும், அதே தினத்தில் கொண்டாடப்படுவதாகவும் கருத்துக்கள் நிலவுகின்றன.

### இலங்கையில் நத்தார் திருவிழா

இலத்தின் மொழியில் பிறப்பு என்பதைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற வார்த்தை NATUS என்பதாகும். போர்த்துக்கேய மொழியில் இது NATAL எனக் குறிப்பிடப்படுகின்றது. போர்த்துக்கேய மொழியின் தாக்கத்தின் காரணமாக தமிழ் மொழியில் நத்தார் எனக் குறிப்பிடப்படுகின்றது. கி.பி.1505 இல் போர்த்துக்கேயர்கள் இலங்கைக்கு வருகை தந்ததன் பின்னர் நத்தாரும் இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வருடத்தில் ஜின்சேஸ் என்ற கத்தோலிக்க பாதிரியாரினால் கொழும்பில் அமைக்கப்பட்ட சிறிய செப அறையில் இலங்கையின் முதலாவது நத்தார் ஆராதனை இடம்பெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நத்தார் திருவிழா

டிசம்பர் மாதம் 24 ஆந் திகதி நள்ளிரவில் நடாத்தப்படுகின்ற கிறிஸ்துவின் பிறப்பு கொண்டாட்ட ஆராதனையில் கிறிஸ்தவர்கள் மிகுந்த பக்தியுடன் பங்குகொள்கின்றனர். அன்றைய தினம் உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவ மக்கள் ஒரே குடும்பமாக ஒன்றிணைந்து இறைவனை வழிபடுவர். கிறிஸ்து பிறந்த பலஸ்தீனத்தின் பெத்லகேம் நகரில் இடம்பெறும் தேவ ஆராதனைகளுக்கு உலகின் பல பாகங்களிலுமுள்ள பக்தர்கள் ஒன்று திரள்வர். திருச்சபையானது கிறிஸ்துவின் பிறப்பு தினம் வரும்வரை, அதாவது அதற்கு முன்னரான திருவருகைக் காலத்தில், பல்வேறு பக்தி முயற்சிகளில் ஈடுபடுவர்.

நத்தார் காலங்களில் முக்கியமான பல சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிறிஸ்துவின் மீது பக்தியோடு, கடவுளின் மகிமையைப் பறைசாற்றுதல், அன்பு செலுத்துதல், கிறிஸ்து இவ்வுலகிற்கு கொண்டு வந்த சமாதானத்தின் நற்செய்தியை பகிர்ந்து கொள்ளுதல் போன்ற பல்வேறு விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றுள், பிள்ளைகள் தமது பெற்றோரை வணங்குதல், பரிசில்களை வழங்குதல், வறியவர்களுக்கு பரிசில்களை வழங்குதல், நண்பர்கள், உறவினர்கள், அயலவர்களைச் சந்தித்தல், உறவுகளை மேம்படுத்துதல், தமது தவறுகளுக்காக மன்னிப்பு கோருதல் போன்ற நற்காரியங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவ்வாறே, சிறுவர்களைப் போன்றே பெரியவர்களும் கிறிஸ்து பிறப்பை நினைவுகூருமுகமாக நத்தார் கீதங்களை இசைத்தல் (Christmas Carols), நடாகங்களை நடித்தல் என்பவற்றில் ஈடுபடுவர். சில இடங்களில் கிறிஸ்து பிறந்த மாட்டுத் தொழுவம் மற்றும் அங்குள்ளவர்களின் உருவங்கள் கலையம்சத்துடன் அமைக்கப்பட்டிருக்கும்.

## நத்தாருடன் தொடர்புபட்டுள்ள கலாச்சார அம்சங்கள்

### நத்தார் தாத்தா

தியாகம், சமாதானம், அன்பு என்பன நத்தாரின் முக்கியமான அம்சங்களாகும். இதன்போது பெரிது சிறிது என்ற பேதமின்றி மக்களின் இதயங்களில் வலம் வரும் ஒரு நபர் நத்தார் தாத்தாவாகும். நத்தார் தாத்தா தொடர்பான வரலாற்றுத் தகவல்களைத் தேடிப் பார்க்கும் போது துருக்கியின் மீராவில் பராடா நகரில் வசித்து வந்த நிக்கலஸ் என்ற தனவந்தர் தமது உரிமைச் சொத்தில் கிடைத்த செல்வத்தை வறியவர்களுக்கு பகிர்ந்தளித்து புண்ணிய காரியத்தில் ஈடுபட்டு வாழ்ந்ததாகவும், அவரே பிற்காலத்தில் நத்தார் தாத்தாவாக அழைக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. பிற்காலத்தில் இவர் புனிதராக உயர்த்தப்பட்டு புனித நிக்கலஸ் என அழைக்கப்பட்டார். இவர் நத்தார் காலங்களில் தமது சொந்தப் பணத்தைச் செலவு செய்து வறிய குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கு இரகசியமாக பரிசில்களை வழங்கியுள்ளார். அதாவது இரவு நேரங்களில் வீடுகளிலுள்ள புகைக்கூண்டு வழியாக வீட்டிற்குள் நுழைந்து பரிசில்களை வைத்துவிட்டுச் செல்வார். இவரிடம் காணப்பட்ட இரக்க சுபாவம் மற்றும் தியாக மனப்பான்மை காரணமாக மக்களிடையே இவர் வெகுவாகப் பிரபல்யமடையத் தொடங்கினார். இவரைப்பற்றி பல கர்ணபரம்பரைக் கதைகள் காணப்படுகின்றன. இவரை அடக்கம் செய்த கல்லறை, பக்தர்களின் வழிபாட்டிற்குட்பட்டுள்ளதுடன், இத்தாலியின் பாரி என்ற பிரதேசத்தில் புனித நிக்கலஸ் பெயரில் ஒரு தேவாலயமும் காணப்படுகின்றது. இவர் கிரீஸ் மற்றும் ரஷ்யாவின் பாதுகாவலராக திருச்சபையால் நியமிக்கப்பட்டுள்ளார். சின்டக்லாஸ் Sinter Klaas என ஒல்லாந்த மொழியில் அழைக்கப்படுகின்ற இவர் பிற்காலத்தில் Santa Claus என அழைக்கப்பட்டார். அவரிடம் காணப்பட்ட தியாக மனப்பான்மை காரணமாக பிற்காலத்தில் அவர் நத்தார் தாத்தா என அழைக்கப்பட்டார். தற்காலத்தில் நாம் காணும் நத்தார் தாத்தாவின் ஓவியத்தை வரைந்தவர் தோமஸ் நாஸ்ட் (1840-1902) என்ற ஓவியராவார். சிறுவர்களிடையே அன்புமிக்கவராக இருந்த நத்தார் தாத்தா நீண்ட வெள்ளைத் தாடியும், சிவப்பு அங்கியும், பொம்பொம் சிவப்பு தொப்பியும் அணிந்து காணப்பட்டார். பரம்பரைக் கதைகளுக்கமைய தாத்தாவுக்கு விளையாட்டுப் பொருள் கடையொன்று காணப்பட்டதுடன் அதில் தேவர்கள் வேலை செய்தார்கள். நத்தார் தாத்தாவின் பரிசு வண்டிலை சிவப்பு நிற "ருடோல்ப் பனி மான்கள் இழுத்துச் செல்லும்.

### மேலதிக தகவல்கள்

இத்தாலியில் பெபோ நடாலே என்ற நபர் நத்தார் தாத்தாவாக தோன்றியதாகவும் கதைகளுள்ளன. அவ்வாறே இத்தாலிய பாரம்பரியங்களில் வருகின்ற ஒரு பாத்திரமான லா பெபானா என்ற பெண் மாலை நேரங்களில் பரிசுகளை கொண்டு செல்வதாகவும் அவள் குழந்தை இயேசுவுக்கு பரிசு கொண்டு செல்லும் வேளையில் காணாமற் போய்விட்டதாகவும் கூறப்படுகின்றது. அதனால் அவள் எல்லாப் பிள்ளைகளுக்கும் பரிசு கொண்டு வருவதாக நம்பப்படுகின்றது.

பல்வேறு கலாச்சாரங்களில் நத்தார் தாத்தாவின் உதவியாளர்களாக குள்ளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களால் பரிசுகள் தயாரிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. சில இலத்தீன் அமெரிக்க நாடுகளில் காணப்படுகின்ற கலாச்சாரத்திற்கமைய நத்தார் தாத்தா பரிசுகளைத் தயாரித்து குழந்தை இயேசுக்கு கொடுப்பதுடன், குழந்தை இயேசுவினால் அப்பரிசில்கள் குழந்தைகளுக்கு வழங்கப்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

### நத்தார் மரம்

நத்தார் மரத்தின் மூலம் கிறிஸ்துவின் வாழ்க்கை அடையாளப்படுத்தப்படுகின்றது. உயிருள்ள இறைவன் மக்களிடையே வாழ்வதாக இதன் மூலம் கருதப்படுகின்றது. நத்தார் விழா கொண்டாடப்பட ஆரம்பிப்பதற்கு முன்னர் இது கிறிஸ்து மரம் என்றே அழைக்கப்பட்டது. பின்னர் அது நத்தார் விழாவையொட்டி நத்தார் மரமென்ற பெயராக மருவியுள்ளது. கிறிஸ்துவின் வாழ்வில் காணப்பட்ட

அர்ப்பணிப்பு, ஒளி, இந்நத்தார் மரத்தின் மூலம் குறித்துக் காட்டப்படுகின்றது. நத்தார் மரத்தில் தொங்கவிடப்பட்டுள்ள பொருட்கள் அல்லது நத்தார் மரத்தின் அடியில் வைக்கப்படும் பொருட்களை வறிய மக்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் தியாகம் வெளிப்படுகின்றது. குடும்பத்திலுள்ள அனைவரும் ஒன்றாக இணைந்து நத்தார் மரத்தை தயாரிப்பதன் மூலம் குடும்ப ஒற்றுமை, சகவாழ்வு ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன.

தற்போதைய நத்தார் மரமானது ஜேர்மனியில் தொடங்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. எனினும் அது மார்டின் லூதர் கிங்கினால் உருவாக்கப்பட்டது என சிலர் வாதிக்கின்றனர். ஜேர்மனியிலிருந்த இப்பாரம்பரியம் அக்காலத்தில் வாழ்ந்த சாலட் அரசியினால் இங்கிலாந்தில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது எனவும், ஜேர்மனிய குடியேற்றவாசிகளால் அது அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

நத்தார் மரமாக 19ஆம் நூற்றாண்டு தொடக்கம் பொயின்செடியா (Poinsettia) என்ற மரமும் ஹோலி (Holly), மிசல்டோ (Mistletoe), சிவப்பு அமாரிலிஸ் (Red Amaryllis) மற்றும் நத்தார் கள்ளி மரமும் (Christmas Cactus) பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

நத்தார் மரம் பயன்பாட்டிற்கு வந்தது பற்றியும் பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. பழம்பெரும் சமுதாயத்தில் காணப்பட்ட மரங்கள் மற்றும் கிளைகள் வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டதாகவும் ஒரு கருத்து காணப்படுகின்றது. மற்றைய அனைத்து வகையான மரங்களும் கபில நிறத்தை அடையும் பனிக்காலத்தில் இந்த பசுமையான மரங்கள் மட்டும் எப்போதும் பச்சை நிறமாகவே காட்சியளிப்பதுடன் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக குளிர் பிரதேசங்களிலுள்ள மக்களது பல்பரிமாணமிக்க வாழ்க்கையின் அடையாளமாகவும் இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

முதன் முதலில் 1605இல் ஜேர்மனியின் ஸ்டார்ஸ்பேர்க் பிரதேசத்தில் மிகச் சிறப்பாக நத்தார் மரம் அலங்கரிக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. இந்நத்தார் மரம் கடதாசி ரோஜாப்பூக்கள், அப்பிள், மற்றும் இனிப்புப் பண்டங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. நத்தார் மரமானது, பாலைவனங்களில் நட்சத்திரங்கள் ஒளிர்ந்த விதத்தை நினைவுகூரும் பொருட்டு ஆரம்பக் காலத்தில் மெழுகுதிரிகளால் ஒளிர்விக்கப்பட்டதுடன் தற்போது மின் விளக்குகளால் அலங்கரிக்கப்படுகின்றன. காலத்தின் மாற்றங்களுக்கேற்ப நத்தார் மரத்தை அலங்கரிக்கும் விதமும் மாறுபட்டுள்ளது. நத்தார் மரமானது பல்வேறு கைவினைப்பொருட்கள், பரிசுப் பொதிகள், அலங்கார நட்சத்திரங்கள், சிறிய முத்துக்கள், அலங்கார கண்ணாடிகளால் அலங்கரிக்கப்படுகின்றது. தேசத்திற்குத் தேசம் பல்வேறு விதங்களில் பரிணாமம் அடைந்தாலும் நத்தார் மரமானது எக்காலத்திலும் முக்கியத்துவமும், பெறுமதியும் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. இது ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் பல்வேறு வடிவங்களைப் பெற்றிருந்தாலும் தற்காலத்தில் இது வர்த்தகமயமாகி பல்வேறு விதங்களில் விற்பனை செய்யப்படுகின்றது.

**நத்தார் பாடல்கள்**

திருவிவிலியத்தில் இயேசு கிறிஸ்து பிறந்த இடத்தில் அவரது பிறப்புப் பற்றிய மகிழ்ச்சி பாடல் பாடப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி.4ஆம் நூற்றாண்டிலேயே மிகத் தொன்மையான நத்தார் பாடல் கிடைக்கப்பெறுகின்றது. 12ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற திருப்பலிகளின் போது பாடுவதற்கு அசீசியின் பிரான்சிஸினால் கரோல் பாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கரோல் என்ற பிரெஞ்சு சொல்லின் அர்த்தம் சுழற்சியாக நடனமாடுதல் என்பதாகும்.

1410ஆம் ஆண்டில் ரீட்சன் என்பவரால் ஆங்கிலத்தில் கரோல் பாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பல கரோல் பாடல்கள் மடாலயங்களில் வாழ்ந்த தபசிகளால், விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதுடன் தற்காலங்களிலும் விவிலியத்தை மையமாகக் கொண்டு கரோல் கீதங்கள் உருவாக்கப்படுகின்றன.

1634 இல் உலகப்பிரசித்தம் வாய்ந்த நாடுகளின் நாடகம் ஜேர்மனியில் முதன்முறையாக அரங்கேற்றப்பட்டது. ஜோர்ஜ் நொட்றிக் ஹென்டல் என்பவரினால் கரோல் கீதங்களுக்கு பாரிய பங்களிப்பு நல்கப்பட்டதுடன் அவரால் மெசியா (மெசியா என்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று அர்த்தம்) என்ற படைப்பு உருவாக்கப்பட்டது. இதற்குப் புறம்பாக ஒஸ்ரியா நாட்டைச் சேர்ந்த ஜோசப் மோர் அடிகாளார் எழுதி, சேவர் குரூபர் அடிகளாரால் இசையமைக்கப்பட்ட "சைலன்ட் நைட் ஹோலி நைட்" என்ற பாடல் உலகெங்கிலும் 180இற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே "ஜிங்கல் பெல்ஸ்" என்ற பாடல் ஜேம்ஸ் தயர்பொன்ட் என்பவரால் உருவாக்கப்பட்டதுடன் அதுவும் உலகெங்கிலும் பிரபல்யமடைந்துள்ள ஒரு நத்தார் பாடலாகும்.

**வால் நட்சத்திரம்**

நத்தார் மரங்களில் இந்த வால் நட்சத்திரம் கட்டாயம் தொங்கவிடப்படுவதற்குக் காரணம் மூன்று அரசர்கள் கிறிஸ்து பிறந்த இடத்தை அறிந்து கொள்வதற்கு இந்த வால் நட்சத்திரம் வழிகாட்டியமையாகும். உலகிற்கு ஒளியாக விளங்கிய கிறிஸ்து பாலன் பிறந்த பெத்லேகேமின் மாட்டுத் தொழுவத்திற்கு மேலாக வானத்தில் இந்த வால் நட்சத்திரம் ஒளிர்ந்தது. அதனை நினைவுபடுத்தி நத்தார் மரத்தின் உச்சியிலும், ஆலயங்களின் உச்சியிலும் இந்த வால் நட்சத்திரம் தொங்கவிடப்படுகின்றது.

**வான தூதர்கள்**

கிறிஸ்தவ சமயத்தில் வான தூதர்களின் தொடர்புகள் அதிகம் பேசப்படுகின்றன. நத்தாரின்போது வானதூதர்களின் உருவங்கள் அலங்கரிக்கப்படுகின்றன. அத்தோடு மாட்டுத் தொழுவத்தை அலங்கரிப்பதற்கும் வானதூதர்கள் பயன்படுத்தப்படுகின்றார்கள். கரோல் வீதி வலம் வருகையில் வானதூதர்களைப் போல் உடையணிந்த சிறுவர்களும் அதில் காட்சியளிப்பார்கள். மாட்டுத் தொழுவத்தின் உச்சியிலும் வானதூதரின் சிலையொன்று தொங்கவிடப்பட்டிருக்கும். புனிதத்துவத்தை எடுத்துக் காட்டும் முகமாக சிறு பிள்ளைக்கு ஒப்பான முகத்துடனும் நீண்ட வெள்ளை அங்கியுடனும் விசாலமான இரண்டு சிறகுகளுடனும் வானதூததர்கள் உருவாக்கப்படுகின்றார்கள்.

**மாதிரி செயற்பாடுகள்**

**(அ) நத்தார் வாழ்த்துக்களை அனுப்புதல்**

கிறிஸ்தவரல்லாத சமயத்தைச் சார்ந்த மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளிலுள்ள மாணவர்கள் இச்செயற்பாட்டைச் செய்யலாம். நத்தார் விழாவை ஒட்டி கிறிஸ்தவ பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கு தயாரிக்கப்பட்ட வாழ்த்து அட்டைகளை அனுப்பலாம்.

**முறைமை :**

(1) கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றும் பாடசாலை மாணவர்களுக்கு நத்தார் வாழ்த்து அட்டைகளைத் அனுப்ப விரும்பும் கிறிஸ்தவரல்லாத சமயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு, திறந்த மட்டத்தில் அழைப்பை விடுத்தல். (அறிவித்தல்/சுவரொட்டி/கடிதம் மூலம்)

(2) முன்வருகின்ற மாணவர்களுக்கு வாழ்த்து அட்டையொன்றை எவ்வாறு தயாரிப்பது என்பது தொடர்பாக செயலமர்வொன்றை ஒழுங்கு செய்தல். அந்த செயலமர்வின் போது,

- ★ நத்தார் விழா தொடர்பாக அடிப்படை விளக்கத்தை வழங்குதல்.
- ★ நத்தார் வாழ்த்து அட்டைகளைத் தயாரித்துக் கொள்ளக்கூடிய விதம் தொடர்பாக விளக்கத்தினை அளித்தல்
- ★ தெரிவுசெய்யப்பட்ட மாதிரி வாழ்த்து அட்டைகளை பார்ப்பதற்கு வழங்குதல்.
- ★ வாழ்த்து அட்டைகளைத் தயாரிப்பதற்கு சந்தர்ப்பங்களை வழங்குதல்.

(3) தயாரிக்கப்பட்ட வாழ்த்து அட்டைகளை பாடசாலையில் காட்சிப்படுத்துதல்.

(4) தயாரிக்கப்பட்ட வாழ்த்து அட்டைகளை கிறிஸ்தவ பாடசாலை மாணவர்களுக்கு அனுப்புதல்.

(5) அவற்றைத் தயரித்த மாணவர்கள், கிறிஸ்தவ மாணவர்கள் இருக்கும் பாடசாலைகளுக்குச் சென்று அவற்றை நேரடியாக அவர்களுக்கு வழங்கலாம்.

**மேலதிக விளக்கங்கள்**

கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றுகின்ற பாடசாலை மாணவர்களுக்கு அவர்களது பெயரிலேயே வாழ்த்து அட்டைகளை அனுப்பக்கூடிய விதத்தில் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ய முடியும்.

கிறிஸ்தவரல்லாத சமயத்தைப் பின்பற்றுகின்ற மாணவர்கள் கல்வி கற்கும் ஏனைய பாடசாலைகள் அனைத்தும் ஒன்றாக இணைந்து இத்தகைய நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யலாம்.

அனைத்து மாணவர்களுக்கும் வழங்க முடியாவிட்டாலும் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த மாணவர்கள் உள்ள பாடசாலையில் தர அடிப்படையிலேனும் விளம்பரப் பலகையில் வாழ்த்து அட்டைகளை விளம்பரம்படுத்தலாம்.

### (ஆ) நத்தார் பக்தி பாடல்களை இசைத்தல்

இச்செயற்பாடுகளுக்காக கிறிஸ்தவ சமய மற்றும் கிறிஸ்தவ சமயத்தைச் சாராத பாடசாலை மாணவர்களை ஒருங்கிணைத்து நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யலாம்.

**முறைமை :**

(1) பாடல்களைப் பாடுவதற்கும், வாத்தியக் கருவிகளை இசைப்பதற்கும் திறமையுள்ள ஆசிரியர்களையும், மாணவர்களையும் பங்குபற்றுவதற்கு அழைப்பு விடுத்தல்.
(2) பாடல்களை எழுதுவதற்குத் திறமையுள்ள ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சந்தர்ப்பத்தினை வழங்குதல்.
(3) பாடல் ஆக்கத்தின்போது, சமய உணர்வு, சமாதானம், ஒருமைப்பாடு என்பவற்றை மையமாகக் கொண்டு எழுதுவதற்கு ஆர்வமூட்டுதல் வேண்டும்.
(4) நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளல்.
(5) நத்தார் விழா தொடர்பாக சிறு உரையொன்றை ஆற்றுதல்.

**மேலதிக விளக்கங்கள்**

கிறிஸ்தவ சமயத்தைப் பயிலும் மாணவர்கள் உள்ள பாடசாலையிலுள்ள மாணவர்கள் மட்டும் பங்குபற்றி செய்யப்படுகின்ற ஒரு நிகழ்ச்சியெனின், இந்நிகழ்ச்சியைக் கண்டுகளிப்பதற்கு சுற்றியுள்ள மற்றைய பாடசாலை மாணவர்களுக்கும் அழைப்பு விடுத்தல்.

பல்வேறு பாடசாலைகளிலுள்ள மாணவர்கள் கலந்து ஒழுங்கு செய்யப்படுகின்ற நிகழ்ச்சியெனின் அனைத்து பாடசாலைகளிலும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

பாடல்களை ஒழுங்குசெய்யும்போது தமிழ்/ சிங்கள மொழியில் எழுதப்பட்ட பாடல்களுக்கும் சந்தர்ப்பங்களை வழங்குதல் வேண்டும்.

கிறிஸ்தவ சமயத்தைச் சாராத மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளிலும் இந்நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு அந்தப் பாடசாலைகளுடன் கலந்துரையாடுக.

பிற சமயத் தலைவர்களையும் நிகழ்ச்சிகளைப் பார்வையிட அழைப்பு விடுத்தல்.
வேறு சமயத்தைச் சார்ந்த பிள்ளைகளை நிகழ்ச்சிகளில் சேர்க்கும் போது அவர்களிடமும், அவர்களது பெற்றோரிடமும் விருப்பத்தைக் கேட்டறிதல்.

### (இ) ஒருங்கிணைந்த நத்தார் சித்திரப் போட்டி

கிறிஸ்தவ மற்றும் கிறிஸ்தவமல்லாத சமயத்தைச் சார்ந்த மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளில் மாணவர்களது பங்கேற்புடன் நடத்தலாம்.

தரம் 9க்கு மேற்பட்ட மாணவர்களுக்குப் பொருத்தமாக அமையும்.

**முறைமை :**

(1) சித்திரப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களுக்கு நத்தார் விழா தொடர்பாக தெளிவுபடுத்துதல்.
(2) நத்தார் திருவிழாவும் சமய சகவாழ்வும் என்ற தலைப்பின் கீழ் தமது குழுவினரால் இணங்கப்பட்ட தலைப்பின் கீழ் சித்திரம் வரைவதற்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்.
(3) சித்திரம் வரைவதற்காக 6 அடி நீளமும் அதற்குப் பொருத்தமான அகலத்தைக் கொண்ட பிரேம் இடப்பட்ட கன்வஸ் துணி மற்றும் அதற்குப் பொருத்தமான சாயங்களைப் பயன்படுத்துதல்.
(4) சித்திரங்களை குறித்த இடத்தில் காட்சிப்படுத்துதல் மற்றும் சித்திரக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக அச்செயற்பாட்டுடன் தொடர்புபட்ட பாடசாலை மாணவர்களை அழைத்தல்.
(5) சித்திரங்களை மதிப்பீடு செய்யும் போது ஒற்றுமை, ஒருமைப்பாடு, சகவாழ்வு எடுத்தியம்பப்படுகின்ற விதம் போன்ற அளவீடுகளைப் பயன்படுத்துதல்.
(6) சித்திரங்களை மதிப்பீடு செய்வதற்காக எல்லா சமயத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்தல்.

**மேலதிக விளக்கங்கள்**

நத்தார் விழாவை நடாத்தும் சந்தர்ப்பத்தில் இச்செயற்பாடுகளுடன் வேறு செயற்பாடுகளையும் உள்ளடக்கி நிகழ்த்த முடியும்.

சித்திரப் போட்டியில் பங்குபற்றிய, சூழவுள்ள பாடசாலைகளிலும் இச்சித்திரக் கண்காட்சியை நடாத்தலாம்.

**(ஈ) கிறிஸ்தவ தேவாலயத்திற்கு நத்தார் ஆராதனையை காண்பதற்கு அழைத்துச் செல்லுதல்.**

நத்தார் தினத்தில் கிறிஸ்தவரல்லாத தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை தேவாலயத்திற்கு ஆராதனைகளைப் பார்ப்பதற்காக அழைத்துச் செல்லுதல். அவசியமெனின் வேறு சமயத்தைச் சார்ந்த மாணவர்களது பங்கேற்புடன் எந்தவொரு பாடசாலையிலும் இத்தகைய சுற்றுலாவொன்றை ஏற்பாடு செய்யலாம்.

**முறைமை :**

(1) பார்வையிடுவதற்காக செல்ல முன்னர், அத்தேவாலயத்திற்குப் பொறுப்பான மதத் தலைவரிடம் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல்.
(2) தேவாலயத்தில் ஆராதனைகள் இடம்பெறும் விதத்தை விளக்கிக் கூறுதல். அதற்கு அருட்தந்தையின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
(3) நத்தார் விழா தொடர்பாக கலந்துரையாடலொன்றை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பத்தினை வழங்குதல்.

**மேலதிக விளக்கங்கள்**

தேவாலயத்திற்குச் செல்லும்போது சமய, சம்பிரதாயங்களை கைக்கொள்ளும் வழிமுறைகள் பற்றி தேவாலயத்திற்குப் பொறுப்பான அருட்தந்தையிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளுதல், அவ்வறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதற்கு மாணவர்களுக்கு அறிவுரை கூறுதல்.

**(உ) சிரமதான நிகழ்ச்சிகளை நடாத்துதல்.**

நத்தாரை முன்னிட்டு தெரிவுசெய்யப்பட்ட இடத்தில் பல சமயங்களைச் சேர்ந்த மாணவர்களது பங்கேற்புடன் சிரமதான நிகழ்ச்சிகளை நடாத்துதல். பல பாடசாலைகளை இதில் பங்குகொள்ளச் செய்து இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைந்து நடத்துவது பொருத்தமாகும்.

இதன் கீழ் வைத்தியசாலை, வீதிகள், மைதானம், மக்கள் பயன்படுத்தும் இடங்களை துப்பரவு செய்தல் மற்றும் தேவாலயத்தைச் சுற்றி துப்பரவு செய்யலாம்.

**முறைமை :**

(1) சிரமதானம் நடாத்தும் இடத்தைத் தெரிவு செய்து அதற்கு முறையான அனுமதியைப் பெறுதல்.
(2) பல்வேறு சேவைகளது தேவைப்பாட்டிற்கு பாடசாலை மக்களது உதவிகளைப் பெறுதல்.
(3) அருட்தந்தையொருவரை அழைத்து நத்தார் திருவிழா தொடர்பாக சிறிய உரையொன்றை நிகழ்த்துதல்.
(4) பெற்றோரை பங்குபற்றச் செய்தல்.

**(ஊ) முதியோர் அல்லது சிறுவர் இல்லத்திற்கு நத்தார் உதவிகளை எடுத்துச் செல்லுதல்.**

எந்தவொரு சமயத்தைச் சார்ந்த மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலை தனித்தோ அல்லது வேறு சமயத்தைச் சார்ந்த மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளுடன் இணைந்தோ, நத்தார் திருவிழாவை முன்னிட்டு உதவிகளைச் சேகரித்து முதியோர் இல்லத்திற்கு அல்லது சிறுவர் இல்லத்திற்கு எடுத்துச் செல்லுதல்.

**முறைமை :**

(1) முதியோர் இல்லத்தில் அல்லது சிறுவர் இல்லத்தில் உரிய திகதியை ஒதுக்கிக் கொள்ளுதல்.
(2) உரிய தினத்தில் நாள் முழுவதும் அவ்விடத்தில் தரித்திருந்து முதியோருடன் அல்லது சிறுவர்களுடன் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.
(3) அருட்தந்தையொருவரை அழைத்து நத்தார் தொடர்பாக ஒரு உரையை நிகழ்த்துதல்.

**மேலதிக விளக்கங்கள்**

நத்தார் தாத்தா, வானதூதர்கள் போன்ற அம்சங்களையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம்.

**(எ) இரவு திருப்பலியில் பங்குபற்றுதல்**

கிறிஸ்தவ தேவாலயத்திலோ அல்லது ஆராதனை இடம்பெறும் இடத்திற்கு, கிறிஸ்தவரல்லாத சமயத்தைச் சார்ந்த பாடசாலை மாணவர்களை, பார்ப்பதற்காக அழைத்துச் செல்லலாம். கிறிஸ்தவ சமய பாடசாலை மாணவர்கள் இச்செயற்பாட்டில் பங்குபற்றுதல் பொருத்தமாகும்.

**முறைமை :**

(1) தேவாலயத்திற்குப் பொறுப்பான அருட்தந்தையிடமிருந்து முன்னனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல்.
(2) பங்குபற்றும் மாணவர்களது பெற்றோரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல். இதன் போது உயர் வகுப்பு மாணவர்களைத் தெரிவு செய்தல் பொருத்தமாகும்.
(3) ஆராதனைக்கு பங்கம் விளைவிக்காத வகையில் நடந்து கொள்ளுமாறு மாணவர்களை அறிவுறுத்துதல் வேண்டும்.
(4) பங்குபற்றும் மாணவர்களுக்கு நத்தாரைப் பற்றியும் ஆராதனை பற்றியும் விளக்கமொன்றை பிரதான அருட்தந்தையை வரவழைத்து அளித்தல்.

**(ஏ) சூழவுள்ள பாடசாலைகளுடன் பரிசில்கள் மற்றும் தின்பண்டங்களைப் பரிமாறிக் கொள்ளுதல்.**

கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளினால் இதனை ஒழுங்கு செய்ய முடியும். நத்தாரையொட்டி வேறு சமயத்தைச் சார்ந்த மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளுக்கு பரிசில்கள் மற்றும் தின்பண்டங்களை வழங்க முடியும்.

**முறைமை :**

(1) பாடசாலை மாணவர்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட பரிசுப் பொருட்களைக் கொண்டு வருமாறு பணித்தல்.

(2) பரிசு வழங்கும் பாடசாலையில் நத்தார் திருவிழா பற்றி உரை அல்லது நத்தார் பாடல் நிகழ்ச்சியொன்றை நடாத்தலாம்.

(3) பரிசினைப் பெறும் பாடசாலைக்கு அந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.

(4) கஷ்டப் பிரதேசத்திலுள்ள ஒரு பாடசாலைக்குச் சென்று இந்தப் பரிசுகளை பரித்தியாகமாக அளிக்கலாம்.

**மேலதிக விளக்கங்கள்**

இத்தகைய செயற்பாடுகளை அனைத்து சமயத்தைச் சார்ந்த மாணவர்களதும் பங்குபற்றுதலுடன் கிறிஸ்தவ மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையினால் முன்னெடுத்தல் பொருத்தமாகும். கஸ்டப் பிரதேசத்திலுள்ள பாடசாலையை மையமாகக் கொண்டு நடாத்துவதன் மூலம் தமது பாடசாலை மாணவர்களுக்கு பயனுள்ள பரிசில்களை வழங்குவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.

# 1 ஆவது இணைப்பு

## கருத்திட்ட முகாமைத்துவ சரிபார்ப்புப் பட்டியல்

சரிபார்ப்புப் பட்டியலொன்றை பயன்படுத்துவதன் மூலம் நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல் மற்றும் ஒழுங்கமைத்தல் என்பவற்றின்போது ஏற்படும் சிரமங்களை தவிர்த்து கொள்வதற்கு முடியுமாகின்றது. நிகழ்ச்சிகளை நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில் வேலைபழு காரணமாக ஏற்படக்கூடிய விடுபடல்களை தவிர்த்துக்கொள்வதற்கும், எதிர்பார்க்கும் வகையில் வெற்றிகரமாக நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் சரிபார்ப்புப் பட்டியல் பாரிய உதவியாக அமையும். உங்களது நிகழ்ச்சித் திட்டம் பிரகாரம் அதற்கு ஏற்ற வகையிலான சரிபார்ப்புப் பட்டியலை தயாரித்து கொள்வதற்கு உபகாரமாக அமையும், இங்கு பின்வரும் தகவல்களையும் கவனத்தில் கொள்ளலாம். நடாத்தப்படும் நிகழ்ச்சிப் பிரகாரம் பொருத்தமான சரிபார்ப்புப் பட்டியலை தயாரித்தலும், ஏற்படும் நடைமுறை நிலைமைகளின் பிரகாரம் அதனை இற்றைப்படுத்தலும் அத்தியாவசியமாகும். நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு முன்னராக இருந்து அதற்கு தயாராவதன் மூலம் குறைப்பாடுகளை குறைத்துக்கொள்ளலாம்.

1. நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் அது தொடர்பான திட்டம் தயாரித்தல்

   ➢ நோக்கங்களை தயாரித்துக்கொள்ளுதல்
   ➢ பங்களிப்பினை தீர்மானித்தல்
   ➢ செலவு விடயங்களை தயாரித்தல்
   ➢ நடாத்தப்படும் நாட்களை தீர்மானித்தல்
   ➢ இடம் ஒதுக்கிக்கொள்ளுதல்

2. பங்களிப்புச் செய்பவர்கள் மற்றும் வளப்பகிர்வாளர்களுக்கு அழைப்புவிடுத்தல்

   ➢ தொலைபேசியில் அழைப்பு விடுத்தல்
   ➢ கடிதம் அனுப்புதல்
   ➢ அழைப்பிதழ்களை அச்சிடுதல்
   ➢ வருகை/ பங்களிப்பு என்பன உறுதிப்படுத்திக்கொள்ளுதல்

3. நிகழ்ச்சித் திட்டத்தை திட்டமிடல்

   ➢ நிகழ்ச்சித் திட்டத்தின் தலைப்புகளின் கருப்பொருளை தயாரித்துக்கொள்ளுதல்
   ➢ போதனையாளர்கள்/ வளப்பகிர்வாளர்களை தொடர்புபடுத்திக்கொள்ளுதல்
   ➢ உபகரணங்களை தயார்படுத்திக்கொள்ளுதல்
   ➢ தொடர்புகொள்கின்ற அனைவரிடமும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக விளக்கமளித்தல்
   ➢ ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் விருந்தினர் உபசரணை முறைகளை தயாரித்தல்
   ➢ போக்குவரத்து வசதிகளை தயாரித்தல்
   ➢ தங்குமிட வசதிகளை வழங்குதல்
   ➢ சான்றிதழ்கள்/ நினைவுச் சின்னங்களை தயாரித்தல்

4. வசதிகளை செய்வித்தல)
   ➢ பங்களிப்புச் செய்கின்ற எண்ணிக்கையினரின் பிரகாரம் அமர்கின்ற இடங்கள் அல்லது அதற்கான இடங்களை தாபித்தல்
   ➢ உணவு பான வகைகளை வழங்குதல் மற்றும் அதனை மேற்கொள்ளும் முறை
   ➢ மலசலகூட வசதிகளை ஏற்படுத்தல்
   ➢ வாகன நிறுத்துமிடங்களை தாபித்தல்
   ➢ வழிகாட்டல் சமிக்ஞைகளை பொருத்துதல்

5. நிகழ்ச்சித்திட்டம் நடாத்துவதற்கு தேவையான உபகரணங்களை வழங்குதல்

   ➢ போடியம தயாரித்தல்
   ➢ பொது மக்களுக்கான அழைப்பு உபகரணங்கள்
   ➢ ஒலிபெருக்கி உபகரணங்களை தயாரித்தல்

- ➢ மைக்ரோபோன் தயாரித்தல்
- ➢ ஒளியுருப்படிக்கருவி மற்றும் மின்திரை தயாரித்தல்
- ➢ கணினி டிவிடி இயந்திரங்களை பெற்றுக்கொள்ளுதல்
- ➢ மின் சுற்றளவு மற்றும் ஏனைய உபகரணங்களை பெற்றுக்கொள்ளுதல்
- ➢ வேறு செயற்பாடுகள் இருப்பின் அதற்கான உபகரணங்கள் மற்றும் பொருட்களை தயாரித்தல்

6. பிரச்சாரம்

- ➢ போஸ்டர்/ அறிவிப்புகளை அச்சிடல் மற்றும் காட்சியிலிடல்
- ➢ ஊடக நிறுவனங்களின் கூட்டிணைப்பு
- ➢ நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக துண்டு பிரசூரங்களை தயாரித்தல் மற்றும் விநியோகித்தல்
- ➢ ஊடக அறிவிப்புகளை தயாரித்தல் மற்றும் விநியோகித்தல்

7. புகைப்படமெடுத்தல்/வீடியோ நாடாவில் பதிதல்

- ➢ புகைப்படமெடுக்கும் கலைஞரை ஈடுபடுத்தல்
- ➢ தேவையான அளவு மற்றும் உள்ளடக்கப்பட வேண்டியவைகள் தொடர்பாக விபரித்தல்

8. உணவு பான வகைகளை வழங்குதல்

- ➢ சாப்பாட்டு பட்டியலை தயாரித்தல்
- ➢ உணவு தயாரிக்கும் நிறுவனங்களுடன் இணைதல்
- ➢ உணவு வழங்கும் முறையை தயாரித்தல்

9. பதிவு செய்தல்

- ➢ பதிவு செய்தல் படிவம் தயாரித்தல்
- ➢ பதிவு செய்வதற்கான இடங்களை தயாரித்தல் மற்றும் நபர்களை ஈடுபடுத்தல்

10. போக்குவரத்து

- ➢ உபகரணங்களை கொண்டுச் செல்லுதல்
- ➢ வாகன நிறுத்துமிடங்களை ஒதுக்குதல்
- ➢ அழைக்கப்பட்ட அதிதிகளுக்கான போக்குவரத்து வசதிகளை மேற்கொள்ளுதல்
- ➢ பங்களிப்புச் செய்பவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை மேற்கொள்ளுதல்

11. அலங்கரிப்புகள்

- ➢ கருப்பொருளுக்கு ஏற்ப ஆக்கங்களை மேற்கொள்ளுதல்
- ➢ வரவேற்பு தோரணங்களை தயாரித்தல்
- ➢ மேடையை தயாரித்தல் மற்றும் அலங்காரப்படுத்தல்
- ➢ போடியத்தை அலங்கரித்தல்
- ➢ பிரதான மேசையை ஒழுங்குபடுத்தல்
- ➢ விளக்கை அலங்கரித்தல்

12. கவனம் செலுத்தப்பட வேண்டிய மேலதிக விடயங்கள்

- ➢ சீரற்ற காலநிலை
- ➢ பாதுகாப்பு அளித்தல்
- ➢ அவசரச் சந்தர்ப்பங்களுக்கு தயாராதல்
- ➢ நோயாளர் வண்டி மற்றும் முதலுதவி சேவைகள்
- ➢ மின்சாரம் துண்டிக்கப்பட்டால் அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- ➢ நீர் வசதிகளை அளித்தல்
- ➢ பொலிஸ் இடங்களுடன் இணைப்புபடுதல்

# 2 ஆவது இணைப்பு

## தொடர்பு கொள்ள வேண்டிய நிறுவனங்கள்

- புத்தசாசன அமைச்சு
  ஸ்ரீமத் அநாகரிக தர்மபால மாவத்தை, கொழும்பு 07.
  தொலைபேசி இலக்கம் - 0112307674

- இந்து சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம்
  இலக்கம் 248, 1/1, காலி வீதி, கொழும்பு 04.
  தொலைபேசி இலக்கம் - 0112552641

- முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு
  அஞ்சல் தலைமையகம், டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 02.
  தொலைபேசி இலக்கம் - 0112422591

- கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு
  6 ஆவது மாடி, ரக்ஷன மந்திரய, இலக்கம் 21, வோக்ஷோல் வீதி, கொழும்பு 02.
  தொலைபேசி இலக்கம் - 0112321222 / 0112436672

- தேசிய ஒருங்கிணைப்பு மற்றும்நல்லிணக்கம் தொடர்பான அமைச்சு
  இலக்கம் 34, நாரஹேன்பிட்டி வீதி, நாவல. தொலைபேசி இலக்கம் 011233 4124

- தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு
  இலக்கம் 40, புத்கமுவ வீதி, ராஜகிரிய.
  தொலைபேசி இலக்கம் - 0112307674 /0112883926

- கல்வி அமைச்சின் தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு பிரிவு
  பிரிவென் கல்விப் பிரிவு, அழகியற் கல்விப் பிரிவு
  “இசுருபாய” , பெலவத்தை, பத்தரமுல்லை.
  தொலைபேசி இலக்கம் - 0112307674 / 0112785141

- பௌத்த அலுவல்கள் திணைக்களம்
  “தநம்பாய”, இலக்கம் 135, ஸ்ரீமத் அநாகரிக தர்மபால மாவத்தை, கொழும்பு 07.
  தொலைபேசி இலக்கம் - 0112307674 / 0112337315

- தேசிய கல்வி நிறுவனம், ஹயிலெவல் வீதி, மஹரகம.
  தொலைபேசி இலக்கம - 0112307674 / 0117601601

- ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் சேவையில் ஈடுபட்டுள்ள சமய அலுவல்கள் தொடர்பான அலுவலர், சமூக சேவை அலுவலர் மற்றும் கலாச்சார அலுவலர்

- கலாச்சார அமைச்சினால் ஒவ்வொரு பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கலாச்சார நிலையங்கள் மற்றும் அங்கு அலுவலர்கள்

- எல்லா உள்ளூராட்சி நிறுவனங்கள் (மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள்)

ISBN 978-955-3677-00-06

அரசாங்க அச்சுத் திணைக்களம்